# மீனோட்டம்

லா.ச.ராமாமிர்தம்

வானதி
பதிப்பகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மீனோட்டம்

லா. ச. ராமாமிருதம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

வானதி முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1991

விலை ரூ. 18-00

அச்சிட்டோர் : கவின்கலை அச்சகம்
2/141, 2வது தெரு
கந்தசாமிநகர், பாலவாக்கம்
சென்னை-600 041
தொலை பேசி : 41 71 41

# முன்னுரை

## ரொம்ப நாளாச்சு

நண்ப,

வெகு நாட்களுக்குப் பின்பு சந்திக்கிறோம். இந்த நீண்ட இடைவேளைக்குக் காரணம்?—வேண்டாம், இது முன்னுரை; முறையீடு அல்ல. இந்த சந்தோஷ சமயத்தில் விரலுக்கிடுக்கில் வழிந்து போனதற்கெல்லாம் கணக்கு ஏன்?

1940/41 வாக்கில் 'மீனோட்டத்'திலிருந்து 1978இல் 'ஐயா' வரை நம்மிடையே நான்கு தலைமுறை காலம்—நினைத்துப்பார்க்கையில் ஏதோ பயம், கூடவே மகிழ்ச்சி உணர்கிறேன்.

மீன்கள் நதிகளில் ஓடுகின்றன.

நதிகள் கடலுக்கு ஓடுகின்றன.

கடல்கள்—பூமியில் நிலபாகத்தைச் சூழ்ந்த நீரின் ஒரே மயம்தானே!

யுகக்கணக்கில் இதுவரை ஓடிய மீன்கள் எத்தனையோ?

பறவைகளுக்கு, சிறு மீன் பெருமீனுக்கு, தூண்டிலுக்கு, வலைக்கு. மனிதனுக்குஇரையாகியும், இயற்கையாகவும் மாண்டவை எத்தனையோ? கற்பனைக்கு அடங்கா. எண்ணுவதே வெட்டி வேலை, விடு.

அவைகள் ஓடிய ஜலம் நதிகளிலும் கடல் களிலும் எவ்வளவோ புரண்டு மாறியாச்சு.

ஆனால் மீன்கள் இன்னமும் ஓடிக் கொண்டு தானிருக்கின்றன.

ஜலம், நதியிலும் கடலிலும் பாய்ந்து கொண்டு தானிருக்கிறது.

ஓயாத இந்த உயிரோட்டத்துக்கு சமீப காலமாய் நம்முரண்கள் யாவுக்கும் ஒரே சமாதானமாய்

நடமாடிக் கொண்டிருக்கிறதே ஒரு வியாக்யானம்—
generation gap அதற்குக் கிடையாது.

இந்தப்பக்கங்களில், எங்கேனும் மீன் உன்னைக் கடித்தால் கவ்வினால்—நான் உன்னைத் தொட்டு விட்டேன். குருடன் சிற்பத்தைத் தடவித் தெரிந்து கொள்வதுபோல், உன்னை அடையாளம் கண்டு கொள்கிறேன். நினைப்பதே என்னை என்னவோ பண்ணுகிறது.

இப்படித்தான் — அன்று, கூடத்தில் நின்றபடி ஏதோ வேலையாயிருந்தேன். திடீரென, அறையிலிருந்து கிட்டப்பாவின் குரல் புறப்பட்டது.

"எட்டாப் பழமடியோ—ஓஓஓ"

அந்த வெள்ளி மணிக்குரல், உயிரின் பிரிவாற்றாமைத் தவிப்பு ஆதிமூல அலறலாகவே மாறி, பூமியையே பட்டை உரித்துக் கொண்டு, அபட்டு பாணம் நாதபிந்துக்களை உதிர்த்துக் கொண்டு, வான்மண்டலத்தை நோக்கி ஏறுகிறது.

என்னுள் ஏதோ பாம்புக்குத் தூக்கம் கலைந்தது. சீறல் கால் கட்டைவிரல் நுனியிலிருந்து புறப்பட்டு, 'சுர்ர்ர்'ரென்று உச்சி மண்டைக்கு ஏறிற்று. கை கால் பரபரக்கின்றன. உடல், இல்லை, பூமி கிடு கிடு—

நல்லவேளை, சேகர் பக்கத்திலிருந்தான். என் நிலை கண்டு என்னைப் பிடித்துக் கொண்டான். என்னை மெதுவாய் நடத்திச் சென்று, ரேடியோ பக்கத்தில், சாய்வு நாற்காலியில் உட்கார்த்தினான். என் தலை சாய்ந்தது. இமைகள் மூடிக் கொண்டன.

"எட்டாப் பழமடியோ தெவிட்டாத தேனடியோ
மட்டிலா ஆனந்தமே கிளியே
மால் மருகன் தந்தசுகம்"

இப்படியே, இப்பவே சாவு கிட்டிவிட்டால்
இதைவிட சுகம் உண்டோ? அம்மாடி!

"கட்டுக்குழி படர்ந்த......"

என் அடிவயிறைச் சுருட்டிக் கொண்டு
நடுவிலேயே நறுக்குத் தெறித்து
அப்படியே நிற்கும் ஒரு பிர்க்கா
அந்தரத்தில் வளைத்த நட்சத்ரவில்.
—"கருமுகில் காட்டுக்குள்ளே

"விட்டுப்பிரிந்தானடி கிளியே
வேதனைதான் பொறுக்குதில்லை"

கண்கள் துளிர்க்கின்றன. கன்னத்தில் பனி வழிகிறது.

கூடத்தில் கண்ணன் சேகரிடம் கிசுகிசுப்பது காது கேட்கிறது.

"என்னடா அப்பா ஒரு மாதிரியாயிருக்கா? மூஞ்சி வெளிறிட்டிருக்கு, அழறா! என்ன உடம்பு?"

சேகர்குரல் : (அதில் சற்று அலுப்பு தொனிக்கிறதோ?) "என்ன, as usual தான். அன்னிக்கு 'ஜனனி நினுவினா' இன்னிக்கு இன்னொண்ணு. நமக்கு "மாஞ்சோலைக்கிளிதானோ, மான்தானோ" போச்சு.

அவர்கள் தாய், அரிவாமணையில் பச்சை மிளகாயைத் 'தறுக் தறுக்' கென்று நறுக்கிக் கொண்டே வயஸாச்சு உடம்புக்காகல்லேன்னா அந்தப் பாட்டெல்லாம் கேட்கப்படாது, குழந்தைகள் வழி ரேடியோவை விட்டுடனும்"

இதுதானே generation gap?
நண்ப, நாம் சந்தித்து ரொம்ப நாளாச்சு.

**லா. ச. ராமாமிருதம்**

# சமர்ப்பணம்

அன்புடன்

ஏ.கே. பாலுவுக்கு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தேவி | ... 9 |
| 2. | தூசி | ... 22 |
| 3. | அசடு | ... 42 |
| 4. | காலி வீடு | ... 53 |
| 5. | மீனோட்டம் | ... 69 |
| 6. | சாவி | ... 77 |
| 7. | தரிசனம் | ... 93 |
| 8. | தை | ... 103 |
| 9. | ஐயா | ... 133 |
| 10. | காசி | ... 147 |

# தேவி

தென்காசியிலிருந்து குற்றாலத்துக்குப் போகும் சாலை வழி பஸ்ஸில் 15/20 நிமிடங்கள். மாலை வேளையில் நடையாக அரைமணியோ, ஒரு மணியோ, இன்னும் எத்தனை கூடுதலோ, அது நடப்பவனின் இஷ்டம். நடக்கும் சமயத்தில் அவனது மனநிலை.

நடந்து கொண்டிருந்தேன்.

சீஸன் மும்முரம்.

ஆனால் நான் சீசனுக்கு வரவில்லை, தென்காசிக்கு மாற்றலாகி வந்திருந்தேன். வந்த புதுசு. வீடு பார்த்துப் பேசி அமர்த்திப் பிறகு குடும்பத்தை வரவழைத்துக் கொள்ளணும்.

வந்து கிட்டத்தட்ட மாதமாகியும் இன்னும் இங்கு எனக்கு நிலை படியவில்லை. உத்தியோகத்தில் மாற்றலாகி வந்தவன். ஏற்கனவே இருப்பவருக்கு அவநம்பிக்கையானவன் தான். எத்தனையோ மானேஜர்கள் வந்தார்கள், போனார்கள் பார்த்திருக்கிறோம். இத்தனை நாள் நம் வழியில் தும்பு தட்டாமல் போய்க் கொண்டிருக்கிறோம். வந்தவன் நம் வழியில் படிவானா? அல்லது நம்மை ஆட்டி வைப்பானா? அவர்கள் கவலை இதுதான். அதுவும் புதிதல்ல. யாரும் பாதை மாற விரும்புவதில்லை.

கலைஞன், எழுத்தாளன், லட்சியவாதி-இவர்களைப் பார்க்கையில் எனக்கு ஒரு பக்கம் பரிதாபம், ஒரு பக்கம் சிரிப்பு. ஆரம்பத்தில் எல்லோரும், கங்கையின் கதியைத் திருப்பும் எண்ணத்தில்தான் இறங்குகிறார்கள். கடைசியில் கங்கையிலேயே பிணமாக மிதந்து செல்கிறார்கள். அப்படியும்

சொர்க்கத்துக்கல்ல, கங்கையில் முதலையின் வாய்க்கு.

ஓட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை.

மதுரை தாண்டியதுமே, இங்கு மக்களின் உணவுப் பழக்கம், காலை பலகாரம், மதியம் சாதம், இரவு பலகாரம்.

ஊர் மக்கள்படி ஓட்டல்.

மூன்று வேளையும் மிளகாய் நெடி நினைத்தாலே குடல் ஆவி கக்குகிறது. அதுவும் இப்போது சீசன் பணம் பண்ணும் வேளை. பண்டங்கள் மோசம். விலைகள் பற்றி எரிகின்றன. ஆனால் யாருக்கு அக்கரை? யாருக்கு இறக்கம்? அருவியில் குளிக்க எவனெவனோ எங்கிருந்தோ வருகிறான். 'சீஸனில்' அருவியில் குளிப்பதுதான் அந்தஸ்த்தின் சின்னம். இந்த மூன்று மாதச் சூறையில்தான் குற்றாலம் வருடத்தில் மிச்சத்தை வாழ வழி தேடிக் கொள்கிறது. இப்போ வாழத் தெரியாதவன் வாழ லாயக்கற்றவன்.

பொழுது போக்குக்கோ, மனமாறுதலுக்கோ உகந்த புத்தகங்கள் கிடையா இருக்கும். ஒரே லைப்ரரியில், மானங் குலைந்து உடலும் பழகிப் போன ஸ்திரீ போல், பக்கங்கள் பாழாகி, உருக்குலைந்து இன்னும் தூக்கியெறியாமல், பேருக்கு அடுக்கி வைத்திருக்கும் பத்தாம்பசலிப் புத்தகங்கள்.

பேச்சுக்குத் தேடிப் போகும் அளவுக்கு எனக்கு இன்னும் நட்புகள் வாய்க்கவில்லை. அதற்கு முதல் நிபந்தனை சீட் டாட்டம் எனக்கு அறவே தெரியாது. இந்த அறியாமைக்கு இப்போது தலையிலடித்துக் கொண்டு என்ன பயன்?

ஆனால் அடித்துக் கொள்கிறேன் "நாலு பேருடன் பழகி பிஸினஸ்ஸை விருத்தி பண்ணத்தான் மானேஜர். நாலு பேருடன் பழகணும்னா நாலும் தெரிஞ்சுதான் இருக்கணும். நாலு என்ன நாற்பது—என்ன சொல்றது புரியறதா?" அதிகாரிகள் சொல்லியனுப்பித்து விட்டிருக்கும் புத்திமதி; உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ள.

தனிமையின் உண்மையான தன்மையை உணரத்தான் இங்கு வந்து மாட்டிக் கொண்டேனோ?

வேணும் போது பூணி, வேணாத சமயத்தில் கழட்டி யெறியக் கூடிய தனிமைதான் பாந்தமாயிருக்கிறது.

அறைக் கதவை மூடியதும் புலன்களுக்கு இதமாய், சாஹஸமான இருள்; தலைக்குமேல் மின் விசிறியின் 'குளு குளு'ச் சுழல், சுவர்களை அடைத்த அலமாரிகள் நிறைந்து இருக்கைகளின் மேல், தரையில், என்னைச் சூழ வழியும் புத்தகங்கள். ரேடியோகிராமில் அடக்கமாய் அஜ்மல்கான் ஸிதாரில் தர்பாரிகானடா; அல்லது ஸெய்கேலின் 'துக்குக்கே...' பொறி கண்ணுக்குப் படாது மணம் மட்டும் கமழும் மகிழம்பூ ஊதுவத்தி; எதிர்வீட்டில் டான்ஸ்மாஸ்டர் கட்டை, தரைமேல் 'டக்டக்' அதற்கு ஏற்ப 'ஜல் ஜல்' கால் சதங்கையொலி இந்த பகைப்புலனில், நெஞ்சத்தணலில் புகைந்து எழும்பி உருக்கொளும் எண்ணங்கள், சிந்தனை, தியானம்......

அவசரமாய்க் கதவுத் தட்டல், எழுந்து திறக்கும் வரை யார் விடுகிறார்கள்? தாழ்ப்பாளோ லொடலொட்டை, படீரெனக் கதவு திறந்து கொள்கிறது. குடும்பமே உள்ளே அலை மோதுகிறது. கடைக்குட்டி வந்து மடியில் பொத்தென விழுந்து 'நாய்க்குட்டிபோல் முகத்தை அடிவயிற்றுள் தேய்க்கிறான். மூக்குச்சளி ஈரம் சட்டையைத் தாண்டி சதை நனைகிறது.

"அப்பா! அப்பா!! யார் வந்திருக்கிறது பாருங்கோ! ஒரே கத்தலில் ஏகக் குரல்கள். "காலேஜ் மூடிட்டாளாம், ஸ்ட்ரைக்காம். ஹாஸ்டலில் கலாட்டா—அடிதடியாம்!"

பின்னால் ஒரு உருவம் வாசற்படியில் லஜ்ஜையில், அரை புன்னகையுடன் தயங்கி நிற்கிறது. சேகர் நாளுக்கு நாள் உயரமாகிக் கொண்டே வருகிறான். உயருவது ஒரு வியாதி போல். இப்பவே அவனை நான் நிமிர்ந்துதான் பார்க்கிறேன். தோளுக்கு மிஞ்சினால் தோழன். தலைக்கு மிஞ்சினால்? வெள்ளம் என்று விட்டு விட வேண்டியது தானா?

"அப்பா! அப்பா!! நான் 500க்கு 438. நான்தான் வகுப்பில் ஃபஸ்ட். முதலடிச்சால் 'Posseidon Adventure' பிராமிஸ் பண்ணியிருக்கேள். ஞாபகமிருக்கா? சேகர் வேறே ஊரிலேருந்து வந்திருக்கான். குடும்பத்தோடு போகலாம்பா!" இந்த வாரமே தூக்கிடறானாம்.

“டீ காயத்ரீ! இங்கிலீஷ் நமக்குப் புரியாது டீ! படம் வேறே சுருக்க முடிஞ்சுடும். கணிசமா சிவகவி போகலாம்? அவள் அம்மையின் சிபாரிசு.

‘நீ என்னம்மா டிபன் கட்டினே? கண்ணன் வெறுப்புடன் உறுமுகிறான். (கட்டைத் தொண்டை கரிக்கிறது. போன வருடம் கூட குழலாய் ஒலித்த குரல்.) பசி வேளையில் டப்பா வைத் திறந்தால் ‘குப்’. பக்கத்துப் பையன் மூக்கைப் பிடிச் சுண்டு நகர்ந்தால் எனக்கு மானம் போறதே, போச்சே!

சொன்னாலும் பொருந்தச் சொல். என் கை ஊசவே ஊசாதே! நீ சொன்னால் நாம் நம்புவேனா என்ன? மோருஞ் சாதத்தில் சேப்பங்கிழங்குக் கறியை ஊறப் போட்டால்? மணக்குமா?

‘சின்னத்தட்டுலே தனியாத்தானேடா வெச்சேன்!”

“தட்டுதான் சோத்துலே முழுகிப் போச்சே! ஆமாம், பழையதா? நீ பிசையறபோதே சந்தேகப்பட்டேன், என் னிக்குமில்லாத் திருநாளாய் இன்னிக்குப் பால், தயிர், வெண் ணெய் தாளிப்பு சடங்கெல்லாம் தடபுடலாயிருக்கேன்னு.

பின்னே என்ன வேலைக்காரிக்கு அப்படியே தூக்கிக் கொடுக்கணுங்கறையா? ஒருநாள் சாப்பிட்டா குடல் கறுத் திடுமா? இதையே ப்ரிட்ஜ்லே வெச்சு ஹோட்டலில் பகாளா பாத்துன்னு பீங்கான் கிண்ணத்துலே பரிமாறினால், காசைக் கொடுத்து, அள்ளி மொக்குவேள்!

சரிதான் நிறுத்தும்மா! கண்ணன் சீறினான் [இதுகள் தான் விழுதாய் தாங்கப் போகும் பிள்ளைகள்] ‘நீ வேலைக் காரிக்கு கொடுத்தால் அவள் கழுநீர்த் தொட்டியில் கொட்டி விடுவாள்னு என் தலையில் கட்டினாயாக்கும். காடி நெடி, போலீஸ் என்னைப் பிடிச்சுண்டு போகாமலிருந்ததே பெரிசு’”

ஒரு நாளும் இருக்காது என் கை ஊசாது, புளிக்காது.

“இருக்கு”

“இல்லை”

“இருக்கு”

“இல்லை”

அமளி.

எனக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை.

சனியன்களா! வெளியில் போய்த் தொலையுங்கள். தெருவில்போய் குலையுங்கள்!

கதவைப் படீரெனச் சாத்துகிறேன். எனக்கு மூச்சு இறைக்கிறது.

போன வாரங்கூட டாக்டர் சார் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கணும். உங்கள் வயசுக்குக் கௌண்ட் அதிகம். உப்பையும் ராச் சோறையும் உதறுங்கள். இதுவரை மொஷுக்கிய கிழங்கும், பருப்புசலியும், வளையம் வளையமாய் வாழைக்காய்தான் அப்படியே எண்ணையில் இறக்கி காரம், புளியோடு ப்ரை தின்னதும் போறுமே, அப்புறம் ''டெம்பர்! டெம்பர்!! இது உங்களுக்கு என்னுடைய இருபத்தி எட்டாவது காஷன்—இந்த வாத்து கோழி விக்கறவன் பார்த்தேளா? அப்படியே காலைக் கொத்தாப் பிடிச்சு தலைகீழாத் தூக்கிண்டு போவன். அதுபோல அடிச்சுடுத் துன்னா அதோகதிதான். ஐயோ பாவம்னு புரட்டிப் போடக் கூட இந்தக் காலத்தில் யாருக்கும் நேரம் கிடையாது, தெரியுமோன்னோ!

பயத்தில் கண் இருட்டுகிறதோ?

அறையில் நான் விஸ்த்தரித்த சொகுசு இருள் புத்தகங்கள், ரேடியோகிராம், தர்பாரிகானடா, மகிழம்பூ TSR இத்யாதிகளைத் தேடுகிறீர்களா? உங்களை யார் தேடச் சொன்னது? நான் தேடவில்லையே! எல்லாம் நான் நினைத்துக் கொண்டதுன்னா! உங்கள் பங்குக்கு எரிச்சலைக் கிளப்பறேளா?

இந்தச் சத்தமும் ரகளையுமில்லாமல், அக்கடான்னு ஏகாந்தமா மூணு மாசம் எங்கேனும் கண் காணாமல் தொலைய மாட்டோமே?

இதோ கேட்டது கிட்டி, அவர்கள் அங்கே நான் இங்கே தனிமையாக திகைப்பூண்டு மிதித்தவனாய் நடந்து கொண்டிருக்கிறேன். நடந்து கொண்டேயிருக்கிறேன்.

இன்று தோற்றாலும் நாளை நமதே என்கிற நம்பிக்கையில் கர்ர்—புர்ர்—ஒன்றையொன்று கடித்துக் குதறிக் கொண்டு

ருந்தாலும், ஒன்னாயிருந்தேனும் வளைய வருவோமே!

சண்டை போட்டக்கூட ஆளில்லையேன்னு ஏங்கறப் போன்னா அருமை தெரியப் போறது?

காதண்டை ஆள் தெரியாமல் யார் குரல்?

நடக்கிறேன்.

குற்றாலம் போகும் வழியில் யானைப்பாலம் தாண்டிய தும், மேலகரம் வரை இடது பக்கம் வீடுகள். இடையிடையே கொத்துக் கொத்தாய் வீடுகளின் முகப்பு, வலதுபுறம் வயல் கள், அவை நடுவே, ஆங்காங்கே தென்னஞ்சோலைகளும் பதுங்கிய வயற்கிணறுகள், கமலையேற்றங்கள், பம்ப் செட்டுக்குக் கட்டிடங்கள், நெற்கதிர்களின் சலசலப்பு, தென்னை மரங்களே பந்தல்கால்களாய் அவைமேல் அஸ்மான கிரி கட்டிய மேகக்கூட்டங்கள்.

இதைக் காட்டிலும் செழுமையான குக்கிராமங்கள், குற்றாலத்தைச் சூழ, வயல்களிடையே ஒளிந்து கொண்டிருக் கின்றன.

"ஆண்டவன் புண்யத்தில் அது குற்றாலநாதரோ, தென்காசி விஸ்வனாதரோ இல்லை இரண்டு பேரும்தான் புண்ணியத்தை பங்கிட்டுக் கொள்ளட்டுமே — இதுவரை எங்களுக்கு மழை சுழிச்சது கிடையாது, இனி எப்படியோ கலி முத்தறது. நெல் காட்டிக் கொடுத்தாலும், தென்னையும் மிளகாயும் கைகொடுக்கும் வரை எங்களுக்குக் கவலையில்லை. வருஷத்தில் ஆறுபறி. காவல்காரன் எங்களுக்குத் தெரிஞ்சு எடுத்தது காவலுக்கு எடுத்தது, திருடிக் கொண்டது போக மிச்சமே மடி நிறைய காஷ்—சரி சரி நீங்கள் படிச்சவாள், உங்களிடம் எல்லாத்தையும் கக்கிடப்படாது. இதுவே ஏதோ உளறிட்டேன் மறந்துட்டு—வாங்கோ ஒரு ஆட்டம் போடு வோம்—தெரியாதா ஸார் என்ன ஜோக்கர் ஸ்வாமி போலி ருக்கு! இல்லையா, நிஜந்தானா? அடாடா எங்களுக்கு அதைத் தவிர வேறு தெரியாதே அதுவும் பரம்பரை பரம்பரையா ஊறிப்போனது ஸ்வாமி!"

இடது கைப்புறத்தில் ஒரு பெரிய வயல் பரப்பு தாண்டி பிரம்மாண்டமான கிரைச்சீலையில் எழுதித் தொங்க

விட்டாற் போல் ஒரு பெரிய மலைக்குன்று கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது. அதன் அடிவாரத்தில் தாய்க்கோழியின் சிறகடியில் போல் வீடுகள், மொட்டை மாடிகள், சிவப்பு ஓடுக் கூரைகள், ஓலைக்கீற்றுக் கூரைகள் எல்லாம் ஒருங்கே செல்லமாய் ஒடுங்கிக் கொண்டிருக்கின்றன. குன்றின் மேல் லேசாய்க் குமுறுகிறது.

என்னையறியாமலே நின்று நோக்குகிறேன். இந்த அந்தி வேளையில் இருளும் பகலும் ஒன்று கலக்கும் ஜாலக்கில் கோழிக்குன்று மூச்சு விடுகிறதோ?

பின்னால் ஆவரவம் கேட்டுத் திரும்புகிறேன்.

"ஓ நீங்களா?"

"வாங்கோ!" இருவரும் கைகூப்பிக் கொள்கிறோம்.

இந்த ஊர் பழக்கம் வழியில் கண்டாலும் சரி, அங்கேயே பேசிவிட்டு அப்படியே தாண்டிப் போனாலும் சரி, ஒருவருக் கொருவர் "வாங்கோ"

"அருவிக்கு போறேளா?"

ஏதோ அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறேன் ஆமாம். ஆனால் ஸ்னானம் பண்ணறேனோ இல்லையோ? நீங்களும் அங்கே தான் வரேளா?

'இல்லை சார்' அவர் பின்னடைந்தார், நீங்கள் போயிட்டு வாங்கோ.

அவர் என்னோடு வர விரும்பவில்லை எனத் தெரிந்தது. அவசரமாய் அங்கு ஏதோ ஒற்றையடிப் பாதையுள் நுழைந்து விட்டார்.

தயிராடை போல் எப்பவும் விசனம் கனத்துத் தோய்ந்த முகம். குறுகுறுப்பான மூக்குமுழி கூட, ஆனால் அந்தப் புழுக்கம் முகத்தைக் கெடுத்தது, எனக்காக ஒரு நொடி தோன்றிய புன்னகைகூட உடனே மிரண்டு நொடித்து மறைந்தது.

ஆபீசிலும் அப்படித்தான் அவசியமில்லாமல் பேச மாட்டார். திடீரெனக் காரணமேயில்லாமல் கோபத்தில் 'ஓ'வென்று கத்துவார், அடிபட்ட விலங்குபோல் உடனே பொட்டென அடங்கி விடுவார். அவர் கோபத்தை யாரும்

பொருட்படுத்துவதில்லை. ஏனோ அவருக்கு அலாதிச் சலுகை. கவனம் ஊன்றாமையால் வேலையில் நேரும் பிழைகளை சகாக்கள் முடித்து திருத்திக் கொடுத்து விடுவார்கள். இப்படியே அவர் காலம் ஓடியிருந்திருக்கிறது. இங்கேயே பிறந்து, வளர்ந்து, வதங்கி கிளர்ந்து கொட்டை உமிழ்ந்தவர். அதுவே அவருடைய கோட்டை.

வேளை வரும்போது தன் சோகத்தைத் தாங்கிக் கொண்டே இந்த மண்ணோடு கலந்து விடுவார். அதுவும் அவருடைய கோட்டை.

ஊருக்குள் நுழைந்து பஸ் நிலையம் தாண்டி நாற்சத்தியில் அண்ணாசிலையைக் கடந்து சுற்றுப்புறக் கிராமங்களுக்குப் பாசனத்துக்குப் போகும் அருவியின் கழிவுமேல் ஓடும் பாலத்தில் கால் வைத்ததும், குற்றால மலையிலிருந்து அருவியின் சொரிவு மலைமீது தவழும் மேக மூட்டத்தைக் கிழித்துக் கொண்டு நேரே கொட்டுவது போன்று அதோ பாறை உச்சியில் அந்த ஜலக் கொந்தளிப்பு அத்தனை உயரத்திலிருந்து முதன் முதலாய்க் கண்படுகையில் அப்பப்பா!—உடல் சிலிர்க்கிறது. தொண்டையை என்னவோ பண்ணுகிறது. ஸ்தம்பித்து நிற்கிறேன்.

அந்த தண் சுழிப்பிலிருந்து மூன்று மதத்த சடைகள் பிரிந்து தளையவிழ்ந்து சரிந்து—

ஆவல் பிடரியில் உந்தி என்னை அருவியண்டை கொண்டு போய் விடுகிறது. எப்படி அங்கு அவ்வளவு விரைவில் சேர்ந்தேன் என்று அப்போது தெரியவில்லை.

—பொங்குமாங்கடலுள் விழுந்து தெறித்து, பல்லாயிரம் பிரிகள் பாறையின் விளிம்பிலிருந்து வழிகையில் அம்பா! பர்வதராஜகுமாரி தன் கூந்தலை அருவியில் அலசுகிறாளா அல்லது அவள் கூந்தல்தான் அருவியாய் பாய்கிறதா?

என்கீழ் எனக்கு பூமி நடுங்கிற்று.

பாலத்தின் கிராதியில் சாய்ந்தேன்.

நான் நீ என் கையில்

நீ சத்யமா? அல்லது சிந்தனையின் சிற்பமா?

நீர் வீழ்ச்சியில் நிருபணையாவது உன் சத்யமா?

ஆனால் எதுவாய் இருந்தால் என்ன?

இவ்வருவியை உன் கூந்தலின் அவிழ்தலாய்க் காணும் கண் என்னுள் திறக்கையில் தேவி கண் திறப்பு என்னால் தாங்க முடியவில்லை. கண் இருட்டுகிறது.

கண் இருட்டலில் மண்டை உச்சியுள் ஏதோ வானம் வெடித்துக் குடைவிரிப்பிலிருந்து இறங்கும் பலவர்ண நக்ஷத்திரங்கள் தம்மில் ஒன்றாகத் தம்முள் என்னை இழுக்கின்றன.

எத்தனை எத்தனை உவமைகள் உற்பத்தி ஆயினும் உன்னை எட்ட எத்தனை எத்தனை உயரம் பறந்தாலும் அத்தனையும் உன் ஒருகால் சுவடு தீண்ட த்ராணியற்று நீர்த்து உதிர்கையில் புவனமெ ஜல்ஜல் உன் கால் சதங்கையினின்று கழன்ற கிண்கிணி மணி—வேண்டாம் வேண்டாம் தேவி அப்யம் அபயம் அபசாரம் ஆனால் என்னால் தாங்க முடியவில்லை. உன் சௌந்தர்யத்தினின்று என்னைக் காப்பாற்று காப்பாற்று.

நெஞ்சின் அடிவாரத்தில் ஏதோ புற்று இடிந்து அதனுள் ஜன்மக் கணக்கில் உறங்கிக் கிடந்த ஏதேதோ விஷயங்கள், பேச்சுகள், வாக்கியங்கள், வார்த்தைகள். பதங்கள் பத—ஸரி—க—ஸா—ம—த ஸ்வரங்கள் ஓசைகள், ஒலிகள், மோனங்கள். திக்திக் திகில்கள், திமிதிமி எழுந்து மிரண்டு ஒன்றுடன் ஒன்று உருண்டு புரண்டு நெஞ்சமுட்டில் கவிந்த நக்ஷத்ர இருட்டில் கருங்குதிரைகள் மின்னிடும் வெண்பிடரிகளை சிலிர்த்துக் கொண்டு தங்கத்துடைப்பம் போன்ற வால்களைச் சுழற்றிக் கொண்டு இதய விலாசத்தில் ஓடுகையில் திடும் திடும் திடு திடும்—குளம்போசை தாங்காமல் செவிகளைப் பொத்திக் கொள்கிறேன். கண் கவிழ்கிறேன். விழிகள் வரம்புடைந்து வழிகின்றன.

அலை மெல்ல மெல்ல அடங்குகிறது.

மூச்சு மெதுவாய் முனை திரும்புகிறது.

உள் மூட்டம் படிப்படியாய்க் கலைந்து வக்களிப்பு தோன்றுகிறது.

அருவி கருணையாய் சொரிந்து கொண்டிருக்கிறது.

பிரம்மாண்டமான கூந்தல் அருவி புரள குன்றின் உச்சியில் அவள் அண்ணாந்து படுத்திருக்கிறாள். கூந்தல் அழகையே பார்க்க சக்தி இல்லையே. தேவியின் திருமுகம் காண நமக்குத் தகுதி ஏது? கண்டால் அந்த அழகின் ஊடுரு வலிலேயே பூத்துவிடுவோம். கல்லாய் உறைந்து போவோம். இந்த மலை, இந்த பாறை பூராவே அவ்வாறு அவளை நிமிர்ந்து அவ்வப்போது நோக்கியதால் ஆட்கொள்ளப் பட்ட ஆத்மாக்களின் மொத்தாகாரந்தானோ?

இந்த பொங்குமாங்கடல், அருவி கொட்டும் நாளிலிருந்து முதன் முதலாய்ப் பால் தயிராய்த் திரிந்த காலத்திலிருந்து தன் கர்பத்தின் அதல பாதாள கிடங்குகளில் என்னென்ன கதைகள், கற்பனைகள், வரலாறுகள், அம்பலங்கள், வதந்திகள், யதார்த்தங்கள், ஐதீகங்கள், ஸாகஸங்கள், கசப்புகள், நாடகங்கள், நேரங்கள், யுகங்கள் உறங்குகின்றன, உழல்கின்றன. இன்னும் தவித்துக் கொண்டிருக் கின்றனவோ? சிந்திக்கச் சிந்திக்க ஏதோ ஒரு பதில் ஊறிக் கொண்டே ஆனால் ஓயாத வியப்பு. வெளியே இருந்து கொண்டு ஆளுக்கு ஒரு புலன், உள்ளே போய்விட்ட பின், விட்டுக் கொடுக்காத ரஹஸியங்கள் அவரவர் அறியாமைக்கும் தற்பெருமைக்கும் விளம்பரமாகப் பேசிக் கொண்டிருங்கள்.

எனக்கு ஆவேசம் தணிந்ததேயன்றி அதன் கவ்வல் என்னை இன்னும் விடவில்லை. இது பல் படவில்லையே ஒழிய தாய்க்கவ்வல் இல்லை. அது விட்டு வைப்பதோ விழுங்குவதோ என் செயலில் இல்லை. அதனின்று தப்பி னாலே உண்டு. அல்லேல் அதன் வழி ஐக்யமாகிக் கொள்வது தான் ஆயினும் இதில் ஒரு லாகிறி புறாவின் மார்பிலிருந்து உதிர்ந்த இறக்கைபோல் நான் பதமாகிவிட்ட மெது, மெத்து, லேசு, இப்படியே சாசுவதத்துக்கும் மிதந்து கொண்டேயிருக்க முடியாதா?

இங்கு இரவும் பகலுமாய் அந்தரத்தில் தம்தம் தடங்களில் நீந்திக் கொண்டு இருக்கும் ஏதேதோ தனித்தனி ஜன்மக் குறைவுகள், குலைவுகள், ஆசாபாசங்கள், அவஸ்த்தைகள், அறுந்த முடிச்சுகள் இந்த அவசம் பயக்கும் காந்தத்தின்

ஜிவ்வில் படிவம் கண்டு அதன் மூலம் வாயடைப்பினின்று விமோசனத்துக்குத் தவிப்பதாகத் தோன்றிற்று. இல்லா விடில் என்னை ஒரு மஹாசோகம் என் மேல் இப்போது கவிவானேன். தொண்டையில் இனம் புரியாத் துக்கம். வீறி அழுதால் தேவலை.

அழுது அழுது அப்படியே கரைந்து விட

ஒரு அவா...

நான்தான் ஏதேதோ கவலைகளில் உழன்று கொண்டிருக்கிறேன். அருவியடியில் ஜனத்திரள் நெரிந்தது. கொக்கரிப்புக்கும் கும்மாளத்திற்குமிடையே ஸ்னானம் ஆனந்தமாய் நடக்கிறது, சீஸன் மும்முரம் இன்னும் கொஞ்ச நேரமானால் **ஸ்டேஜ் லைட்டிங்** போல் ராக்ஷஸ வெளிச்சங்கள் போட்டாகி விடும் ராப்பூராக் களி...

ஆ! அதென்ன?

குழல் சரங்கள் போல் ஓயாது பொங்குமாங்கடலுள் பெய்து கொண்டிருக்கும் ஜலச்சரங்களைத் தள்ளிக் கொண்டு ஒரு தோற்றம் வெளிப்பட்டது. உடல்கட்டு அல்லது உடல் தளர்வுப்படி வயது முப்பது முப்பத்தைந்து இருக்கும். பசுப் போல் குழைந்த சரீரம். கொசுவக்கட்டு. வாடாமல்லிக் கலர்பட்டு. சர்வாபரண பூஷிதை. அந்தக் கால சம்பிரதாயப் படி வலது தோளில் அணிந்திருந்த வங்கியிலிருந்து சதை மேலும் கீழும் பிதுங்கிற்று.

ஒரு முறை பாறை விளிம்புக்கு வந்து நின்று சுற்றும் முற்றும் எதையோ தேடுவது போல் பார்த்தாள். அந்தியிருளில் முகம் தெரியவில்லை. முழு இருளாலேயே ஆகிய முகம் அதில் மூக்கிலும் செவிகளிலும் வைரம் சுடர் விட்டது.

கீழே குளிப்பவர் யாரும் அவளைக் கவனிக்கவில்லை. அவளே அவர்கள் கண்ணில் படவில்லையோ என்னவோ?

நான் என்ன வாழ்ந்தேன்? எனக்குத்தான் வாயடைத்து விட்டதே?

ஒரு முறை சுற்று முற்றும் பார்த்துவிட்டு அப்படியே திரும்பி, இரு கைகளையும் சிரம் மேல் கூப்பிக் கொண்டு பொங்குமாங்கடலுள் பாய்ந்து விட்டாள்,

"ஐயோ"

"நானா? இல்லை. திடுக்கிட்டுத் திரும்பினேன்.

என் பின்னால் அவர் நின்று கொண்டிருந்தார். இரு கைகளையும் பிசைந்து கொண்டு.

இந்த ஸ்னான ஆரவாரங்களைத் தாண்டி ஏதேதோ கேட்ட குரல்கள், இது வரை கேட்காத குரல்கள் பேச்சுக் குரல்கள் உட்செவியில் மோதுகின்றன.

"ஏண்டி என்ன துணிச்சல்டீ, நடுராத்ரியிலே. அஞ்சாமல் அவ்வளவு தூரம் நடந்து மலை மேலே ஏறி, நடுவிலே பூச்சி பொட்டு பிடுங்கித்துன்னா, புலியே அறைஞ்சதுன்னா என்னடி செய்திருப்பே?

'இதென்ன நீ சமத்தாப் பேசறதா எண்ணமா? சாகத் துணிஞ்சப்பறம் பூச்சிகடிச்சோ புலியறைஞ்சோ—அருவியில் விழுந்தோ எப்படிச் செத்தால் என்ன?

'அப்படிச் சொல்லிவிட முடியுமா? அதிலேயும் இடது கண், வலது கண் இருக்கோன்னோ?

'சாவுக்கா? நீ ஏதாவது பேத்திட்டேன்னா கடைசி வரைக்கும் சாதிச்சாகணுமாக்கும்? அவளுக்கு ஒருவேளை தன் உடலின் சுவடுகூட யாருக்கும் கிடைக்கக்கூடாதுங்கற எண்ணத்துலேதான பொங்குமாங்கடலைத் தேடிப் போயிருக்கா.

'நல்ல வேளை உடல் கிடைச்சதோ பிழைச்சா. ஆளே காணாமல் போனால் ஊர் என்னென்னவோ கட்டி விட்டிருக்கும்டீ.

'நீ சொல்றதையும் மறுப்பதற்கில்லை. எப்படியோ ஒரு நியாயம் சாவிலும் வாழ்வு தேடிக் கண்டு பிடிச்சுக் கொடுத்துட்டே'

ஏண்டி போனதுதான் போனாள் கல் கல்லா நகையையும் மாட்டிண்டு கிளம்பிட்டாளே! பொண்ணுக்கு வெச்சுட்டு போனால் ஆகாதா? அதுவும் கிளி மாதிரி எப்படியடி வயசு வந்த பொண்ணு, வயசு வந்த பிள்ளையையும் விட்டுட்டுப் போக மனசு வந்தது? வசனமேயிருக்கு 'கோடித்துக்கம்—குழந்தை முகத்திலேன்னு. அதுவும் பொய்த்துப் போக

ணும்னா அவள் லேசுப்பட்ட ஆசாமியில்லை.

'பெத்த பாசமும் மீறி அவள் கஷ்டம் என்னமோ?'

'ஆமாம் என்னன்னு உனக்கும் தெரியாது. எனக்கும் தெரியாதல்லவா?'

உன் வாயில் விரலை வெச்சால் கடிக்கத் தெரியா தோன்னோ? பாலைக்கண்டால் குடிக்கமாட்டையோன்னோ?'

'ஏன் மாட்டேன்? விரலையும் பாலையும்தான் வெச்சுப் பாரேன்!'

'பின் என்ன? பேச்சுலே கண்ணாமூச்சி விளையாடிண்டு? இப்படிப் பேசினால் உனக்குப் பதவியேதாவது கிடைச் சுட்டதா எண்ணமா? இதோ பார் ஒண்ணு சொல்றேன். இதுதான் எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில். நாம் எல்லாம் சுரணை கெட்ட ஜன்மங்கள். ராச்சாப்பாட்டை விட, நமக்கு மத்தியான டிபன்தான் தேவை. அடை தோசை, உணக்கையா எண்ணெய் மிளகாய்ப்பொடி ரோசமில்லாமல் இருக்கறதால்தான் உலகம் நடக்கறது. அவள் நெருப்பு. நெருப்பு மத்ததை எரிக்கறதோடு நிக்கல்லே. தன்னையும் எரிச்சுக்கறது. ஆனால் நெருப்பில்லாமல் உயிர் வாழ முடியாது. உன்னைப் போலும், என்னைப் போலும் இருப்பவர் நெருப்பில்லாமல் காரரிசியில் தோசை. அதுக்கு மிளகாய்ப் பொடி, நல்லெண்ணெய், கொஸ்து, அப்புறம் தயிர் எல்லாம் போட்டுண்டு, காலை நீட்டிண்டு. நன்னாயிருக்கு, நன்னாயிருக்குன்னோ இல்லாட்டா நன்னாயில்லே நன்னாவே யில்லேன்னோ முறிச்சுப் போட்டுண்டிருக்க முடியாது.

'என்ன சொல்றயோடியம்மா, இட்டிலி தோசை என்கிறே ஆனால் ஒண்ணுமே புரியல்லே.

'என் நோக்கமும் அதுதான் வீடு—'

குரல்கள் ஓய்ந்து விட்டன.

என் கால்கள் பூமியில் பதிந்திருந்தன.

அருவியில் ஜனத்திரள் கும்மாளம் கொக்கரிப்பு. 'கேக்கே' வெளிச்சங்கள் வந்து விட்டன. இரவு பகலானாற்போல்.

''நீங்கள் ஸ்னானம் பண்ணவில்லையா? ஏதோ ஒன்று பேசணும்.

அவர் தலை, மறுப்பில் பலமாய் அசைந்தது.

விழிகள் கரை உடைந்தன.

அதை மறைக்கவோ, தடுக்கவோ அவர் முற்படவில்லை.

# தூசி

அகண்ட மணலைக் கண்டதும் பாப்பாவுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அதுவரை சமத்தாய் அப்பா கையைப் பிடித்துக் கொண்டு வந்தவள் திடீரென அவன் பிடியினின்று விடுவித்துக் கொண்டு, குறுக்கே விழுந்தடித்து ஓடினாள். ஒரு சைக்கிள் அவள் பாவாடை மேல் உராய்ந்து சென்றது. அதைச் சவாரி செய்பவனின் வசை மொழிகள் காற்றோடு அடித்துக் கொண்டு போயின. கூடச் சேர்ந்து அவனும் சபித்தான்.

ஆனால் பாப்பாவுக்கு அதெல்லாம் கேட்கவில்லை. மணலைக் கைகளாலும் கால்களாலும் வாரியிறைத்துக் கொண்டு ஓடினாள்.

''அடி பாவி! யார் கண்ணிலாவது விழப்போறதுடீ! என்று பின்னாலிருந்து கத்தினான்.

'இல்லேப்பா'!—என்று சொல்லிக் கொண்டே இன்னமும் அதிகமாய் இறைத்துக் கொண்டு ஓடினாள். அவள் வெறியைப் பார்க்க ஒரு பக்கம் சிரிப்பு வந்தது. வளர வளர, பாப்பா, அவள் அம்மாவையே உரித்து வைத்தாற்போல் ஆகிக்கொண்டு வந்தாள். அதே சிவப்பு, அதே மூக்கு, அதே மாதிரி செம்பட்டை மயிர், அதே அடங்காத்தன்மையும் பிடிவாதமும். ஒன்று செய்யாதே என்றால் அதைத்தான் கங்கணம் கட்டிக் கொண்டு செய்வாள். அவளைப் பார்க்கை யில் சந்தேகம் அடிக்கடி தோன்றும் குணங்கள் பழக்க தோஷமா; அல்லது ரத்தத்திலேயே ஊறினவையேதானா?

முக்கிய காரியமாய் கிளம்பிக்கொண்டிருப்பான். ‘‘எங்கேப்பா போறே?’’ அச்சமயம் எரிச்சலாய் வரும். மறு சமயம், அமைதியாக, ‘‘அப்படியெல்லாம் கேட்கப்படாது பாப்பா—’’ என்று மடி மேல் வைத்துக் கொண்டு புத்தி சொல்கையில், ‘‘சரி தான். நீ போறப்போ கேக்கலே, ஆனால் நீ எங்கே போறே?’’ என்று கேட்கையில், ஆசையில் கடித்துத் தின்று விடலாம் போல் இருக்கும். மஹா துஷ்டை.

இருந்தாலும், இப்போதைக்கு வண்டி, காடி பயமில்லை. அலையண்டை போகாதவரை அவளை இஷ்டப்படி விளையாட விடலாம். ஆகையால் அன்று அவனுக்கு வந்த கடிதத்தை எடுத்து, மணலில் நடந்து கொண்டே மறுபடியும் படிக்க ஆரம்பித்தான். மனம் ரொம்பவும் வேதனையடைந்திருந்தது. சிற்சில பகுதிகள் சட்டுசட்டெனக் கண்ணிற்குப் பட்டன.

—‘‘பாப்பாவை இங்கே கொண்டு வந்து விட்டுவிடு. பொம்மனாட்டி வளர்த்த பிள்ளையும் புருஷன் வளர்த்த பெண் குழந்தையும் இதுவரை எப்பவுமே உருப்பட்டதில்லை......... பாப்பா இப்போ என்கிட்டேதான் இருக்கணும். ஏதோ நாலு காசு சம்பாதிக்கறேன்னு சமையலுக்கு ஆளைப் போட்டுண்டா ஆயிடுத்தா? நீ உன் மனசிலே என்னத்தை வெச்சிண்டிருக்கேன்னு நான் என்னத்தைக் கண்டேன்? எப்பவுமே இப்படி இருக்க முடியுமா? முடியற வயசா? உனக்கு உன் குழந்தையைப் பிரிய மனசு இருக்காது. ஆனால் எனக்கும்தான். அப்படியிருக்கு. நான் என்ன பண்ண முடியறது? அது அது பெருத்துப் போச்சு; நாலும் நாலு இடத்திலே சிதறிக் கிடக்கு. நாலுவிதமாயிருக்கு. சொன்னதைக் கேக்கறதா? இந்த வயசிலே நானும்தான் என்னத்தைச் செய்ய முடியறது?’’

‘‘அப்பா—அப்பா—’’ அவன் சிந்தனைகள் கலைந்தன. பாப்பா கண்ணைக் கசக்கிக் கொண்டு அழுது கொண்டே வந்தாள். முகம் தக்காளிப் பழமாய்ச் சிவந்துவிட்டது.

‘‘என்ன? என்ன?—’’

‘‘மண்ணு—’’

‘‘கடன்காரி, சொன்னால் கேட்கறையா?’’ அவள் முகத்

தைப் பிடித்துக் கொண்டு கண்களில் ஊதினான்.

"அப்படியில்லை—" என்று ஒரு குரல் தடுத்தது. சிரித்துக் கொண்டு ஒருத்தி நின்றாள். "இங்கே வா—பாப்பா—" என்று குழந்தையைப் பிடித்துத் தன்பால் இழுத்தாள். தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்துக் கொண்டு, அவள் பாப்பாவின் கண்ணுள் ஊதுகையில், திடீரென அவள் செய்கை அவனுள் ஏதோ பொத்தானை அமுக்கி, மனக் கதவுகள் ஒன்றிற்குள் ஒன்று திறந்து கொண்டே போயின. —"யார்—நீயா?"

குனிந்த நிலையிலே அவள் அவனை நிமிர்ந்து பார்க்கையில், அவள் விழிகள் கூத்தாடின.

"நீ நீயானால், நான் நான்தான்—" என்றாள். 'என்ன பாப்பா சரியாய்ப் போயிடுத்தா?—"

பாப்பா ஆம் எனத் தலையைப் பலமாய் ஆட்டினாள்.

"சரி வா. மடியிலே உட்கார்—உன் பேர் என்ன?"

"பாப்பா!—"

"ஓஹோ—நீ நீ, நான் நான், பாப்பா பாப்பாவாக்கும்—அம்மா எங்கே பீச்சுக்கு இன்னிக்கு வரலேயா?"

பரீக்ஷையில் பதில் சொல்லும் பையனைப் போல் பாப்பா தன் அப்பாவை சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே, "அம்மா இல்லே—" என்றாள்.

"ஊருக்குப் போயிருக்காளா?"

"செத்துப் போயிட்டா—"

"ஐயோ!—" அவள் குழந்தையை அப்படியே அணைத்துக் கொண்டாள். அவனுக்கு லேசாய் மாரை வலித்தது. எதற்கு யார் மேல் என்று நிச்சயமாய்த் தெரியாமல் சிறு கோபம் கூட உண்டாயிற்று.

"பாப்பா, போய் விளையாடு—" என்றான்.

பாப்பா அணைப்பிலிருந்து நழுவி சிட்டுக்குருவியாய்ப் பறந்தாள்.

''அடேயப்பா, எத்தனை நாட்கள்!'' என்றான்.

அவள் தலையை யசைத்தாள்.

''ஆனால் நீ மாறவில்லை—''

''வதங்கினால் தானே மாற முடியும்?'' என்றாள். ''நீ மாறியிருக்கிறாய்—'' என்றாள் மறுபடியும்.

''ஆம், நான் வதங்கியிருக்கிறேன்—'' என்றான். மார்புள் மறுபடியும் முணுக் முணுக்கென்றது. சட்டென ஏதோ நினைப்பெடுத்தவனாய் ''தூசி ஊதி ஊதி உனக்கு ரொம்பவும் பழக்கமில்லையா?'' என்று கோபத்துடன் முணுமுணுத்தான். உள் குமுறலின் வேதனை இன்னமும் தணிந்தபாடில்லை.

ஒரு கணம் திகைத்தவளாய், திடீரென்று அர்த்தமான வளாய் கையைக் கொட்டி வாய்விட்டுச் சிரித்தாள். ஆனால் அவனுக்குச் சிரிப்பு வரவில்லை. சீற்றம்தான் பொங்கி யெழுந்தது.

''உனக்கு எல்லாமே சிரிப்புத்தானே!'' என்றான். அவள் மறுபடியும் சிரித்தாள். ஆனால் முதல் சிரிப்பின் வெள்ளை இதில் இல்லை. ''பிழைப்போ சிரிப்பாய்ச் சிரிக்கும் பிழைப்பு. வெறும் சிரிப்புக்கூட கூடாது?'' என்றாள். மறுபடியும் ஏதோ ஞாபகம் வந்தவளாய் ''உன் அப்பா சௌக்கியமா?'' என்றாள்.

புன்னகை அவனையும் மீறியது— ''இல்லை காலமாய் விட்டார்—'' என்றான்.

''அடடா! எல்லாம் போன கதையாகவேயிருக்கிறதே!'' என்றாள். ஆனால் அனுதாபத்துடன் ''இல்லே, அவர்தான் போனார்—கூட அவர் மீசையும் போச்சே!''

''போலீஸ் மீசை!'' என்றான்.

''அவர் போலீஸ் என்று அதுவும் எங்களுக்கு மறந்துடுமா என்ன? உன் கண் தூசியை நான் ஊதின மூன்றாம் நாள், எங்களை ஊரை விட்டே ஊதி விட்டாரே! எங்கள் முதலாளி அவரை ஒரு நாளும் மறக்கவில்லை—''

''பரவாயில்லை. எல்லாம் ஞாபகம் வைத்திருக்கிறாய்'' மறுபடியும் அவள் சிரித்தாள்.

"அடேயப்பா எத்தனை நாட்கள் ஆயின!" என்றான்.

"ஆனால் என்ன? இப்பொழுது பார்க்கையில் நிமிஷங்கள் மாதிரியிருக்கின்றன—"

"உலகில் நிமிஷங்கள் தாம் உண்டு. நிரந்தரம் ஏது?"

"ஆனால் நிரந்தரத்தையே தம்முள் அடக்கிய நிமிஷங்களும் சில இருக்கின்றன—அவைகளாவது இருப்பதினால் தான், நாம் இருக்கிறோம். அதுவும் இல்லாவிடில் அப்புறம் உலகில் இருக்கத்தான் என்ன இருக்கிறது?

"நிமிஷங்கள் அடங்கிய நிரந்தரம்—நிரந்தரம் அடங்கிய நிமிஷம்" "நாளையக் கவலை நாளைக்கு—இன்றைய தினம் இன்று—' என்றாள் அவள் மெதுவாய்; அடியெடுத்துக் கொடுப்பது போல்.

பாதி மயக்கத்தில் விழித்தவன்போல் அவன் திடீரென்று "நாம் இப்பொழுது என்ன பேசிக் கொண்டிருக்கிறோம்?" என்றான். படும் வேதனையில் புருவங்கள் சுழித்துப் போயிருந்தன. பழைய நினைவுகளின் போதை அவனை இன்னும் முற்றிலும் மூடவில்லை.

"நீ அன்று பார்த்த நாடகத்திலிருந்து சில வசனங்கள்—"

தூரத்திலிருந்து வரும் அலைகளின் ஓசை அவர்களிடையில் சுருதிபோல் இழைந்து கொண்டிருந்தது.

"நீ அவைகளைச் சொல்கையில் பிரமிக்கும்படியிருந்தாய்—"

"மேடைக்கே ஒரு களையுண்டு. அதில் நிற்கும் இடங்கள் உண்டு. விளக்கு வேலைப்பாடுகள் உண்டு. "மேக்—அப்" சூட்சுமம் உண்டு. தவிர பார்க்க வந்தவர், கேட்க வந்தவர் மனநிலையுண்டு—"

"நீ என்னை அன்று வாரிக் கொண்டு போனாய்—" என்றான் தனக்குள்.

"அத்துடன் இல்லாமல் உங்களை நாடகத்துக்கு கூட்டிக் கொண்டு வந்த சினேகிதன் "வேஷ அறைக்கு" (Green Room) வேறே கூட்டிக் கொண்டு வந்து விட்டான் இல்லையா? அவனும் எங்கள் முதலாளியும் பழக்கம். "இவர்தான் போலீஸ்

இன்ஸ்பெக்டர் அய்யா பிள்ளை'' என்று பரிச்சியம் வேறே பண்ணி வைத்தார்—''

''அப்பொழுது நீ என்னைப் பார்த்து புன்னகை புரிந்தாய். மேக்கப் மேசையண்டை நின்று கொண்டிருந்தாய். அப்போதுதான் மேடையிலிருந்து வந்திருந்தாய் லேசாய்த் திணறிக் கொண்டிருந்தாய்—''

''வெற்றியும் தாங்குவது சிரமந்தான். ஆகையால் திணறி யிருக்கலாம்—''

''அந்த நிமிஷம் வெகு அழகாயிருந்தாய்—''

''எனக்கு வெக்கமாயிருக்கே!—'' என்று கேலியாய் முன்றானையை வாய்மேல் போட்டு மூடித்தலையைக் குனிந்து கொண்டாள். 'ஆனால் அதற்கப்புறம் இல்லையா?'' என்றாள் அடுத்தபடியாக.

''ஆனால் அந்தச் சமயமே வேறு.''

''அப்படியானால் அது சமயத்தின் அழகுபோலும்! என் அழகு இல்லையாக்கும்!''

''என்னைக் கவிழ்த்த அழகு—அன்று என் தூக்கத்தையும் மறுநாள் என் பசியையும் கெடுத்தாய். உன்னையே நினைத்துக் கொண்டு எங்கே போகிறோம் என்று கூடத் தெரியாமல், திகைப்பூண்டு மிதித்தவன் போல் சுற்றினேன்'' என்றான்.

''நானும்தான் சுற்றினேன். ஊரை வேடிக்கை பார்க்க—'' என்றாள். ஊர் ஊராய்த் திரிபவர்களுக்கு, ஒவ்வொரு ஊரும் வேடிக்கை—''

அவள் சொல்வதையே கேளாதவன் போல், ''நான் ஊர்த் தோப்புள் நுழைந்தேன்—''

''நானும் நுழைந்தேன். வேறு வழியாக—''

நான் நடந்து கொண்டே போனேன்—''

''நான் வேடிக்கை பார்த்துக் கொண்டே போனேன்—''

''நான் உன்னைக் கண்டேன்.''

''நானும் நீ என்னைக் கண்ட அதே சமயத்தில் உன்னைக் கண்டேன்.''

''ஆனால் உன்னோடு பேசினேனோ? பேசத்தான் தைரிய

முண்டோ? அங்கு அப்பொழுது நம்மிருவரைத் தவிர வேறு யாரும் இல்லையே! அப்போது கூட—''

''வெட்கம்!—'' என்றாள் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு. அவள் கண்களில் குறும்பு குதித்தது. அவன் காதில் வாங்கிக் கொள்ளாமலே மேலே சொல்லிக் கொண்டே போனான். தொட்டுத் தொட்டுத் தன்னைப் பாடுபவனைத் தன்னுடனேயே இழுத்துச் செல்லும் ராகம் போல் இருந்தன அவன் நினைவுகள். அவைகளுக்குப் போடும் சுருதிபோல் அவர்களிடையில் அலைகளில் ஓசை இழைந்தது.

''அச்சமயம் ஒரு தூசியோ பூச்சியோ பறந்து வந்து என் கண்ணுள் விழுந்தது. நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு தவித்தேன். நீ உடனே என்னிடம் வந்து என் தலையைப் பிடித்துக் கொண்டு என் கண்ணுள் ஊதினாய்—'' பேச்சு அந்த இடம் வந்ததும், தடுமாறி நின்று விட்டது. அவன் அப்பொது அங்கு இல்லை. விவரித்து வரும் அந்த நிமிஷத்தில் அமிழ்ந்து விட்டான். அவன் கட்டிக் கொண்டே வந்த நினைவுத் தொடர்பைத் துண்டிக்காமல் காப்பாற்றுவது போல் அலைகளின் ஓசை, கனமாய் அவர்களிடையே சுருதி போல் இழைந்தது.

''அந்த நிலையில் நான் ரொம்பவும் அழகாயிருந்தேன் என்று சொல்லேன்'' என்றாள் கிண்டலாய், புன்னகை புரிந்து கொண்டே. அவன் அவனில் இழைந்து இருக்கும் நிலையை அவள் வெகுவாய் அனுபவித்தாள்.

வெட்கத்தில் அவன் முகம் சிவந்தது. அவன் அவஸ்தையைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆனந்தம் அதிகரித்தது. இரக்கமில்லாமல் வாட்டிக் கொண்டே போனாள்.

''என்னை வெட்கங் கெட்டவள் என்றுதான் சொல்லேன்—'' என்றாள். ''அந்த மாதிரி, முன்பின் பழக்கமில்லாமல், நானே வந்து உன்னைத் தொட்டு உன் முகத்தைப் பிடித்து கண்ணுள் ஊதினேனே!''

பேச முடியாமல் தவித்தான்.

''அரங்கத்தில் நடிக்கும் எங்களுக்கு எல்லாமே சகஜம் தான். நாங்களாக நடிக்கும் வெட்கம் தவிர சுய வெட்கம்

எங்களுக்கு ஏது? ஆனால் அச்சமயம் என் மனதில் உன்மேல் சூழ்ச்சியொன்றும் கிடையாது. உன் கண்ணில் தூசி விழுந்தது—நீ அவஸ்தைப் பட்டாய்—நான் ஊதினேன்—அவ்வளவுதான்—''

''என் கண் தூசியை மார்புள் ஊதிவிட்டாய்—'' என்றாள். குரல் தழதழத்தது. மார்புள் மறுபடியும் முணுக்முணுக் கென்றது.

'ஏதேது, ஒரு நாள் நாடகம் பார்த்ததிலேயே வசனங் கட்டக்கூட வந்து விட்டார் போலிருக்கிறதே—''

அவன் முகத்தில் ஜுரம் அடித்தது. ''உனக்கு எல்லாவற்றையுமே நடித்து நடித்து பொய்மையிலேயே பழகிப் பழகி உண்மையை அடையாளம் கண்டு கொள்ளக் கூட மறந்து விட்டது—'' கோபம் தொண்டையை அடைத்ததால் ஒரு முறை கனைத்துக் கொண்டான்.

''கனைப்புக் கூட உன் அப்பா மாதிரியே இருக்கிறதே;—'' என்றாள். ''அப்பொழுது நம் பின்னாலிருந்து வந்ததே, அந்த கனைப்பு சப்தமாகவே இருக்கிறதே! திடீர் என்று நம் பின்னால் ஆள் முளைத்திருந்ததைப் பார்த்தும், எனக்கே தூக்கிவாரித் தான் போட்டது. அப்பொழுது உன் அப்பா என்று எனக்குத் தெரியுமா? ஒரு புது நாடகத்துக்கு ஒத்திகை ஆரம்பிக்கிறதுக்கு முன்னால், கதை புரிவதற்காக மூலப் புஸ்தகத்தை நாங்கள் படிப்பது உண்டு. பெரிய எழுத்து—ஐதீகப் படங்களுடன் என்று இருக்கும். அவைகளில் இருக்கும் மதுரை வீரன், காத்தவராயன் பொம்மை மாதிரியிருந்தார் உன் அப்பா. வாட்ட சாட்டமாய், குத்து மீசையும், மேட்டு விழியும், வெள்ளை முழியிலே கோபத்திலே ஆடும் கறுப்பு முழியும் அதுவுமாய் ஆள் பார்க்கக் கொஞ்சம் அச்சமாய்த்தான் இருந்தார். உனக்குக்கூட முகம் வெளுத்து விட்டது.''

''நான் அப்பாவுடன் எப்பவுமே நெருங்கிப் பழகிறது இல்லை.''

''ஆனால் அவர் என்னைத்தான் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் ''என்னம்மா—நீ யார்?'' என்றார். ''நான் புது நாடகக் கம்பெனி,'' ''உனக்கு இங்கே என்ன வேலை?—'

''வேடிக்கை பார்க்க வந்தேன்—'' ''இல்லை ஒரு வேளை இதையும் நாடக மேடை என்று நினைத்துக் கொண்டாயோ என்று பார்த்தேன்—'' ''உன் தகப்பனாருக்கு மரியாதை மீறாமலே அவமானப் படுத்த நன்றாய்த் தெரிகிறது—''

'நான் ரொம்பவும் குழம்பிப் போயிருந்தேன். எனக்கு இப்பொழுது ஒன்றும் ஞாபகமில்லை—' என்றான்.

''நான் மறக்கவில்லை? இப்பொழுது வேடிக்கையாயிருந் தாலும் அப்பொழுது இல்லை. நான் ஒன்றுமே பேசவில்லை! 'ஏன் இன்னும் நிக்கறே?' என்று அவர் போட்ட கர்ஜனையில் நான் அங்கு நிற்கவேயில்லை. ஓட்டம் பிடித்தேன்—அப்புறம் என்ன நடந்தது?''

''என்னை உன்னைப் பற்றிக் கேட்டார். ஆனால் எனக்கு என்ன தெரியும்? உன் பேர் கூடத் தெரியாதே! பிறகு நாடகக் கம்பெனி பேரை மாத்திரம் கேட்டுக் குறித்துக் கொண்டு என்னை ஒரு தடவை துருவியெடுக்கிறாப் போல் பார்த்து விட்டு 'நீ போ' என்று விட்டார்—''

கையைக் கொட்டிக் கொண்டு அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

''போனது நீ இல்லை, நாங்கள் தான். அன்றையிலிருந்து மூன்று நாட்களுக்குள் உன் தகப்பனார் போலீஸ் உடுப்பில் கொட்டகைக்கு வந்து, மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு, அது சரியில்லை இது சரியில்லை, என்று இல்லாத குற்ற மெல்லாம் பாராட்டி 'லைசென்சை'யே ரத்தாகும்படி செய்து எங்களை ஊரைவிட்டு விரட்டி விட்டார். கம்பெனி அவ்வளவு சுருக்க ஊரை விட்டுப் போனதற்குக் காரணம் அது இல்லை. நீயும் நானும்தான் என்று என் முதலாளியிடம் நானும் காட்டிக் கொள்ளவில்லை. எனக்கு ஏகப் பயம். உன் தகப் பனாருக்கு அவர் பயம், நான் இன்னும் தங்கியிருந்தால் பிள்ளை கெட்டுப்போய் விடுவானோ என்று. அது தானே!''

'இருக்கலாம்' என்றான் மறதியுடன் எங்கோ பார்த்துக் கொண்டு, ''நீ ஆனால் ஒரு பெரும் ஜுரம் மாதிரிதான். அப்புறம் ரொம்ப நாள் என்னுள் அடித்துக் கொண்டிருந் தாய்.''

“பிறகு என்ன நடந்தது?”

இதென்ன கேள்வி? அவனுக்கு எரிச்சலாய் வந்தது. “சும்மா என்ன நடக்கும் சினிமாவா, டிராமாவா, ஏதாவது நடந்து கொண்டேயிருக்க?”

கல்யாணம் நடக்கவில்லையா? குழந்தை பிறக்கவில்லையா? பெண்டாட்டி காலமாகவில்லையா? இதெல்லாம் நடந்ததில் சேர்த்தியில்லையா? புன்னகையை அவனால் அடக்க முடியவில்லை. “ஆமாம் சரி, உனக்கு என்ன நடந்தது?”

“எனக்கும் கல்யாணம் ஆயிற்று—” அவன் கண்கள் சட்டென அவள் கழுத்தில் பாய்ந்தன. மற்ற நகைகள் இருந்தனவேயன்றி சரடு இல்லை. (ஆனால் அதனால் என்ன? கல்யாணத்திலும் எத்தனையோ விதங்கள் இல்லையா? ஆயினும் கழுத்தில் எவ்வளவு இளமை ததும்பிக் கொண்டிருக்கிறது!)

“எங்கள் கம்பெனி முதலாளியைப் பண்ணிக் கொண்டேன்—” என்றாள் தொடர்ந்து.

“ஓ?”

“ஆம்” என்றாள் அழுத்தத்துடன். அவள் காரியத்தை அவனிடம் சாதித்தே தீரவேண்டும் போல் “எனக்குத் தெரியும் பணத்தின் அருமை, நான்தான் பளிச்சென்று சொல்கிறேனே-எங்கள் பாடெல்லாம் அடிக்கும் வரைதான் அதிர்ஷ்டம். அப்புறம் அதோ கதிதான், என்னைப் பெற்றவர்களையே எனக்குத் தெரியாது. நான் ஒரு அனாதை விடுதியில் வளர்ந்து கொண்டிருந்தேன். நாடகத்திற்கு ஆள் தேடுகையில் எங்கள் முதலாளி என்னை அங்கிருந்து கம்பெனியில் சேர்த்துக் கொண்டார். அதனால் பிழைப்பின் கஷ்டம் என்பது என்ன என்று எனக்குத் தெரியும், பணத்தின் அருமையும் எனக்குத் தெரியும்.—”

“இப்பொழுது என்ன அதனால்?”— என்றான், பேச்சை மாற்றும் தினுசில்.

“ஒன்றுமில்லை. அவர் என்னைப் பண்ணிக் கொள்ள ஆசைப்பட்டார், நானும் அவரைப் பண்ணிக் கொண்டேன். அவருக்கும் வயசாய் விட்டது காலமும் ஆகிவிட்டது. எல்லா

வற்றையும் என் பெயருக்கு எழுதி வைத்து விட்டுப்போன தினால் நான் இப்பொழுது சௌக்கியமாயிருக்கிறேன்.''

''கம்பெனி?''

''அதெல்லாம் எங்களுக்குக் கலியாணம் ஆனவுடனே முடி யாகி விட்டது. எனக்கு மறுபடியும் ஊர் ஊராய்ப் போய்த் திரிந்து கொண்டிருக்கும் பிழைப்பு அலுத்து விட்டது—''

அவன் அவள் அபிப்பிராயத்தை ஆமோதிப்பது போல் தலையை அசைத்தான்.

'ஆனால்—' என்றாள் மெதுவாய்.

''என்ன—''

''ஆனால் அந்த பழைய துரு துருப்பு இன்னமும் அடங்க வில்லை. முன்னைவிட இப்பொழுது எவ்வளவோ சௌக்கிய மாய்த் தானிருக்கிறேன். இஷ்டப்பட்டதை வாங்கிக் கொள்ள முடிகிறது. இஷ்டப்பட்டதைச் செய்ய முடிகிறது, இருந்தும் சில சமயங்களில் பொழுது தான் போக மாட்டேன் என்கிறது. காலம் பாறையாய்த் தலைக்கு மேல் தொங்குகிறது. அப்போ தெல்லாம் இருந்த பொழுது போதாது—''

'அப்பா—அப்பா—ஆத்துக்குப் போவோம்—' என்று பாப்பா ஓடி வந்து பேச்சைக் கலைத்தாள்.

'அட, இருட்டி விட்டதே—' என்றான் ஆச்சரியத்துடன். நேரமானதே அப்பொழுதுதான் தெரிந்தது.

'அதுக்குள்ளேயே போகணுமா என்ன?' என்றாள். ''பாப்பா இங்கே வா உனக்கு நான் முந்திரிப் பருப்பு வாங்கித் தரேன்—என் மடிலே படுத்துக்கோ—'' என்று குழந்தையைக் கையைப் பிடித்து இழுத்தாள். ஆனால் பாப்பாவா ஏமாறு கிறவள். அவளை உதறிக் கொண்டு அப்பா சட்டையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தாள். ''வா அப்பா போகலாம்—'' என்றாள் அழுகைக்கு அடிகோலும் முனகலில்.

''அது ஒரு பெரும் சண்டி—பாப்பா ஏதாவது நினைத்துக் கொண்டு விட்டால் அப்புறம் அவள் எண்ணத்தை மாற்றவே முடியாது —'' என்று சொல்லிக் கொண்டே, மேல் துண்டை உதறிக் கொண்டே எழுந்திருந்தான்.

இருவரும் சற்றுநேரம் தூரத்து சமுத்திர நீலத்தைப்

பார்த்துக் கொண்டு மௌனமாய் நின்றனர்.

"சௌகரியப் பட்டால் வீட்டுப்பக்கம் வாயேன்—அடையாறில் இருக்கிறேன்—இந்தா என் விலாசம்—" என்றாள் ஏதோ சாதாரணமாய்ப் பேச்சு வாக்கில் சொல்வதுபோல். ஆனால் அந்த அனாயசம் எவ்வளவு கஷ்டப்பட்டு வரவழைத்துக் கொண்டதென்று அவள் குரலின் ஜாக்கிரதை உணர்த்தியது.

'அதற்கென்ன?' என்று பதில் சொல்லி விட்டு, பாப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான். இரண்டொரு முறை திரும்பிப் பார்த்தான், அவள் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள்.

## 3

**சா**ப்பிட்டு விட்டு இப்பொழுது அவன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். பாப்பா அவன் படுக்கையில் விளையாடிக் கொண்டேயிருந்து விட்டு அப்படியே கண் அயர்ந்து விட்டாள். மொட்டுப்போல் வாய் சற்றே திறந்த வண்ணம், அரைத் துணி போன இடம் தெரியாமல் கையையும் காலையும் விசிறிப் போட்ட வண்ணம் அவள் தூங்குவதைப் பார்க்க வேடிக்கையாயிருந்தது. குழந்தைகள் பாடு நிம்மதி. பேசிக் கொண்டேயிருக்கின்றன! அப்படியே தூக்கத்துள் நழுவி விடுகின்றன. விழிப்பதும் அப்படித்தான்.

மேஜையில் அவன் எதிரில் ஒரு கடிதம் பிரித்துப் போட்டபடியிருந்தது. சாயங்காலம் கொடுக்க மறந்துட்டேன் என்று சமையற்காரப் பாட்டி, இப்பொழுதுதான் அவள் வீட்டுக்குப் போகுமுன் கொடுத்து விட்டுப் போனாள்.

அவன் மாமனாரிடமிருந்து வந்திருந்தது. மேம்பாடாய்ப் பார்க்கையிலேயே ஆங்காங்கு சில வார்த்தைகள் தெறித்திருந்தன.

"மாப்பிள்ளைக்கு அனேக ஆசீர்வாதம், உங்களுக்கு

எப்படி எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் நான் எழுதும் விஷயத்திற்குப் பாப்பாவை என் மனச்சாக்ஷியாய் வைத்துக் கொண்டு எழுதுகிறேன்.

"உங்களுக்குக் கொடுத்தபின் எனக்கிருப்பது ஒரு பெண் தான் என்றாலும் அவளுக்கு வரன் தேடித் தேடி இன்னமும் தகைந்த பாடில்லே. ஒன்று ஒத்துக் கொண்டால் ஒன்று ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறது. எனக்கும் அலுத்து விட்டது. வயதும் ஆகிவிட்டது. தவிர உங்களை விட சிரேஷ்டமாய் யார் எங்களுக்குக் கிடைக்கப் போகிறார்கள்? அவளையும் ஜாடை மாடையாய் அறியப் பார்க்கையில், இந்தச் சம்பந்தத்தைத் தான் விரும்புகிறாள் என்று தெரிகிறது.

"ஆகையால் உங்கள் தாயாருக்கு எழுதியிருக்கிறேன். அவளை நேரிலும் போய்ப் பார்க்கப் போகிறேன். இருந்தாலும் இந்தக் காரியத்திற்கு உங்கள் சம்மதமில்லாமல், மற்றவர் சம்மதம் அத்தனையுமிருந்தும் என்ன பிரயோசனம்?

"மாப்பிள்ளை! உங்களுக்கு இந்த விஷயம் எப்படிப் பிடிக்கும் என்று நான் எப்படிச் சொல்வது? முதல் சம்பந்தத்தில் உங்களை நாங்கள் ஏமாற்றி விட்டோம் என்ற எண்ணம் இருந்தாலும் இருக்கலாம். அதனால் மெத்த கோபம் இருந்தாலும் இருக்கலாம். ஏன் எனில் என் மூத்த பெண் முழுக்க முழுக்க சமத்தாய் இருந்திருப்பாள் என்று நான் சொல்லிக் கொள்ள முடியாது. முதல் குழந்தையாய், செல்லக் குழந்தையாய், வளர்ந்து விட்ட அவளே ஒரு தினுசு தான். சுற்றுமுற்றுமிருப்பவர்கள் எல்லாம் கலியாணம் ஆகி, குடும்பத்தில் அடிபட்டால் சரியாய்ப் போய் விடுவாள் என்று சொன்னார்கள். ஆனால் காரிய பூதத்தில் அப்படி நேரவில்லை."

"அவள் அப்படி யானதினால், அவள் தங்கையும் அப்படியென்று நீங்கள் நினைக்கலாகாது. அத்தனைக்கத்தனை என் அடுத்த மகள் அடக்கம் பொறுமை, குணங்கள் எல்லாமே வேறுபாடுதான். ஒரே வயிற்றில் பிறந்த இரண்டும் இரண்டு விதமாயிருப்பது விதியின் வேடிக்கை என்பது தவிர வேறு என்ன சொல்வது? என் பெண்ணின் பெருமையை நானே அடித்துக் கொள்வது அழகல்ல. இருந்தும் நீங்கள்

சுட்டபாலில் நாக்கைப் பொரித்துக் கொண்டதால் பாலே சுடும் என்று ஆகிவிடுமா? நான், என் மனோவேகத்தில் ஏதாவது உளறியிருந்தால் மன்னிக்க வேண்டும்·—நல்ல வேளையாய் என் குடும்பம் உங்கள் தாயாருக்குப் புதிதல்ல. என்னையும் என் மனைவியையும் எங்களுக்குக் கலியாணம் ஆகு முன்னரே அவள் அறிவாள்—''

கடிதத்தை வீசி ஒருபுறம் எறிந்தான். எல்லாருமே கடிதம் எழுதுவதில் சாமர்த்தியமாய்த்தான் இருக்கிறார்கள்.

வேகமாய் அறையில் முன்னும் பின்னுமாய் உலாவ ஆரம்பித்தான். அக்கடிதம் அவன் மனதை வெகுவாய்க் கிளறிவிட்டது. இன்று முழுதுமே என்னென்று தெரியவில்லை, அவனுக்கு எதைக் கண்டாலும் கோபமாய் வந்தது.

எதிர் வீட்டில் ஒரு பெண் பிடில் பயிலும் சப்தம் ஜன்னல் வழி காற்றில் மிதந்து வந்தது. ஒரு பாட்டின் ஒரு அடி பிடிபடவில்லை போலும். திரும்பத் திரும்ப அதையே வாசித்துக் கொண்டிருந்தாள், ஒரே மாதிரியாக அதே இடத்தில் அதே தப்பைப் பண்ணிக்கொண்டு. இப்பொழுதைய மனநிலையில் அது காதைப் பொளிந்தது. எரிச்சலாய் வந்தது. ஜன்னலைப் படாரென்று சாத்திவிட்டுத் திரும்பினான். எதிரே சுவற்றில் மாட்டியிருக்கும் படத்திலிருந்து அவன் மனைவி அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவனைக் கேலி செய்வது போலிருந்தது. பின்னால் கையைக் கட்டிக்கொண்டு மேலுதட்டை கீழ்ப்பல்லால் கவ்விக் சொண்டு நின்றான். பெருஞ் சீற்றம் அவனுள் எழுந்தது.

''உன்னைப்பற்றி நினைக்க வேண்டுமென்றா? இல்லை—' என்ற வார்த்தைகளை வாய்க்குள் உருவாக்குகையில், நாக்கு மூடிய வாயின் மேற்கூரையைப் பிளக்க முயன்றது.

விட்டத்திலிருந்து ஒரு பல்லி 'கட், கட்' என்று பேசியது.

'நான் நினைக்கச் சொல்லவில்லையே!'

'நீ எனக்கிருந்த ஆதரவிற்கும் அரவணைப்பிற்கும்!'' என்றான் மறுபடியும், பல்லைக் கடித்துக்கொண்டு.

எந்தத் தினுசில் அவள் சரியாயில்லை என்று திருஷ்டாந்த

மாய் இப்பொழுது கூடச் சொல்ல முடியவில்லை. அவளுடன் நடத்திய வாழ்க்கை, வண்ணான் மடியிலிருந்து கட்டிய துணி போலிருந்தது. தேடினால் முட்கள் அகப்படா. ஆனால் குத்திக்கொண்டேயிருக்கும். ஓரிடத்து முள்ளை யெடுத்தால் இன்னொரு இடம் குத்திக்கொண்டிருக்கும். அவளுடைய காரணமற்ற கோபங்களும், சமயமற்ற சிரிப்புக்களும், பிறருக்கு கஷ்டம் நேர்ந்தாலும் தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் பிடிவாதமும், சிறுசிறு அசட்டுத் தனங் களும் அவளுடன் நடத்திய வாழ்க்கையை ஒரு தொடர்ந்த வேதனையாக்கி விட்டன.

கடைசி காலத்தில்கூட அவள் மனஸ்தாபத்துடன்தான் போனாள். நவராத்ரி அவள் உடன் பிறந்தவன், சாதாரண மாய்ப் பார்க்க வந்திருக்கையில், திடீரென்று பிறந்த வீட்டுச் சபலம் கண்டு கொலுப் பார்க்கப் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, அவனுடைய சௌகரியங்களையும் சம்மதத்தையும் பொருட்படுத்தாமல் அவள் தம்பி சொல்லும் புத்திமதிகளையும் கேட்காமல் அழுது அழுச்சாட்டியம்பண்ணி குழந்தையைக் கூட்டிக் கொண்டு தம்பியுடன் பிறந்தகம் போய் விட்டாள்.

அச்சமயம் அவள் மேல் அவனுக்குக் கடுங்கோபம்தான். அவள் திரும்பி வந்தால் அவளைப் படியேற விடுவதில்லை என்று கறுவிக் கொண்டிருந்தான். அடுத்த நாளைக்கடுத்த நாள் அவன் மாமனாரிடமிருந்து கடிதம் வந்தது. பெண்ணின் அசட்டுத்தனத்துக்கு மன்னிப்புக்கோரி. தானே அவளைக் கொண்டு வந்து விடுவதாக. ஆனால் மனம் இளகவில்லை. வைரம் முற்றியது. அதற்கடுத்த நாள் ஆபிஸுக்குத் தந்தி வந்தது. அவன் மனைவிக்கு காலரா கண்டு ஆபத்தான நிலையிலிருக்கிறாள் என்று. இந்தத் தந்தியே ஒரு சூழ்ச்சியா யிருக்கும் என்று சந்தேகம் அடித்துக் கொண்டாலும் மனம் கேட்கவில்லை. ஆத்திரம் எல்லாம் எங்கோ பறத்தோடிப் போயிற்று. அன்றிரவு ரயிலையே பிடித்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டு போனான்.

வாசலில் பாப்பாவை இடுப்பில் தூக்கிய வண்ணம்

அவன் மைத்துனிதான் எதிர்ப்பட்டாள். அப்பொழுது ஒன்றும் தோன்றவில்லை. ஆயினும், இப்பொழுது நினைவில் அவளை வரவழைத்துக் கொள்கையில், அவளுடைய வெளுத்த சிவப்பும், கீழ் நோக்கிய சோகப் பார்வையில் தோன்றிய மௌனமான வரவேற்பும் சட்டெனப்படுகிறது.

உள்ளே கூடத்து அறையுள் போனான். எல்லோரும் அவனைச் சுற்றிக் குழுமியிருந்தனர். "மாப்பிள்ளை வந்து விட்டார்!—" அவன் வருகை ஒரு சிறு பரப்பரப்பை உண் டாக்கியது.

'வந்துட்டேளா!' அவளைப் பார்த்ததும் 'திக்' கென்றது. இந்த மூன்று நாட்களுக்குள் அடையாளமே மாறிவிட்டது. கண்களிலும், கன்னங்களிலும் நெற்றிப் பொட்டிலும் விழுந் திருக்கும் குழிகளைக் கண்டதும் முதுகுத் தண்டில் 'சில்' லென்றது.

'இப்படி உட்காருங்கள்' என்றாள், குரல் அவ்வளவு பலஹீனமாயில்லை. "நான் என் ஆத்துக்காரருடன் பேசணும்; நீங்கள் எல்லோரும் போங்கோ—"

அவனையும் அவளையும் தவிர அறை காலி ஆயிற்று, அவள் விரல்கள் சும்மாயில்லை. மேற்போர்வையின் ஓரத்தைச் சீண்டிக் கொண்டேயிருந்தன. அவற்றின் மேல் பதிந்த பார்வையுடன், "நான் திரும்பி வராத ஊருக்குப் போறேன். அதனால் போயிட்டுவரேன் என்று சொல்லிக் கிறதுக்கில்லை..." என்றாள்.

அவன் உள்ளம் நெகிழ்ந்தது. மூர்க்கத்தனமாய் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "பைத்தியம் மாதிரி உள ராதே—" என்றான், அவள் சிரிக்க முயன்றாள். "எனக்குச் சிரிச்சாக்கூட வேதனையாயிருக்கு—ஆனால் எனக்கு நாடி இன்னி விடி காலையிலே விழுந்துடுத்து. கால் முழங்கால் வரை செத்துப் போயாச்சு—' என்றாள்.

கண்களை உறுத்திக் கொண்டு கிளப்பும் கண்ணீரை அப்படியே உள்ளுக்கு அறைய வீணே முயன்றான். நல்ல கவளையாய் அவள் அவனைப் பார்க்கவில்லை. தன் விரல் ளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இப்பொ எனக்கு ஒண்ணு தோன்றது—' என்றாள் அவள். வார்த்தைகளுக்கு அவன் காத்திருந்தான். "நாம்ப பேசி யிருக்க வேண்டியதும் செஞ்சிருக்க வேண்டியதும் பேச வேண்டியதும் செய்ய வேண்டியதும் ரொம்பரொம்ப இருக்கு ஆனால் இப்போ நேரமில்லை. நாளெல்லாம் நிமிஷமாய் ஓடிப்போயிட்டாப் போலிருக்கு—"

ஆம் என அவன் தலையை அசைத்தான். வாழ்க்கை யிலேயே நிமிஷங்கள் தாம் இருக்கின்றன.

திடீரென்று கோபத்தில் பொங்கும் அவசரத்துடன் "ஆனால் நான் உங்களை மன்னிப்புக் கோருகிறேன்னு அர்த்தமில்லை—" என்றாள். 'சரி-சரி' என்று அவளைச் சமா தானப்படுத்தினான். இப்பொழுது அவளுடைய நம்பிக்கை யற்ற நிலைக்கு அவன் மனம் தனியாய் இரங்கிற்று. இருந்த வரைக்கும், இருக்கும் நாளெல்லாம் பொறுப்பற்று விளையா டிக் கொண்டிருந்து விட்டு, திடீரென்று எதிர்பாராதவித மாய், எதிர்பாராத சமயத்தில், அந்த இருப்பிற்கே முற்றுப் புள்ளியும் எதிர்பட்டுவிடவே, அவளுக்கு இதுவரை இருந்த இருப்பே திகைப்பாயிருந்தது. சாவு, தன்னைக் கண்டு அவள் பயப்படுவதற்குக்கூட அவளுக்குச் சகவாசம் அளிக்கவில்லை. அந்த முதல் திகைப்பிலேயே அவளைக் கொண்டு போய்க் கொண்டிருந்தது, அதன் கருணையே அதில்தான் இருக்கிறது.

"பாப்பா—" என்று ஆரம்பித்தாள்.

"பாப்பாவைப்பற்றிக் கவலைப்படாதே. நான் அவளை! என் கண்ணுக்குக் கண்ணாய்ப் பார்த்துக் கொள்வேன்—" அவன் மார்பு வாய்வழி வெளியே குதித்து விடும் போலிருந்தது.

"ஆமாம் இப்படி சொல்லிப்பிட்டா நீங்கள் அப்புறம் பண்றத்தையெல்லாம் நான் பாத்துண்டு இருக்கப் போறே னாக்கும்?-" அவன் மனம் இறுகியது. சாகுந்தறுவாயில்கூட பூனை எலியுடன் விளையாடுவது போல்தான், அவனுடன் அவள் விளையாடினாள். அடுத்த நிமிஷம் "இல்லை இப்படி உங்களிடம் சொல்லி ஒப்படைக்காததினாலே, பாத்துக்காமே இருக்கப் போறேளா?—" அந்த விரக்தியும் அவனுள் ஊசி

போல் ஏறியது. மாற்றி மாற்றி. இரக்கமில்லாமல் நெருப்பிலும் நெய்யிலுமாய் அவனை வதக்கினாள். கடைசிவரை அவள் கார்க்கோடகிதான்.

திடீரென்று அவள் முகத்தில் கபடம் புகுந்தது. எங்கேயோ பார்த்துக் கொண்டு, ''பகையானாலும் பத்துநாள் பாக்கறதுண்டு—'' என்றாள்.

'என்ன சொல்கிறாய்?' என்றான், ஒன்றும் விளங்காமல்? ஆனால் அவளுக்கு நினைவு அலைய ஆரம்பித்து விட்டது, ''பாப்பா இப்பவே என்னிடம் வரமாட்டேன் என்கிறாள்— இவள் சித்தி இடுப்பிலேயே சவாரி பண்ணிண்டிருக்காள்— மற்றவாள் எல்லாம் எங்கே? நீங்கள் எப்போ வந்தேள். அவளை வரச் சொல்லுங்கோன்னா—''

அப்புறம் அவளுக்குச் சுய நினைவு வரவில்லை!

''பகையானாலும் பாக்கறதுண்டு—'' அவள் அர்த்தம் நாளாக ஆக அவனுள் ஊறஊற பதைப்பாயிருந்தது. கடைசி வரை அவள் கார்க்கோடகிதான். செத்த பிறகுகூட ஏளனத்தினாலேயே அவனை அவள் ஆள முயல்வதும், அவனுள்ளேயே அவனை அவனாலேயே அவள் கட்டுவதைக் கொஞ்சம் கொஞ்சமாய் உணர்கையில்............

நினைவுகளிலிருந்து திடுக்கென விழித்தெழுந்தான். அறையில் கூட்டிலடைபட்டது போல் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டான். எதிர் வீட்டுப் பிடில் சாதகத்திலிருந்து அந்தப் பாழும் பல்லவி திரும்பத் திரும்பத் தன்னையே தோற்றுவித்துக் கொண்டிருந்தது. கோபத்துடன் ஜன்னல் பக்கம் மறுபடியும் திரும்பினான். அதில் பதிந்திருந்த கண்ணாடியில் ஒரு உருவம் சிரித்துக் கொண்டு எழுந்தது. சமுத்திரக் கரையில் இன்று சந்தித்தவளின், வெள்ளைக் கழுத்தும், கட்டு உடலும் விழிகளும் கண்ணாடியிலிருந்து அவனை அழைத்தன.

''சௌகரியப் பட்டால் வீட்டுப் பக்கம் வாயேன்!—'' அவள் மேல் இருந்த புனுகின் மணம் திடீரென அறையில் கமழ்ந்தது.

அவன் தன் வசமில்லை. உள் தூசி உறுத்த ஆரம்பித்து

விட்டது. அது இன்னும் போகவில்லை. புத்தம் புதிதாய்க் குத்தியது போல், பழைய வாசனையின் புது வேகத்துடன், விண் விண் எனத் தெறிக்க ஆரம்பித்தது. கைக் கடியாரத் தைப் பார்த்துக் கொண்டான். இன்னும் நேரமாகவில்லை. அவளை யழைத்துக் கொண்டு ஒரு சினிமாவுக்கோ டிராமா வுக்கோ போகலாம்—செளகரியப் பட்டால்—அந்த வார்த்தை யில் தான் எவ்வளவு சூட்சுமமான அழைப்பு!—

சட்டென ஜிப்பாவை மாட்டிக் கொண்டான். கண்ணாடி யில் பார்த்துக் கொண்டு அவசரமாய் இருமுறை தலைமயிரை சீவி விட்டுக் கொண்டான். பையில் பணம் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.

''எங்கேப்பா போறே?''

''உம்—?'' கதவின் குமிழின் மேல் வைத்த கை அப்படியே நின்றது. ஒரு மூச்சு திணறி வந்தது, களவும் கையுமாய்ப் பிடிபட்டவன் போல் மீளாத இடத்திற்குப்போனவனை அக் கேள்வி திரும்ப அழைத்தது.

''குளிர்ரது அப்பா—''

அவள் சொன்னது அவனுக்குச் சரியாய்க் காது கேட்க வில்லை. ஒரு நிமிஷத்தின் நிரந்தரம் அவனைத் தன்னுள் அமிழ்த்திக் கொண்டிருந்தது.

''குளிர்ரது அப்பா—'' என்று குழந்தை மறுபடியும் முனகி னாள். அப்பொழுதுதான் அவன் தன்னில் மீண்டான். சொக் காயைக் கழற்றி எறிந்தான். தன் கோட்டையெடுத்து குழந் தைக்கு மாட்டினான். பாப்பா அப்பொழுது பார்க்க வேடிக் கையா யிருந்தாள்.

அவளைப் பிடித்த ஜுரம் அவளை விட்டதின் அடையாள மாய். முகத்தில் வேர்வை முத்து முத்தாய் நின்றது. ஜன்னல் கதவைத் திறந்தான். காற்று மோதியது. 'அப்பாடா' பல்லவிக் கடுத்த அடி அப்பொழுது தான் எதிர் வீட்டுப் பிடியி லிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தது.

''அப்பா என்கிட்டவந்து படுத்துக்கோயேன்—என்னை அணைச்சுக்கோயேன்—''என்று குழந்தை கொஞ்சினாள்.

''இதோ வந்து விட்டேன்—''

அன்று அவனுக்கு வந்த கடிதங்களுக்கு அவசர அவசரமாய்ப் பதில் எழுதினான். நாலு நாலு வரிகள் தாம். உடனே அவைகளைக் கொண்டு போய் வாசற்படியில் நின்ற தபால் பெட்டியில் போட்டு விட்டு வந்தான். அவனின்று ஒரு பெருமூச்சுக் கிளம்பியது.

"பாப்பா—உன் சித்தியும் பாட்டியும் வரப்போறா!—" என்றான், பக்கத்தில் படுத்துக் கொண்டு மேலே போர்வையை இழுத்துக் கொண்டே.

"எப்போ அப்பா?—"

"சுருக்க—"

பாட்டியும் சித்தியும் வந்ததும், பாட்டி தன்னை வேடிக்கை பார்க்க அழைத்துக் கொண்டு போகப்போகும் இடங்களைப் பற்றியும், சித்தி தனக்கு தைத்து உடுத்தப் போகும் புதுப் புது சொக்காய், கௌன்களைப் பற்றியும், தான் இருவருக்கும் தன் சொப்புகளிலும், அன்று கடற்கரையில் பொறுக்கி வந்த கிளிஞ்சல்களிலும் சமைத்துப்போடப்போகும் பட்சணங்களைப் பற்றியும், பாப்பா, தன் அப்பாவிடம் வெகு நாழி பேசிக் கொண்டேயிருந்தாள்.

# அசடு

வீடு நெருங்குகையில் எனக்குத்தான் கண் இருட்டறதா, அஸ்தமிச்சுத்தான் போச்சா? இரண்டு கைகளிலும் பைகளின் சுமைக் கனம் கீழுக்கு இழுத்தது.

அஸாமி எப்பவோ வந்திருக்கனும். அவர் வரவேளைக்கு நான் வீட்டில் இல்லாட்டா, அவருக்குக் கோபம் மூக்கைப் பொத்துக்கறது. ஆபீஸிலிருந்து வந்தவுடன்—மரக்கடையில் கணக்கெழுதினாலும் நம்மைப் பொறுத்தவரை கச்சேரி தானே,—கோட்டைக்கழட்ட உதவி, சிரமம் விசாரிச்சு, விசிறி எதிரே நிக்கணும். கொஞ்சம் சீலம் தான். ஆனால் அதைவிட எனக்குக் கைக்காரியமும் காலைச் சுத்தற குஞ்சானும் குளுவானும் என்ன தட்டுக் கெட்டுப் போறது? இது ஓண்ணுலே தான் ஆண்டவன் தயவு. ஓண்ணோடு விட்டான். அபயம்னு பேர் வெச்சதும் அபயம் தந்துட்டான். கைச்சுமையை வாங்கினால் தேவலை.

ஐயா, ஈஸிச் சேரிலே சாஞ்சுண்டு பேப்பருக்குப் பின்னாலே ஒளிஞ்சுண்டால் என்னை எங்கே கண்ணிலே படும்? பட்டாலும் மன்னன் நகரமாட்டான். இந்தப் போஸ் கொடுத் தாலே, ஐயா படுகோவத்துலே இருக்கார்.

உள்ளே வந்து பைகளை இறக்கி, அருகே சுவர் மேல் சாய்ந்தாள்.

‘‘உஸ் அப்பா! வரவர ரொம்ப சிரமமாயிருக்கு. ப்ளாஸ் கிலே ஊத்திவெச்சிருந்தேனே, சாப்பிட்டேளா? அபயா இல்லே? நீங்கள் வந்தாச்சுன்னு எங்கானும் விளையாட ஓடிப் போயிடுத்தா? வர வர அடங்கவே மாட்டேன்கறா! வந்து

நேரமாச்சா? பேச மாட்டேளாக்கும்! நான் என்ன செய்ய? நாளை உலைக்கு ஒரு மணி அரிசி லேது. இந்த மாஸம் என்னவோ இப்பவே எல்லாமே தட்டுப் பாடு. 'இன்னும் நாலு நாள் பொறுத்தும் ஆச்சி தானே வரணும்? வரமாத சாமானை இப்பவே வாங்கிட்டுப் போயிடுஹறளேன்! பற்று எழுதற சரக்குக்கு மாதம் முதலேது? கடைசி ஏது? ''கன்னத்துள் நாக்கை அடக்கிண்டு நாட்டான் நமுட்டாய்ச் சிரிக்கிறான் சிரிச்சுட்டுப் போறான், வாங்கிண்டு வந்துட்டேன். தூக்கத்தான் முடியல்லே கொஞ்சம் விளக்கைப் போடுங்களேன். மாட்டேளா? இன்னிக்கு சோதனையில் நீங்களும் சேர்ந்துண்டுட்டேளாக்கும்!

எழுந்து ஸ்விச்சைத் தட்டி விட்டு உட்கார்ந்து. ஒவ்வொரு பொட்டலமாய் எடுக்க ஆரம்பித்தாள்.

''பொட்டலங்களைப் பிரிச்சு, சாமான்களை எடுத்து வைப்பதில் ஒரு சந்தோஷம் இருக்கத்தான் இருக்கு.''

(பல்லைக் கடித்துக் கொண்டு; என்னதான் பேசுவாளோ?)

''ஆமாம் அப்படித்தான். அது என் சுபாவம்னு விட்டுடுங்களேன்! எனக்குப் பேசணும். உங்களுக்குப் பொருமணும், கடவுள் எப்படி ஜோடி சேர்த்து வெச்சான் பார்த்தேளா? பொரும பொரும உங்களுக்குத்தான் வேக்காடு. என்னைப் பாருங்கோ. மனசுலே இருக்கறதை அப்பப்போ கொட்டிட்டு அத்தோடு மறந்துட்டு வளையவரேனோ பிழைச்சேன். உங்கள் வசைகளை சட்டை பண்ணினேனோ அதுகளின் கொக்கியில் மாட்டிண்டு எப்பவோ தொங்கியிருக்கணும். இருப்பது ஒரு உசிர், எத்தனை தடவை தொங்க முடியும்?''

அவன் புழுங்குவது அவனுக்குத் தெரியும். என் படிப்புக்கும் என் யோக்யதைக்கும் எனக்குக் கிடைத்திருக்கும் வேலைக்கும்-யாரைக் குற்றம் சொல்வது? பானை பிடித்தவள் பாக்யம்னு அவள் மேல் தள்ளி விடலாமா? ஆனால் பிறந்ததிலிருந்தே என் ராசியும் ஏப்ராசிதான். ஆனால் இரண்டுமேவா இப்படி? துடைச்சு வாய்க்கணும்? விவாகங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. இது தேறுதலா? தீர்ப்பா?

அவனுடைய வெகுளித்தனத்தில் அவனுடைய உள் குமுறலைச் சீண்டிவிடுவது போல் ஏதாவது சொல்லுவாள். பார் பார் இப்போக்கூட ஏதோ 'கிண்டியா யெனம்' பண்ணு கிறாள்!

"வர வழியில் அத்திம்பேரைப் பார்த்தேன். அவர் என்னைப் பார்க்கல்லே. கண்டிருந்தால் வீடுவரை கொண்டு விட்டிருப்பார். எங்கேயோ அவசரமாப் போறார்? நான் தான் காரை எனக்காக நிறுத்த வேண்டாம்னு விட்டுட்டேன்."

இவளுடைய தங்கை ஆம்படையானின் கார்ப் பெருமையை இப்படியெல்லாம் எனக்கு இடிச்சாகணுமாக்கும்! தங்கை ஆம்படையான் எப்படி இவளுக்கு அத்திம்பேர் உறவாகும்? கட்டைகுட்டையா தொந்தியும் தொப்பையுமா என்னைவிடப் பெரியவர்ன்னா? எப்படியிருந்தால் என்ன? லக்ஷ்மி தாண்டவமாடறாள். இன்னிக்கு நகைக் கடையின் ஸ்டாக்கை எடுத்தால், நாலு தலைமுறைக்கு உட்கார்ந் துண்டே அழிக்கலாம். இத்தனைக்கும் வேலைக்குச் சேர்ந் தப்போ கணப்புச் சட்டியை குழலாலே ஊதத்தானாம். ஆனால் அவள் கொடுக்கணும்னு மனசு வெச்சுட்டாள்னா கூரையைக் கிழிச்சுண்டுதானே கொட்றாள்! ஏங்கிக் கிடக்கற வாளைக் கண்ணெடுத்தும் பார்க்கறாளா? அதுவும் பத்மா வீட்டில் காலை வெச்சதிலிருந்து கோழிப்பு என்று ஒரு பேரை யும் வாங்கிட்டாள். அப்புறம் கேக்கவும் வேணுமா? எல்லாரும் அவளை உள்ளங்கையில் ஏந்தறா. புக்காத்துச் செல்லம் கிட்டி விட்டால் பிறந்தாத்துக்கு மேலே—

அங்கே சரியான கூட்டம். உறவு, ஒட்டு, வெட்டு, வேலையாள் எல்லாம் சேர்ந்து வேளைக்கு முப்பது இலை விழும் போல் இருக்கு. தயங்கும், தாங்கும், புண்யவானுக்கு மேலும் தாங்கும். ஆள் போட்டுத்தான் சமையல். "ஹரிஹரா! ஹரிஹரா!!" ஹரிஹரன் வெச்சதுதான் சட்டம், சமையல் காரன் சாமான்காரன், இன்னிக்கு சாயந்திர பீச்சுக்கு சினிமா வுக்கு பாப்ளா தமுக்கடிக்கு கச்சேரிக்கு எந்த ரவிக்கையோடு எந்தப் புடவை சேரும் எனப் பெண்டுகளுக்கு ஆலோசகன்,

பூஜை சாஸ்திரி மூதலாளிக்கு வலதுகை, தோள், முதுகு எல்லாம் ஹரிஹரம், மார்க்குலையின் நரை நடுவே, மைனர் செயினில், ருத்ராக்ஷம் தங்கக் கட்டில் புரள்றது. 'டேப்பா, அவன் பண்ற அமுத்தலைப் பாரய்யா! அவன் குதப்பற தழைக்கு வெள்ளிச் செல்லம்னா வெச்சிருக்காம்! இங்கே நம்ம பாடு சிங்கியடிக்கிறது.

இன்னி சாயந்திரம் இவள் அத்திம்பேரைப் பார்த்தாளா? காலையில் அதே கல் காலில்தான் நானும் இடறி விழுந்தேன். இன்னிக்கு ரெண்டு பேருக்கும் கணக்காச்சு. இன்னிக்கு என் கணக்கே கிழிஞ்சு போயிருக்கணும். அடியில் போயிருந்தால் சட்னி; தொட்டுக்கத் தோசையில்லாமல்.

''அத்திம்பேரே, தெருவில் பார்த்து நடவுங்கள்'' அவள் குயில் கூவுகிறாள். பின்ஸீட்டில் அவள் தான் தனி, வேணு மென்றே அவள் சொல்படி, என்னை உராயராப் போல், ட்ரைவர் தன் கை வரிசையைக் காட்டியிருக்கிறான்.

''ஏறிக்கறேளா? கடைக்குக் கொண்டு போய் விடறேன்?''

''ஒண்ணும் வேண்டாம். இவ்வளவு காலையிலே, இந்த வேகத்தில் என்ன ஜோலியோ?''

''குதிரை தினம் ஓடாட்டா, உடல் திமிர்த்துக்குமாம். காரும் அப்படி ஆயிட்டால்? அது தான் என்ஜோலி. அத்திம் பேரே. ஏற்கனவே கேட்க வேண்டாம். அதிலும் என்னிலும் இரண்டு வயது மூத்தவனால் எனக்குப் பிள்ளையிருக்கான், எனக்கு என்ன வேலையிருக்கும், நீங்களே சொல்லுங்கோ—'' அவள் சிரிப்பு புகைந்தது. ''பெத்தவளுக்கு ஒரே விசாரம் தான். பெண்களை எப்படியேனும் தட்டிக் கழிக்கணும், பிள்ளைகளைப் பொத்தி வெச்சக்கணும். இவாள் கொடுத்த மாதிரியே வாங்கிக்கும் பெண் இவாள் பிள்ளையைத் தட்டிண்டு போகமாட்டாளா? அது தெரிவதில்லை.''

இவள் ஏன் தன் வயிற்றெரிச்சலை என்னிடம் பங்கிட்டுக் கொள்கிறாள், அதுவும் என்னிடம்? இதில் யாருக்குக் கால ணாவுக்கு லாபம்? யாருக்கு யார் தேவலை? இல்லை, இருவரும்

யாருக்கும் பொதுவாய், பெற்றவயிறு எனும் யாக குண்டத்தில் ஆஹுதி விட்டுக் கொண்டிருக்கிறோமா?

பத்மாவே இப்படித்தான். பேச்சில் துடுக்கு, துணிச்சல்காரி. **டோண்ட் கேர் மாஸ்டர்.** ட்ரைவர் காதில் பட்டால்? நான்தான் கவலைப் படுகிறேன். அவன் சிலையாய்ச் சமைஞ்சிருக்கான். பார்வை அவன் மூக்குக்கு நேராய் நெட்டுக்குத்தல். அதனாலேயே அவன் காதெல்லாம் இங்கேதான் தெரியறது. ஆனால் வாயடைச்சிருக்கு. இவளுக்கு முன்னாலிருந்தே இவாள் வீட்டில் இருக்கிறான். பிள்ளை குட்டிக்காரன். பிழைக்கத் தெரிஞ்சவன். இவன் வாங்கும் சம்பளம் என்னிலும் கூடுதலாயிருக்குமோ?

அவன் சிந்தனைகளை, அவன் மூக்கின் கீழ் ஒரு கரம் நீட்டி வெடுக்கெனக் கலைத்தது. இளைத்த எலும்புக்கை. கட்டைவிரலுக்கும் இடையே ஏதோ 'பளிச் பளிச்'—

"இதெப் பாருங்களேன், நன்னாயில்லே?"

ஆனால் அவன் அதைப் பார்க்க வில்லை. புஸு புஸு என்று பொங்கிய ஒரு பரட்டைத்தலையைப் பார்த்தான். ஒரு முட்டை எண்ணெய் வைத்து வாரினால்தான் என்ன? பற்கள் வரிசையாயினும், கன்னங்கள் ஒட்டிப் போயிருந்தமையால் பலகை பலகையாய்த் தெரிந்தன. கழுத்து—விண்டு விழுந்துவிடுமோ?—கழுத்தில் ஒரு நரம்பு அவசரமாய் அடித்துக் கொண்டது.

இன்று காலை பத்மா இப்படியா யிருந்தாள்? அவனுக்குத் திடீரெனப் பயங்கரமான ஆச்சர்யம். இது யார்?

"பார்க்க மாட்டேன்கறேளே? ப்ளாட்பாரத்தில் வித்துண்டிருந்தான். ஒரு ரூபா சொன்னான். எட்டணாவுக்குக் கேட்டேன். கொடுத்துட்டான்—" இனி அவள் அவனைக் கவனிக்கவில்லை. அவள் கைப்பொருளில் அவள் லயித்து விட்டாள். இனி அவனைப்பற்றி— யாரைப் பற்றியுமே அவளுக்கு அக்கறையில்லை. தானே வியந்து கொண்டு தானே பேசிக் கொண்டிருந்தாள்.

தனக்கே கேட்டுக் கொண்டு (!)

"அபயாவின் விரலுக்கு சத்தே பெரிசாயிருக்குமோ?

இருந்தால் என்ன, நான் என் சுண்டு விரலுக்குப் போட்டுண்டுட்டுப் போறேன். அவளுக்குக் கொட்டாங்கச்சி மோதிரம் இல்லாட்டாத்தான் என்ன? நல்ல காலம் வரப்போ நல்ல மோதிரமே போட்டுண்டுட்டுப் போறாள்—''

தன் அற்ப சந்தோஷத்தில் தன்னை இழந்து அவள் திளைத்துக் கொண்டிருக்கையில், அவள் மேல், அவனுள் மாபெரும் சீற்றம் ஒன்று திரள்வது உணர்ந்தான். தனியாக அவளென்று அவள் மேல் கூட இல்லை. இப்போது அவள், அவளாகப் படவில்லை. தன் அவல வாழ்க்கையின் அவமானச் சின்னமாக, ஏன், காரணமாகக் கூட அவளைக் கண்டான். ஊழ்வினையோ, அல்ல இப் பிறப்பின் செய்வினையின் விளைவோ, தன் பாழுக்கும் தவறுக்கும் பழிசுமத்தப் பிறரைத் தேடுவது மனித இயல்பு என்று அவனுக்கே தெரிந்திருந்தாலும்— இவ்வளவு மரைலூஸுடன் விதி என்னைப் பிணைத்திருந்தால், என்வாழ்வு பின் எப்படியிருக்கும்? அவள் அப்படியிருப்பானேன், இவள் இப்படி—''

வெடுக்கென அவள் கையிலிருந்து பிடுங்கியெறிந்தான். அது சுவரோரம் மூலையில் எங்கோ இருளில் 'க்ளீங்'—

அவன் மேல் வைத்த விழி கொட்டவில்லை. முகமும் மாறவில்லை. அதில் கோபமா, வருத்தமா, அதிர்ச்சியா? எதுவுமே அறியமுடியவில்லை, அவனைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். துடைத்துப் பெருக்கி வைத்தாற்போல் வெறிச்சிட்ட முகம் அதில் காங்கையடிக்கும் விழிகள்.

''என்னடி முறைக்கறே?'' கையை ஓங்கினான். ''இப்பவே எனக்கு மூங்கிலுக்கு அளவெடுக்கறையா?''

''அவ்விழிகள் மாறவில்லை. இமைகள் அசையவில்லை. கண்ணீர் கூடப் பெருகவில்லை. வரண்ட பெரும் வண்டு விழிகள். வெள்ளை விழியில் கறுப்புமணி அப்படியே உறைந்து போயிருந்தது,

அவன் கோபம் உச்சி மண்டைக்கு ஏறிவிட்டது. செவிகள் ஆவிகக்கின. பளாரென்று அவளைக் கன்னத்தில் அறைந்தான். அவன் ஆயுசுக்கே அவளுடன் வாழ்க்கையின் முதல் தரம் **ஓ மை காட்!**

அவள் உடல் பூரா வெடுக்கென உதறிற்று. வாயைப் பொத்திக் கொண்டு கொல்லைப்புறம் ஓடினாள். அங்கிருந்து குமட்டல் சத்தம்.

“**ஓ காட்**” தலையிலடித்துக் கொண்டான். இருக்கிற சோதனைகள் போதாதென்று இது வேறேயா, இத்தனை நாள் கழித்து?

“என்னப்பா, எப்போ வந்தே?”

அபயா உடம்பையெல்லாம் சர்வகோணலில் ஆட்டிக் கொண்டு உள்ளே வந்தாள். “காலையிலே சொன்னேனே, எனக்கு ஸோனா ஹல்வா வாங்கி வந்தையா?” கைகளை ஏதோ முத்திரை பிடித்தாள்.

சனியன், தீனிப் பண்டாரம் எப்பவும் அரைச்சிண்டே யிருக்கணும், மாவுமெஷின் மாதிரி. படிப்பிலே ஒண்ணும் காணோம். சுழி. ஒரு நிமிஷம் உடம்பு சும்மாயிருக்கா பார். குரங்கு சேஷ்டை.

“அம்மா எங்கே?” கேட்டுக் கொண்டே உள்ளே போனாள்.

“அப்பா! அப்பா!”

அலறல் கேட்டு எழுந்து உள்ளே ஓடினான்.

தொட்டி முற்றத்தண்டை சுருண்டு விழுந்துகிடந்தாள், அவனுக்குத் திக்கென்றது. குனிந்து மெதுவாய்த் தோளை அசைத்தான். முனகிக்கொண்டு புரண்டாள். உதட்டோரம் ஒரு சிவப்பு நூல் ரொம்ப ஸன்னம்தான். ஆனால் சிவப்பு விழிகள் அலர்ந்தன. எவ்வளவு பெரிய விழிகள், கார்ட்டூன் பொம்மை விழிகள்!

“வா, டாக்டரிடம் போவோம்”

x x x

ஒண்ணுமில்லே, எல்லாம் பலஹீனம்தான். உடம்பு சளைச்சுப் போனால், உள்ளே இருக்கிறது ஓங்கறத்துக்குக் காத்துண்டிருக்கு. வியாதிகளுக்கு வெளியே போகவே வேண்டாம். எல்லாம் நம்முள்ளேயே இருக்குகள். மளிகைக் கடைக்காரன் சின்னச் சின்னத் தட்டில் பயறு, கொள்ளு, பருப்பு, உளுந்து, பட்டாணி, எல்லாம் மாதிரிக்கு வெச்சிருக்

காப்போல. ஆனால் இதுகள் கொள்ளிகள் கண்ணுக்கு படற தில்லே. ஆனால் ஸார் நீங்கள் நினைச்சமாதிரி. மாமிக்கு இல்லே.''

"அப்பாடா!'' பெருமூச்சு விட்டான்.

இருவரும் எழுந்து கதவண்டை சென்றதும் டாக்டர்: 'ஸார் ஒண்ணு மறந்துட்டேன். ஜஸ்ட் எ மினிட். உங்களுக்கு ஒண்ணுமில்லேம்மா. நீங்க வெளியிலே சோபாவிலே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருங்க ரெஸ்டுலே.'' அவன் டாக்டர் அறையி லிருந்து வெளியே வந்தபோது, அவள் தன் சுண்டு விரலில் மோதிரத்தைத் திருகிக் கொண்டிருந்தாள். தனி ரகஸ்ய உவகையில் அவள் விழிகள் ஒளிவீசின. எப்பவுமே அவளிடம் ஒரு குழந்தைத்தனம் இருந்தது. அதன் உண்மை இன்றுதான் அவனுக்கு உறைத்ததோ?

"வா, சுமதி போகலாம்''

வியப்பில் நிமிர்ந்தாள். அவர் வாயில் தன் பெயர் கேட்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன.

'இன்னிக்கு இனிமேல் போய் எங்கே சமைக்கிறது? உனக்கு எப்போத்தான் ரெஸ்ட் இருக்கு?'

இம்பாலாவில் குழித்தட்டில் சுத்தி கிழங்கு, டால், கத்தரிக்காய்ச் சட்டினி நடுவில் மண்டை மண்டையா உப்பல் பூரி அடுத்து மஸாலாபால் கூடவே ரேடியோ கிராமில் உன் விருப்பம் கிஷோர் குமாரின் "ஜூலீ...''

"ஏதேது ஈதென்ன ப்ரியத்தினாலேயே மேலே மேலே நீங்கள் இப்படி அடிச்சேள்னா, நான்செத்தே போயிடுவேன். இது உங்களுக்குப் பாந்தமாயுமில்லை—முதலில் நீங்கள் உடம்பு சரியாயிருக்கேளோ? உங்களுக்கேன் முகம் வெளி றிட்டிருக்கு?

"இருக்கா என்ன?'' கைக்குட்டையால் முகத்தை அழுத் தித் தேய்த்துக் கொண்டான். "இங்கேயே விளக்கு பவரா யிருக்கு. அதனால் கண்ணுக்கு அப்படிப் பட்டிருக்கலாம்''

x x x x

பின்னால் கைகட்டிய வண்ணம், அத்திம்பேர் கூடத்தில் மாட்டியிருந்த பழைய போட்டோக்கள் சுவாமி படங்களைப் பார்த்துக் கொண்டு நின்றார். உள்ளறையில் ஒரே இரைச்சல்.

அப்பா, நாலு பெண்டுகள் சேர்ந்து விட்டால் போதும், சீக்காளியை நிம்மதியாகப் படுக்கவிட மாட்டார்கள். அதென்ன ஓயாத கேள்வியோ, பதிலையும் அவர்களே சொல்லிக் கொண்டு. இதற்கெல்லாம் நாம் லாயக்கில்லை, இந்த சுத்துப்பட்ட தேவதைகள் நடுவில் மாட்டிக்கொண் டால், முதலில் நான் குளோஸ், அதான் பத்மா உள்ளே போயிருக்காளே, அவசியமிருந்தால் கூப்பிடறாள்.

"அத்திம்பேரே!"—

யார்—ஓ இவளா? குழந்தைகள் தான் கொடுத்து வைத் தவர்கள். எந்தக் கவலையும் படாதவர்கள். ஆனால் அவள் கொடுத்து வைத்தவளா? , ஆண்டவனுக்குத் தான் தெரியும். "என்னம்மா?"

"என் அம்மா எனக்கு வாங்கிக் கொடுத்திருக்காள் பார்த் தேளா?" நீங்களும் நகைக் கடை வெச்சிருக்கேளே, இது மாதிரி உங்கள் கடையில் இருக்கோ?"

சிரத்தையாகக் குனிந்து மோதிரத்தை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டார். திருப்பித் திருப்பிப் பார்த்தார். இரண்டு வெள்ளைகளுக்கு நடுவே ஒரு நீலம். ஒரு கணம் அவர் புருவங்கள் உயர்ந்தன. கர்ண குண்டலம் போல், எப்பவும் கூடவேயிருக்கும் குட்டி பூதக்கண்ணாடி அவர் கை யில் தோன்றியது அவருக்கே தெரியாது. இதென்ன ஒரு நாளா, இரண்டு நாளா? தூக்கத்தில் புரள்கையில் கனவில் கடைதானே மூச்சு!

"அத்திம்பேர், என் மோதிரம் என் மோதிரம்—அப்பா அப்பா! அத்திம்பேர் என் மோதிரத்தைக் கொடுக்க மாட் டேன்கறாரப்பா!"

அப்போதுதான் அறையிலிருந்து வந்த அவனுக்கு அவள் சொல்வது கவனத்தில் பதியவில்லை. அவன் முகம் கவலையில் தோய்ந்திருந்தது.

அத்திம்பேர், கைப்பொருள் மேல் பார்வை மாறாமலே "உங்கள் ஆத்துக்காரி உங்கள் பெண்ணின் எதிர் காலத்தை வைரத்தாலேயே இழைத்து விட்டாள்"

அர்த்தம் உள்தோயவே சற்று நேரமானது.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" அவள் உடலில் ஒரு உதறல் கண்டது.

"ஆமாம்" அவர் தலை நிமிர்ந்தார், "சில சமயங்களில் லக்ஷத்தில் ஒரு சான்ஸ்—இதுபோல் நேர்ந்துவிடுகிறது. பித்தளைக்கும் தங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாமல், கண்ணாடித்துண்டோடு வைரம் எப்படிக் கலந்தது? கடவுளுக்குத்தான் அற்புதம். தவிர இது பூமியில் உற்பத்தியாகும் பொருள். எந்த ஜலத்தில் எந்த மணலோடு என்றைக்கு அடித்து வந்து எங்கே புதைந்து கிடந்ததோ?" குப்பையிலே மாணிக்கம்னு பழமொழியே இருக்கு'; சிரித்தாள். "எப்படி, ஏது, எதனால்?' நம்மால் சொல்லமுடியாது. கடவுள் சித்தம், இயற்கையின் விளையாட்டு, எப்படியிருந்தால் என்ன? அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி, மறுபடியும் அந்த சிரிப்பு. சிரிப்பா கொக்கரிப்பா? உதட்டோரம் ஒரு வெற்றிப் புன்னகை. "இது இனிமே என்னிடமிருப்பதே உங்களுக்கு சௌகரியம் என்று நினைக்கிறேன். கடைக்குப் போய் சோதிக்கணும்; முழு மதிப்புத் தெரிய. ஆனால் நமக்குள் என்ன? பின்னால் ஃபேசிக்கலாம். இப்போ கையிலிருக்கறதை வாங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கும் செலவு இருக்கு. நான் வரேன்."

அவன் திகைப்பூண்டு மிதித்து நின்றான். அவர் அவன் கையில் திணித்த கற்றை நோட்டுகளுடன். அத்தனையும் பச்சை. இனிமேலும் வரப்போறது. காசு படைத்தவர்களுக்கு நினைத்தவிடத்தில் நினைத்த காரியத்தை நினைத்தபடி எப்படி முடித்துக்கொள்ள முடிகிறது பார்த்தையா? ஏதாவது மரியாதைக்குக்கூட தரேளா? என்று கேட்டானா மனுஷன்? கையிலிருந்து பிடுங்கிக் கொண்டே போயிட்டான். இப்பவே இவன், மோதிரத்தின் உண்மை விலையைக் கொடுப்பான் என்று என்ன நிச்சயம்? அட போய்யா? நீயுமாச்சு, உன் காசு மாச்சு, அவள் நினைப்பாய் இது எங்க கிட்டேயே இருந்து விட்டுப் போகட்டும்னு சொல்லும் நிலைமையில் நான் இருக்கிறேனோ? இந்த நிமிஷம் வரை நிலைமை இப்படி மாறப் போறது என்று எனக்குத்

தெரியுமா? ஆனால் மாறினதும் இந்த நிமிஷமே, என் மனமும் எப்படிக் கெட்டுப் போச்சுப் பார்த்தையா? இதற்கெல்லாம் காரணம் யார்? ஆளைப்பார், உருண்டையாய், தஞ்சாவூர் செட்டிப் பொம்மை மாதிரி!

அவர் மேல் அவனுக்குப் பயங்கரக் கரிப்பு எடுத்தது· அவர் வெளியே போவதைப் பார்த்துக் கொண்டு நின்றான். வயிற்றைக் குமட்டிற்று.

''அத்திம்பேரே! அத்திம்பேரே!!'' அவசரமாய்ப் பத்மா வின் குரல். அதில் பயம் தொனித்தது; திடுக்கிட்டுத் திரும்பினான்.

'என் மோதிரம் என் மோதிரம். அபயா அவன் முழங்கை யைக் கட்டிக் கொண்டு தொங்கினாள்.

‘·சீ சனியனே விடு! கையை உதறிக் கொண்டு அவன் உள்ளே விரைந்தான்.

அபயா தொப்பென்று விழுந்தாள். எழுந்து சௌகரிய மாகத் தரையில் சப்பளங்கொட்டி உட்கார்ந்து, கண்ணைக் கசக்கிக் கொண்டு பாட்டு வைக்க ஆரம்பித்தாள்.

# காலி வீடு

வெள்ளி முளைத்து, கிழக்கில் வெண்மை படரும் வேளையில், திடீரென்று அவ்வீடு கண் முன் தோன்றியதும், வழி தப்பி இரவெல்லாம் தேடித் தவிக்கும் அவ்வழிப் போக்கர்களுக்கு அது ஏதோ கடவுள் அருளிய வரம் போலிருந்தது. மார்பில் ஒரு கையை வைத்து, பகவானை வாழ்த்தி வீட்டை நோக்கி ஓர் அடி முன்னெடுத்து வைக்கையில்...

புதரொன்று சலசலத்தது.

அவனுக்கு வயிறு பகீரென்றது. இத்தனை நாழி இரவெல்லாம் பூச்சி பொட்டுக்குத் தப்பிய பின், விமோசனம் நேரும் வேளையில்...

இவனைப் போன்றே, தூசி படிந்து, உருக்குலைந்து, ஆடைகிழிந்து மற்றோர் ஆள் புதர்களை விலக்கிக் கொண்டு இவன் எதிரில் வந்து நின்றான். இருவரும், ஒருகணம் ஒருவரை ஒருவர் நோட்டம் பார்த்து நின்றனர்.

அதோ...தூரத்தில் ஓங்கிப் படர்ந்த மலைச் சாரலுக்கும், அதையொட்டி அடர்ந்த புதர்ப் பிரதேசத்துக்கும், பிறகு கண்ணுக்கு எட்டிய தூரம் பரந்த சமவெளிக்கும். அதில் அங்கங்கே சிதறிய சிறு வயல்களுக்குமிடையில் பட்டை தீட்டியது போல் ஓடும் அருவி...இம்மாதிரி இயற்கை வெளி விளங்கும் இவ்விடத்தில் இவ்விரு மனிதப் புழுக்களும் பரஸ்பரம் பார்த்து வெறிப்பது விபரீதத்தின் வேடிக்கைதான்.

பிறகு, புது ஆசாமி, ஒரு பெருமூச்சுவிட்டு, பார், தன்னை முழுக்கும் இரவைச் சமாளித்துக் கொண்டு வெளிக் கிளம்பும் இரவியின் வேளையில், இவ்வீடு, இரவெனும் மாடு நடு

நிசியில் ஈன்றெடுத்து மறைக்க முடியும், மர்ம மகவு போல் இருக்கிறது...

இந்தக் கற்பனையைக் கேட்டதும், மற்றவளின் முகத்தில் அருவருப்புத் தட்டியது.

"இதென்ன இழவு! நான் ஏதாவது கவியரசுடன் இந்தத் தனி இடத்தில் மாட்டிக் கொண்டேனா என்ன?"

'ஆம் நான் கொஞ்சம் கவிதான்—ஆனால் இன்னும் அரசாகவில்லை—நீயார்?"

வேறிடத்தில் இப்படி ஒருவரையொருவர் முன்பின் அறியாமல் ஒருமையில் பேசியிருந்தால், அப்பொழுதே ஒருவர் (முன்) குடுமியை ஒருவர் பிடித்துக் கொண்டிருப்பார். ஆனால், இங்கேயோ சமூகத்தின் கோட்பாடுகளும் மரியாதையுமெல்லாம் வெறும் புரளியேயாகும்.

"நான்...நான்...கதாசிரியன்..."

"ஓஹோ...வியாசரோ?..."

"நான் அவ்வளவு பெரிய காவிய கர்த்தா அல்ல... ஏதோ..."

"நான் வியாசனைக் குறிக்கவில்லை...வியாசர் என்றால், வியாசம் எழுதுபவன் என்று அர்த்தம்..."

கதாசிரியனின் கைகள் குறுகுறுவென்றன. சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டு, எனக்குக் கவிதையில் நம்பிக்கை யில்லை. மூக்கு எங்கே என்றால், மண்டையைச் சுற்றிப் பிடிக்கும் வழக்கம் எனக்கில்லை; நேரே தான் பிடிப்பேன். இப்பொழுது எதிரிலிருக்கும் வீடு, எனக்கு வீடாய்த்தான் தோன்றுகிறது. எனக்குப் பசிக்கிறது. பசி என்றால்,சாதாரண மல்ல; அடிவயிற்றைக் கிள்ளுகிறது. ஆனால், உன்னுடைய கோளாறு எப்படி இதை விஸ்தரிக்கிறதோ! இம்மெய்யனல் ஆகுதியைத் தேடி அளாவுகிறது..."

'அனலில், மெய்யனல், பொய்யனலென்றும் உண்டோ?"

"சரி சரி உன் வித்தையை உனக்கே நான் சொல்லிக் கொடுக்க வேண்டும் போலிருக்கிறதே! மெய் என்றால் உடல் அனல் என்றால் நெருப்பு. இது தெரியாதா?"

கவியின் முகத்தில் அசடு தட்டிற்று "உனக்கும் நமக்கும்.

ஒவ்வாதென்றே நினைக்கிறேன்''— என்றான்.

''ஆ, பார்த்தாயா, கவிதையற்ற பேச்சு! ஆயினும் அவ்வாக்கில் எவ்வளவு அர்த்த புஷ்டி! பளிச் சென்றிருக்கிறது: பளிங்கு போல் இருக்கிறது. சரி, உன்னுடன் சண்டையிட எனக்கு இப்பொழுது தென்பில்லை. அங்கேபோய் ஆகாரத் துக்கு வழி தேடுவோம்...

ஆனால்— உனக்கு .. கற்பனையே ஆகாரம் என்றால்... ரொம்ப உத்தமமாய்ப் போயிற்று...''

''இல்லை, நான் ஆகாரமும் சாப்பிடுவதுண்டு...''

''சரி, வா...போய் இரப்போம்...''

கதவு பூட்டியில்லை, கதாசிரியன் இருமுறை கதவை மெல்லத் தட்டிப் பார்த்தான். பதில் இல்லை. கொஞ்சம் அழுத்தித் தள்ளவும், கதவு 'க்ரீச்' என்று கத்திக் கொண்டு திறந்தது. இருவரும் உள்ளே புகுந்தார்கள்.

வீடு சற்று நீள வாக்கில், முதலில் ரேழி, பிறகு முற்றம், அடுத்தாற் போல் கொல்லைப் புறத்துக்குப் போகும் வழியாய் விரிந்தது. முற்றத்தை ஒட்டி ஓடும் தாழ்வாரத்தின் பக்கமாய் ஒருகூடம். கூடத்தில் ஒரேவோர் அறை. வீடே அவ்வளவு தான்.

அறை வாசற்படிக்கு மேல், சுவரில் ஒரு புகைப் படம் மாட்டியிருந்தது.

அவ்வறைதான் சமையலறை என்று, பார்க்கும் பொழுதே தெரிந்தது. அறையின் மூலைகளில் ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கிய பானைகளும், கரியேறிய சுவருக்குக் கீழே அடுப்பில் சொருகிய வண்ணம் அவிந்து கிடக்கும் கொள்ளிக் கட்டையொன்றும் காணப்பட்டன. எனவே, அது சமைய லறைதான் என்பதில் சந்தேகமென்ன?

''ஒருத்தரையும் காணவில்லையே!'' என்றான் கவி.

''கொல்லைப் புறத்தில் இருப்பார்களோ, என்னவோ?...''

' சரி, வா; போய்ப்பார்ப்போம்...''

கொல்லைப் புறக் கதவு மூடியிருந்தது. கதவின் சந்து வழி யாய்க் கொல்லை மரங்களின் பச்சை தெரிந்தது,

கொல்லையில் ஒருபழங்கிணறு. அதன் இடிந்த கைப்

பிடிச் சுவரின் மேல், பாதி உள்ளும் பாதி வெளியுமாய் ஒரு தாம்புக் கயிறு தொங்கியது. தவிர, ஒரு மாட்டுத் தொழுவமும் அதில் வைக்கோற் போரும் அதன் பக்கத்தில் ஒரு பசுவும் கன்றும் இருந்தன.

இவையன்றி ஐந்தாறு தென்னை, நாலைந்து வாழைக் கன்றுகள். ஓர் அவரைப் பந்தல், முற்றி உதிர்ந்த ஒரு தென்னம்பாளை.

ஆனால் அங்கே ஒருவருமில்லை.

கவி அலறத் தொடங்கினான்.

"சரி, இப்போது என்ன செய்வது? தன்னந் தனியாய் அகப்பட்டுக் கொண்டேனே, இந்த நிர்மானுஷ்யமான காட்டிலே..."

"இந்த நல்ல தங்காள் பாட்டுப்பாடாதே...நீ தன்னந் தனிமையில்லை...நானும் இங்கே இருக்கிறேன்!... இதோ ஒரு மாடு இருக்கிறது...வீடு இருக்கிறது"

"மனுஷனைக் காணோமே!..."

"எங்கேயாவது வெளியே போயிருப்பான்..."

"என்ன இவ்வளவு அதிகாலையிலேயா?"

"பின்னே என்ன? பட்டணத்தில், முதுகில் வெயிலடிக்கும் வரையில் நீ தூங்குகிற மாதிரி நினைத்துக் கொண்டாயோ?"

பிறகு, இருவரும் மௌனமாயிருந்தார்கள். கிழக்கு நன்றாய்ச் செவந்து, சூரியனின் முதற் கிரணங்கள் வீசத் தலைப்பட்டன. ஆனால், இன்னும் ஆள் சந்தடியில்லை.

திடீரென்று கதாசிரியன் தீர்மானத்துடன் எழுந்திருந்தான்.

"என்ன செய்யப் போகிறாய்?"

"ஆகாரத்துக்கு ஏதாவது வழி தேடப் போகிறேன், சும்மா இருந்தால், வயிறு கேட்குமா?"

"வாஸ்தவம்"

கதாசிரியன் கவிஞனை ஒரு மாதிரியாய்ப் பார்த்தான்.

"உன்னைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை..." என்றான்; சாவதானமாய். உன்னைப் போல் எத்தனையோ பேர்

வழிகளைப் பார்த்திருக்கிறேன். உன் முகத்தில் சோம்பேறிக் களை கூத்தாடுகிறது. நீ எல்லாவற்றிற்கும் ஆமாம் போட்டுக் கொண்டு சும்மா இருந்து விட்டு ஊணுக்கு மட்டும் முந்தி விடலாம் என்று நினைக்காதே, (கவிஞனின் முகத்தில் அசடு தட்டியது) அந்த ஜம்பம் என்னிடம் சாயாது தெரிந்ததா? இருவரும் சிரமப்பட்டால்தான் பசியாற வழியுண்டு. ஆகை யால் நான் உள்ளே போய் அடுப்பு மூட்ட வசதி உண்டா என்று பார்க்கிறேன். அதற்குள் நீ போய் ஒரு பாத்திரத்தை யெடுத்துக் கொண்டு வந்து இந்த மாட்டைக் கறக்க வேண்டும்...''

''அது உதைக்குமே!...''

''பட்டுக் கொள். முன்னால் ஒரு தோண்டி ஜலம் மொண்டு கொள்கிறேன். அப்புறம் நீ தாம்புக் கயிற்றை அணை கயிறாய் உபயோகப் படுத்திக் கொள்ளலாம்...''

பசுவின் முகம் சரியாயில்லை. ஓரக் கண்ணால் ஆளை நோட்டம் பார்ப்பது போலிருந்தது. கன்றை ஊட்ட விடும் போழுதெல்லாம் பசு சும்மா இருக்கும்; கன்றை விரட்டி விட்டு, பின்னங்காலைச் சேர்த்துக் கட்டி, பயந்து பயந்து நெருங்கி, மடியைத் தொட்டவுடனே உதைக்கும்! பின்புறம் கன்றுக்குட்டி ஓடி வந்து முட்டும்! இதற்கிடையில் காலைக் கட்டி எஞ்சிய தாம்புக்கயிறு இவனைத் தடுக்கிவிட்டது. இந்த நர்த்தனாவஸ்தையில் கவிஞன் உழன்று கொண்டிருக்கையில், கதாசிரியன் உள்ளேயிருந்து வந்தான்.

''அரிசி அகப்பட்டது...பானையில்...புழுங்கலரிசி''

''ஐயோ! எனக்குப் பச்சரிசி தானே பழக்கம்!...'' என்று ஓலமிட்டான் கவிஞன்.

''தவிர, ஏதோ மிளகாய், உப்பெல்லாம் இருக்கிறது. ஆனால் எனக்குச் சாதம் ஒன்றுதான் வடிக்கத் தெரியும். நீ கறக்கும் பாலைக் காய்ச்சிச் சோற்றில் விட்டுக் கொண்டு சாப்பிட வேண்டியது தான்...''

''தொட்டுக் கொள்ள?...வெறும் பாலுஞ்சோறு வயிற்றை குமட்டுமே!''

''ஒரு மண்ணும் தெரியவில்லை...முக்கியமான விஷயம்

தீப்பெட்டி, அதைக் காணோம்...நீ என்ன சிகரெட் பிடிப்ப துண்டா? கோபித்துக் கொள்ளாதே...கவிகள் அந்தப் புகை யில்தான் தங்கள் கற்பனைகளை மிதக்க விட்டு, கவிதையைப் பொங்க வைத்துச் கொள்வது வழக்கம் என்பார்களே என்று கேட்டேன். அப்பொழுது நெருப்புப் பெட்டி உன்னிடத்தில் நிச்சயமாயிருக்குமல்லவா?...

அதென்னவோ அவர்களுடைய நல்ல காலம் இந்தக் கவிக்கும் சிகரெட் குடிக்கும் வழக்கமிருந்தது. சிகரெட் தீர்ந்து விட்டது. நெருப்புப் பெட்டி மாத்திரம் மிஞ்சி இருந்தது.

உள்ளே கதாசிரியன் அடுப்புப் பற்ற வைத்துக் கொண் டிருக்கையில், தடதடவென்று உளறியடித்துக் கொண்டு கவிஞன் வந்து, கதாசிரியனின் காலடியில் விழுந்து, கால் களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

"அப்பா, நீ எனக்கு வெறுஞ்சாதத்தையே போடு. நான் அதை வில்லுண்டையாய் விழுங்கி வைக்கிறேன். அந்த மாட்டை மாத்திரம் கறக்க வைக்காதே—இதோ பார், அரிசி களைகிறேன்; அடுப்பு விசிறுகிறேன்; இலை போடு கிறேன்; ஜலம் எடுத்து வைக்கிறேன்; எச்சில் திரட்டுகிறேன். அந்த மாட்டை மாத்திரம்..."

கதாசிரியன் ஆரம்பித்தான் : "நீ எடுத்த காரியம் எதுவும் விடியாது-நீ பட்டினத்துக் கவியல்லவா?— நான் இப்பொழுது பட்டினத்தில் வாழ்ந்தாலும், கிராமத்தில் பிறந்து வளர்ந் தேன். என் தயார் எருமை மாடு கறப்பாள்; என் தகப்பன்..."

'ஐயோ-உன் கோனார் வம்சாவளியெல்லாம் வேண் டாமே! இது பசுமாடப்பா, பசுமாடு!—வசனம் கேட்ட தில்லையா— 'பசுவையும் பார்ப்பானையும்...'

கதாசிரியன் பல்லைக் கடித்துக் கொண்டு : "ஆம், நான் பார்ப்பான் தான்—உன் குறும்பு நாசமாய்ப் போக—கோனா ரில்லை. ஆனால், பட்டிக்காட்டில் பார்ப்பானுக்கும் பால் கறக்கத் தெரியும், எனக்குப் பால் கறக்கத் தெரியும்-இதோ பார். பத்து நிமிஷத்தில் திரும்பி வருகிறேன். ஹே மஹா

கவியே?...'' என்று கொல்லைப்புறம் சென்றான்.

கவிக்குக் காரியம் எதுவுமில்லை. சுவரில் அங்குமிங்கும் சிதறிய இருண்ட மாடங்களிலும், புதைந்த சட்டிகளிலும் கையை விட்டுத் தோண்டிய வண்ணம், தான் இவ்வேளையில் தன் வீட்டிலிருந்தால், தனக்கு ஏற்பட்டிருக்கும் சௌகரியங் களை எண்ணி எண்ணி நைந்துருகினான். காலை ஏழு மணிக்கு கண் விழித்தவுடன் பல் விளக்கு முன் படுக்கையை விட்டு எழுந்திருக்கு முன்னே, ஏதோ சொல்பமாய் ஒரு 'கப்' டீ பிறகு பல் விளக்கிக் கொண்டு சுடச்சுட இட்டலி, காப்பி- (ஓர் இட்டலிக்குச் சட்னி, ஓர் இட்டலிக்குக் கத்திரிக்காய் கொஸ்து)-அப்புறம் 8, - 8.30 மணிக்கு உடம்பு தேறுவதற்காக ஒரு கப் ஓவல்டின்—

இச்சமயம் திடீரென்று கவியின் சிந்தனைகள் சிதறின. தலைமட்டத்துக்குச் சற்று உயரமாய் இருந்த ஒரு மாடத்தில் நுழைந்திருந்த அவன் கையில் ஏதோ மிருதுவாய் சிக்குண்டது. சற்று சிரமப்பட்டுக் காலை எழுப்பி அதை முன்னுக்கு இழுத் தான். அவ்வளவுதான்...

கவி போட்ட வீறிடலில், கதாசிரியன் அலறிப்புடைத்துக் கொண்டு, கொல்லைப் புறத்திலிருந்து ஓடி வந்தான்.

கவியின் முகம் சுண்ணாம்பாய் வெளுத்துக் கிடந்தது. வாயடைத்து விட்டது. சுவரைச் சுட்டிச் சுட்டிக் காண்பித் தான் கவி.

மாடத்திலிருந்து ஒரு புலித்தலை எட்டிப்பார்த்தது. கதா சிரியனே திக்பிரமை பிடித்துச் சற்று அயர்ந்து விட்டான். அவ்வளவு தத்ரூபம்!

'கீச் கீச்' என்று கத்திக் கொண்டு ஓர் எலி பின்னாலிருந்து அதை உருட்டி விட்டபின்தான், அது பஞ்சும் கதம்பை நாரும் அடைத்த உயிரற்ற தலை என்று அவர்களின் உணர்வில் பதிந்தது.

அதன் நெற்றியில் கண்களின் நடுமையத்தில் ஓர் அம்பு ஊடுருவிப் பாய்ந்து நெட்டுக்குத்தாய் நின்றது.

கவி ''நாம்-ஷாப்பிட்ட பிழகு—இழைப்பட்றி-அப்புழம்- பேஷி-கொழ்ழலாம்'' என்று தைரியமாய்க் குழறினான்.''

அவ்வளவு நொள்ளைப் பேச்சு பேசிய போதிலும், கவி புழுங்கலரிசிச் சோற்றைச் சும்மா விடவில்லை. பாயும் ஜமக்காளமும் போலச் சாதத்தைச் சுருட்டி, கவளமாய் உருட்டி, வாயில் அவன் அப்பிக் கொண்ட ஒரு விறுவிறுப்பைக் கண்டு, ''ஏது, ஆக்கி வைத்தால் நன்றாய் அழிப்பாய் போலிருக்கிறதே!''... என்று கதாசிரியன் அதிசயித்தான்.

''என்னப்பா, பிரயோசனமில்லை. இதற்குத் தொட்டுக் கொள்ள ஏதாவது இருந்தால், ஏதோ இரண்டு பருக்கை உள்ளே இறங்கும்-வாயை-குமட்டுகிறது. நான் ஏதாவது தேடித்தான் பார்க்கிறேன்.''

இருட்டில் ஒவ்வொரு பானையாய்க் கையை விட்டுக் கொண்டு வருகையில், கவியின் கையில் மறுபடியும் ஏதோ சிக்குண்டது-ஆனால், இச்சமயம் தட்டுப்பட்டது ஒரு துணி. அதை வெளிச்சத்தில் கொண்டு வந்தான்,

''ஆ புடவை!—'' கவியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! காணாததைக் கண்டதுபோல் புடவையைக் கன்னத்தில் ஒத்திக் கொண்டான்: ''இதைப் பற்றியும் அப்புறம் பேசிக் கொள்ளலாம்!—''

ஆனால், கதாசிரியன் இதைக் கவனிக்கவில்லை. பூஞ்சல் காளான் பூத்த ஒரு கிச்சிலிக்காய்ச் சுருள் அவனுக்கு அகப்பட்டு விட்டது, எப்படி யிருந்தாலென்ன; ஒன்றுமில்லாததற்கு அது போதாதா?

உச்சியேறிய சூரியன் சாய்ந்து, இப்பொழுது மேல்திசையில் விழவும் ஆரம்பித்து விட்டான். வெப்பம் தணிந்து ஓடும் தண்ணீரில் ஸ்நானம் செய்துவிட்டுக் கரையேறும் போது உண்டாகும் உற்சாகமான குளுமை தேங்கி நின்றது.

கதைகாரனும் கவிஞனும் வாசல்புறம் வந்து பின்னால் கைகட்டிய வண்ணம், இந்தக் குளிர்ந்த வெப்பத்தை அனுபவித்துக் கொண்டு நின்றார்கள்.

தின்று விட்டு மத்தியான வேளையெல்லாம் நன்றாய்த் தூங்கியபின், இந்த மஞ்சள் வெயிலில் வந்து நின்றதும், ஏதோ மதோன்மத்தம் பிடித்தது.

''மாலை வேளையே இவ்விடத்தில் நன்றாயிருக்கும்போலி

ருக்கிறது...'' என்றான் கதாசிரியன்.

ஆம், துருவிக் கொட்டிக் குவிந்த தேங்காய்ச் சிதளில் குங்குமப் பூச் சாற்றை பிழிந்தாற் போல, வானத்தில் அங்கங்கே மேகங்கள் திட்டுத்திட்டாய், சிவப்புப் பூத்து நின்றன. மேல் திசையில் செம்மரத் தூலங்கள் பாய்ச்சியது போல் கிரணங்கள் அளாவின. வீட்டுக்குக் கூப்பிடு தூரத்தில் ஓடும் அருவி நீருடன், ரோஜாவின் சிவப்பும் ஓடியது. மாலை யின் மந்தஹாசத்துடன் செடிகள் லஜ்ஜையாய் ஆடின...

எங்கும் நிர்ச்சலமயம்.

''நீ பெரிய கதாசிரியனாயிற்றே; உனக்கு என்ன தோன்றுகிறது; இங்கே நாம் கண்ட புகைப்படத்தையும், புலித்தலையையும் புடவையையும் பற்றி?''

ஏதோ ஆவேசம் வந்தவன் போல் கதாசிரியன், பரவச மடைந்த குரலில் சொல்லலுற்றான் :

''ஒரு நாள் ஒருவன் இங்கே வந்தான், ஒருத்தியுடனும் அவர்களுடைய ஒரே குழந்தையுடனும். எதற்காக இங்கே, எவ்விடமிருந்து வந்தான் என்று நமக்குத் தெரியாது; தெரிய வும் வேண்டியதில்லை. ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். அவனும் அவளும் எந்தச் சந்தடியினின்று, எந்த நிம்மதியைத் தேடி வந்தார்களோ, அதை இங்கே கண்டுவிட்டார்கள்.

''அவர்கள் வந்த புதிதில், இவ்விடம் வெறும் பாழும் குடிசையாயிருந்தது. பிறகு நாளடைவில் குடியிருக்கும் வீடாய், ஒரு மாதிரியாய் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். கட்டடத்தில் கலந்து வரும் பழமையையும் புதுமையையும் பார்த்தால் அப்படித் தோன்றுகிறது.

''அவர்களுடைய தொழில் என்னவோ! ஒரு வேளை ஒன்றுமில்லையோ என்னவோ! அவனுக்குப் படிப்பிலும் நம்பிக்கையில்லை என்று தோன்றுகிறது. இங்கே ஒன்றும் புத்தகத்தைக் காணோம். ஆம், படித்துப் பயனென்ன, பார்த்து மகிழ இங்கே எல்லாம் இருக்கும்போது? இந்த நிம்மதியான இடத்தில் யோக நித்திரை செய்வதைவிட, வேறு என்ன வேலை? விடியும் வேளையில் மலைச்சாரல்களிடை

யினின்று ஆதித்தன் புறப்படும் அழகையும், நடுப்பகலில் ஆகாய வீதியில் அவன் செல்லும் வேகத்தையும் மாலையில் அருவியின் கரையில் மனையாளுடனும் மகவுடனும் நின்று கொண்டு மேல் திசையில் அவன் மறையும் அழகையும் பார்த்துக் கொண்டே, நாள் முழுவதும் கழிக்கலாமே! இடையில் போகாத பொழுதுக்கு வயலில் பயிர் வேலை இருக்கிறது. புழக்கடையில் காய்கறி போடலாம்—எப்படிப் பொழுது போக்குவது என்னும் கஷ்டத்தை இம்மூவரும் அனுபவித்த தாய்த் தெரியவில்லை.

நாள்கள், வருஷங்கள் கழிந்தன.

''பிறகு ஒரு நாள் அந்தப் புருஷன், கையில் வில்லும் அம்பும் ஏந்திக் கொண்டே (இவ்விடத்தில் துப்பாக்கியும் தோட்டாவும் ஏது!) வெளியே புறப்பட்டான். எங்கே? எதற்தாக?' என்னைக் கேட்காதே. பல காரணங்கள் இருக்கலாம்; இந்த குன்றின் சாரலுக்கப்புறம் என்ன பிரதேசம் என்று காண இருக்கலாம்; அல்லது, வானம் பூமியைத் தொடும் எல்லையை எட்ட இருக்கலாம். எப்படியும் புறப்பட்டாகி விட்டது. ஆனால் புறப்பட்டவன் அத்துடன், அவ்வளவு தான். நடுப்பகலாயிற்று; மாலையாயிற்று; இரவாயிற்று; நடுநிசியுமாயிற்று; போன ஆள் திரும்பவேயில்லை.

''மறுநாள் வெள்ளி வேளையில் தாயும் மகனும் தேடப் புறப்பட்டார்கள். பார்வைக்குக் கிட்ட இருக்கும் மலைத் தொடர், நெருங்க நெருங்க எட்டிக்கொண்டே போயிற்று. உச்சி வேளையில், முள்ளும் கல்லும் பட்டு இரத்தம் வழியும் கால்களுடன், மலைத்தொடரைக் கடந்தார்கள். கடந்ததும், அவனைக் கண்டார்கள்.

''ஆனால், இனி அவனேது? அதுதானே! கூடு விட்டு ஆவி போனபின் மனிதன் ஜடவஸ்துதானே. உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வரை அவர் என்கிறார்கள்; பேரைச் சொல்லுகிறார்கள்; பெரியவர் என்கிறார்கள். உயிர் நீங்கியதுதான் தாமதம் 'பிணத்தைத் தூக்கு' என்கிறார்கள். 'பெரியவரைத் தூக்கு...' என்றா சொல்கிறார்கள்.

''ஆகையால், அது விரிந்த கைகளுடன் குப்புற விழுந்து

கிடந்தது. மூக்கிலிருந்து இரண்டு நூல் இரத்தம் வழிந்து காய்ந்திருந்தது. மூக்குத் தண்டின் மேல் ஒரு சாரி எறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன, அவன் மேல், தோளைக் கவ்விய வண்ணம், நெருங்கி அணைத்த மாதிரி, ஒரு புலி பதுங்கி இறந்திருந்தது. அதன் வயிற்றில் அம்பு பாய்ந்து முதுகின் வழி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

புலி அவன் பாராத திக்கிலிருந்து பின்புறம் பாய்ந்திருக்க வேண்டும். பாய்ந்ததும், அவன் விழுகையில் இசை கேடாய் அம்பு திரும்பி அதன் வயிற்றில் பாய்ந்திருக்கிறது. இதுதான் விஷயம்.

"பிறகு அவன் மனைவி, தன்னந் தனியாய் எப்படி இந்தத் துக்கத்தை சகித்தாளோ? எப்படிப் பிணத்தை அடக்கம் செய்தாளோ! தன்னிடத்துக்கு எப்படித் திரும்பி வந்து சேர்ந்தாளோ! ஆனால், இது மாத்திரம் தெரிகிறது. அவர்கள் வேண்டாமென்று துப்பியெறிந்த எச்சில் சமூகத்தினிடம் மட்டில் மறுபடியும் போய்ச் சேரவில்லை. அந்தப் புலியின் தலையை உடன் கொண்டு வந்து விட்டாள். உள் விவகாரங்களைக் குடைந்து பஞ்சும் கதம்பை நாரும் அடைத்து அவள் கணவனின் படத்துக்கு எதிர்புரையில் வைத்து விட்டாள். தினம் படத்துக்குப் பூஜை எப்படி நடக்கும் தெரியுமா? அவளுடைய மகன், தகப்பனின் படத்துக்கு முன் வில்லும் அம்பும் ஏந்தி, மாடத்துக்கு எதிர் நின்று குறிபார்த்து புலித்தலையில் இரு கண்களுக்கும் மத்தியில் அம்பு நுழைய எய்ய வேண்டும். பழிக்குப்பழி! நியாயத்துக்குக் கட்டும் கப்பம்! ஆனாலும் இதெல்லாம் முன் தயாரிப்புத்தான்; பெருங்காரியத்துக்குத் தயாராக முன்னால் செய்து கொண்ட ஓர் ஒத்திகைதான்; அப்பனைக் கொன்ற புலியின் வம்சத்தை வேருடன் அழிப்பதற்காக, முன் செய்து கொண்ட ஏற்பாடு தான்..."

இவ்விடத்தில் கதாசிரியன், சற்று மூச்சு வாங்கிக் கொண்டு மறுபடியும் சொல்லலுற்றான் :—

"ஆம், இந்தப் பழிக்குப் பழிவாங்கும் வேலை-வேருடன் களையும் காரியும் என்பதெல்லாம் புதுப்பழக்கமல்ல. இதற்கு

வேண்டிய அத்தாட்சிகள், நம்முடைய இதிகாச புராணங்களில் முதற் கொண்டு இருக்கின்றன. பரசுராமன் என்ன, கார்த்த வீரியார்ச்சுனன் என்ன, ராமராவண யுத்தம் என்ன, கம்ஸன் வாசுதேவ பரம்பரையை அறவே அழிக்க முயன்றது என்ன, அதே கிருஷ்ணபரம்பரையின் யாதவகுல நாசம் என்ன, பாரத யுத்தம் என்ன, நம் தேச சரித்திரத்திலேயே சாணக்கிய சாஹசம் என்ன, அலாவுதீன் கில்ஜி சரிதம் என்ன—இப்படியாகப் பல உதாரணங்கள் உண்டு. நம் வாழ்க்கையையே பார்க்கப் போனாலும், ஒன்றுக்கு ஒன்று பழிக்குப் பழியாய்த்தான் இருக்கிறது...பார், இந்தப் பாம்பு என்று தான் இருக்க வேண்டியதில்லை. எந்தப் பாம்பைக் கண்டாலும் கீரி துரத்துகிறது. எலியைக் கண்டால் பூ...''

''சரி தானப்பா... உன் கதையைச் சொல்லு. உலகத்தின் கதையைச் சொல்லிவிட்டு, உன் கதையென்று ஏமாற்றி விடாதே...'' என்று கவி இடை மறித்தான்.

''என் கதை இனி அதிகமில்லை. ஒருநாள். நேற்றுகாலை பையன், கையில் வில்லும் அம்பும் ஏந்தி இதுவரை வீட்டில் பயின்ற பயிற்சியை, அம்பலத்தில் ஆடச் சென்றான். காலை ஆயிற்று, பகலாயிற்று, மாலையாயிற்று; புலிவம்சத்தைத் தேடச் சென்ற பையன் இன்னும் மீளவில்லை. தாயின் உள்ளத் துடிப்பை சகிக்க முடியவில்லை. அடுப்பில் சொருகிய கொள்ளிக் கட்டையை அவிக்கவும் மறந்து தனயனைத் தேடிச் சென்றிருக்கிறாள்—இன்னமும் வந்து கொண்டிருக்கிறாள்.

ஆம், இப்பொழுது நல்ல இருட்டுத்தான். மாலை வேளையில், மரங்களும் செடிகளும், திடீரென்று அரும்பிய அழகு போய், இப்பொழுது இருவிருளில், உருவற்ற மொந்தாகாரமாய், அங்கங்கே ஒரு விதமான பயங்கரத்துடன் திமிறி நின்றன. புட்களின் அரவம் அடங்கியது. அப்பொழுது சங்கீதமாய் ஒலித்த செடி கொடிகளின் உராய்வுகள், பாம்பு, பூச்சிகளின் அர்த்தமுள்ள சலசலப்பாய் மாறியது......

இவ்விந்திர ஜாலத்தின் திகைப்பில், இருவரும் சுற்று

நேரம் மௌனமாய் இருந்தார்கள். பிறகு...

''உன் கதை அவ்வளவு ஸ்வாரஸ்யமில்லை'' என்றான் கவி. ''அதில் காதல், மோஹம் முதலிய சிருங்கார ரஸங் களில்லை, காதல் இல்லாத கதை என்ன கதை!-புலியாம், புலி வேட்டையாம்! பெண்ணாம், பிள்ளையாம்! — சுத்த ''டார்ஸான்'' வேலையாயல்லவா இருக்கிறது!-போனாளாம்-வரவில்லையாம்—பூ!''

கதாசிரியன் திடீரென்று கையை உயர்த்தி அமர்த்தினான்.

''இல்லை; வருகிறாப் போலிருக்கிறது—கவனி!''

ஆம், யாரோ வீட்டை நெருங்குகிறார்கள். காலடியில், சிறு மணியாம் பருக்கைக் கற்கள் 'சரக், சரக் கென்று நொறுங் கும் சப்தம்.

கதவு 'படீ'ரென்று திறந்தது.

''யாரது?''

''நாங்கள்தான்—வழிப்போக்கர்கள்; வழிதவறி விட்டது''

''ஓ சரிதானுங்க — விளக்கை ஏத்துகிறேன் - குந்துங் கண்ணா ஏன் எழுந்திருக்கணும்!—எப்போ வந்தீங்க?''

கேள்விகளைக் கேட்டுக்கொண்டே, அவன் உள்ளே போனதும்-கவியும் கதைகாரனும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். யாரோ காட்டாள் போலிருக் கிறது—பேச்சில் ஒன்றும் 'நாஸூக்கை'க் காணோம்!

''ஒரு சிறு தகர விளக்கை எங்கேயிருந்தோ அவன் ஏற்றிக் கொண்டு வந்து வைத்தான். அவனது முதுகில் ஒரு சிறு மூட்டை இன்னும் தொங்கியது.

''பார்த்தால் எசமான்மார் மாதிரி இருக்குதுங்களே—சாப்பாடு ஏதாவது ஆச்சுங்களா—அடபாவமே!-தனியாய் வந்து அகப்பட்டுக் கொண்டீங்களா?—பரவா இல்லீங்க. காத்தாலே எழுந்திருச்சுப் போவலாம்—ஊர்லேயிருந்து—கீரைத்தண்டும் முள்ளங்கியும் வாங்கி வந்திருக்கிறேங்க—இந்தா சடுதியிலே சமையல் செய்துடறேனுங்க. மாமியார் வீட்டுக்குப் போயிருந்தேனுங்க—பெண்ஜாதி பிள்ளைத்தாச்சி. நேத்துக் காலை, அவளையும் மவனையும்—ஆமாங்க, பத்துப்

பன்னிரண்டு வயசிலே ஒரு மவன் இருக்காங்க—அவனையும் மகனையும் கொண்டு போய் விட்டுட்டு, இப்பத்தான் வாரே னுங்க.''

''சரிதான். சரியான 'ஓட்டை' வாய்தான்!''

''நீங்க எங்கே போவணுங்க?''

''வெட்டி வாக்கம்—'' என்று இருவரும் ஒரே மூச்சில் சொல்லிவிட்டு, ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அட ராமா! வெட்டிவாக்கம் இதோ இருக்குதுங்களே—மலையைத் தாண்டினா வெட்டிவாக்கம்—காலையிலே காமிக் கிறேனுங்க—அங்கேதான் நம்ப எசமான் இருக்காரு—நீங்க இந்தப் போட்டோவைப் பார்க்கல்லே, அது அவர் தானுங்க.''

''ஆமாம், யார் அவர்?—''

''அவர் தான் என் எசமானுங்க—பெரிய வைத்தியருங்க—ஐயாக் கண்ணு பண்டிதரு என்னு பேருங்க—''

''யார் ஐயாக் கண்ணுப் பண்டிதரா! அவரைத் தான் நான் பார்க்க வேண்டும்,'' என்றான் கதாசிரியன்.

''இதென்ன! நானும் அவரைத்தான் பார்க்க வந்தேன்—'' என்றான் கவி.

''சரி தானுங்க, நாளை காலைலே நானே கொண்டுபோய் விடுறேன்—இந்தப் பக்கத்திலே — அவருக்கு நல்ல பேருங்க—இப்போ புதிசா ஒரு மூலிகை ஒண்ணு அகப்பட்டிருக்குது அவருக்கு—ரொம்ப ரகசியமா அதை ஏதோ புடம்வெச்சிருக் காருங்க—இங்கே தான், இந்த வீட்டுப் புளக்கடையிலே—அதுக்குக் காவலுங்க நானு—புளக்கடைக்குப் பின்னாலே—அது பயிராவுதுங்க — அவரு ஒரு மாதிரி மனுசன்—அவுரு புதுசாக் கண்டுபிடிச்சதாலே, மற்றவங்க கண்ணுக்கு படக் கூடாதாம்—பட்டா அவுங்க அந்தப் பதங் கண்டு மருந்து செய்திட்டால். அவுரு மகிமை போயிடுதல்ல? என்ன யோசனை பண்ணுறீங்க—புரியுதில்லே—?''

''நன்றாய்ப் புரிகிறது-நீ போய்ச் சாமானை இறக்கு தோளிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாயே!''

அவன் உள்ளே சென்றதும், இருவரும் ஒருவரையொருவர் ஒரு கணநேரம் விறைத்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

"நீ யேன் இந்த வைத்தியரைப் பார்க்க வேண்டும்?-"

"நீ மாத்திரம்?"

"நான், அவருடைய விளம்பரத்தைக்கண்டேன், பத்திரிகையில் அவருடைய புது மருந்துக்கு நல்ல விளம்பரம் செய்யக்கூடிய ஓர் ஆள் வேண்டுமாம்-நாம் ஏதோ கதையெழுதுகிறோமே; நம்முடைய எழுத்து வன்மை, விளம்பரத்துக்கு உபயோகப்படாதா, அதனால் நமக்கும் கொஞ்சம் பணம் வராதா என்ற எண்ணம்தான். அவர் விலாசத்துக்குக் கடிதம் எழுதினேன்; என்னுடைய கதைத் தொகுதியையும் அனுப்பினேன். எழுத்தில் எனக்கு இருக்கும் அனுபவத்தைப் பற்றி அவருக்கு அத்தாட்சி வேண்டாமா, அதற்காகவே கதைத் தொகுதியை அனுப்பினேன். நேரில் வந்து காணும்படி பதில் வந்தது-அதனால்தான் கிளம்பி வந்தேன்-"

"அதே சமாசாரம் தான் நம்முடையதும்-நீ படித்த பத்திரிகையேதான் நானும் படித்தது. உனக்குத் தோன்றிய எண்ணம் தான் எனக்கும் உதித்தது. வெறுமையே வளைத்து வளைத்து எழுதினால் மாத்திரம் போதுமா?-சாற்றுக்கவி, ஒரு சின்னப் பாயிரம்—ஒரு சிறிய பாட்டுப் புத்தகம்-மூலிகைகளின் சிலாக்கியத்தைப் பற்றி நல்ல, புது ஹிந்தி 'டியூன்களில்' அமைத்து விடலாம். இந்த என் யோசனையை அவருக்குத் தெரியப் படுத்தியதும்-என்னையும் வரும்படி எழுதினார்-பார் இதோ கடிதம். மருந்துகள் விற்க, பாட்டைப்போல் வேறே நல்ல மந்திரம் கிடையாது-இதை மாத்திரம் மனதில் முடி போட்டுக் கொள்."

"அட வயிற்றுப் பிழைப்பின் கொடுமையே!" என்று கதாசிரியன் தலையிலடித்துக் கொண்டான்.

கொஞ்சநேரம் கழித்து "ஆ! ஞாபகம் வந்தது-உள்ளே வா; அந்த ஆளை ஒரு கேள்வி கேட்கவேண்டும்-" என்று கவி, கதாசிரியனை உள்ளே அழைத்துக் கொண்டு போனான்,

"ஏனப்பா, இந்தப் புலித்தலையில், அம்பு சொருகி நிற்பதேன்?"

அவன் கொஞ்ச நாழி மிரள மிரள விழித்துவிட்டு "ஓ! அதுவா? அது நம்ப பையன் வேலைங்க-(சலுகைக்குரலில்) —சுத்தக் கேப்பு மாரிங்க, இந்தப் பக்கம், காடை, கவுதாரி பறவைகளெல்லாம் ஸாஸ்தி. அதுகளை அடிச்சுச் சந்தைக்குக் கொண்டு போனா, நல்ல துட்டு—அதுவும் கொஞ்ச தூரம் தாண்டி ரயிலேறிப்போனா துரைமாருங்க வாங்கினா, ஒரு காடைக்கு, ரூபா ரெண்டு, மூணுகூட அகப்படுங்க. அது சுட்றதுக்கு, இங்கே, இவன் குறி பழகறானாம். அந்தப் புலித்தலை, சுவரிலே, அழகா மாட்டறதுக்கு வைத்தியர் வாங்கினாரு; அதை, அவர் இல்லாத சமயத்திலே, பையன், இந்தக் கோலம் பண்றாணுங்க!" சாப்பிட உட்காரச் சற்று நேரத்துக்கு முன்னால், கவி ஒரு கேள்வி கேட்டான், கதாசிரியனை : கோழி முட்டை பார்த்திருக்கிறாயா?—"

"இதென்ன கேள்வி, சாப்பிடும் வேளையில்?—

"எவ்வளவு அழகாயிருக்கிறது! வழ வழ வென்றிருக்கிறது! வட்டமாயிருக்கிறது! வடிவாய் இருக்கிறது! — ஆனால் அதையெடுத்துத் தூணிலோ, சுவரிலோ அறைந்தால்..."

"ஐயோ ஆபாசமே!—" என்று அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டான் கதாசிரியன்.

"அதே லட்சணம் தான், புலித் தலையை வைத்து நீ கட்டிய கதையும், அதற்கு இந்த ஆள் கொடுத்த வியாக்கியானத்துக்கும் நீ கட்டிய கற்பனைக்கும்—"

மௌனம் குடி புகுந்தது அவ்விடத்தில். திடீரென்று வான் தகட்டில் துளை விழுந்தது போல். நட்சத்திரங்கள் பிரகாசித்தன. அருவியில், சிற்றலைகள் மெள்ளக் கரையில் துவளும் சலசலப்பு, காதில் வந்து மோதியது.

அத்துடன், அடிவயிற்றில் பசியைக் கிளப்பும் வேகத்துடன், உள்ளிருந்து, முள்ளங்கிக் குழம்பின் வாசனை 'கம்' மென்று காற்றில் மிதந்து வந்து கலந்தது.

# மீனோட்டம்

''ஏய் நீ என்ன பார்ப்பாரப் பெண்ணாயிருக்கையா, நீ!- அதுவும் கோவில் பூஜை செய்யற குடும்பமாவா இருக்கே? மீன் பிடிக்கிறையே, மீன்!!—''

''போடா, கையாலாகாட்டா, வாயை மூடிக்கோயேன்— நீ மாத்திரம் பார்ப்பானில்லையோ! பிடிக்க வகையில்லையாம். அஹங்காரத்தைப் பாரு—''

எனக்கு ஆத்திரம் பொங்கிற்று.

''நிறுத்துடி—வாயை மூடு—ரொம்ப ரொம்ப நீட்டிநீட்டிப் பேசறையே மணியாட்றவன் பெண்ணே—''

''சரிதானப்பா. ரொம்ப ரொம்ப அலண்டு போயிடாதே- உங்கப்பா உத்யோகம் பண்ணினால்—உங்காத்து மட் டோடே—''

எனக்கு வெறி உச்சந்தலைக்கேறிவிட்டது.

''என்னடி ஒங்கப்பன், எங்கப்பன் இன்னு பேசறே? பல்லை ஒடைச்சுப் புடுவேன்—'' என்று சொல்லிக் கொண்டே, முதுகில் ஒன்று வைத்துவிட்டேன். அவ்வளவுதான். ஆற்றங் கரையில் ஓங்கி நிற்கும் மணற் குன்றுகளிடையில் அவள் அழுகை நல்ல சப்த சுத்தத்துடன் ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

அவளை அடித்தது தான் தாமதம். என்னை வாதித்த வெறியும் தணிந்து விட்டது. அசடு வழிந்த முகத்துடன், வெயிலில் மீன்துண்டுகள் போல் வயிற்றைப் புரட்டிப் புரட்டித் துள்ளும். அந்தச் சிறு மீன்களைப் பார்த்துக்கொண்டு

நின்றேன். என் மனதில் எண்ணாத எண்ணங்களெல்லாம் ஓடத் தலைப்பட்டு விட்டன.

''சீ, என்ன காரியம் செய்தோம்! கேவலம், இந்த மீனை அவளைப் போல் பிடிக்க நமக்குத் தெரியவில்லை என்கிற ஆங்காரத்தில் அவளைத் தொட்டு அடித்தோமே!—இந்த மீனை நாம் என்ன சாப்பிடப் போறோமா, வீட்டுக்கு கொண்டு போய்—இதைப் பிடிச்சால் என்ன, பிடிக்காவிட்டால் என்ன? விளையாட்டாய் வந்து வினையா முடிஞ்சுதே!—அதுவும் நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறோம், போகிற போக்கில் கங்காவோடு சண்டை போட்டுண்டா போகணும்! அப்போ, நான் ஊரிலே இருந்தா, இந்தச் சண்டை நினைப்பு வந்தால், எவ்வளவு சங்கடமாயிருக்கும்! இப்படிப் பிழிய பிழிய அழறாளே, இந்தக் குரல் தானே, ராத்ரி நான் தூங்கறப்போ என் கனாவிலே கேட்கும்! அப்போ, ரொம்பக் கஷ்டமாயிருக்குமே, நான் என்ன செய்வேன்!''

துக்ககரமான யோசனையின் பரவசானந்தம் எனக்கு அப்பொழுது புதிது. அந்த சுகத்தில், நான் என்னை மறந்தேன் கங்காவை மறந்தேன். எல்லாம் மறந்து, என்னில் லயித்து விட்டேன். அதனால், கங்கா என்னைத் திடீரென்று கட்டியணைத்ததும், எனக்குத் ''திக்'' கென்றது.

''ஏன் என்னிடம் வராய், மறுபடியும்?'' என்றேன்.

பின்னே நீ—இ—இ—யும் அழறையே-எ-எ-நான் தான் அழுதா—அ—அ—ல்—'' என்று விக்கினாள் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு.

அப்பொழுதுதான் எனக்கே தெரிந்தது என் கன்னம் நனைந்திருப்பது—எனக்கே வெட்கமாய்ப் போய்விட்டது.

''சரி வா, ஆத்துக்குப் போகலாம்—'' என்றேன் பேச்சை மாற்ற.

அதெல்லாம் முடியாது—உனக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்துட்டுத்தான்—பார், உன் கை என் கையை விட நன்னாயிருக்கு—நீ என்னை விட நன்னாப் பிடிப்பாய்—''

''சரிதான் வாயேன்—''

''ஊ-ஹூம்-இடுப்பு வேஷ்டியை அவிழ்த்துப் போடு.

தண்ணு மேலே-பார், துணி மேலே எவ்வளவு மீன் குஞ்சு வரது-நாலு முனையும் ஒண்ணாச்சேர்-அப்படித்தான்-அகப் பட்டுக் கொண்டதையா நாலு-தொட்டுப்பார்-இந்தத் துணிக் குள்ளே இருக்கறதை விட்டுப்பிடி—அது பழகினதும் ஓடற தண்ணுலேயே பிடிக்கலாம்-இது மாதிரி-'' தண்ணீரில் வாய் போல் விரிந்து வேகமாய்ச் சென்ற அவள் விரல்கள் "சடக்" கென மூடின. கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்குமிடையில் தண்ணீரில் ஒரு சிறு கலவரம் உண்டாயிற்று.

''டேய்-டேய் தொட்டுப்பாரேன்-'' என்று கங்கா கத்தி னாள் சிரித்துக் கொண்டே. மீன் செதிள் குறுகுறுவென்றது. அடுத்தடுத்து வரும் எங்கள் சிரிப்பு மணற் குன்றுகள் வரை உயர்ந்து அவைகளில் ஒளிந்தன.

x x x

மறுபடியும் அவ்வூற்று நீர்க்கரையோரந்தான்; அதே மணற்குன்றுகள் தான். எத்தனையோ காலடிகள் அமிழ்ந்து கலைந்தும், சற்றும் மாறாத அதே மணல் தான். அதோ தூரத் தில் காணும் ஊரைச் சுற்றிய தோப்பில், சில புது மரங்கள் வளர்ந்திருந்தன—பழைய மரங்கள் பட்டிருந்தன-அவ்வளவு தான்-வேறொரு வித்யாசமுமில்லை. கிராமாந்திரங்களில் கால வித்யாசம் அதிகம் தெரிவதில்லை. பட்டணத்தில் நேற்று போய் இன்று வருவதற்குள் ஒரே புரட்டல்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்கு வருகிறேன். ஆனி மாதம் வெயில் பட்டை வாங்குகிறது. செருப்புப் போட வில்லை. உள்ளங் கால்களிரண்டும் கீழே பதியாமல் தவிக்க ஆரம்பித்து விட்டன. காலை அலம்பிக் கொள்ளலாம் என்று கால்வாயில் இறங்கினேன்.

எதிர்க்கரையில் ஒரு சிறு கூட்டம். கலியாணக்கோலம். மஞ்சள் தெறித்த துணிகள் வெயிலில் பளீர் பளீர் என்றன. பாலிகை கொட்ட வந்தவர்கள் போலும்.

''டே, டேய்—உன்னைத் தானே, உன் பேர்—சுருக்க வாயில் வரவில்லையே!—''

கங்காவின் தகப்பனார் தான், சந்தேகமில்லை. உடம்பு முன்னைவிடச் சற்று ஒடுக்கம். ஆனால் அவர்தான்.

அப்படியே கடந்து அக்கரையடைந்தேன். எல்லோரும்

அன்புடன் வரவேற்றார்கள்.

"ஏண்டா, இன்னம் இரண்டு நாள் முன்னமே வரப் படாதோ!" "பத்திரிகை கூட அனுப்பிச்சோமே, தவறாமல்-தவிர, தபால் கூடத் தனியா எழுதினோமே!—"

"இல்லை மாமா, எனக்கு வந்து சேர்ந்திருக்காது—அந்த விலாசத்தில் நான் இல்லை—அந்த ஊரிலேயே இல்லை. இப் போது—இது யார் கங்காவா? ஏது அடையாளமே தெரியலையே!—"

"ஏன் தெரியும்-இன்னும் நாலு வருஷம் பொறுத்து வா!—"

கங்கா, கால் கட்டை விரலால், மணலைக் கிளறிக் கொண்டே கீழ்நோக்கிய பார்வையுடனே 'சுறுக்'கென ஒரு கண்கணை தொடுத்து வெற்றிப் புன்னகை புரிந்தாள். என் மனத்தில் ஏன் முள் தைக்கிறது? ஏன் அவளைக் காணக் காண, மனதில் ஒரு வேகமும் ஆங்காரமும் உண்டாகின்றன? அவளைக் காணச் சகியாமல், கலியாணப் பிள்ளையின் பக்கம் திரும்பினேன்.

ஆனாலும் இந்தக் கரிக்கட்டையை கட்டிக் கொண்ட தற்கு இவளுக்கு இவ்வளவு ஆணவம் வேண்டியதில்லை. வாய்க் காவியைப் பார்த்தால், சக்கையாய்ப் புகையிலை தீட்டு வான் போலிருக்கிறது.

"என் மருமான்"—கடலூரிலே தனியாக் கோவிலில் பூஜை பண்ணிக் கொண்டிருந்தான்-பெண்ணைக் கொடுத்து வீட்டோடே வெச்சுக்கலாம்னு தீர்மானிச்சுப்பிட்டேன். அவ னுக்கும் பெற்றவாளில்லை-நமக்கும் புத்திர பாக்கியமில்லை என்று பகவான் வெச்சுப்பிட்டான்-எனக்கும் வயசாயிடுத்து. இங்கே கோவில் பூஜைக்கும் எனக்குக் கொள்ளி போடறத் துக்கும் ஒருத்தன் வேணுமில்லையா?—" என்றார் கங்காவின் தகப்பனார்.

"என்ன மாமா, கலியாண சமயத்திலே இப்படியெல்லாம் பேசலாமா?—"

"அதுவும் ஒரு கலியாணந்தாண்டா—சரி வாங்கோ போகலாம்—"மத்தியான மெல்லாம் நான் ஜோலியாய்ப்

பக்கத்தூருக்குப் போயிருந்தேன். சாயந்திரம்தான் திரும்பி வந்தேன். கலியாணப் பெண்ணே காப்பி கொண்டு வந்து விசிப் பலகையில் வைத்தாள்.

"கொஞ்சம் ஒழிந்திருக்கிறாப் போலிருக்கிறது!—" என்றேன்.

வெற்றிப் புன்னகையுடன் பின்னிடைந்தாள். இத்தனை தடபுடலுக்கும் காரணியாயிருப்பதன் இறுமாப்பு!—

"ரொம்ப அவசரமோ! எல்லாம் பழைய கங்கா தானே! வெட்கமோ?"

சிரித்தாள், பின்னலில் கட்டி இருக்கும் தாழம்பூவை முகர்ந்து கொண்டே.

"இதோ பார், உனக்குக் கல்யாணப் பரிசு வாங்கி வந்திருக்கிறேன்—" என்று கையிலிருந்த பொட்டணத்தைப் பிரித்து, சாமானைப் பலகையின் மேல் வைத்தேன்.

வெள்ளியில் வெற்றிலைப் பெட்டி; மீன் உருவத்தில் நிர்மாணம். இரு கண்களையும் உள் குடைந்து, ஒரு குழியில் பாக்கு, மற்றொன்றில் சுண்ணாம்பு. குழிகளின் மூடிகளின் பேரில் நீலக்கற்கள் புதைத்திருந்தன. அவைதான் மீனின் கண்கள், முதுகைத் திறந்தால் வெற்றிலை வைத்துக் கொள்ள இடம். மீன் வெகு களையாய்ப் பாய்ச்சலில் நின்றது.

அவள் கண்கள் மலர்ந்தன. சிரித்துக்கொண்டே அதைத் தடவ ஆரம்பித்தாள். அவளுடைய உதடுகள் செக்கச் செவேலெனப் பளபளத்தன.

திடீரென்று என்னை அவள் ஒரு கேள்வி கேட்டாள்.

"மீன் பிடிக்கக் கத்துண்டாச்சா?" என்றாள். அவள் கண்களில் குறும்பு கூத்தாடியது.

என் இதய நோவு விண்விண் எனத் தெறித்தது. சமாளித்துக் கொண்டு— "ஊஹூம்—என்ன இருந்தாலும் உன் சாமர்த்தியம் வருமா?—தவிர, பட்டணத்தில் எங்கே மீன் பிடிக்கிறது? எங்கேயும் குழாய் தான். சமுத்திரம் இருக்கிறது, ஆனால் அங்கே உன்மாதிரி கையால் பிடிக்கமுடியாது—வலையோ தூண்டிலோ தான் போடவேணும்—

வேணுமானால் நண்டு பிடிக்கலாம், கூவம் நதியும் பக்கிங் ஹாம் கால்வாயுமிருக்கிறது—நிறையச் சேறு எடுக்கலாம்—''

''ஏன், பார்த்தசாரதி கோயில் குளம் இருக்காமே! அதிலே—!''

''பாசி தான் மிதக்கும்—இடையிடையில் பிரேதமும் மிதக்கும்—''

அவள் முகம் 'சடக்'கென மாறியது. என் வார்த்தையில் ஏன் இவ்வளவு வெடிப்பு? எனக்குப் புரியவில்லை. சமய மில்லா சமயத்தில் என் வாயில் ஏன் இந்தச் சம்பந்தமில்லாத அசம்பாவித வார்த்தை? எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று என் மார் நோவு பொறுக்க முடியவில்லை—பந்துபோல் சுருட்டிச் சுருட்டியடைத்தது...பொறுக்கமுடியவில்லை.

x x x x

மீண்டும் அதே பொரியும் மணல்தான். ஜீவனற்று, பிரேதம் போல் நீலம் பூரித்த ஆகாயம் தூரத்தில் கானலில் ஊர்த்தோப்பு நடுங்கியது. காலை வேளையிலேயே, கடுமை யான வெயிலில் என் கண்கள் இருண்டன. தவிர, பசி காதை அடைத்தது. வெறும் வயிற்றுடன் காலையில் பன்னிரண்டு மைல் நடந்து வந்திருக்கிறேன். காலணா இட்டிலி வாங்கு வதற்குக் கூட கையில் வழி இல்லை, க்ஷவரம் செய்து இரண்டு மாதங்கள் ஆகியிருக்கும்.

எல்லாம் அதொருகாலம்—இதொரு காலம—

அக்ரஹாரத்துக்குப் போனால் பழைய சிநேகிதத்தை வைத்துக் கொண்டு ஒரு வாரம் தள்ளலாம். என் பிழைப்பு அப்படியாகி விட்டது,

எல்லாம் அதொருகாலம்...இதொருகாலம்...

ஒரு கை தண்ணீர் குடித்துவிட்டுப் போகலாம் என்று கால்வாயில் இறங்கினேன். நான் இறங்கிய கரைப்பக்கத்தில் நெருப்பைக் குளிப்பாட்டிய நிறத்தில் ஒருவர் குளித்துக் கொண்டிருந்தார். தோய்க்கிற கல்லின் மேல் துணியைக் கும்மி வைத்திருந்தார். கரையில் ஒரு பொடி மட்டை விபூதி சம்புடம், பட்டைப் புகையிலை, காய்ந்து போன வெற்றிலை நாலைந்து இரண்டு கொட்டைப்பாக்குகள் - எல்லாம் அவர்

சொத்து.

எதிர்க்கரையில் ஒரு ஸ்திரீ ஸ்நானம் செய்து கொண்டிருந்தாள். அவள் முகம் பழகிய முகமாயிருந்தது.

என் கையிலெடுத்த தண்ணீர் என்னையறியாமல் விரல்களின் வழியே வழிந்தது. ஆம் அவளேதான். ஆனால், அவளா இவள்?

பச்சையிலேயே பட்டுப்போனாற் போன்ற வற்றி இளைத்த உடல். தோற்றத்திலேயே ஒரு தனி அசதி. சோகம் தேங்கிய முகம். இவ்விடத்து நினைவு அற்று இருந்தன அவள் கண்கள். அந்தப் பழைய துறுதுறுப்பு எங்கே ஓடியது? இவளுக்கு இத்தனை கிழத்தனம் எங்கிருந்து வந்தது?

திகைப்புடன் அவளையே நோக்கி நின்றேன், என்னை மறந்து அவள் இன்னும் என்னைப் பார்க்கவில்லை, அவள் புடவை முன்றானை, தண்ணீரில் விழுந்து காற்று உள்புகுந்து பட்ர்ந்து பொங்கியது. அதைக் கண்டதும் சடக்கென்று அவளது முகத்தில் ஒரு புன்னகை பாய்ந்தோடியது. அவள் முகத்தில் பழைய இளமையின் கனவைக் கண்டேன். வாய் போல் அவள் விரல்கள் விரிந்து தண்ணீரைக் கிழித்து நீந்தின,

"ஏ பிணமே நீ என்ன பார்ப்பாரப் பெண்ணாயிருக்கையா நீ அதுவும் கோவில் பூஜை செய்யற குடும்பமாவா இருக்கே? மீன் பிடிக்கிறையே, மீன்—?"

கர்ண கடூரமான அந்தத் தொனி, என் பக்கத்திலிருந்து திடீரென்று கிளம்பியதும், எனக்கே தூக்கிவாரிப் போட்டது. அந்தக் கறுப்புப் பிராம்மணன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. பற்களை நெறநெற வெனக் கடித்து, இன்னும் என்னென்னவோ உளறினான். ஆனால், அவளைத் தான் பார்க்க சஹிக்கவில்லை. அவள் உடல், கைகள் எல்லாம் வெல வெலத்து விட்டன. ஏதோ பழகிய சப்தத்தைக்கேட்டு விட்டு அதைத் தேடுவது போல் சுற்று முற்றும் அவள் கண்கள் பதறித் தேடின. ஆனால் ஒருவருமில்லை. எதிரில் அவள் புருஷனும் நாடோடிப் பயலும்தான், இதற்குள் அவள் முகம் வெளுத்து நீலம் பூரித்து விட்டது. அவசரம்

அவசரமாய் எதையோ கண்டு தப்பி ஓடுவது போல், புடவையைச் சுற்றிக் கொண்டு, சொட்டச் சொட்ட கரை ஏறி, மணல் மேட்டின் பின்புறம் மறைந்தாள்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம், அவள் கணவன் அவளைத் திட்டிக்கொண்டே அவ்விடம் விட்டகன்றான்.

நான் திக்ப்ரமை பிடித்து அங்கேயே சற்று நேரம் உட்கார்ந்திருந்தேன், வேகும் வெயிலில் கால்வாய்த் தண்ணீரை விரைத்துப் பார்த்துக் கொண்டு, அந்த மீன்கள்—மனித வர்க்கம் வாழ்ந்தால் என்ன, வீழ்ந்தால் என்ன? அவைகளுக்கு கவலை? இரக்க மற்ற ஆனந்தத்துடன் மின் துண்டுகள் போல், வெள்ளி வயிற்றைப் புரட்டிப் புரட்டித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

நான் அக்ரஹாரத்துள் புகவில்லை. வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு, ரயிலடிக்கு விரைந்தோடினேன்; ஏதோ ஒரு குற்றவாளியைப் போல, அவசர அவசரமாய் ஓடினேன். காரணம் எனக்கே தெரியவில்லை.

# சாவி

கடிதத்தைப் பிரித்தவுடன் அதிலிருந்து இனிய மெட்டி சத்தத்துடன் ஏதோ ஒண்ணு தரையில் விழுந்தது. கையில் எடுத்துப் பார்த்தால் சாவி பளபளத்தது. பித்தளைச் சாவி. அதனின்று 'பழநி' கம்மென்று ஆளைத் தூக்கிற்று. அவரை அறியாமல் வாய் முறுவலித்தது.

''புள்ளையாண்டான் கடுதாசி' போட்டிருக்கானா?''— கேட்டுக் கொண்டே உள்ளிருந்து அவள் வந்தாள். அவ ளுக்குக் கட்செவி. லேசான நரை கூந்தலில் அங்கு மிங்குமாய் சுடர் விடுகையில் அவள் முகம் தனியாய்ப் பொலிந்தது. கடிதத்தை அவளிடம் நீட்டினார், கடிதமோ, கதையோ, புராணமோ எதாயிருந்தாலும் அவள்தான் அவருக்குப் படித் துக் காட்டுவாள். தான் உரக்கப் படிக்கையில் தனக்கும் காது கேட்கும். அவருக்கும் படிக்கும் சிரமம் தவிர்க்கலா மல்லவா?

''அம்மாவுக்கு அநேக கோடி நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமமா? கடைசி நிமிஷத்தில் என் பிளான் தடமாடி விட் டது. இதோ எக்ஸ்கர்ஷனுக்கு வாத்யாருடனும், பையன்களு டனும் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இது என் படிப் புக்கு அவசியம். மன்னிக்கவும். எனக்கும் ஏமாற்றம்தான் என்று சொல்லணுமா?

ஆனால் அம்பாளுக்கு இங்கே இப்போ கோடி அர்ச்சனை நடக்கிறது. நான் வர முடியாவிட்டாலும் அப்பாவும் நீயும் இங்கு வந்து ஏன் தங்கக்கூடாது? அறை ஜன்னலிலிருந்து கோயில் ஸ்தூபி பார்க்க அப்பாவுக்கு ரொம்பப் பிடிக்கும்.

ரும் சாவியை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

நமஸ்காரம்.

பி.கு :—அம்மா, எனக்காக சுடச்சுட ஆவி பறக்க நெய் சொட்டச் சொட்ட சர்க்கரைப் பொங்கலை ஒரு தடவை வழிச்சு அடித்தொண்டையில் விட்டுக்கோ. சூடு உள் இறங்கும்போது என்னை நினைச்சுக்கோ. எனக்குத்தான் கொடுப்பனை இல்லை.

பி.பி.கு:—திரும்பி வர்றப்போ நேரில் சாவியை வாங்கிக்க றேன்.''

அவள் விழியோரங்கள் லேசாய்ப் பனித்தன.

அவன் ஆசையாத்தான் எழுதியிருக்கான். ஆனால் பொங்கல் தொண்டையிலே விக்கிக்கத்தான் போறது. சேந்தாப் போல பத்து நாள் பையன் வந்து இருந்தான்னா அவன் வாய்க்கு உணக்கையா மோர்க்குழம்பில் பருப்புருண்டை, அடிநாக்கில் தொட்டு இழுக்கிற மாதிரி வெத்தக் குழம்பும் தேனாப் பண்ணிப் போடலாம். ஆனா அவருக்குக் கார்ரம் ஆகாது. அம்பி வந்தால் வீட்டுக்கு வெளிச்சம் போட்டாப் போல இருக்கும். எல்லோருக்கும் பிடிக்கிற மாதிரி நடந்துக் கறதுல மன்னன். அவருக்கேற்ப பூஜைக்குக் குடலை வழிய மலர் பறிப்பதும், மூணு வேளை மூக்கைப் பிடிப்பதும், எனக்கு அம்மியிலே அரைச்சுக் கொடுப்பதும், தேங்காயை மட்டை உரிப்பதும் ''ஏண்டா உனக்கு தலையெழுத்து என்னால் முடியாதா? அப்பிடியே முடியாட்டாலும் சிவாமி யும் காத்தானும் இருக்காளே'' ன்னாலும் கேக்க மாட்டான். ''தில்லிக்குப் பாச்சா, தல்லிக்குப் பிட்டா. நான் இதெல்லாம் பண்ணாட்டா, இதெல்லாம் எனக்குத் தெரியும்னு உனக்கு எப்பம்மா தெரியறது?'' அப்பிடிம்பான். பிரிவுங்கறது கஷ்டமாத்தான் இருக்கு. அதுவும் ஒரே பிள்ளை. முன்னாலே யும் பின்னாலேயும் போயாச்சு. இந்தக் குடும்பத்துலே மட்டும் ஏன் தான் இப்படி ஒரு மரத்துக்கு ஓர் இலையாப் போச்சோ? இத்தனைக்கும் இவருக்குக் கூடப் பிறந்தவா இரண்டும் மூணுமா அஞ்சு பேர் இருக்கா. மச்சினமார்களுக் கும், நாத்தனார்களுக்கும் புத்ர சம்பத்துக்குக் குறைவில்லே.

எல்லாரும் சௌகரியமாத்தான் இருக்கா. அண்ணாவுக்கு தங்கள் பங்கை எழுதி வெச்சுட்டா, நமக்கு வயல்லேந்து வர்றது வயத்துக்கு போறும்னு புள்ளையை ஆத்தோடு நிறுத்தி வெச்சுக்க முடியல்லியே! படிப்பு, உத்யோகம்—எல்லாத்தையும்விட அவளோட போட்டி அதுலல்லாம் ஆசை விட வில்லையே! மச்சினன்மார் கெட்டிக்காராள். ஆனாலும் அவா பேரை விளங்க வெக்கற மாதிரி அவா குழந்தைகள் சுவாரஸ்யமா இல்லை. சரி, புத்தி எங்கேயோ குப்பை மேட்டைச் சுத்தறது, நம்ம விதி நம்மதுன்னு இல்லாமே.

''போவோமா?''

அவள் கேள்விக்கு அவர் தலையசைக்கா விட்டாலும்—பேசாமலிருந்தாலே அவள் அனுபவத்தில் அப்பிடித்தானே அர்த்தம்.

ஆனால் வீட்டை விட்டு வெளியூருக்குக் கிளம்பறதுங்கறது லேசா இருக்கா? வீட்டுக்குக் காவலாப் படுக்க, பக்கத்தாத்து தயவை நாடணும். அந்தப் புது ஜோடிக்கு கொண்டாட்டந்தான், மாமியார் காவலிலிருந்து இரண்டு மூணு ராவேனும் விடுபடலாமே! கொட்டிலில் மாட்டைப் பராமரிக்கணும்; புது மாடு புதுக் கன்னு. ஆனால் நல்ல பால். கள்ளிச் சொட்டாட்டம் கறந்து காய்ச்சி வீட்டுக்குக் காவல்காரா குடிக்கத்தான் போறா. குடிச்சுட்டுப் போறா. நெல்லு மூட்டையை எலி கடிக்காமல், மல்லிச் செடி வாடாமல், தண்ணி ஊத்திப்பாத்துண்டா சரி. இன்னும் ஏதோதோ இருக்கு; சொல்றதும், சமயத்துல சொல்ல மறந்து போறதும்.

எல்லாத்துக்கும் மேலே அவரோட உடம்புவாகு இருக்கு. மூல உபத்திரவம். மாடி ஏறினால் மேல்மூச்சு வாங்கறது. இப்போது சமீப காலமா ரத்தத்துல ஏதோ சக்கரையாம், உட்காந்தா குத்தம். நின்னா அபராதம்னு இருக்கு. இப்படியே இருந்தா வீடே ஜெயில், உடம்பே சிறைன்னு இன்னும் எத்தனை நாள் ஓட்ட இருக்கோ? போனாலும் போறதுன்னு துணிஞ்சவாளுக்குத் தான் சாமியும் பின்வாங்கறார்.

'போவோமா?' என்றாள்.

பஸ் ஸ்டாண்டிலிருந்து ஊருக்குள் நுழைகையிலேயே

கூட்டம் நெரிந்தது. பிளாட்பாரங்களில் வளையல், துணி, மிட்டாய், பட்டாணிக் கடைகள் போட்டு வியாபாரம் மும்முரமாய் நடக்கிறது. ஊரே 'ஜே ஜே கலகல' ன்னு எவ்வளவு நன்னாயிருக்கு! ஏற்கெனவே இங்கே வருடம் முந்நூத்தி அறுவத்தி அஞ்சு நாளும் உற்சவம். உற்சவருக்குத் தன் கிரகமே மறந்திருக்கும், எப்பவும் தெருவில்தானே வாசம். கூட கோடி நாமம் சேந்துண்டா கேக்கவும் வேணுமா? கிராமத்துலேயே உட்காந்துண்டிருந்தா இதெல்லாம் கிடைக்குமா?

நூறு ஆயுசு. சாமியே தோ வந்துட்டாரே! என் கையைப் புடிச்சுக்கோங்கோ. பரவாயில்லே. கூட்டத்தில நம்ப நாட்டுப்புறம். இன்னிக்கு என்ன நந்தி வாகனமா? வெள்ளிக் கவசமா? சாமிக்கு ஏன் இந்த அவசரம், திருவாசிகூட இல்லாமல்? சாமியா? அம்மனா? தாரை, தப்பட்டை, கொட்டு முழக்கு, யானைமேலே நகார், குதிரை...என்ன தான் இருந்தாலும் ராஜகுமாரி இல்லையா?

அட, ஒட்டகமும் வந்துருக்கே. இந்த அஷ்டக் கோணல்லே என்ன ஒய்யார நடையடி? கொண்டையலங்காரம் குட்டி நாத்தனார் போல கழுத்து ஒடிப்புடி! ஸ்படிகம் உடைந்தாற்போல் சிரிப்பு மணிகள் அவளினின்று தெறித்துத் தெருவில் ஓடின. அவள் சிரிப்பைக் கண்டு அவளே சற்று மிரண்டு போனாள். இதுபோல வயசு உதிர்ந்து சிரிச்சு எவ்வளவு நாளாச்சு! அம்பி, சின்னக் குழந்தையாய் அவள் முழங்காலில் ஏற்றம் ஆடினபின் இப்போத்தான்.

சாமி அவர்களைத் தாண்டியதும் கூட்டம் சற்று நெகிழ்ந்தது. கையில் விலாசத்தை வைத்தபடி வழியைக் கணித்துக் கொண்டே, "அட இதோ, தெருவும் வந்தூடுத்தே, கீழக் கோபுரத்துக்கு இவ்வளவு கிட்டவா? தினம் கோபுர தரிசனம், அம்பி கொடுத்து வெச்சவன்தான். நாப்பத்தஞ்சு, நாப்பத்தாறு...இதோ நாப்பத்தொம்போது. ஐயோ, மாடி ஏறணுமா? மெதுவா ஏறுங்கோ. கம்பியைப் புடிச்சுண்டு முன்னாலே போங்கோ, தடுக்கினாலும் நான் தாங்கிப்பேன். பரவாயில்லே—"

"ஐயா, ரூம் நம்பர் பதிமூணு எங்கே?"

"ஓ, காலேஜ் குமார் ரூமா, வாங்கோ வாங்கோ

அவரோட அப்பா அம்மா...? சரி, சரி! நீங்க வருவீங்கன்னு அவர் ஏற்கனவே சொல்லி இருக்காரு. டேய், யாரங்கே பையா. வந்தையாடா? வா. இவங்களை பதிமூணுக்கு அழைச்சிட்டுப் போ..."

"வணக்கம் ஐயா, வணக்கம் அம்மா. வாங்க. என் கையிலே ஒரு மூட்டையை கொடுங்க."

"அட ராமா. இன்னொரு மாடியா? அட பாவி!"

"என்னங்க?"

"சொல்லாம கொள்ளாம சோத்து மூட்டையெப் புடுங்கிண்டுட்டையே? ராவுக்கு வாயில் மண்ணைப் போட்டையா?"

ஏற்கனவே நறித்த பாகற்காய் போன்ற அவன் உருவம் இன்னும் வெட்கத்தில், பச்சாதாபத்தில், திடீர் பயத்தில் குறுகிற்று. "நான் என்னம்மா கண்டேன்? என்னை மன்னிச்சுக்கிடுங்க."

"சரி, சரி. வழியைக் காண்பி. உன்னைச் சொல்லி என்ன பண்றது? ஈஸ்வரா! பவுதான்யா தெருவுக்கு வந்தப்புறம் ஆசாரத்து மேலே ஆசை. கூழுக்கும் மீசைக்கும் இருக்கற ஒப்புறவுதான். பசி இப்பவே வயத்தெக் கிள்ளறது. சோத்து மேலே விபூதியைத் தெளிச்சுட்டு வாயிலே போட்டுக்க வேண்டியதுதான். சரி. இன்னிப்பொழுது இப்படி. அவர் வேணும்னா எனக்கும் சேர்த்துக் கூட நாலு காயத்ரி பண்ணட்டும்."

"அம்மா சாவியைத் தர்றீங்களா?"

இரு கதவுகளையும் விரியத் திறந்து, ஸ்விட்சைத் தட்டிவிட்டு அவர்களுக்கு வழிவிட்டு, பையன் வெளியே நின்றான்.

புது உலகத்துள் நுழைவது போல் இருந்தது. எங்கு பார்த்தாலும் புஸ்தகங்கள் வழிந்தன. கட்டிலில், மேஜையில், நாற்காலியில், ஸ்டூலில், ஒன்றிரண்டு பாய்மேல் கவிழ்த்துப் போட்டு தரையிலும் சிதறுண்டு கிடந்தன. கால்பட்டு, கண்ணில் ஒற்றிக் கொண்டாள். தன்னை அறியாமலேயே வரும் பழக்கம். இரண்டு புத்தகங்களை ஒதுக்கி அவரைக்

கட்டிலில் அமர வைத்தாள். சுற்றும் முற்றும் அவள் பார்வை வெள்ளோடிற்று. ஒரு ஜன்னல் கம்பியிலிருந்து இன்னொரு ஜன்னல் கம்பிக்கு ஓடிய கொடியில் ‘லாலிபீலி’ என்று துணிகள் தொங்கின. அழுக்கும், அவசரமும் கசங்க லுமாய், சொக்காய், பனியன், பாண்ட், வேஷ்டி—அம்பி லுங்கிகூட கட்டறானா?

எதிர் மூலையில் ஆள் உயரக் கண்ணாடி அடியில் ஒரு முக க்ஷவர செட்டு இன்னும் அலம்பாமல் மயிரோடு காய்ந்து, உலர்ந்து கிடந்தது. சீப்பில் அரை டஜன். அது என்ன வாரலோ? ஒரு தடடில எண்ணெய் தினுசில் நாலு சீசா, பவுடர், ஸ்னோ. சுவரோடு சுவராய் ஒட்டினாற்போலிருந்த ஒரு கதவைத் திறந்ததும் குபீரென பினாயில் நெடி முகத்தி லடித்தது. ‘ஓஹோ!’ சட்டென மூடினாள். இப்போ கால மெல்லாம் காலலம்பறதிலிருந்து தலைக்கு விட்டுக்கறதுவரை, கைக்கெட்டற தூரத்தில் இருப்பதுதானே பாஷன்! ராமா, ராமா, அங்கு பத்து நாள் வந்து தங்கற அம்பியாவே இல்லையே’ ஒரே ஊழலாயிருக்கே! ஆனால் அவாளையும் சொல்லிக் குத்தமில்லை. பிரும்மச்சாரிக் கட்டை, காலா காலத்தில் கால்கட்டுப் போடும்வரை கலைச்சுப் போடறதை எடுத்துவைக்க அம்மா. இதெல்லாம் ஒழுங்குபடுத்தி காணப் போறோமான்னு நினைக்கறப்பவே தலையைச் சுத்தறது, முருகா!

“கூப்பிட்டீங்களாம்மா? இதோ இருக்கேன்.. என்ன வேணும்?”

அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. “அட நீயும் முருகனா?”

“ஆமாம். நான்தாம்மா முருகன், நீங்க குரல் கொடுத்தா எங்கிருந்தாலும் வந்துடுவேன். இங்கேதான் சுத்திக்கிட்டு இருப்பேன். இப்ப என்ன வேணும்? சூடா நாயர் கடையி லேந்து இட்லி, காபி, பன்...தனியா கிளாஸ்லே தக்காளி சாம் பார். நல்லாயிருக்கும் அங்கே. காலையிலே குளிக்க வெந்நியா? தண்ணியா? வெந்நி ஒரு பக்கெட் எட்டணா, சூடா நானே போட்டுவேன், குமாரய்யா என்கிட்ட, பெசலா

உங்களை கவனிச்சுக்கும்படி சொல்லிட்டுப் போய் இருக்காரு, உங்களிடம் எந்தக் கணக்கும் கேக்கக்கூடாது. சொல்லக் கூடாது நீங்க சொன்னதை உடனே செய்யணும்னு உத்தரவு.

அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது.

“எனக்கு ஒண்ணும் வேண்டாம். எங்கேயாவது நல்ல மோர் கிடைக்குமா?”

“ஓ இந்தச் சந்து முனைலே ஒரு ஆயா சில்லுன்னு பானைலே விக்கறா. ஒரு கிளாஸ் இருவது பைசா. ரெண்டு வாங்கிவாரேன். கூஜாவுலே தண்ணியை மாத்திட்டு போறேன்”.

கீழே போனவன் இரவு பூராத் திரும்பி வரவில்லை. இளக்கிக்க மோரோ, நீரோ இல்லாமல் இறுகிப்போன தயிருஞ் சாதம் மாரில் வில்லுண்டையாய் அடைத்தது. அவருக்கு நல்ல வேளையாய் இட்லி மெதுவாய் இருந்தது. மிஞ்சின இரண்டைக் கொடுக்க அவனைத் தேடி, பிறகு வேறு வழியில்லாமல் வாசலுக்கு வெளியே, வாஷ் பேஸினடியில், குப்பைத் தொட்டியில் எறியும்படி ஆயிற்று. அதிலிருந்து கும்பி நாற்றம் குடலைக் குமட்டிற்று. ஸஹிக்காமல் மூக்கைப் பிடித்துக் கொண்டு உள்ளே ஓடிவந்துவிட்டாள்.

கோடிஅர்ச்சனைக்கு டிக்கட் அனாசாரம்தான் போலருக்கு. புண்ணியத்தை எப்படியெல்லாம் தேடறோம். புது இடமோ என்னவோ தெரியல்லே, ராப்பொழுது சரியாகத் தூக்கமில்லை. விடியற் காலம் கண்ணசந்துட்டு தூக்கிவாரிப் போட்டாற்போல் விழிப்பு வந்ததும் கூடவே ஜன்னலுக்கு வெளியே கோயில் ஸ்தூபி மேல் வெய்யிலும் வந்து விட்டது. அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம்.

உடம்பு முறித்துப் போட்டாற்போல வலித்தது. திறந்ததும் எதிரே முருகன் துடைப்பத்தோடு நின்றான். (காலையில் எழுந்ததும் நல்ல முகமுழி!)

“என்னடா முருகா, மோர் வாங்கப் போனவன் மாடு பிடிக்க சநதைக்கே போயிட்டையா?”

அவன் முகத்தில் அசடு வழிந்தது. கேலிப்பொம்மைக்குப் போல் முருகனுக்கு முகம் பூரா முழிதான். அவன் உதட்

டோரம் கோடைவாய் காய்ந்து இருந்தது.

"பெட்டியும் கூடையுமா ஒரு புதுப் பேரம் இறங்கிச்சு. கூடப் போய் கொண்டு வெச்சா ஒரு கால் ரூபா கிடைக்கும் அவசரம். மறந்து போச்சு. நெனப்பு வந்தப்போ நேரமா யிடுச்சு. ஆயா பானையைத் தூக்கிட்டா".

"சரி, சரி, வெந்நீரைப் போடு."

"இன்னிக்கு வெந்நீரில்லேம்மா."

"என்னடா வந்தவுடனே ஆனை பூனைன்னே. இப்போ வெந்நீரில்லேங்கறே?"

அவனிடம் துளிக்கூடப் பதட்டமே இல்லை. "நான் என்ன செய்ய? முதலாளி கரி வாங்கிப் போடல்லே. பத்த வைக்க எதிர் வீட்டில் எப்பவும் கங்கு வாங்கிப்போம். அவங்க கதவைப் பூட்டிக்கிட்டு எங்கேயோ ஊருக்குப் போயிட்டாங்க."

"அதனால எங்களுக்கு வெந்நீருக்கு அஸ்தமிச்சு போச் சாக்கும்! நீ கெட்டிக்காரன்தான். கையாலாகாட்டாலும் எல்லாத்துக்கும் பதில் சொல்லி வாயாலே இட்டு ரொப்பறே. என்ன திருதிருன்னு முழிக்கிறே? இங்கே பால் கிடைக்குமா?"

"பால் என்ன? காபி, டீ, பன்—"

"தக்காளி சாம்பார்"—என அவள் முடித்தாள். அவ ளுக்குச் சற்று அலுப்பாய்த்தானிருந்தது. "சரி, நீ இடத்தைக் காட்டு போறும். நான் வாங்கிக்கறேன்."

பாலுக்குத் தோஷமில்லே. கொண்டு வந்திருக்கற சுட்ட சப்பாத்தியை வெச்சிண்டு இன்னிப் பொழுதை ஓட்டலாம். நாளைக்கு அவுல்லே தண்ணி தெளிச்சு, ராத்திரி ஏதாவது பழம். அப்புறம் சுமங்கலிக்குத் தோஷமில்லே. "இன்னிக்கு நீங்க குளியல் இல்லாமே மடி மாத்திக்க வேண்டியதுதான். வேணும்னா கூட இன்னும் நாலு காயத்ரி."

அவர் நெற்றிப் பொட்டை ஒற்றை விரலால் தேய்த்துக் கொண்டு நின்றார். சில சமயங்களில் அவர் அப்படித்தான் மசமசவென்று ஆயிடறார்.

அப்போது பஞ்சக்கச்சம் கட்டக்கூட அவள்தான் ஒத்தாசை செய்ய வேண்டியிருக்கு. நின்னா நின்னபடி

உட்கார்ந்தால் உட்கார்ந்தபடி. நிலையைக் கலைக்காட்டா, அதிலேயே மலைச்சு நிப்பார். நான்தான் நேரம் பாத்து, வேளை பாத்துத் தபஸைக் கலைக்கணும். இப்பத்தான் போன மாசியில் மஞ்சக்காமாலை வந்தப்புறம் இப்படி ஆயிட்டார். முன்னாலே இவ்வளவு மோசமில்லை. இருந்தாலும் முன்னே யும், பின்னேயும் புதைச்ச பிறப்புகள் என்னைவிட இவரைத் தான் தாக்கி இருக்கு. ஆம்பிளைக்கு ஊமைக்காயம். ஆமாம், இவரைச் சாக்கிட்டு நானா? என்னைச் சாக்கிட்டு இவரா? இப்போதைக்கு என் தாலிபலத்தில்தான் அவர் கடிகாரம் ஓடிண்டிருக்குன்னு ஜோஸ்யனும், வைத்தியனும் சொல்றான். ஆனால் இந்த மஞ்சள் குங்குமமும் இவர் இல்லாமல் எனக் கேது? எது முன்னாலே? எது பின்னாலே?

இதுபோன்ற இன்பகரமான ஆச்சர்யங்கள் அவளை அழுத்துகையில் லேசான பயம், திடீர் ஆதங்கம் கண்டது. இப்பவே அவர் முகத்தை உடனே பார்க்கணும். இது என்ன அசட்டுப் பரிவு? ஆனால் முழுக்கவும் அசடோ? பால்யம் திரும்பிப் போச்சா? அவருக்கா? எனக்கா? கோவிலைச் சாக்கிட்டு இதென்ன தேனிலவா?

''என்னம்மா சிரிக்கிறீங்க?''

சிரிச்சேனா என்ன?

பாலை வாங்கிக் கொண்டு 'திடுதிடு'வென மாடியேறி வருகையில் பையன் கேள்வி கேட்ட படியண்டை அங்கே பதுங்கியிருந்த சிரிப்பு திரும்பவும் அவள் மேல் பாய்ந்து தோளில் தொத்திக் கொண்டது. முந்தானையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கையில் அவள் தோள்கள் குலுங் கின. உள்ளுக்குள் வெட்கம், பால் கொழுக்கட்டை போல் அற்புதமான உண்டை உருளையாய் தித்திப்புடன் கழுத்து நரம்பில், நெற்றிப் பொட்டில், வகிடு நடுவில் உள்ளோடி கிளுகிளுத்தது. கிழங்களின் கொம்மாளம்.

என்னை இப்போது கிழம் என்று யார் சொல்லுவா?

ஜன்னலுக்கு வெளியே வான் நீலத்தில் பிதுங்கிய ஸ்தூபி காலையின் மஞ்சள் வெய்யிலில் செம்பொற்சுடர்க் கொழுந்து விட்டெரிந்தது. அம்பி சரியாத்தான் ஆசைகாட்டி

இருக்கான். அந்தத் தகதகப்பில் அத்துடன் அவளே பிழம் பானாற்போல் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை பயங் கர ரோமாஞ்சலி. காலடியில் பூமி கிடுகிடுத்தது. அந்த பூகம்பம் அவளை உள்ளோடு அவள் சதையினின்று பிய்த் தெடுத்துக் கோயிலின் ஸ்தூபி உயரத்திற்குப் பந்தாடு கையில்—

'வேண்டாம், வேண்டாம். தாங்க முடியலை, நான் முன்னாலோ, அவர் பின்னாலோ அது எங்கள் கையில் இல்லை. இப்போ தோன்றுவது அம்பிகே, இந்தத் தருணத்தை மட்டும் என்னை விட்டுப் பிடுங்காமல் எனக்கே கொடுத்து விடு. தாலியோடு பவழமாய், என் தவமணியாய், யார் கண்ணுக்கும் படாமல், எனக்குக்கூடத் தெரிய வேண் டாம், கோர்த்து அணிஞ்சுக்கறேன்.'

காலடியில் பூமியின் நடுக்கம் மெதுவாய் அடங்கி படிப் படியாய் நிலை திரும்பி மேலே மெத்திகின்றது. ஸ்தூபி மேல் மஞ்சள் மாறுகையில் பச்சைக்கிளி அதன்மேல் பறந்துவந்து குந்துகிறது. ஏண்டிம்மா, நான் கேட்டதைக் கொடுக்க நீயே நேரவே வந்துட்டையா? பச்சைக் கிளி, கோயில் ஸ்தூபிமேல் இறங்கிவந்து தன் இறகுகளை அழகாய்க் கோதிக் கொண்டது. அர்ச்சகர்களின் பல குரல்களில் அர்ச்சனை இரைச்சல் கோயிலிலிருந்து அறைக்குள் மிதந்து வருகிறது.

அவரது உதடுகள் சப்தமற்ற அசைவில், உள்வந்த ஒலி யைத் தேவியின் நாம மந்திரத்தில் திரும்ப உருவாக்கி உதிர்க்கையில் அந்நந்நாமத்தின் அதனதன் நளினத்திற்கும் உக்ரத்திற்கும் ஏற்ப உதிர்ந்தது மலரா? குங்குமமா? மறு மலர். மறு குங்குமம். நாடி பூஜையில் நெஞ்சுக்கு நெஞ்சு நரம்புகளின் மறு மீட்டல்.

தங்கள் விழுப்பும், புள்ளையாண்டான் சேர்த்து வைத் திருந்த அழுக்குகளையும் ஒருவாறாக நனைத்து, கசக்கி முதுகு நிமிர்வதற்குள் உச்சி வெய்யில் பட்டை வீறிற்று. வெறும் வயிறு வலித்தது. அந்த சுட்ட சப்பாத்தியை இப்போ முறித்துப் போட்டுண்டால் தொப்புளைத் திருகும். ஒண்ணும் வேண்டாம். முதுகு வலி தீர படுத்துப் புரண்டால் போதும்.

இன்னிக்கு சாயந்தரமாவது அவரோடு கோயிலுக்குப் போகணும். சொர்க்கத்தினும் சுகமாய நித்திரைக்கும் விழிப்புக்கும் இடைவிளிம்பில் கண் சொக்கிற்று.

"என்னம்மா, தூங்குறீங்களா? தூங்குங்க; தூங்குங்க."

'பாபி!'—மனத்திற்குள் சபித்தாள். இனி தூக்கமேது?

எதிரே மசால் வடையைக் கடித்துக் கொண்டு முருகன் நின்றான்: "ஒண்ணு அஞ்சு பைசா. நாலணாக்கு வாங்கி வரட்டா. சூடா நல்ல மணம்மா—"

"என்னடா முருகா, சாப்பிட்டயா? என்ன சாப்பிட்டே?"

"முதலாளி வீட்டிலேந்து அவருக்கு சாப்பாடு வரும். மிச்சத்தைத் தின்னுப்புட்டு டிப்பனைக் கழுவறச்சே வயிறு என்ன ரொம்பிச்சோ அதான். குறைக்கு உங்களைப் போல ஙங்க கொடுக்கற துட்டோ, பண்டமோ."

"முருகா, உனக்கு கூடப்பொறந்தவா இருக்காளா?"

"அதுக்கென்ன குறைவு? முன்னால அண்ணன், அப்புறம் ஏழு அக்கா, அப்புறம் நான்."

அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "என்னடா, இந்த ரயில் வண்டிக்கு உங்க அண்ணன் டிரைவர். நீ கார்டா?"

அவன் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

"அப்பா என்ன பண்ணறா?"

"அப்பா வயசானவரு. அம்மா பாங்கிலே வாசல் கூட்டி, தண்ணி எடுத்து வைக்கிறா. அண்டையில ரெண்டு கடைக்கு சாணி தெளிக்கறா. ஏசண்ட் ஐயா வீட்டில் பத்து தேய்க்கறா. ஆனா அதுக்குத் தனி கூலி இல்லை. ஏசண்ட் ஐயா சொல்றாரு பாங்க் சம்பளத்தோடு சேர்ந்து போச்சாம். அண்ணன், நாயர் கடையிலே மேஜை துடைக்கறான். பூனைக் குட்டி ஒண்ணு வளருது. எங்க சம்பாதனை என்னத்துக்கு காணும்? இந்த புண்ணியத்தையும் குமாரய்யாதான் கட்டிக்கிட்டாரு."

"எந்தப் புண்ணியம்?"

"எங்கம்மாவுக்கு வேலை பண்ணிவச்சது அவருதான்."

அவள் களைப்பு பறந்தோடி விட்டது. எழுந்து நிமிர்ந்து

உட்கார்ந்தாள். அவள் மட்டுமல்ல, அவரும் முருகனை உன்னிப்பாய்க் கவனிப்பது தெரிந்தது.

“தானும் அப்பப்போ கொடுப்பாரு. ட்ரவுஜரும், சொக்காயும் புதுசா எடுத்துத் தரேன்னு சொல்லியிருக்காரு. அவரு சொன்னாலே கிடைச்ச மாதிரிதான்.”—பையன் தன் பேச்சிலேயே உற்சாகம் அடைந்தான். “‘டேய் முருவா’ன்னா, கூப்பிட்ட குரலுக்குப் பக்கத்தில் நிக்கணும் உள்ளே வந்ததும் சொக்காயைக் கயட்டி அடிப்பாரு. கொடியிலே மாட்டிக்கிட்டாலும் சரி, குறி தப்பி கீளே விளுந்தாலும் சரி, கொட்டின சில்லறையை கையாலே தொட மாட்டாரு. அது அப்பாலே முருவனுது. படா குஷி. ஆனா ‘டாம், தாட்பூட்’ என்னென்னவோ இங்கீஸுலே பொரிஞ்சு தள்ளுவாரு. ஏச ஏச எம்பாடு குசாலு. சில்லறை நிறைய கொட்டுமில்லே!”

“முருகா, நீ பெரிய ஆளுதான்.”

“என்னம்மா செய்ய? திட்டினாலும், என் முதுவுலே டமாரம் கொட்டினாலும், ஒட்டிக்கவா போவுது? அதுவும் அந்த அம்மா வந்துட்டா அவருக்கு இன்னும் குஷி கூடிடும், அவங்க எதிரே என்னைக் கம்பியிலே இறைச்சியாட்டம் கோத்துத் திருப்பித் திருப்பி வாட்டுவாரு. எனக்கென்ன? செவுத்தோரம் எலியாட்டம் பதுங்குவேன். ஆனால் ஓட மாட்டேன். ஒரு தபா அவங்க எதிரே பவுடர் டப்பாவை என்மேலே வீசி எறிஞ்சாரு பாருங்க...”

“அவங்க அவங்கன்னா எவங்கடா?”

“அதாம்மா ஏசண்ட் ஐயா மவள். டப்பியை அடிச்சாரா? என் கறுப்பு மூஞ்சியிலே மாவு அப்பி வெள்ளை கோத்துக்கிட்டு நின்னேன். வாசனை என்னைத் தூக்குது. ரெண்டு பேருமா சிரிச்சு சிரிச்சி, என்னையும் சிரிப்பு தொத்திடிச்சு. நான் சிரிக்க அவங்க சிரிக்க விலாவைப் புடிச்சிக்கிட்டு கட்டில்லே உருள்றாங்க. அப்புறம் அந்த அம்மாதான் என்ன குமார், உங்களுக்கு ஆனாலும் இவ்வளவு கோபம்’னு தன் மணிபர்சுலேருந்து ஒரு நோட்டை என் மேலே வீசி எறிஞ்சாங்க. மொடமொடன்னு அஞ்சு ரூவா காயிதம்

மூஞ்சிலே விழுந்தா நோவுமா? நோவட்டுமே! கண்ணுலே ஒத்திக்கிட்டு, நிஜார்ப் பையிலே சொருவிக்கிட்டேன். பாங்க் ஏசண்ட் மவளில்லே, எப்பவும் புத்தம் புதுசா நோட்டு. ஒரே மவ. விதவிதமா உடை, உடைக்கேத்த நடை. ஒடிச்சி ஒடிச்சி நடப்பாங்க. எனக்கு ஆச்சரியமா இருக்கும், இதென்ன இடுப்புப் பூட்டுக் கயண்டு போச்சா?''

வெளியே கானலில், பக்கத்து, எதிர் வீடு, கடை கூரைகள், மொட்டை மாடிகள் நடுங்கின.

''அந்த அம்மாவே, பெரிய தமாஸ் பேர்வழி. ஒரு வாட்டி திடீர்னு பாத்ரூமிலிருந்து குளிச்சிட்டு வராங்க பாருங்க, ஐயாவோட பாண்ட்டை மாட்டிக்கிட்டு ஐயாதானோன்னு அசந்துட்டேன், குமார். எனக்கு இது நன்னாயிருக்கோ? அவங்களும் கிட்டக்கிட்ட ஐயா காதுக்கு வருவாங்க. திடீர் திடீர்னு என்ன 'கிசுமுசு' பேசுவாங்களோ? என்ன சிரிப்பாங்களோ?''

அவள் மண்டையுள் சுறீல் சுறீலென இரு மின்னல்கள் வெட்டின. இரு மின்னலா? அல்லது ஒரு மின்னலே கொடி பிரிந்தா? வெற்றி நடுவுள் அதன் நீலப் பேரொளி மின்னி மறைகையில் மண்டை தீய்ந்தது. அவரை ஓரக்கண்ணால் திகிலுடன் நோக்கினாள். அவர் நெற்றிப் பொட்டை ஒற்றை விரலால் தேய்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவர் நெற்றியில் நாலு தண்டவாளங்கள் புடைத்து ஓடின.

''ஒருநாள் ராத்ரி ஐயாவுக்குக் காத்திருந்து வாசற்படியிலேயே உறங்கிட்டேன். விலாவுலே பூட்ஸ்கால் செவுட்டி முளிச்சுகிட்டேன். ஐயாவும் அம்மாவும் நிக்கிறாங்க. நடுராவா, விடிகாலையா எனக்குத் தூக்க மயக்கம் நிச்சயமா வல்லே. 'மேய் முழுவா, நீ முழுவன்தானாடா? தொலைஞ்சு போச்சடா ஷாவி, மழு ஷாவி—'''

''நிறுத்து, நிறுத்து'' எனக் கூவினாள். அவள் காதைப் பொத்திக் கொண்டாளாயினும் அவன் குரல் கிரக்கமற்று செவிப்பறையில் நகார் அடித்துக் கொண்டே இருந்தது. வேகமெடுத்துவிட்ட சொல் 'சட் ப்ரேக்கு' கேட்குமா?

''அந்தம்மா, இவருக்கு மேலே தள்ளாடறாங்க, அதுவே ஒரு சிரிப்பு. ரூமைத் துறந்து விட்டேன். 'முழுவா, ரெண்டு கப் ஷோடா நாயர் கடை பெசல் டீ இந்தா, மிச்சத்தை நீயே வெச்சுக்க—'

''துப்பட்டியாட்டம் கெட்டியா பத்து ரூவாத்தாள். அவர் சொன்னாலும் எனக்கே ஜரிக்காது. ஆனால் டீயைக் கொணாரத்துக்குள்ளே கதவு மூடியாச்சு. தட்டுத் தட்டுன்னு தட்டறேன். ஊ-ஹூம். பேச்சு மூச்சு இல்லே. ஒண்ணைக் குடிச்சேன். ஒண்ணைக் கொட்டினேன். சூடு ஆறிப் போவுதில்லே! வாசப்படியிலேயே நாயாட்டம் முடங் கிட்டேன். முளிப்பு வந்தப்போ கதவு திறந்தாச்சு. எப்போ திறந்தது எப்போ போனாங்க தெரியாது.''

ஜன்னலுக்கு வெளியே கோயில் ஸ்தூபிமேல் ஒரு பருந்து பறந்து வந்து அமர்ந்தது அதன் காலுக்கிடுக்கில் ஏதோ—

''அம்மா! அம்மா! ஐயாவைப் பாருங்களேன்—!''

முருகன் விழிகள் திகில் வட்டங்களாயின. அவர் உடம்பு கிடுகிடென ஆடிற்று. வாயோரம் எச்சில் வழிந்தது. பாய்ந்தோடிப் போய் அவரைத் தாங்கிக் கொண்டாள்.

''முருகா, வண்டி கொண்டா—''

முருகன் கீழே ஓடினான். அவரைக் கட்டிலில் மெது வாய்ச் சாய்த்துவிட்டு ஒரு மாத்திரையைத் தண்ணீருடன் உள் செலுத்தியதும் நடுக்கம் சற்று அடங்கிற்று. ஆயினும் அவ்விழிகளின் வெறிச்சை அவளால் ஸஹிக்க முடியவில்லை. பறித்துப் பறித்து ஒட்ட மொட்டையான கறிவேப்பிலை மரம்.

தொடுத்த மலர் சருகாய்க் கருகி உதிர்ந்து காற்றில் ஆடும் வெற்று நார்.

ஆற்று மணலில் அமாவாசை நள்ளிருள். அக்ரஹாரத்தில் ராப்பிணம் இன்னும் எடுக்காமல் தெருவும் கோவிலும் உச்சி வெய்யில் பட்டினி. பயிர் அறுத்தபின் நடுப் பகலில் வயலில் தீய்ந்து நிற்கும் முளைகள்.

காலையில் குவளை பொங்கப் பால் தந்துவிட்டு

மந்தைக்குப் போன தாய் திரும்பாமல் காலிக் கொட்டிலில் ராப்பூரா கன்றின் அலறல்.

அவசர அவசரமாய்ப் பெட்டியுள் துணிமணிகளை அள்ளிப்போட்டு மூடி, மேல் உட்கார்ந்து அழுத்திமூடினாள்.

"அம்மா, வண்டி வாசல்லே நிக்கிது. டாக்டர் வீட்டுக்குப் பெட்டி ஏதுக்கம்மா? ஐயாவை நான் பிடிச்சுக்கவா?"

"தொடாதே!"—சீறினாள். குழந்தை மிரண்டு பின்னிடைந்தான். அதுவும் தெரியறது. யார் மேல் தப்பு சொல்றது? நம்மேல்தான். வாசப்படி தாண்ட நாம் லாயக்கில்லை. அதுவும் தெரியறது. ஆத்துலே துளசி மாடத்துக்கு வெக்கற அகல் விளக்கு, தோய்க்கற கல்லுக்கடியிலே, அப்படியே வடிச்ச கஞ்சியோடு பருப்பும் நெய்யும் பளபளக்க வெங்கலாப்பையில் காக்கைக்கு வெக்கற சோத்துக்கு மேல் புண்ணியம் இங்கே என்ன இருக்கு? கடப்பைக் கல்லில் சோத்துக் கரண்டியின் தட்டலே மணியோசை, "கா! கா!" குரல் கொடுப்பே வேத மந்தரம். முதல் "கா" வுக்கே ரக்கை நிழல் கடப்பைக் கல்லில் தட்டுமே? எல்லாம் தெரியறது. தெரிஞ்சு என்ன பயன்? கொள்ளி போடன்னு எதிர்பார்த்துக் கொள்ளியையே பெத்துட்டேன். அதனால் இல்லை, எப்பவுமே எனக்கு இவர்தான்—

அவரைத் தாங்கிக் கொண்டு அவள் இறங்கினாள். அவர் கண்களில் வெறிச்சு, வாயில் சிரிப்பு. ஆனால் வாய்விட்ட சிரிப்பல்ல. அசட்டுச் சிரிப்பு. நல்ல வேளை இப்படியே இருந்தாலும் சமாளிச்சுப்பேன்.

"அப்பா, பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டப்பா—"

ஊருக்கு மேல் கோவில் ஸ்தூபி ஓங்கி] நின்றது. நீல வானத்தைக் கழுவேற்றிக் கொண்டு அதில் இப்போது கழுகுமில்லை; கிளியுமில்லை.

இத்தனையும் பாத்துண்டு, கேட்டுண்டு தானே இருக்கே? எங்களை வேடிக்கை பார்க்கணும்னுதானே இங்கே இழுத்துண்டு வந்தே? ஏண்டி, நீயே இருக்கையா, இன்லையா?

"என்னம்மா, ஏதாச்சும் சொன்னீங்களா?" என்று

ரிக்ஷாக்காரன் கேட்டான்.

''பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டு, சுருக்க ஓட்டு—''

''அம்மா அம்மா மறந்துட்டீங்களா!''—பின்னால்முருகன் கையை உயரத் தூக்கிக் கொண்டே ஓடி வந்தான். ஆனால் அவனால் வண்டியைப் பிடிக்க முடியவில்லை. வண்டி வேக மெடுத்து விட்டது.

முருகன் வீசியெறிந்தான். ரிக்ஷாவுள், காலடியில், 'கிண்'ணென்று தெறித்தபடி விழுந்தது. வெய்யிலில் அதன் பித்தளை பளபளத்தது.

சாவி. வண்டி பறந்தது.

முருகா, என் பிள்ளை அறையைத் திறக்கக் கொண்டு வந்தேன். என்னத்தையோ திறந்துட்டையேடா!

கைகளில் முகம் புதைந்தது. அவள் தோள்கள் குலுங் கின. அதற்கு மேல் தாங்க முடியவில்லை. அதுவரைதான் சக்தி.

அவர் கை, அவள் முதுகைத் தடவி, அவள் தோளை லேசாய் அணைத்துக் கொள்வதை உணர்ந்தாள்.

அவளுள் அப்போது நேர்ந்த கரையுடைப்பு அவளைத் தன்னோடு இழுத்துச் செல்கையில் தலைநிமிரவே பயமா யிருந்தது.

ஆனால்—? அப்போ?? —அப்படின்னா??? நீ இருக் கையா????

# தரிசனம்

எனக்கு வயது பன்னிரண்டிலேயே கன்யாகுமரிமேல் காணாமலே காதல் கொண்டுவிட்டேன். நான் குமரன். அவள் குமரி. முதன் முதலில் காதல் வரும் வயதில் வரும் போதே மரங்களைச் சாய்க்கும் புயல் போன்ற காதல்.

காரணங்கள், எங்கள் குடும்பம் மூன்று தலைமுறை களாகவே சென்னைவாசிகள். எங்களுக்கு வெளிப்பிரயாணத் திற்கு வாய்ப்பு இல்லை. வசதியுமில்லை. வீட்டிலிருந்து வேலைக்கு. (வீட்டிற்குப் பெரியவர்களைச் சொல்கிறேன்.) மாலை, வேலையிலிருந்து வீடு. சனி, ஞாயிறு மற்றும் வீடு முறைகளில் கடற்கரைக் காற்று.

அந்நாளில் கடற்கரையில் இவ்வளவு கூட்டமுமில்லை. கடுகு தெளித்தாற்போல் தூரத்துக்கு தூரம் கறுப்பும், சிவப்பும், வெள்ளையுமாய்ப் புள்ளிகள் அசையும், நகரும், ஆடும்.

உருளைக்கிழங்கு மஸாலா கறியும். வெங்காய சாம்பாரும் சம்பள வாரத்தில் சமைத்துவிட்டால், குழம்பைத் தாண்ட மாட்டோம். மோருக்கு லீவு. அன்று பூரா சாம்பார் சாதத்தை வெட்டுவோம். பள்ளியில், மதியத்தில் அலுமினியத்தில் (எவர்சில்வராமே...! எப்படி இருக்கும்?) சம்புடத்தைத் திறந் ததும், குழம்பு சாதத்தில் இரண்டு உருளைக்கிழங்குப் பத்தை கள் புதைந்திருந்தால் உவகைக்கு கேட்கவே வேண்டாம். நாக்கு சுரக்கையில் தாடை நரம்புகள் இழுக்கும். 'சுறீ' லெடுக்கும்.

அன்று உருளைக்கிழங்கின் விலை வீசை 5 அணா.-6அணா.

முழுக் கத்திரிக்காயை வாயைப் பிளந்து, காரப்பொடியைத் திணித்துப் பொன்னிறத்தில் எண்ணெயில் வதக்கி, மைசூர் ரசமும் வைத்துவிட்டால்—ஐயோ! ஐயோ! சொர்க்கம். இல்லை, எனக்கு சொர்க்கம் வேண்டாம். ரசமே போறும்.

எங்களை உருவாக்கிய அந்நாளையச் சமையல்கள், ருசிகள், பசிகள், நடப்பு, பெரியோர் சிறியோர், தாரதம்மியம், மட்டு மரியாதை, பேச்சு, அடக்கம், ஒளிவு, இலைதழை காய், பூமறைவு, ஆசைகள். கோபங்கள், அன்புகள், மயக்கங்கள் எல்லாமே வேறு.

(காலத்தோடு ஒத்துப் போகாது. இந்தக் கிழங்கள்; என்றுமே இதுகளுக்கு 'அந்தநாளும் வந்திடாதோ?' பாட்டுத் தான்!)

பொறி கண்டது பொரிந்து விடாது. கொழுந்து விட்டெரியக் கூசினாலும் தழல் கனிந்து தனக்கே ஒளிந்து வளர்கையில்.

எனக்கு எப்படித் தெரியும்?

இந்த நாள்தான், ஆண் பெண் அடங்கலாக எல்லாம் கெட்ட வெளிச்சம். நெஞ்சத்தின் ஈரத்தையே சுவர்க்கும் வெளிச்சத்தின் வெய்யிலாப் போச்சே!

"காதலா? கலியா? முளைச்சு மூணு இலை விடல்லே. பிஞ்சிலே பழுத்த வெம்பல், அதுவும் யார் மேல்? அபராதம்! அபராதம்!! க்ஷமிஷ்வா க்ஷமிக்கணும். முன்னால் வாயை அலம்பு. கை, கால் சுத்தி பண்ணிண்டு விபூதியிடு, உதிரி வித்தை வேண்டாம். குழைச்சு பட்டை பட்டையா, சுவாமி படத்துக்குத் தோப்புக்கரணம் போடு— இரு. விளக்கை ஏத்தறேன். அம்பாளை மன்னிப்புக் கேள். ஜகன் மாதா! பத்து நாளைக்குப் பயலுக்கு ராச்சோறில் மண்ணை வெட்டிக்கொட்டு. குடும்பத்தின் பேரைக் கெடுக்க எங்கிருந்துடா முளைச்சே? உனக்காக நானும் பிராயச்சித்தம் 108 காயத்ரி பண்றேன்-வேளை போறாத நேரத்தில் பாவி வேலை வைக்கிறான். அடியே வண்டைக்காய் வாங்கிண்டு வந்திருக்கேன். மறக்காமல் குழம்பில் வதக்கிப்போடு! போடறையா?

போடறேன்னு சொல்லேன்! வாயில் கொழுக்கட்டையா அட்டைச்சிருக்கு?''

நல்ல வேளை!

இப்படியெல்லாம் கேட்பீர்கள்...மண்ணில் கழுத்து வரை புதைத்துத் தலையை இடறுவீர்கள் என்று தெரிந்துதான் என் காதலை உங்களிடம் தெரிவிக்கவில்லை. ஆமாம்,கேட்கிறேன். காதலெனும் பேருக்கே இந்த பூச்சாண்டியா? அப்பா, அம்மா தாத்தா, பாட்டி எல்லாம் நீங்கள் இரவு உங்களைக் காலைப் பிடிக்கையில் சொன்ன கதை தானே!

'நாளைக்கு நாளைக்கு' என்று நந்தனுக்குக் கண்டது என்ன? மூன்றே நாளில் கண்ணப்பன் முத்தி கண்டது என்ன? அவர்களுக்கு நேர்ந்தது எனக்கு நேரக் கூடாதா?

''அவாள் எல்லோரும் அவதார புருஷாள். லோகத்துக்கு காண்பிக்க வந்தவாள் (என்னத்தை?) அறுவத்தி மூணு நாயன்மார்கள் நீ கேவலம்—சீ எதிர்த்தா பேசுறே? மூடு வாயை. எழுந்திருந்தேன்னா விசிறிக் கட்டை பிஞ்சுடும்.''

அதனால்தான் உங்களைக் கேட்கவில்லை.

ஆனால், அப்போ எல்லாமே வெறும் கதை தானோ? கன்யாகுமரிக்குப் போய் வந்த உறவினர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், இரவு வேளைக்கு வாசல் திண்ணையில் ஒதுங்கிய பைராகிகள், யாத்ரிகள், கதைசொல்லி, மஹிமை சொல்லி, விசிறி விட்ட வியப்பு, சென்னைக் கடற்கரையின் மாலைக் காற்றில் அந்திவானத்தின் வர்ணஜாலங்களில், காலை வேலையில் கடல் விளிம்பில், சூரியனின் உதய வாயில், கரையோரம் ஓடத்தின் நிழலில், கட்டைமரத்தின் மேல் சாய்ந்தபடி சிந்தனையில் கொழுந்து விட்டு, கண்டவர் கையோடு கொண்டுவந்த குங்குமம் கிளிஞ்சல் மாலை, சாய மண் என் கனவிற்கு கலவைகூட்டி, ஏக்கமாய்க் கட்டி, அதுவே அதிலேயே, அது வாய்ப்பந்தல் படர்ந்தது.

சூர்ய உதயம், அஸ்தமனம் இரண்டுமே குமரியில் காணலாமாமே!

அவள் மூக்குத்தியே மணிக்கூண்டாமே!

கன்யாகுமரி.

பேரிலேயே, பேருக்குள்ளேயே ஏதேதோ நீரோட்டங்கள் விளையாடுகின்றன. நெஞ்சை மீட்டுகின்றன.

அவள் குமரி! நான் குமரன்.

கடலோரம் கோவில், பாறை, பாறைகள், நெஞ்சிலும் பாறைகள், பாறைகளின் மேல் அலைகளின் மோதல்கள், சொல்லுள் அடைபடாது, என் கற்பனைக்கே சொந்தமான கதைகள், கவிதைகள், கதையின் நிழல்கள், நிழல்களின் காதைகள், கமகமப்புகள், கமகங்கள், இம்சைகள் சொல்ல முடிந்தவை, முடியாதவை, பேச்சில் முடிந்தவை, முடிந்தாலும் பங்கிட்டுக் கொள்ள மனம் வராதவை, சொல்லச் சொல்ல— இல்லை இல்லை தலை சுத்தறது.

சுற்றட்டும். மாரடைக்கட்டும். வெடிக்கவே வெடிக் கட்டுமே! உயிர் போகாதவரை மார்புள் விண்விண் கன்யா குமரி. கடன்காரி.

இதற்காகத்தான். இதைத்தான் 'நெருப்பில் கை வைக் காதே' என்று பெரியவர்கள் கோபமெனும் பேரில் செய்த எச்சரிக்கையா?

ஆனால் என்னிஷ்டத்தில் என்ன இருக்கிறது?

மொட்டை மாடிமேல் கவிந்த வானத்தில் நக்ஷத்திரங்கள் என்னிடம் ஏதோ சொல்லத் தவித்து மூச்சு விடுகின்றன. இங்கு மட்டுமல்ல. இதே சமயத்தில் கன்யாகுமரியையும் கவிந்து கொண்டிருக்கிறோம் என்றா?

அங்கு மாரிக்காலத்தில் மழை மேகங்கள் கடல்மேல், ஜல ரஸம் ஓட, லொங்கு லொங்கென்று குடம் குடமாய், பழம் பழமாய் நாங்கள் தொங்குவதை நீ பார்க்க வேண்டாமா? அவள் அபிஷேக சுந்தரி கடல் நீரில் குளிக்கும் கன்யாகுமரி.

சப்தரிஷி மண்டலம் நெஞ்சில் ஏர் பிடித்து உழுகிறது; புவனமே ஒரு ரஸகுண்டு. நம் அவ்வப்போதைய எண்ணங் களின், ஏக்கங்களின் வர்ணங்களை, சாயங்களை உள்ளுக்கு வாங்கிக் கொண்டு ஆசைகாட்டிக் கொண்டு மினுமினுக்கிறது.

இரவு நேரத்தில் என்ன வெளிச்சம் எரிகிறது? சொக்கப்

பானையா? இவ்வளவு பெரிய திருஷ்டி கழிப்பா? பிணமா? இத்தனை விதங்களில் நானா?

ஏன்?

ஏன்? ஏன்? ஏன்???

எதிர்வீட்டிலிருந்து வீணையில் மோகனம் கிளம்பி நெஞ்சில் கொக்கி மாட்டியிருக்கிறது.

மோகனமா? கல்யாணியா? மோகன கல்யாணியா?

குங்கிலியச்சுடர் போன்று 'குபுக் குபுக்'—ஸ்வரப்பந்துகள் குபீரிடுகின்றன, குவிகின்றன, குலைகின்றன, குழைகின்றன, குமைகின்றன.

இந்த ராகமுமில்லை, அந்த ராகமுமில்லை, எந்த ராகமுமில்லை, ஆத்மாவின் ராகம் ஒரே ராகம்; அவரவர் உடன் கொண்டுவரும் அவரவரின் சொந்த ராகம். பிறவிக்காட்டில் மாட்டிக்கொண்டு திக்குத் தெரியாமல் எதிர்க்குரல் தேடி அலையும் அபயக் குரல்.

எதிர்வீட்டில் ஒரு பெண். வயது முப்பத்திரண்டாம். இன்னும் கல்யாணம் ஆகவில்லையாம். இங்கு நாங்கள் குடி வந்ததிலிருந்து நான் இன்னும் அவளை முகம் பார்த்ததில்லை. ஜன்னல் பக்கம் நிழல், மாடியில் துணி உலர்த்தவோ, கூந்தலை ஆற்றவோ, மாலை வேளையில் காற்று வாங்கவோ—ஊஹூம்.

அவளை அவள் பயிலும் வீணையின் இசையாய்த் தான் அறிவேன். தன் ஆவியின் கொந்தளிப்பை வீணையில் ஆஹுதியாய்ச் சொரிகின்றாள். அவள் தாபத்தின் தஹிப்புக்கு வீணை வெறும் வடிகாலாய் இல்லை. இன்று இவள் வாசிப்பைக் கேட்கையில் வீணை இவள் தலைவிதி. ''என் வேளை வரும்போது என் சிதையில் என் வீணையை என் தலைவிதியை என்னோடு எரித்துவிடுங்கள், என் வேளையே! எப்போது வருவாய்?'' என்கிற மாதிரி.

தன் கை பிடிக்க உகந்த புருஷனுக்குக் காத்திருந்து காத்திருந்து அவன் வராமல் கடைசியில் கல்யாணம் என்று ஆனால் போதும் என்கிற நிலைமைக்கு வந்தாகிவிட்டது. கன்யா—

—இனி குமரி இல்லை.

நாட்டில் பெண்களுக்குக் குறைவில்லை. பிள்ளைகளுக்கும் குறைவில்லை, ஆனால் தாலிமுடி ஏன் விழுவதில்லை?

ஏன்? 'ஏன்'களுக்கு முடிவே கிடையாதா?

என்றுமில்லாத் திருநாளாய் இன்றிரவு வெற்றிலை போட்டுக் கொள்ள ஆசை எழுந்தது. செல்லத்தைத் திறந்து ஒரு வெற்றிலையை எடுத்துத் தொடையில் துடைத்தேன். நரம்புகளில் மஞ்சள் படர்ந்துவிட்டது. இன்று காலைதான் இளசு கண்டு மயங்கி, இளசுக்காகவே வாங்கினது.

ஆமாம். நான் என்ன வாழ்ந்தேன்? முதன் முதலாய் என்னைக் கன்னிக் காதல் சுட்ட வாய்மையில், வீட்டைவிட்டு ஓடி நடந்தே கன்யாகுமரியை அடைவேன் என்று நினைத்த மூர்க்கமெல்லாம் எங்கே போயிற்று? அறுபத்திநான்காவது நாயனாராக ஆவதற்குப்பட்ட ஆசையெல்லாம் என்னவாயிற்று?

அப்பா காலமாகி, ஹேமா வந்து, ஒண்ணு, ரெண்டு—எண்ணிக்கோ—மூணு, நாலு, அஞ்சு—குடும்பம் பெருகி, வீடு குறுகி, அம்மா காலமாகி, (அவளுடன் போனது என்னென்னவோ) வீடு இரண்டாகி-குடும்பம் என்றால் எத்தனையோ சோதனைகள், மேடுபள்ளங்கள் (என் முகத்தில் கூடத்தான், முக்கியமாய் முகத்தில்) தலை நரைத்து, புருவம் நரைத்து ("சொட்டுக் காப்பி குடிச்சுக் குடிச்சே முடாக்குடி ஆயாச்சு. மாசக் கடைசியில் காப்பிப் பொடி உதைச்சால் வீடு ஒரே ரகளை! கட்டுப்படியும் ஆகல்லே. ஏன் உதைக்காது"); கரடிப் புருவங்களின் கீழ் விழிகள் அனற்பிழம்பு, ("அதென்ன எப்போப் பார்த்தாலும் விறைப்பு முழி? நாட்டுப் பெண்ணாய் இந்த வீட்டுக்கு வந்தது மொதக் கொண்டு பாக்கறேன். ஒரு நாள்கூட சுமுகம் கிடையாதா?") பசி விழிகள்.

—இன்னமும் கன்யாகுமரியைக் காணப் போகிறேன்.

கடைசியில்—காத்திருந்த தவம் பலித்ததம்மா என்று சொல்லவா?

ஒரு நாள் நான் குடும்பமாய் மூட்டை முடிச்சுடன் (ஒரு ஸ்டெளவ், ஈயம் முழுக்க இலாத பாத்திரங்கள் இரண்டு,

காப்பிப் பொடி, அஞ்சறைப் பெட்டி) ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருப்பதைக் காண்கிறேன். இது எப்படி நேர்ந்த தென்றுகூட எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. உத்யோகச் சலுகை ஏதோ கிடைத்தது.

மதுரை தாண்டும் வரைகூட திகைப்பு சரியாய்த் தெளிய வில்லை. அவளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன் என்பதை நம்ப முடியவில்லை.

மதுரையில் மீனாக்ஷி.

தென்காசியில் லோகநாயகி (ஆமாம். இனிமேல் வட காசிக்குப் போகப் போறேனாக்கும்!) திருநெல்வேலியில்— மறந்து போச்சு.

நாகர்கோயில்...

கன்யாகுமரியில் கன்யாகுமரி.

விடுதியில் மூட்டை முடிச்சுகளை எறிந்துவிட்டு, கடலில் ஸ்னானம் செய்துவிட்டு, முன்னால் அவளையும் குழந்தை களையும் போகவிட்டு நான் சற்றுப் பின் தங்குகிறேன். நெருங்க நெருங்க ஏன் ஒரு பயம்? திரும்பி விடலாமா?

இனிமேலா? நீ மட்டுமா? நடக்கிற காரியமா? அதற்குத் துணிச்சல் இருக்கிறதா? திரும்புதல் என்பதே கிடையாது. தெரியுமோன்னோ? திரும்புதல், மன்னிப்பு சென்று போனவை பரிகாரம், விடுதலை-ஏன், சொற்களே மாயமான்கள், மனிதன் துணை தேட அமைத்துக் கொண்ட கருவி. அவைகளின் அடிப்படை பயத்தின் மேல் மனித சுவர்க்கமே தாங்கி நிற்கிறது; பொய் மேல் எழுப்பிய பொய்க் கட்டிடம்.

காத்திருந்த வயது இத்தனை கழிந்தது கணக்குத் தெரிய வில்லை. கோயில் வெளி வாசல் கடந்து ப்ராகாரம் தாண்டி, உள் வாசல் புகுந்து உள் ப்ராகாரத்தில் பாதி சுற்றி சன்னிதானத்தில் நுழைந்து, அவளுடன் நேருக்கு நேர் ஆவதற்கு இருக்கும் இந்த சொற்ப நேரத்துக்கு வந்திருக்கும் கனத்தின் அழுத்தம், உள் பரபரப்புத்தான் தாங்க முடிய வில்லை. ஒரு கையால் மார்பை அழுத்திக் கொள்கிறேன்.

திரும்பி விடலாமா?

யாரோ, எங்கோ சிரிக்கும் சப்தம்,

சன்னதியில் மின்விளக்கு கிடையாது. கர்ப்பக்ருஹத்தின் வாசல் ப்ரபை பூரா அடுக்கடுக்காய் அகல்ஜோதிகள் எரிகின்றன. அசப்பில், ஹோமகுண்டத்தின் நடுவே அவள் நிற்கிறாள்.

அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது.

இருளில் நெருங்கிய வெண்கல விளக்குகளின் சுடர் தரும் ஒளி, நிழலாட்டத்தின் செதுக்கலில் அவள் வெளிப்படுகிறாள்.

கற்பனையில் ஆவாஹனம் ஆகி, கவிதை (வெறும் சொற்கட்டுகள் அல்ல, இதயத்தின் அடிவார எழுச்சிகள்) ஊட்டி, அலங்கரித்து, உள் பார்வை காத்த உருவை, கேவலம் ஐம்புலன்களும் சேர்ந்த வெளிப்படையில் காண நேர்கையில் இத்தனை நாளையக் கனவு அந்தக் கணமே சிதைந்து போகும் துக்கத்தைக் காட்டிலும் கொடுமை வேறு இல்லை—வேண்டாம்.

ஆனால் இங்கோ வேறு. புழு வெடித்துத் தட்டாரப் பூச்சி கிளம்புவது போல், கருப்பையில் பொத்திப் போற்றிச் சுமந்து வைத்திருந்த சிசு வெளியாகி, முதன் முதலாய்த் தாயின் கண்ணுக்குப் படுவது போல், நனவின் பொலிவு கனவையும் மீறிக் காட்டுகையில்—இந்த அனுபவத்தை விவரிப்பது எங்ஙனம்?

கண்டேன், உடைந்தேன். எனக்குக் கண்ட பயமே இது தானோ? உன் விருப்பமும் இதுதானோ? உன் விருப்பத்தைத் தான் என் பயமாய்க் கண்டேனோ? ஏதேனும் தைரியம் சொல்லேண்டி—

சிற்பியின் செதுக்கல் முடிந்து முழுமை கண்டதும் அவனையே காலால் உதைத்து தள்ளிக் கொக்கரிக்கும் சௌந்தர்யம். கிணறு வெட்டப் பூதம். கல்லைச் செதுக்கிக் கன்யாகுமரி, கல்மேல் உளிபிடித்த கையை நடத்தியவளே நீதானோ? ஸஹிக்க முடியாத சௌந்தர்யம் என்றால் அது இதுதான்.

போதும் போதும் தேவி, உன் அழகைக் காண எனக்கு அருகதை ஏது என்று கண்ணைப் பொத்திக் கொண்டால்,

உள் இமையில் அவள் ஏற்கெனவே நின்று சிரிக்கிறாள்.

இத்தனை நாள் காத்திருந்து என்னைப் பார்க்கத்தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்!

அபிஷேகம் அந்த முடியிலிருந்து அந்த உடலில் வழிகையில் அந்தந்த திரவியத்தில் பளபளக்கிறாள், ஜ்வலிக்கிறாள், மினுமினுக்கிறாள், மிளிர்கிறாள், ஒளிர்கிறாள், அங்கங்கள் பிதுங்குகிறாள், உள்ளத்தைச் சூறையாடுகிறாள். பாலருவி முகத்தை வெளிச்சமாக்கி, தோள்களில் வழிந்து, மார்க்குலையில் இழிந்து அடிவயிற்றில் அலைபிரிந்து, சொரிந்து பாதங்களை நோக்கி இறங்குகிறது. குருக்கள் பரபரவெனத் தண்ணீரைச் சொம்பு சொம்பாய்க் கொட்டி அலம்பி, சட்டென சிலையின் ஒரு கையில் ருத்ராக்ஷ மாலையும் மறு கையில் கமண்டலத்தையும் கொடுத்து விட்டார். ஆ, என்ன நேர்ந்து விட்டது? தோற்றம் சட்டென மாறி விட்டது.

தேவி திடீரென நீலச் சுடராகி விட்ட விந்தையை என்ன சொல்ல? அபிடேகப் போதின் வெகுளியும் சிரிப்பும் எங்கே?

உடுக்கையும் மாட்டியாகி விட்டது.

கன்யாகுமரி காஷாயினி.

பதினாறு வயது பச்சிளம் பாலா (இப்போதுதான் அரும்பு கட்டிய ஸ்தனங்கள்) திடீரெனப் பழுத்த தபஸ்வினி. அவள் தவத்தில் அவள் காய்ந்து கணகணக்கிறாள். முகத்தில் தவத்தின் கடுப்பு.

சீ—கிட்ட வராதே—என்னை யாரென்று நினைத்தாய்? நான் சிவசொத்து.

வியப்பில் ஆழ்கிறேன்.

உமையைப் பிரிந்த சிவம் அங்கு இமயமலைச் சிகரத்தில் தவமிருக்கிறான்.

இங்கு தென் கோடியில் அவனை அடைய இவள் தவம் கிடக்கிறாள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். யார் முன்னால் தணிவது என்று இருவரும் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

காத்திருப்பது என்றால் என்ன?

இங்கு இத்தனை அழகும், அங்கு அத்தனை சௌகரியமும், ஒன்றுடன் ஒன்று ஒன்றா ஏங்கி, வரட்டு கர்வத்தில் வியர்த்தமாகப் போவதுதானா?

கப்பல்களைக் கவிழ்த்த கதைகளைத் தன்னுள் அடக்கிய அந்த மூக்குத்தி உண்மையில் கல்யாணமாகாமல் காத்திருக்கும் கன்னிகளின் ஏக்கம் ஒன்று திரண்ட கண்ணீர்ச் சொட்டு.

வீம்புத் தவம், வீண் தவத்தில் ஒருவருக்கொருவர் ஏன் அரண் கட்டிக் கொண்டேயிருக்கிறீர்கள்?

ஏன்?

அர்ச்சகர் அலங்காரம் செய்யத் திரையை இழுத்து விட்டார். 'ஏனா'கவே அவள் அதன்பின் மறைந்து போனாள்.

# தை

குவிந்த இதழ்கள் அவிழ்வது போலும், விழிப்பின் வருகையினுடனேயே, தன் உள்நினைவும் மலருவதை அவன் உணர்ந்தான். இரவினின்று புறப்படும் விடிவெளிச்சத்தில், இன்னமும் விழிகளைப் பொத்தியிருக்கும் இமைகளின் உள்புறம் வெள்ளை ரோஜாவின் வெண் சிவப்பில் தோய்ந்தது.

தை பிறந்து விட்டது.

விழிப்பு வந்தும் விழிக்க இன்னும் மனமில்லை. இச்சமயம் படுக்கையில் உடல் கிடக்கிற நிலையும், கிடக்கையின் வெதவெதப்பும் அவ்வளவு இதமாயிருந்தன.

கீழே ஒரே சப்தம். வேலைக்காரி வீட்டை மெழுகிய இடங்களைப் பற்றி அம்மா அதட்டல் போட்டுக் கொண்டிருந்தாள். சமையல் கட்டில் காப்பிக் கடை நடந்து கொண்டிருக்கிறது. தம்பிக்கும் தங்கைக்கும் சண்டை.

"அம்மா, பட்டு காப்பியில் தண்ணைக் கலக்கிறாள் பாரேன்—"

"அப்படித் தான்—அம்மாவைக் கேட்டுண்டு தான் பண்ணினேன் போ—அடுப்பங்கரையில் புருஷாளுக் கென்னடா வேலை? காப்பி நன்னாயிருக்கா இல்லையான்னு பார்த்துக்கோ; அவ்வளவு தானே! தினந்தான் தண்ணைக் கொட்டிண்டிருக்கேன். இன்னிக்கு மாத்திரமில்லே, தெரிஞ்சுக்கோ—"

"வாயாடாதேடி—இந்த வாயை வெச்சிண்டு புக்காத்துக்குப் போனா"—

"சரி சரி; இன்னிக்கு சண்டை போட வேண்டாமே"— அம்மா சண்டையைத் தீர்த்து வைக்கிறாள்— "போருண்டாப்பா, இதுகளோடே அல்லாடறது! கல்யாணீ கல்யாணீ! கல்யாணி எங்கே-வாசல் குட்டிகளோடே சேர்ந்துண்டு 'கொளுத்தி' விளையாடறதா? சொக்கப்பானையெல்லாம் நேத்தியோடே போச்சுடி—போய் மாமாவை எழுப்பு—"

"மா......மா!"

இதோ இன்னும் ஒரு நிமிஷத்தில் கல்யாணி வந்துவிடுவாள், மாடிப் படிகளில் குதித்துக் குதித்து ஏறிக்கொண்டு— மை தீட்டிய விழிகளும், வளை குலுங்கும் கைகளும், வெந்நீரில் குளித்ததால் சிவப்பு குழம்பிய முகமுமாய், "மா-மா-" என்று செல்லமாய்க் கத்திக் கொண்டே வந்து மார்மேல் விழுவாள்.

அவள் அப்படி விழும் முன்னமேயே, அவள் விழும் உணர்ச்சியை அவன் நினைவு அவ்வளவு வேகமாய்ப் பருகிற்று. உடனே, வாய் வைக்காத புண் போல், 'விண்விண்'ணென, உள்ளத்தில் இராப் பகலாய்த் தெறித்துக் கொண்டிருக்கும் வேதனை அதன் வேலையைத் துவக்கி விட்டது. கற்பனையில்,

அவன் இன்னமும் கண்ணால் காணாத அவன் குழந்தையின் உரு எழுந்தது. அங்கங்கே குழிகள் சுழித்து, கொழ கொழவெனப் பால் வடியும் ஒரு உடல். தன்னைக் கொண்டு பிறந்திருக்குமா, அல்லது அதன் தாயைக் கொண்டு பிறந்திருக்குமா? தன் போன்றே பூனைக் கண்கள் அதற்கும் இருக்குமா?

அவன் தன் கற்பனையை அநுபவிக்கும் வேகத்தில், அவன் மேல் விழுந்தது அவன் குழந்தையே போலிருந்தது. உடல் ஒரு பயங்கரமான இன்பத்தில் புளகித்தது. கண்கள் திறந்தன.

"மாமா—சங்கராந்தி வந்துடுத்து...ஏந்திரு ஏந்திரு— என் பட்டுப் பாவாடையை நீ பார்க்கல்லையே! ரெண்டு 'டக்கு'ப் போட்டிருக்கு. நுனியிலே 'லேஸ்' வெச்சிருக்கு மாமா—"

புன்னகை புரிந்த வண்ணம், அவளை ஒரு முறை இறுக அணைத்து, கீழே இறக்கி விட்டு எழுந்தான். மூக்கைக்

குடைந்து கொண்டு 'நச்'சென ஒரு தும்மல் கிளம்பியது. உடனேயே, அதையடுத்து இன்னொன்று. 'சீ, இதென்ன மூணு மாதமாய்த் தீராத ஜலதோஷமாயிருக்கிறது, தெரிய வில்லை!''

மயிரைக் கோதிக் கொண்டு கீழே இறங்கினான்.

அம்மாவுடன் யாரோ ஒரு மாமி பேசிக் கொண்டிருந் தாள்.

''ஒரு வரன் இருக்கு. போத்தனூரில் மர வியாபாரம் பண்ணிண்டு இருக்கான் பையன். ஒரு இக்குப் பிடுங்கல் கிடையாது. தனிக்காட்டு ராஜா. பொண்ணைக் கையில் ஏந்தினாப் போலே வெச்சுப்பான்—''

அம்மா அதற்குள் குறுக்கே வெட்டினாள்.

''அது மாதிரி சம்பந்த மெல்லாம் நம்பாத்துக்கு வேண் டாம் மாமி—என் பிள்ளையின் வேட்டகத்துக்குப் போய் வேணுமானால் அந்த மாதிரி சம்பந்தங்களைப் பிரஸ்தாபியுங் கள். அவா ரொம்ப சந்தோஷப் படுவா. என் பெண் நன்னா பெரிய குடும்பத்திலே வாழ்க்கைப் படணும்னு தான் இருக்கு. நாலு ஓர்ப்படிகள், அஞ்சு நாத்தனார், அஞ்சு மச்சினன்கள்-மாமனார்-மாமியார் எல்லாரும் இருக்கணும். கொஞ்சம் அத்து மீறினால் வாயிலேயே போடற ஆம்படையானா இருக் கணும். நீங்களும் நானும் வாழ்க்கைப்பட்ட தெல்லாம் உங்களுக்கு இப்போ மறந்து போச்சா? 'தனி தனி'ன்னு தனியைத் தேடி, தான் குட்டிச் சுவராய்ப் போறதோடில் லாமெ புகுந்த இடத்தையும், பொறந்த இடத்தையும் குட்டிச் சுவரா அடிச்சிண்டிருந்தோமா? சண்டையோ சமாதானமோ, சந்தோஷமோ துக்கமோ, நல்லதோ கெடுதலோ நம் குடும் பமும் இப்போ விளங்கிண்டு தானே யிருக்கு? நான் வாழ்ந் தாப்போலேதான் என் பெண்ணையும் வளர்த்திருக்கேன். அதுக்குத் தகுந்தாப் போல் அவள் வாழ்க்கைப் பட்டால் போறும்—''

''அப்படின்னா இன்னொரு ஜாதகமிருக்கு—''

பேசிக் கொண்டே அம்மாவும் அந்த மாமியும் நகர்ந் தார்கள்.

அம்மா இல்லாவிடில் அவன் கதி என்னவோ அம்மாதிரி தான், அவனில்லாவிடில் அம்மாவுக்கும். ஏதோ வாசலில் போகும் சனியை விலைக்கு வாங்கிக் கட்டிக் கொண்டாற் போல் அவனுக்குக் கலியாணம் நடந்ததிலே யிருந்து, குடும்பமே இரண்டு வருஷ காலமாய் உளைசல் பட்டுக் கொண்டிருந்தது. அதனால் இருவருக்கும் சில சச்சரவுகள் ஏற்பட்டபோதிலும், அவன் குடும்பத்துக்கு நடுமரமாய் இருந் தால், அவள் அதன் ஆணிவேர்; அவன் ஆணி வேரானால் அதை வளர்க்கும் மண் அவள்.

இப்பொழுது இம்மாதிரி அவன் கொல்லைப்புறக் குறட்டில் குந்தி உட்கார்ந்து கொண்டு பல் விளக்குகையில், அவன் மனைவி இச்சமயம் என்ன பண்ணிக் கொண்டிருப்பாள் எனும் சிற்றாவலில் மனம் சிந்தித்து நின்றது. என்ன பண்ணிக் கொண்டிருந்தால் என்ன? அவனுக்கென்ன ஆயிற்று!... இதோ அவன் தாய் தள்ளாத வயதில், அவள் பிள்ளையும் மருமகளும் பெட்டியில் வைத்துக் காப்பாற்றுவது போல் தாங்க வேண்டிய நாளில், இன்னும், இவ் வீட்டிற்கு அவன் தகப்பனாருக்கு வாழ்க்கைப் பட்ட நாளில் வந்து புகுந்து ஓடி யாடி வேலை செய்த மருமகளாகவே தான் விளங்குகிறாள். ஓடத்தான் முடியவில்லை; ஆடத்தான் முடியவில்லை. ஆனால், வேலையில்லாமல் போய் விடுகிறதோ. வயதாகி விட்டாலும், அஞ்சு பெற்றுவிட்டாலும், அகமுடையான் போய் விட்டாலும்?...

நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருப்பான். சிறு குழந்தை யைப் போல் சற்று மலர்ந்த உதடுகளுடன். அவளே தான் அவனிடம் சொல்லியிருக்கிறாளே! நான் எங்காத்துக்குச் செல்லப் பெண்; ஏழு மணி வரையில் தூங்குவேன். என் காப்பி எப்பவும் 'சுட வெச்ச காப்பி' தான்.

அவள் அம்மாதிரி தூங்குவதைப் பற்றியோ, தூங்கியே வளர்ந்ததைப் பற்றியோ ஒரு சிறு சிலச்சையும் கூடப்பட்டது கிடையாது. வந்த இடத்துக்குத் தகுந்தாற் போல் பழக்க வழக்கங்களைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று முயன்றதும் கிடையாது. மொத்தத்தில் அவள் எண்ணங்கள்

ஓடும் தினுசை எண்ணக் கூட மனம் வெட்கியது. ஆயினும்—

[அவளைப் பார்க்கையில், இவ்வளவு சாது முகம் இவ் வளவு சண்டித்தனத்தை மறைக்க முடியுமா என்று இன்னும் வியப்பாய்த்தான் இருக்கிறது, அனுபவ ரீதியாய்ச் சுட்டுத் தெரிந்து கொண்டும்—]

அம்மாவும் அம்மாமியும் பேசிக் கொண்டு வெளியே வருகிறார்கள்.

வந்தவள் சொல்கிறாள்: "எல்லாம் பாருங்கோ மாமி, தை பிறந்துடுத்து; வழியும் பிறந்துடும். எல்லாத்துக்குமாத் தான் சேர்த்துச் சொல்லறேன்—"

அவளை வாசல் வரை கொண்டு போய் விட்டு விட்டு அம்மா திரும்பி வருகிறாள்.

"என்னடா அம்பி, மூஞ்சி ஒரு தினுசா வாங்கிக் கிடக்கு? உடம்பு சரியா யில்லையா?" நெற்றிப் பொட்டில் கை வைக் கிறாள். "ஏண்டா இந்த மாதிரி அசட்டு ஜுரத்தை மூணு மாஸமா வெச்சிண்டு வைத்தியனிடமும் காண்பிக்காமே... நாளும் கிழமையுமா...ஒரு காரியம் பண்றையா? சுந்தரா மாமியாத்துக்கு நேற்றுப் போயிருந்தேன்; ஒரு பிள்ளை ஜாதகம் தரேன் என்றாள். வாங்கிண்டு வா—"

* * *

சுந்தரா மாமி வீட்டுக்குக் கடற்கரை யோரமாய்ப் போகையில், மேலடிக்கும் இள வெய்யில், அவனை உறுத்தும் சிறு குளிருக்கு இதமாயிருந்தது. அவனுக்கே கடற்கரை யோரமாய் நடக்கப் பிடிக்கும். அதுவும் காலை வேளையில் வண்டி-காடிச் சத்தமும், ஆள் நடமாட்டமும் குறைந்து, இடமே ஒரு பூஜ்யத் தன்மையை அடைந்திருந்தது. அலை களின் சலசலப்புக் கப்பால் ஜலத்தின் அசைவற்ற நிலையில் உயிரும் அழகும் பொலிந்தன. மனம் ஏன் இத்தன்மையை அடைய மாட்டேன் என்கிறது? சூரியக்கிரண ஒளி சமுத்திர வெளியில் பட்டு, லட்சம் சிதர்களாய் ஜல மட்டத்தின் மேல் சிதறிக் கிடந்தன, தூரத்தில் மணல் திட்டுக்களிடையில் ஒரு மனித உரு ஊர்ந்தது. ஆயிரம் கண்டு பிடித்தும் மனிதன்

விசுவரூபத்தில் எவ்வளவு அசக்தனான பிராணி!

எதிரே ஒரு வலைச்சி இடுப்பில் குழந்தையும் தலைமேல் சோற்றுப் பானையுமாய் வந்தாள். அவள் குழந்தையுடன் பேசிக் கொண்டும் கொஞ்சிக் கொண்டும் வருகிறாள். [அவன் கவனம் குழந்தைமேல்தான் சென்றது.]

"பூவ்வா—பூவ்வா—" என்று கீழுதட்டைப் பிதுக்கிப் பிதுக்கி, எச்சில் கொப்பளிக்கையில் அது ஒரு விளையாட்டு! மூக்கு பாட்டுக்கு ஒரு பக்கம் ஒழுகிக் கொண்டே யிருந்தது. ஆனால் அடேயப்பா, என்ன வளர்த்தி! கல் பந்து போல் அவ்வளவு பெரியதாய், கனமாய், அழுத்தமாய், உருட்டி விட்டாற் போல்!

தான் குழந்தையை வியக்கும் அதிசயத்தில், அவள் வழியை மறித்துக் கொண்டு அவன் நிற்பது கூடத் தெரிய வில்லை. அவள் முகத்தில் புன் சிரிப்பு தோன்றிற்று. தன் பிள்ளையின் கன்னத்தை நிமிண்டினாள்.

"அய்யரைக் கேளுடி அரையணா—இடியாப்பம் வாங்கித் துண்ண" — அது வஞ்சனையில்லாமல் உள்ளங்கையை அகல விரித்து நீட்டியது. அதன் கையே ஒரு சிறு அப்பம் போலிருந்தது. அவனுக்கு ஆசைத் தாபம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

"இப்படிக் கொடு—"

அவளுக்குச் சந்தோஷமும் பெருமையும் தாங்க முடிய வில்லை. அவளிடுப்பிலிருந்து அவன் குழந்தையை வாங்கிக் கொள்வதற்காக அவன் பக்கமாய் அவள் சாய்கையில், அவள் மேலிலிருந்து வீசும் மீனின் நிணம் குடலைக் குமட்டிற்று. நினைவுகூட மங்கி, பின்னோக்கி நழுவியது.

—இன்று மாதிரியிருக்கிறது; அன்றிரவு அவள் ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு அவனிடமிருந்து சற்று எட்ட நின்ற வண்ணம் தான் ஸ்நானம் பண்ணவில்லை யென்று...

அச் சமயம் அவனைக் குழந்தைப் பாசம் ஒன்றும் இப் போது போல், குரல்வளையைப் பிடித்து அமுக்க வில்லை. ஆயினும் எண்ணப் பிடிபடாத ஒரு வெற்றி யுணர்ச்சி உள் ளத்தில் கிளர்ந்தது. இப்படித்தான் எல்லோருக்கும் இருக்

குமோ? ஒற்றுமையுள்ள தம்பதிகளாயிருந்தால், இவ்விஷயத்தில் வெற்றி, தோல்வியைப் பற்றிச் சிந்திக்க ஒன்றுமில்லை.

ஆயினும் அவன் உணர்ந்த பெருமிதம் அவனையும் மீறி முகத்தில் தெரிந்து விட்டதோ, என்னவோ?

"என்ன சிரிக்கறேள்?"

அவன் முறுவல் சின்னமும் அகல முகத்தில் படர்ந்தது. சாவகாசமாய் எழுந்து நடந்து அவளிடம் சென்று கழுத்துக்குப் பின்னால் கை கொடுத்து சாட்டையாய்த் தொங்கும் பின்னலைப் பிடித்து இழுத்து முகத்தை நிமிர்த்தினான்.

"ஏன், அழணுமா?"

அவனுடைய செல்லப் பிடியை உதறினாள். அவன் முகம் கடுகடுத்தது.

"எனக்கு ஒண்ணும் பிடிக்கல்லே..."

"என்ன பிடிக்கவில்லை? நான் தொடுவதா?"

"எல்லாந்தான் ஒண்ணும் பிடிக்கல்லே."

"கர்ப்பிணியோ துர்க்குணியோ என்று இப்பவே—"

"ஆமாம், என்ன குழந்தை வேண்டியிருக்கு? எனக்கு நினைக்கவே பயமாயிருக்கு, இந்த மாசங்களெல்லாம் எப்படித் தள்ளப் போறேன்னு; நாலு பேர் சிரிக்க......"

அவள் எண்ணங்கள் ஓடும் விதமே அவனுக்குப் பிடிக்கவில்லை. அவைகளின் அர்த்தமும் நன்றாயில்லை. இருந்தும் அவள் வாயினின்று வரும் பதில்களின் பொறுமை அவனுக்கே வியப்பாயிருந்தது.

"அப்படியானால், நீ உலகத்தையே குற்றம் சொல்ல வேண்டியது தான். உலகத்தில் எல்லாமே இப்படித்தான் பிறக்கிறது. இயற்கையே இது தான்! சேச்சே...இந்த மாதிரி எண்ணங்களை விட்டு விடு ராஜம்—"

சின்னக் குழந்தை மாதிரி உதட்டைப் பிதுக்கினாள்.

"ஆமாம் இன்னும், நாலஞ்சு மாஸம் போகட்டும்; ரொம்ப நன்னா யிருக்கும்..."

"ஏன் நன்னா யிருக்காது? உனக்கும் எனக்கும் என்று முடிச்சோ விழுந்தாச்சு, இனிமேல் நீ யாருக்கு நன்னா

யிருக்கணும்? எனக்கு எல்லாம் நீ நன்னா யிருப்பாய்...''

''ஆமாம், நமக்குள் இருக்கிற ஒற்றுமைக்குக் குழந்தை ஒண்ணுதான் பாக்கி......''

கோபத்தால் அவனுக்கு விழி நரம்புகள் குறு குறுத்தன.

''சரி; அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்...''

''எப்படி?''

''நம்மிருவருக்கும் ஒற்றுமையில்லையென்று. இப்பொழுது இது உன் கொட்டத்தை அடக்குமல்லவா? இந்தப் பந்தத்துக்கு நீ மசிந்து தானே ஆக வேண்டும்?''

''ஓஹோ! அப்படியா?

அப்பொழுது அவள் உதட்டை முறுக்கிக் கொண்டு ஒலித்த ''ஓஹோ''வில் எவ்வளவு அர்த்தம் இருந்தது என்று அப்பொழுது புரியவில்லை; இப்பொழுது புரிந்தது—

''என்ன சாமி, கல்லா சமைஞ்சுட்டே! கொளந்தையைக் கொடு...என்னய்யரே உனக்கு இப்படித் தூக்கி வாரிப் போடுது?

''ஒண்ணுமில்லே— இந்தா...குழந்தைக்கு இடியாப்பம் வாங்கிக் கொடு.''

அவள் போன திக்கைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் நின்றான். அவன் இன்னமும், பிறந்தது முதல் கண்ணால் காணாத அவன். குழந்தையைக் காணும் வரை, வாசலில் காணும் எந்தக் குழந்தையும் அவன் குழந்தையாகவே இருக்கலாம். அதை நினைக்கையில், அவன் இதயம் குழம்பாய் உருகுவது போல் சுட்டது.

* * *

''வா-வா அம்பி! இந்தப் பக்கமே நீ இப்போ திரும்பிப் பார்க்கிறதேயில்லை......இதோ பாருங்கோ, யார் வந்திருக்கான்னு...''

சுந்தரா மாமியின் அகத்துக்காரர் சமையலறையிலிருந்து ஒரு கையில் வெண்கலப் பானையையும், இன்னொரு கையில் கடுகு டப்பாவையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார். அவனைப் பார்த்துச் சிரித்தார். அவனைப் பிடிக்காதவர்களே யில்லை.

"வா அப்பா, உட்கார் என்ன ரொம்ப இளைத்துப் போயிருக்கிறாய்? ஒரு சொம்பு கொட்டிக் கொண்டு வந்து விடுகிறேன். இந்தா சுந்தரா, நீ கேட்ட சாமான்..."

"இதென்ன...கடுகு டப்பாவுக்கு இப்போ என்ன அவசரம்? மஞ்சளும் கயிறும்னா கேட்டான். சாமியலமாரி யில் வெச்சுட்டுப் போயிருக்கிறதாக சாஸ்திரிகள் சொல் லிட்டுப் போனார். நீங்கள் உங்கள் காரியத்தைப் பாருங்கோ. அம்பியை எடுத்துக் கொடுக்கச் சொல்றேன்."

அவன் பசு மஞ்சள் கொத்தையும் கயிற்றையும் அவளிடம் கொண்டு வந்து வைத்தான்.

"என்ன மாமி, உங்கள் கால் எப்படி இருக்கிறது?"

மாமி கயிற்றின் ஒரு நுனியை அவனிடம் கொடுத்து விட்டு, இன்னொரு நுனியால் இழுத்துப் பிடித்துக் கொண்டு பசு மஞ்சளைக் கொத்தினின்று பிடுங்கி, கயிற்றில் சாயம் ஏற இன்னொரு கையால் தேய்க்க ஆரம்பித்தாள்.

"என் கால்தானே? அப்படியேதான் இருக்கு, மூணு வருஷமாய் ஆறாத புண் இப்போ திடீர்னு ஆறிடுமோ? இல்லாட்டா எப்போவாவது தான் ஆறப் போறதா?"

"ஏன் மாமி, அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

மாமி புன்னகை புரிந்தாள். நம்பிக்கை அறுந்து போன அவள் வாழ்வின் சோகம் அத்தனையும் அதில் தேங்கியிருந் தது.

"ஏன் அம்பி-நீயும் எல்லாரையும் போல் வேஷம் போடறே? புண்ணின் புரையோ முழங்காலுக்கு மேலே ஏறிப் போயாச்சு, எனக்கே தெரியறது. அதனால் நான் இனிமேல் என் கவலையைப் படறதை விட்டாச்சு, இதுதான் நான் இந்த சங்கராந்திக்குப் பண்ணிண்ட தீர்மானம். இனிமேல் நான் அழப் போறதில்லை; என் கவலையைப் படப் போறதில்லை; சந்தோஷமாயிருக்கப் போறேன், என்னா, அடுத்த சங்கராந்தி யை யார் கண்டா?"

"மாமி..."

அவன் குறுக்கு வெட்டாமற்படிக்கு மாமி கையமர்த்தி னாள்.

"அம்பி, உன் வீட்டு மனுஷாளும் நாங்களும் ஒரே வீட்டிலே ஒரு பத்து வருஷம் சேர்ந்தாப் போலே குடியிருந்து ஒரே குடும்பமா பழகி விட்டோம். எனக்குக் கூடப்பிறந்தவா இல்லை. உன்னை என் தம்பின்னு வெச்சிண்டு உன்னண்டை விட்டுச் சொல்றேன்; நான் இனிமேல் இருந்து கொட்டிக் கழிக்கப் போறது ஒண்ணுமில்லே. ஏதோ பூர்வ புண்ணியம் கொஞ்சம் கணக்கில் இருந்ததாலே, நல்ல இடத்திலே வாழ்க்கைப் பட்டேன்; நல்லாம்படையானும் நல்ல மாமி யாருமாக் கிடைச்சா கடுகு தாளிச்சுக் கொட்டறத்திலேருந்து கல்பானை தேய்க்கற வரைக்கும் இங்கே வந்து தான் கத்துண் டேன். எவ்வளவோ பொறுமையோடு தான் எனக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்தா. ஆனால் நான் புகுந்த வீட்டிலே ஒருத்தருக்கும் ஒரு சுகம் கொடுத்ததில்லை. அறுபது நாழியும் வியாதியும் வெக்கையுமாகவே என்னைப் பிடுங்கித் தின்னுண்டே இருந்திருக்கு. ஆஸ்பத்திரிக்கும் வைத்தியனுக் கும் அள்ளி அள்ளிக் கொடுத்தே இந்தக் குடும்பத்தைக் குட்டிச் சுவராக்கி விட்டேன். எனக்கு உடம்பு சரியா இருந் திருந்தால் மாமி ஆயுசு இன்னும் அஞ்சு வருஷமாவது நீடிச் சிருக்கும். விளையாட்டா இந்தக் காலிலே சிராம்பு குத்தி, நான் படுத்ததிலிருந்து எனக்குச் சிசுருஷை பண்ணிப் பண்ணி அவள் உயிரையும் குடிச்சேன். இனிமேல் நான் இன்னமும் நாறாமல் முன்னால் போகணுமே என்கிற ஒரு கவலைதான் எனக்கு.

"என்னால் அவருக்கு என்ன சுகம்? ஒரு நாளைக்கு ஒரு படுக்கை தட்டிப் போட்டேன், ஒரு வேஷ்டியைக் கசக்கிப் பிழிஞ்சேன் என்று உண்டா? கேவலம் நான்-நான் பண்ணிப் போட வேண்டிய சமையலைக் கூட அவர் எனக்குப் பண்ணிப் போட வேண்டியிருக்-கு-ஊ-ஊ..."

மாமி முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு விக்கி னாள். திடீரென்று ஏதோ நெருப்பில் சாய்ந்து, தீயும் வாசனை அங்குப் பரவியது. அடுக்குள்ளில் பால் தான் பொங்கிற்றோ, அல்லது இங்கு மாமி வயிறுதான் பொங்கும் நாற்றமோ?

''ஒரு ஆளைப் போட்டுக் கொள்ளவோ எங்களுக்குக் கட்டலில்லை. ஒரு நாளைப் பார்த்தால் போல் இவர் இன்னும் எவ்வளவு தவிப்பார்? என்னை ஒரு நாளேனும் வாயைத் திறந்து திட்ட மாட்டாரா என்று ஏங்கறேன். ஆனால் எனக்குத்தான் ஒசந்த பதவி கிட்டியிருக்கே, என்னை எப்படித் திட்டுவார்? எல்லோரும் கீழேயிருந்தால் நான் கட்டில்லேயிருக்கேன்; எல்லாரும் உட்கார்ந்து சாப்பிட்டால், நான் படுத்துண்டு சாப்பிடறேன்; எல்லாரும் எல்லாருக்கும் உபகாரமாயிருந்தால், எல்லாரும் எனக்கு உபயோக மாயிருக்கணும்! எப்படியிருக்கு அம்பி, இது? வேடிக்கையா யில்லே''

மாமி 'கல கல' வென்று சிரித்தாள். அவன் வாய் திறக்கவில்லை.

அவள் கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும்? ஆனால் அவள் பதிலும் எதிர்பார்க்கவில்லை. வாய் விட்டு ஓடும் அவள் சிந்தனைக்கு அவன் இப்போதைக்கு வாய் திறவாச் சாட்சியாயிருந்தான்; அவ்வளவுதான்.

''நானே ஒரு நாசக் கிரஹம் என்றுதான் நினைக்கிறேன். என்னை ஒத்தரும் பாக்க வரக்கூடாது, கேட்க வரக்கூடாது. வந்தால் என் பாவம் அவர்களையும் ஒட்டிக் கொள்ளும். உன்னையே பார்; கலியாணமானவுடன் மஞ்ச நீர்க்கோலத்துடன் பிள்ளையும் பெண்ணும் வந்தீர்கள்; வெற்றிலையும் தேங்காயும் என் கையில் கொடுத்திட்டு நமஸ்காரம் பண்ணிட்டு நீ நிமிர்ந்த போது, உன் முகம் ஜ்வலிக்கிற ஜ்வலிப்பைப் பார்த்துவிட்டு எனக்குத்தொண்டைஅடைச்சுது. அருகாமையிலேயே உன் ஆம்படையாளையும் பார்த்ததும் முதன் முதலாய் என் மனசில் என்ன தோணித்துத் தெரியுமா? 'அட, இவனைப் பெற இவள் போன ஜன்மத்தில் தெய்வத்துக்குச் கனகாபிஷேகமாய்த் தான் பண்ணியிருக் கணும்'னு நினைச்சேன். எங்களுக்குள்ளே ஒரு வசனம் உண்டு, 'கண்ணும் குணமும் நிறைஞ்ச ஆம்படையானைப் பெற, போன ஜன்மத்தில் பகவானை எத்தனையோ விதமான புஷ்பங்களால் அர்ச்சித்திருக்கணும்'னு,

ஆனால் விஷயங்கள் நடந்திருக்கிற தினுசைப் பார்த்தால் நீ எவ்வளவு பாபம் பண்ணியிருக்கே என்கிறதுதான் விளங்கறது! உன் முகம் சிவக்கிறதில்லையா.

உன் அகமுடையாளைப் பத்தி மூணாம் மனுஷாள் சொல்ல வாச்சே என்னு?

எனக்குந்தான் சிவக்கிறது இந்த மாதிரி ஒண்ணுரெண்டு கோடாலிகள் முளைச்சு, எங்கள் வர்க்கத்துக்கே வாங்கி வெக்கற கெட்ட பேரை நினைச்சா. உன் குழந்தை சொர்ண விக்ரஹம் மாதிரியிருக்காமே! கொழந்தைக்குச் சொந்தக்கார னிடம் நாய் மாதிரி வந்து விழாமல், இடுப்பில் தூக்கி வெச் சிண்டு ஊரெல்லாம் காண்பிச்சு, தடிச்சியாய்ச் சுத்தி வந்தால் இவளை எல்லாரும் இந்த மட்டுமாவது இருக்கையேன்னு கௌரவப் படுத்துவான்னு நெனைச்சுண்டு இருக்காளா? இந்த அசடை என்னன்னு சொல்றது?''

அவன் மார்புள் வாளைப் போட்டு அறுத்தது.

மாமா கதவைத் திறந்து கொண்டு ஸ்நான அறையி லிருந்து வெளி வந்தார். ஜலம் ஸ்படிகத்துளிகளாய் அவர் மார் மேலும் தோள்களிலும் நின்றது.

''சுந்தரா, என் கைக் கடிகாரத்தைக் காணோமே!—''

''நான் எழுந்து தேடியெடுத்துக் கொடுக்க முடியுமா? சமையலுள்ளில் எங்கேயாவது வெச்சிருப்பேன். நேத்திக்கு சாதப் பதத்தை நிமிஷம் பாத்துக் கஞ்சி வடிச்சேளே!''

''ஆமாம் ஆமாம்—''

விசனம் நிறைந்த கண்களுடன் மாமி, அவர் சமைய லறையுள் போன வழியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒரொரு நாளைக்கு நெனைச்சுக்கறேன், இப்படியே இவர் என் கையை எதிர்பார்க்காமே பண்ணித் தின்னுண்டு இருந்தால், ஒரு நாளைக்கு நானாப் பண்ணிப் போடறதையும் தான் சாப்பிடட்டுமே! சாமானையெல்லாம் கொண்டு வந்து என்னைச் சுத்தி வெக்கச் சொல்றேன். அவருக்கு ஒரு வேலைக்கு இரு வேலைதான்; ஆனால் என் ஆத்திரம்எனக்குத் தணிய மாட்டேன் என்கிறது. பண்ணியும் போடறேன், உட்கார்ந்த வண்ணம் ஏத்தியிறக்கி சுத்துக் காரியம்

அவரிடம் வாங்கிண்டு. அவரும் நன்னாயிருக்கு நன்னா யிருக்குன்னு சிரிச்சுண்டே சாப்பிட்டுட்டுப் போயிடறார். ஒரு தடவை அப்படி அவர் போனப்பறம் குழம்பை வாயில் வெச்சேன்; உப்புப் போட மறந்தே போயிட்டேன்! வாயிலே வைக்க முடியல்லே...''

மாமா கையில் கடியாரத்தைக் கட்டிய வண்ணம், வாசற் படியில் தடுக்கிக் கொண்டே வந்தார்.

''அகப்பட்டதா?''

அவர் அவளைப் பார்க்கையிலும், அவள் அவரைப் பார்க்கையிலும் உலக ரீதியில் அவர்கள் வாழ்க்கையில் ஏமாந்தவர்கள் ஆயினும், அவர் வாழ்க்கை வீணாகவில்லை யென்று நன்று தெரிந்தது. அவ்விரு நோக்குகளிலும் மிளிரும் குளிர்ந்த அனல் பிழம்பு அவர்களை ஒரே நோக்கின் இரு நுனிகளாய்த்தான் ஆக்கியது. அவர்கள் வாழ்க்கை வீணாக வில்லை' அவர்கள் மேல் ஒரு பெரும் அசூயை அவனுள் மூண்டது. அந்த நிமிஷமேஅவர்களைக் கொன்று விடலாமா என்று கூடத் தோன்றும் கோரமான அசூயை!

ஓசைப்படாமல், அவ்விடம் விட்டு அவன் அகன்றான்.

x x x

'இனி அம்மாதிரி இன்பம் எப்போ' எனும் ஏக்கம் கொடுக்கரிவாள் போல் வனத்தில் மாட்டியிழுக்கையில், உள்ளத்தில் உதிரம் கொட்டியது. 'இப்படிச் செய்தாளே பாபி; அன்பை அறியாத பாபி!' என்று அவள் மேல் எழுந்த சீற்றத்தில், மனப் போரில் அவளைத் திரும்பத் திரும்பக் கொல்லுகையில், அப்பொழுது கொட்டுவதும் அவன் உள்ளத்தின் உதிரந்தான்! அம்மாதிரி எத்தனை ஆயிரம் ராஜம், எத்தனை ஆயிரம் அம்பி தலை வேறு உடல் வேறாய், மன ரணகளத்தில் சிதறுண்டு கிடந்தார்கள்!

x x x

சாப்பிட்டதும் மாடிக்கு வந்து அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு, அவள் பிறந்தகம் போன பின்னர், எனக்கு எழுதிய கடிதங்களை யெடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான். இதுவரை எத்தனையோ தடவை

படித்திருப்பான். ஆயினும் அன்று...

சொல்லிக் கொடுத்தோ, சுயமாகவோ ஏதோ கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை எனும் தினுசில் அவள் எழுதி யிருக்கும் அக்கடிதங்களில், அவள் மனத்தை அவன் அறிய முயல்கையில், அவள் அகந்தையின் உச்சமா, அல்லது 'ஆஸ்பத்திரிக்கேசா' என்று அவனுக்கு இன்னமும் விளங்க வில்லை.

சிற்சில சொற்களும் வாக்கியங்களும் நெருப்பில் பொறித் தது போன்று கடிதத்தில் துள்ளித் துள்ளிக் குதித்தன.

—''நீங்கள்தான் குழந்தை குழந்தையென்று அடித்துக் கொண்டீர்களே யொழிய, நான் இதையொன்றும் விரும்ப வில்லை. இந்தக் குழந்தை பிறந்து இனி நானும் பிழைத் திருந்தால் பார்த்துக் கொள்ளலாம். இருந்தாலும் எனக்கு இதுவே சாக்காயிற்று—''

இக்கடிதம் கிட்டியதும் அதன் அர்த்தமே விளங்கவில்லை. அவசர அவசரமாய் அவள் தந்தைக்கு அவளைத தன்னிடம் கொண்டு வந்து விட்டு விடும்படி எழுதினான். அதற்கு அவளிடமிருந்து பதில்:

''இப்படியெல்லாம் அழைத்தால் நான் வந்து விடுவேனா? வாசலில் வண்டியை நிறுத்திக் கொண்டு, கையைப் பிடித்து இழுத்தாலும் வரமாட்டேன்... எங்கள் தெருவில் இருக்கும் சதிபதிகள் நீங்கள் என்னிடம் இருக்கிற மாதிரி இல்லை. கையைக் கோத்துக் கொண்டு, மாலை வேளையில் அவர்கள் உலாவப் போவதைப் பார்க்கையில் என் வயிறு எரிகிறது. ஒரு நாளைக்கு நாமிருவரும் தனியாய் ஒரு சினிமா வுக்குப் போனதுண்டா? இல்லை, எனக்கென்று நீங்கள் ஒரு சோப்பு, ஒரு ரிப்பன் வாங்கிக் கொடுத்ததுண்டா? 'எக்ஸி பிஷன்' என்று ஊரே திரண்டது! நீங்களோ, உங்கள் மருமானுக்கு ஏதோ மஞ்சள் காமாலை யென்று, சோறும் தண்ணீரும் மறந்து அவன் படுக்கையண்டையே சுற்றிக் கொண்டிருந்தீர்கள். கட்டிய மனைவியைப் பற்றிக் கடுகள வேனும் சிந்தனையிருந்ததா? எனக்கும் குழந்தைகள் என்றால் இஷ்டம்தான்; இருந்தாலும், உலகத்திலில்லாத மருமானா?

குழந்தையென்றால் உடம்புக்கு வருவதில்லையா?...

நான் என் வீட்டில் ரொம்பவும் செல்லமாய் வளர்ந்து விட்டேன். எனக்குக் கஷ்டம் என்று ஒன்றும் தெரியாது. எங்கள் வீட்டில் ரேடியோ உண்டு; எலெக்ட்ரிக் விளக்கு உண்டு; நாங்கள் மாஸம் நாலு தடவை சினிமாவுக்குப் போவோம். உங்கள் வீட்டிலோ, 'ஏன் காரியங்கள் சுத்தமா இல்லை? ஏன் குங்குமமிட்டுக் கொள்ளவில்லை? ஏன் மஞ்சள் தேய்த்துக் கொள்ளவில்லை? ஏன் வாசலில் நிற்கிறாய்? ஏன் பகலில் தூங்குகிறாய்? என்றெல்லாம் என்னைக் கேட்கிறார் கள்.

முதன் முதலில், மணமாகி, சத்திரத்திலிருந்து நாம் உங்கள் வீட்டுள் நுழைந்து உங்கள் அம்மாவுக்கு நமஸ்காரம் பண்ணினபோது, உங்கள் தாய் என்னைப் பார்த்து, "அம்மா. நீதான் வீட்டுக்கு மூத்த நாட்டுப் பெண். இந்த வீட்டையும், நான் பெற்று முப்பது வருஷமாய் வளர்த்த பிள்ளையையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன்" என்று சொன்னபோதும், அப்போது கனிவுடன் என்னை நீங்கள் பார்த்த பொழுதும் எனக்கு எவ்வளவு பெருமையா இருந்தது தெரியுமா? ஆனால் மூத்த நாட்டுப் பெண் என்றால் உங்கள் அர்த்தம் என்ன என்று இப்பொழுதுதான் தெரிந்து கொண் டேன். நான் ஏமாற்றப்பட்டேன். நான் உங்களைக் கட்டிக் கொண்டேனேயொழிய, உங்கள் வீட்டாரைக் கட்டிக் கொள்ளவில்லை. என் தாய், என் குடும்பம், என் கடமை, என் பொறுப்பு என்றெல்லாம் சொல்லிக் கொண்டும் பண்ணிக் கொண்டும் நீங்கள் என்னிடம் காட்டும் இம்மாதிரிப் பிரியம் எனக்கு வேண்டாம் என்று, நீங்கள் எனக்கேதான் என்று இருக்கப் போகிறீர்கள்?"

அப்போது போலேயே இப்பொழுதும் அவன் மண்டை யில் ஆவி பறந்தது. இவ்வளவு ஆத்திரத்தையும் வயிற்றில் வைத்துக் கொண்டா, தன் குழந்தையையும் தாங்கிக் கொண் டிருக்கிறாள்? இதென்ன சுய மூளையில்தான் இருக்கிறாளா? அவள் வாழ்க்கையே அவன் கையுள் அடங்கியிருப்பதை யறியாமல், அல்லது அறிந்து தானோ, அவன் வாழ்க்கையை

அவள் சௌகரியப்படி அமைப்பதற்கு ஏதோ திட்டம். அவளும் அவளைச் சார்ந்தவர்களும் போட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்கிறவரை தெரிந்தது. அவனை யறிந்துமா இப்படித் துரோகம்? இனி அவளுக்குப் புத்தி தானே திருந்தும் வரை அவளும் உய்ய வழியில்லை; அவனும் அவள் வீட்டுப் படியேறுவதற்கில்லை. அவள் குழந்தை பிறந்தால் கூட, அவன் இதயம் பட்பட் என அடிப்பது அவன் காதுக்கே கேட்பது போலிருந்தது.

**ஆறு மாதங்கள் கழித்து :**

"என் கணவர் என்னைப் பற்றிக் கேட்காவிட்டாலும் நான் அவர் க்ஷேம லாபத்தையும் பற்றி அறிய ஆவலாயிருக் கிறேன். உங்களுக்குப் பிள்ளை பிறந்திருக்கிறான் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். குழந்தை வயிற்றில் ஐந்து மாதச் சிசுவா யிருக்கையிலேயே அதன் தகப்பன் அன்பை இழந்து விட்டது. உங்களுக்கு உண்மையாகவே என்மேல் பிரியமிருந்தால் என்னை ஏன் இந்த ஆறுமாத காலமாய்ப் பார்க்க வரவில்லை? என் கடிதத் திற்கும் ஏன் பதில் போடவில்லை? என்மேல் தங்களுக்குக் கோபமிருக்க நியாயமேயில்லை. புருஷன் பெண்மைக்கு இழைத்ததைவிட, மனைவி என்ன செய்து விட்டாள்? நீங்கள் உங்கள் வீட்டில் இருப்பதைப் போல் நானும் இருப்பேன் என்று எதிர்பார்க்க முடியாதென்றால், உங்கள் வீட்டாருக்கும் எனக்கும் ஒவ்வாது என்றால், எனக்கும் உங்க ளுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை என்து அர்த்தமா? எந்நாளும் உங்கள் அன்புக்கும், தேக சௌக்கியத்திற்காகவும் கடவுளை இங்கே பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ரொம்ப வும் இளைத்துப் போயிருப்பதாய்க் கேள்விப்படுகிறேன். உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்; வாரத்துக் கிருமுறை தவறாது எண்ணெய் தேய்த்துக் கொள்ளுங்கள்."

**பிறகு :**

"நான் திரும்பத் திரும்ப எழுதியும் உங்களிடமிருந்து ஒரு பதிலும் இல்லை. குழந்தை பிறக்கு முன் என்னைவிட

ஆவலாய் "குழந்தை குழந்தை' என்றீர்கள். அதுதான் நமக்கிருக்கும் பிணைப்பு என்றீர்கள். இப்பொழுது எட்டியும் பார்க்க மாட்டேன் என்கிறீர்கள். ஊர்க்குழந்தையை யெல்லாம் வாரியணைத்துக் கொஞ்சுவீர்கள். உங்கள் குழந்தையைக் கண்ணால்கூடக் காண வராமல் மனத்தைக் கல்லாயடித்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் இதை யெழுதுகையில், குழந்தை என் மடியில் படுத்துக் கொண்டு 'என்னைப் பெற்றதாலோ, என் தகப்பனாலோ என்ன சுகத்தைக் கண்டாய்?" என்று கேலி செய்வதுபோல் பொக்கை வாயைத் திறந்து சிரிக்கிறது. துணி கிழிந்தால் ஒட்டுப் போடலாம்; ஆகாயம் கிழிந்து போனால் ஒட்டுப் போட முடியுமா?"

"பேஷ்? படிக்கும் நாவல்களும் பார்க்கும் சினிமாக்களும் ஏதோ இம்மாதிரி கடிதம் எழுதவாவது பயன்படுகின்றனவே!"—

இன்னொன்று, அவசர அவசரமாய்:

"உங்கள் குழந்தைக்கு உடம்பு சரியாயில்லை. கொஞ்சம் அழுதால் கைகால் விறைத்துச் சில்விட்டு நீலமாய்ப் போகிறது மூச்சு இழுத்துக் கொள்கிறது. உடலில் கோளாறில்லை. தெய்வ குற்றம் என்கிறார்கள். உங்களுக்கு அத்தோடு ஒட்டுதல் இல்லாவிட்டாலும், உங்கள் குலதெய்வத்தின் அருளுக்கு அதற்குப் பாத்யதை உண்டு. ஆகையினால் அம்மாவைக் கேட்டுக் கோவிலுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று தெரிந்து கொண்டு உடனே வாருங்கள்.

நீங்கள் எனக்குச் சொன்னதையே உங்களுக்குத் திருப்பிச் சொல்கிறேன்; நம்மிருவருக்கும் தவிர்க்க முடியாத பந்தம் ஏற்பட்டு விட்டது. நாமிருவரும் தனியாயிருந்தால், நான் உங்களுக்குச் சரியாயில்லையா பாருங்கள். தனிக்குடித்தனத்துக்கு வருமானம் போதாதென்றால், ஒத்தாசை செய்ய என் வீட்டில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெண் சுகமாகயிருக்க வேண்டுமென்பதைத் தவிர அவர்கள் என்ன விரும்புவார்கள்? உங்கள் தாயாருக்கு உங்களைத் தவிர இன்னும் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்; ஆனால் எனக்கு நீங்கள் ஒருத்தர் தானிருக்கிறீர்கள்"......

ஆகவே, அவள்தான் பெண்மையையும் மானவெட்கத்தையும் விட்டு விட்டாள் என்றால் என்னையும் எல்லாம் துறந்துவிடச் சொல்கிறாளாக்கும்!''

இதற்கப்புறம் அவள் **கடைசிக் கடிதம்** வந்தது:

''...சரி, நீங்கள் உலகத்தாரைப்போல் இல்லாத அகமுடையான் என்று எனக்கு எப்பவோ தெரியுமாயினும் இப்பொழுது சந்தேகமறத் தெரிந்து விட்டது. நீங்கள் எல்லாருக்கும் நல்லவராயிருக்கலாம்; ஆனால் எனக்கு மாத்திரம் நல்லவர் இல்லை. என் கண்ணீரும் வீண் போகாது. (பேஷ்! இனி, பயமுறுத்தலாக்கும்!) இப்படியே உங்களுக்கு இந்தப் பக்கம் திரும்புவதாய் உத்தேசமில்லையானால் நீங்கள் ஆசையாய் வளர்க்கும் உங்கள் மருமாளையே மணம் புரிந்து கொண்டு சௌக்கியமாயிருங்கள். உங்கள் இஷ்டப்படியும் உங்கள் வீட்டார் இஷ்டப்படியும் நடந்து கொள்வாள்''...

இப்பொழுது அவனுக்கு ஒரே எண்ணந்தான் தோன்றியது. அவன் குழந்தை இறந்துவிடாதா? அதனாலேயே அவன் பிள்ளைப் பாசத்தை வளர்த்து, அப்பாசத்தையே தன் சுயகாரிய சித்திக்காக அவன் நல்லுணர்வுகளைக் கொல்லும் ஈட்டியாயல்லவா, அவன் மார்புக்கு இலக்காய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்? யாதவகுலத்தை நாசம் செய்த உலக்கை போல், அவன் வித்தேதான் அவனை நாசம் செய்யப் போகிறதோ? அவன் வித்து விஷ மரத்தில் பூத்த ஒரே காரணத்தால் விஷ வித்தாயின், அவ்வித்து மரமாவதன்முன் அதை வதைத்து விடுதல் நலமல்லவா, தன் வித்து எனும் பாபமிருப்பினும்அதை மரமாய்த் துளிர்க்க விடும் பாபத்தைவிடப் பெரிதா?— ஆனால் அவன் என்ன? சாமியா?...

''அம்பி—அம்பி—'' அம்மா அவசரமாய்க் கதவைத் தட்டுகிறாள்.

அவன் கதவைத் திறந்தான். அம்மாவின் முகம் சுண்ணாம்பாய் வெளுத்திருந்தது, அவனுக்குப் பகீரென்றது.

''என்னம்மா?''— அம்மா அசதியுடன் அறையுள் வந்து சுவரில் சாய்ந்தாள்,

"என்னமோ கேள்விப்படறேனேடா?"

"என்ன?"

"நீ எங்களை விட்டுப் பிரிஞ்சு அவர்களிடம் போகவில்லை என்னு உன் வேட்டாத்துலே ஏதோ பூஜையெல்லாம் பண்றாளாமேடா? நல்ல பூஜையில்லேடா—ஏதோ மாவு பொம்மை, கோழியெல்லாம் வெச்சிண்டு—"

"அம்மா, எல்லாம் வாழுகிற தினுசில் வாழாவிட்டால், நாலுபேர் நாலு விதமாய்த் தான் சொல்லுவார்கள். அதற்கு நாம் என்ன பண்ணுவது?"

"சொல்றவா சொல்றான்னா அதுக்குத் தகுந்தாப்போலே உன் உடம்பும் தேய்ஞ்சுண்டே வரதேடா! நீ எவ்வளவு 'பீடா'யிருக்கேன்னு நீ தெரிஞ்சுக்க மாட்டேன் என்கிறே. வைத்தியமும் பார்த்துக்கமாட்டேன் என்கிறே –"

"நான் கல்லு மாதிரிதான் இருக்கிறேன். எல்லாம் இந்த வெய்யிலில் அலையறதுதான்."

"அம்பி!—" அம்மா கண்ணில் நீர் தளும்பியது.

"என்ன?"

"அந்தக் காலமெல்லாம் மாமியார் படுத்தறதென்பா; இப்போ மருமகள் படுத்தற காலம் வந்திருக்கு. ஈசுவரியெண்ணம், அவளே ஜயிக்கணும்னு இருந்தால், அவளே ஜயிச்சுட்டுப் போறாள்; நீ வேணுமானால், அவளோடு அவளிஷ்டப்படியே தனிக் குடித்தனம் பண்ணுவதானால் பண்ணு—"

அவன் முகத்தில் சிவப்பு ஏறியது. வார்த்தைகளும் தொனியும் சற்றுக் கடுமையாகவே வந்தன.

"அம்மா ஊர் வாய்க்கு அஞ்சி நான் உங்களோடு இருப்பது உனக்கு இம்சையாக இருந்தால், என்னை வீட்டைவிட்டு வெளியே போ என்று சொல்; ஆனால் அவளிடம் போ என்று சொல்லாதே. அதற்கு உனக்கு உரிமைகூடக் கிடையாது."

அம்மா விக்கி விக்கி அழுதாள்.

"நீ எங்கே இருந்தாலும்-அவளோடு தனியாயிருந்தாலும்-நீ சௌக்கியமா இருக்கணும் என்கிற ஒரு எண்ணந்

தாண்டா—''

அவன் மனைவியின் அழுத்தத்துக்கு அடங்கிப் போய். அவன் அவளுடன் தனிக் குடித்தனம் செய்வதானாலும், இனி அவனுக்கும் அவளுக்கும் எங்கிருந்தாலும் சரி, தனிமையென் பதே கிடையாது. அவர்களிடையில் சுவர் விழுந்தாய் விட்டது. முகத்தோடு முகம் சேர்த்து, உடலோடு உடல் புல்லி, எவ்வளவு நெருக்கமான-மூச்சுத் திணறும் ஆலிங் கனத்தில் இருந்தாலும் சரி, இடையில் அந்தச் சுவர் ஓங்கி, பயங்கரமாய்த் திமிர்த்துக்கொண்டு தான் நிற்கும்.

ஆசையும் அந்தரங்கமும் அழிந்தபின்னர் எஞ்சி நிற்கும் கடமையை விடப் பயங்கரம் எது?

x x x

''இன்று ஏன் அவள் நினைவு என்னை இப்படி உறுத்து கின்றது? புண்ணாய்ப் போன மனதை எண்ணி எண்ணி ஏன் ரணமாக்கிக் கொள்கிறேன்? என்னுள் எது இப்படி வதை படுகிறது? எதிலேயோ, என்னுள் ஏதோ தோற்றுவிட்டது. ஏன்? எண்ணி எண்ணி எத்தனை ஆயிரம் எண்ணங்கள் வீணாகின்றன? எண்ணாமல் தான் இருப்பது எப்படி? நான் தெய்வமா? ஆனால் நான் ஏன் மனிதனாகவும் இருக்க முடிவ தில்லை? என் உள்ளம் 'பெட்ரோமாக்ஸ்' விளக்குத் திரி மாதிரி-நான் உணருகிறேன். தொட்டாலோ, பட்டாலோ பிசுபிசுத்துப் போகும்; அம்மாதிரி நான் உள்ளுக்கே உளுத் துப் போய்க் கொண்டிருக்கிறேன். ஏன்? இன்னும் எத்தனை 'ஏன்'கள் என்னுள் கிளம்பிக் கொண்டே இருக்கின்றன. இத்தனை 'ஏன்'களுக்கும் என்னால் பதில் சொல்லி மாள வில்லை.''

ஏன்?

x x x

அந்தி வெய்யில் சாய்கையில் அவன் கால்கள் இழுத்துச் சென்றபடி அவன் நடந்து கொண்டிருந்தான். அவனுள் ளேயே மூழ்கிப் போயிருந்த அவன், விழித்து எழுந்து தன்னைச் சுற்றிப் பார்க்கையில், அவன் இருமருங்கும் எட்ட

எட்ட 'பங்களாக்கள்' கொண்டதோர் சாலையில் நடந்து கொண்டிருப்பதாகக் கண்டான். அடையாற்றில் ஏதோ ஒரு மூலை. ஜனநடமாட்டமும் இல்லை. எதிரே ஒருபெண் கொஞ்ச தூரத்தில் நடந்து கொண்டிருந்தாள். அவள் பின்னலின் வீச்சும், நடையில் இடையின் ஒடிப்பும் அம்மூக்குப் பொடிக் கலர்ப்புடவையும் எங்கேயோ பார்த்த ஞாபகமாய் இருந்தன. அகஸ்மாத்தாய் அவள் திரும்பிப் பார்த்தாள். அடையாளம் கண்டு கொண்டதால் 'சட்'டென அவள் முகம் மாறியது. திரும்பி அவனை நோக்கி எதிர் வந்தாள்.

"என்ன அம்பி?"

"யாரு, சாவித்திரியா?" வெய்யிலில் அவன் கண்கள் கூசின. அத்துடன் கொஞ்சம் எரிச்சலும் இருந்தது.

"என்ன ரொம்ப இளைத்திருக்கேளே? அடையாளமே தெரியவில்லையே! ஜுரமடிக்கிற முகமாயிருக்கே!"

"இருக்கலாம் எல்லாக் கலியாணமுமே—" என்று அசதியுடன் சிரித்தான்.

"நீ என்ன, இன்னமும் படித்துக் கொண்டுதானிருக்கிறாயா?"

"ஆமாம்; போன வருஷம் கணக்கில் தவறிப் போச்சு... என்ன உங்கள் ஆம்படையாள் உங்களிடம் வந்து சேர்ந்து விட்டாளா?"

"இன்னும் இல்லை—" என்று மனமில்லாமல் பதிலளித்தான். அவனுக்குச் சிறு கோபமும் வந்தது. "ஏது, என்னுடைய விவகாரங்களைப் பற்றி எனக்கிருக்க வேண்டிய சிரத்தைக்குக் குறைச்சலில்லாமல், அதில் சம்பந்தப்படாதவர்களுக்குக்கூட ரொம்ப இருக்கிறாப் போலிருக்கிறதே!"

அவன் பேச்சின் குத்தலை அவள் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

"உங்கள் விவகாரங்களில் எனக்குக் கண்டிப்பாய் அக்கிசு உண்டு. தவிர, உங்கள் விவகாரங்களில் நீங்களே ஈடுபடுவதால், உங்களுக்கு உங்கள் விவகாரங்களின் உண்மை மதிப்புத் தெரியாது. ஆனால் நான் எட்ட நின்றிருப்பதால் எனக்குத் தெரியும். நீங்கள் நினைச்சுண்டிருக்கற

மாதிரி ஒண்ணும் நடக்கப் போறதில்லை. அவள் இப் போதைக்குத் திரும்பி வரமாட்டாள்—"

"நீ ஏன் அப்படி நினைக்கிறாய்?"

அபசகுனம் போன்ற அவள் வார்த்தைகள் அவனுள் ஏதோ ஒரு தினுசான திகிலை விளைவித்தன.

"ஏன்?"—ஒரு தினுசாய் உதட்டைப் பிதுக்கினாள். "ஏன் என்றால், நான் என்னத்தைச் சொல்ல? உங்கள் அன்பை யும் லட்சியங்களையும் அறிந்து கொள்ள அவளுக்குச் சக்தி யும் கிடையாது; இஷ்டமும் கிடையாது. அவளே ஒரு 'அரைமூளைக்கேஸ்!' ... உங்களுக்குக் களைப்பாயிருக்கு என்று எனக்குத் தோணறது. கொஞ்ச நேரம் உட்காரு வோமா?"

"உனக்கு அவசரமில்லையா?"

"எனக்கு இனி ஒரு விதமான அவசரமும் கிடையாது—" என்று அவள் சிரித்தாள். வெறுப்பில் புளித்த சிரிப்பு.

புல் தரையில் இருவரும் சற்று நேரம் மௌனமாய் உட் கார்ந்திருந்தனர். சாவித்திரி முகத்தை நோக்குகையில் அதில் இவ்வளவு அழகு எங்கிருந்து வந்தது என்று தெரிய வில்லை. மூக்கு, கண் எனத் தனித்தனியாய் நோக்குகையில் அவைகளுக்கு அழகே யில்லை. அவள் கண்ணில் சற்று விளக்குப் பார்வை என்று கூடச் சொல்லலாம். ஆயினும் முகத்தில் ஒரு தனிக் கனிவு—களை உள்ளத்தின் வெளிச்சம் ஒளி வீசுவது போல்.

"அன்புக்கும் நியாயத்துக்கும் மிருகங்கள் கட்டுப்படும்; நாங்கள் மாட்டோம். ஏனென்றால், நாங்கள் பெண்கள்"—மறுபடியும் அப்புகைச் சிரிப்பு அவளிடமிருந்து வெடிப்புடன் கிளம்பியது. "எங்களுக்கே கொஞ்சம் பேய்க் குணம் உண்டு. எங்களுக்கு முன் யோசனை, பின் யோசனையெல் லாம் சில சமயங்கள் இருக்காது. அந்தந்தச் சமயத்துக்கு என்ன சாதித்துக் கொள்ளுவோமோ அதுதான் கணக்கு..."

அவன் புன்னகை புரிந்தான்.

"ஏது உன் வர்க்கத்தைப் பற்றி உனக்கு இவ்வளவு நல்ல அபிப்பிராயம்?"

'நீங்களேதான் பாருங்களேன். ஏதோ ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டதால், பெரிதாய்ச் சாதித்துவிட்டதாயும், உங்களைத் தன் சௌகரியப்படி சமைத்துக் கொள்ள முடியும் என்றும் தானே உங்கள் மனைவி நினைத்துக் கொண்டிருக்கிறாள்? எல்லாம் கொண்டாடினால் தான் உறவு என்கிறதை அவள் மறந்துவிட்டாள். அவள் வாழ்க்கையையே அழித்து விடக்கூடிய சக்தியையும் சௌகரியங்களையும் சமூகம் உங்களுக்குக் கொடுத்திருந்தும், நீங்கள் பயன்படுத்த அஞ்சுகிறீர்கள். நீங்கள் அவளை யஞ்சுகிறீர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்காக அஞ்சுகிறீர்கள் என்று அறியவில்லை. அவள் மேலும் தப்பில்லை; இவ்வளவு தூரம் பிரியம் வைத்துவிட்டு, கடமையையும் பாராட்டிக் கொண்டு நீங்கள் திண்டாடினால், அவள் மேல் தப்பா? அவள் என்ன செய்வாள்; தன் சுபாவத்தைத்தான் காட்டுகிறாள். பொறுமை, அன்பு, மேதை, லட்சியங்களில் வேரூன்றிய உங்கள் ஆண்மை-இவை அவளிடத்தில் வீண் செலாவணி. நீங்கள் கொண்டாடி ஒழுகும் லட்சியங்களுக்கே அவை செல்லுகிற இடத்தில் செல்லுபடியாகிறவரையில்தான் அவைகளுக்கு வெற்றி. அவை தோற்கிற சமயத்தில் அவைகளின் தோல்வி ரொம்பவும் பயங்கரம்...அவள் ஏதோ முரட்டுத் தனத்தை மந்திரமாய்க் கொண்ட வண்டிக்காரனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள்; அவளிடம் நீங்கள் அறியாமல் மாட்டிக் கொண்டு விட்டீர்கள்..."

அவன் காதைப்பொத்திக்கொண்டு கத்தினான்; "வாயை மூடு! வாயை மூடு! வதைக்காதே!"

சற்றுநேரம் இருவரும் மௌனமாயிருந்தனர்.

மேல் வானம் ரத்தச் செவேலாய் விட்டது. அதன் சாயை அவர்கள் மேலும், சுற்றியிருப்பவை மேலும் அடித்தது. இரவுக்கடங்குவதற்காக, பறவைகள் மந்தை மந்தையாய்ப் பறந்து போவதை இருவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அவரவர் மனம், அவரவர் எண்ணங்களில் மூழ்கிய வண்ணம்.

அவள் மெதுவாய், வானை நோக்கிய வண்ணமே....

"நான் இப்பொ அவளைப் பற்றி நினைக்கவில்லை; உங்களைப் பற்றியும் நினைக்கவில்லை. 'மாதா பிதா பாவம் மக்கள் தலையில்' என்கிற வசனம் பொய்க்காமல், உங்கள் இருவரிடையில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் அக்குழந்தையைப் பற்றித் தான் நினைக்கிறேன். அது அங்கேயே வளர்ந்தால் அப்பன் தெரியாக் குழந்தை; பலாத்காரமாய்த் தூக்கிக் கொண்டு வந்து நீங்கள் வளர்த்தால், ஆயி தெரியாத குழந்தை; இத்தனையும் நேர்ந்த பின்னர், நீங்களிருவரும் சேர்ந்து குடித்தனம் பண்ணினாலும், உங்கள் உறவின் கசப்பு அதைத் தாக்காமல் இருக்கப் போவதில்லை! கடைசியில், அதுக்கென்ன சுகம்? நல்லவேளை ஒரு தேறுதலாவது இருக்கிறதே; பிள்ளையாய்ப் பிறந்திருக்கிறதே-என் மாதிரி பெண்ணாய்ப் பிறவாமல்!"

"ஏது சாவித்திரி, இன்னிக்குப் பிரமாதமாய்ப் பேசுகிறாய்?"

"ஆமாம்"-அவள் கண்கள் வானிலிருந்திழிந்து நேருக்கு நேராய் அவன் பார்வையைச் சந்தித்தன.

"நான் ஏன் படிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? என்னைப் பற்றி ஒருவரிடமும் நான் சொன்னதில்லை. உங்களிடம் சொல்லுகிறேன்; என் தாயும் உங்கள் மனைவி போல் வாழாவெட்டியாய்ப் போனவள் தான். ஆனால் இம்மாதிரி அசட்டு அழும்பு பண்ணி, தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளவில்லை. விதி அவளை மோசம் செய்து விட்டது.

என்ன நடந்தது தெரியுமோ? என் தாய் கிராமாந்தரத்தில் இளையாளாய் வாழ்க்கைப்பட்டாள். இந்தச் சம்பவம் நடக்கிறபோது நான் என் தாய் வயிற்றில் ஆறு மாதச் சிசுவாய் இருந்தேன். அப்பா எங்கேயோ வெளியூருக்குப் போயிருக்கிறார்.

உக்கிராண உள்ளே ஏதோ சாமான் எடுக்கப் போயிருந்திருக்காள் அம்மா, பரணிலிருந்து பாம்பு தொங்கறது தெரியல்லே. 'புஸ்'ஸுன்னு சீறி, படார்னு கன்னத்திலே போட்டுடுத்து.

'ஐயோ! பாம்பு' என்று அம்மா கதறிண்டு கன்னத்தைப் பிடிச்சுண்டு வெளியே ஓடி வந்தாள். கண் மூடிக் கண் திறக்கறதுக்குள் "ஜே ஜே"ன்னு கூடிப் போச்சு. உப்பைக் கொண்டா, மிளகைக் கொண்டா. மந்திரவாதியைக் கொண்டா என்று எல்லோரும் பறக்கறத்துக்குள்ளே மாமி யார் மடியில் படுத்திண்டிருக்கிற அம்மாவுக்கு மயக்கம் போட ஆரம்பிச்சுடுத்து.

அப்போ பக்கத்தாத்திலேருந்து ஒரு பையன் ஓடி வந்தான். பதினெட்டு, இருபது வயதிருக்கும்; பட்டணத்தில் மெடிகல் காலேஜில் படித்துக் கொண்டிருப்பவன், லீவுக்கு ஊருக்கு வந்திருக்கான். சட்டென மண்டியிட்டு அம்மா கன்னத்தில் பாம்பு கடிச்ச இடத்தில் வாயை வெச்சு ரத்தத்தை உறிஞ்சி வெளியில் துப்பினான். இரண்டு மூணு தடவை துப்பினான்.

அம்மா தப்பிச்சாள். அந்தப் பையனை மெச்சாதவாளே கிடையாது. எங்கப்பா ஊரிலிருந்து வந்தார். சமாசாரத்தைக் கேட்டார். அவர் உற்சாகமாயில்லையாம். அவரே ஒரு தினுசாம். அம்மாவைப் 'பார்த்து, மூட்டையைக் கட்டிண்டு உங்காத்துக்குப் போயிடு' என்று சொல்லி விட்டார்.

"என்னடா?" என்றாள் என் பாட்டி.

"பாம்பு கடிச்சா விஷத்தை வாங்கறதுக்கு எவ்வளவோ வழியிருக்கு. அந்தக் காலிப்பயல் இவள் கன்னத்தைக் கடிச்சுத் தான் காப்பாத்தணுமாக்கும்! அவன் வந்ததே மொதக் கொண்டு இவள் ஒரு மாதிரியாத்தான் இருக்கா— கிராப்புத் தலையும் கோட்டும் சூட்டுமா நான் இருக்கேனா... சரி சரி; கட்டு நடையை..."

எங்கப்பா பெரிய மூர்க்கனாம். உலகத்திலிருக்கும் கெட்ட குணங்கள் அத்தனையு முண்டு அவரிடம். ஆனால் மத்தவரிடம் ஒரு குறை காணச் சகிக்கமாட்டார். 'அடே, ஆபத்துக்குப் பாபமில்லை' என்று என் பாட்டி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாச்சு; பயனில்லை. அம்மா பிறந்தகம் வந்து சேர்ந்து விட்டாள்.

இத்தனைக்கும் என் தாய் வீட்டில் கொஞ்சம் 'பசை

யுள்ளவர்கள். அப்பாவைக் கோர்ட்டுக்கிழுத்து ஜீவனாம்சம் அது இது என்று பிடுங்கலாம்; ஆனால் யாருக்கு அவமானம்? அப்படியே பிடுங்கினாலும் அவர் அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்ட வாழ்க்கையைத் திருப்பிப் பெற முடியுமா? என்னென்னவோ பண்ணிப் பார்த்தார்கள். ஏதோ பெரிய தப்புப் பண்ணி விட்டாற் போல் காலில் விழுந்து, "மன்னிக்கணும்; எங்கள் பெண் உங்கள் வீட்டுக் கொட்டிலில் சாணம் பெருக்கி யெடுத்திண்டாவது இருக்கட்டும்; ஆனால் உங்கள் வீட்டில் இருக்கட்டும்—" என்றெல்லாம் கெஞ்சிக் கேட்டுப் பார்த்தார்கள். அந்தக் காலத்தில் காசை விட மான ஈனத்தைத் தான் பெரிசாய் மதிச்சாள். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை.

அதற்கப்புறம் என் தாய் நடத்தின ஒரு வாழ்க்கையிருக்கு பாருங்கோ, அதை நரகம் என்று தான் சொல்லணும். அவள் வாழ்ந்தது வாழ்வல்ல, ஏதோ உயிரோடிருந்தாள்; அவ்வளவு தான். உயிரோடிருந்த வரைக்குமே அந்த உயிரை அவள் எப்படிச் சகித்துக் கொண்டிருந்தாள் என்பதே ஆச்சரியம் தான். இந்த ஊர்ப் பேச்சே அவளைக் கொன்று விட்டது. ஏன்னா, வந்த புதிசிலே ஏதோ 'த்ஸோ த்ஸோ' கொட்டிண்டு இருந்தவா ளெல்லாம், அப்புறம் இந்த மனஸ்தாபம் தொடர்ந்துண்டே போகப் போக ஒரு தினுசாப் பேசஆரம்பிச்சுட்டாள். பாட்டிகளெல்லாம் காலை நீட்டிண்டு உட்கார்ந்துண்டு, நீட்டிய காலை உருவிண்டே, 'என்னடீ' நம்ப கோடியாத்துப் பெண் என்ன தான் வெகுளியாயிருந்தாலும், ஒரு பொறி நெருப்பு இல்லாமே இவ்வளவு புகையுமாடி?' என்று எங்க அம்மாவின் குலைந்த வாழ்க்கையை அலசும் சமயத்தில், அதுவும் பேச்சின் அர்த்தமும் வினையும் தெரியாது நான் கேட்டதை அவளிடம் அப்படியே ஒப்பித்து அவளை அதுக்கு அர்த்தம் கேட்கையில், வேறு என்ன வினை வேண்டும்?

'குழந்தை முகத்தில் கோடி துக்கம்' என்னும் பழமொழியெல்லாம் உங்கள் மனைவியையும், என் தாயையும் போன்றவர்களுக்காக ஏற்பட்டதில்லை. குழந்தை கையைக் காலை

உதைச்கண்டு கொக்கரிக்கிறது. இப்போ வேடிக்கையா யிருக்கும்; அப்புறம் அதுவே தான் கழுத்துக்கும் சுருக்கு. அப்போன்னா தெரியப் போறது? நான் என் அனுபவத்தைக் கொண்டு சொல்லறேன், எனக்கும் என் தாய்க்கும் கூடப் பிடிப்பு விட்டுப் போச்சு, எனக்கு நினைவு வந்து, எனக்குத் தகப்பனில்லாத மர்மம் அரை குறையாய், மூடு சூளையாய், நாலு பேர் வாய் வழி வெளியாகையில்.

அப்புறம் ஒரு நாளைக்கு எங்கம்மாவைப் பெத்த அம்மா, ஏதோ வார்த்தைத் தடிப்பில் என்னெதிரே என் அம்மாவைப் பார்த்து, ''ஏண்டி, அன்னிக்குப் பாம்பு கடிச்ச போதே நீ செத்துப் போயிருக்கக் கூடாதா? எனக்குத் தீராத் துக்கமா வந்து சேர்ந்திருக்கையே!—'' என்று கேட்டு விட்டாள்.

அடுத்த நாள் காலை எங்கம்மாவை எங்கெல்லாமோ தேடி விட்டு, அப்புறம் கொல்லைப் புறக் கிணற்றிலிருந்து அவள் பிணத்தை எடுத்தார்கள்.''

சாவித்திரி கொஞ்ச நேரம் அடங்கினாள். வெகு நாழிகை விடாமல் பேசிக் கொண்டிருந்ததாலோ என்னவோ மூச்சுத் திணறிற்று.

''கொ கோ—கொ—கோ—''

அந்தச் சப்தம் மரங் கொத்திப் பறவையினுடையதா? பத்தடி தூரத்தில் இரண்டு அணில்கள் வாலைத் தூக்கிக் கொண்டு, ஒன்றையொன்று துரத்திக் கொண்டே 'கீச்கீச்' எனக் கத்திக் கொண்டு ஓடின. அடுத்த நிமிஷத்தில் எந்தப் பூனை வாயிலோ; ஆயினும் இப்பொழுது எவ்வளவு சந்தோஷமா இருக்கின்றன!

''எங்கம்மா போய் விட்டதனால் என் வாழ்க்கை விடிந்து விட வில்லை. 'யாரு, அந்தாத்து சம்பந்தமா பண்ணப் போறேள்? அவ அந்தப் பெண்ணுடைய பெண்ணுன்னா? வயத்திலே இருக்கறத்திலேயே, அம்மாவை ஆத்தோடு கொண்டு வந்து சேர்த்துடுத்து! அதுவும் அப்பனிருக்கை யிலேயே. அத்தோடு போகாமே இப்போ அவளையும் உருட்டிடுத்து. அதிர்ஷ்டம் அவ்வளவு அமர்க்களமாயிருக்கு! போறும் போறாததுக்கு, மூச்சு விட்டத்துக்கெல்லாம், 'ஆத்

திலே விழறேன், கிணத்திலே விழறேன், மண்ணெண் ணெயைக் கொட்டிக்கறேன்'னு அசட்டுப் பிசட்டுன்னு ஏதாவது பண்ணித்துன்னா? பிறந்த இடத்தைக் கெடுத்ததோ டில்லாம, புகுந்த இடத்தையும் விடியாமே பண்ணிடும்; எல்லாம் அதன் தாய் வயத்து மண் தானே!"... இந்தச் சிபார்சோடு நான் என்னத்தை உருப்படறது? அதனால்தான் படிக்கிறேன்.

ஆனால் படிப்பால் எங்களுக்கென்ன பயன்? கடவுள் எங்களைக் கொடியாய்ப் படைச்சிருக்காளே யொழிய மர மாய்ப் படைக்கல்லையே! எதையாவது நாங்கள் தொத்திண்டு தான் படரணும். நாங்களே ஊன்றி வளரப் பார்த்தால் உலர்ந்துதான் போவோம். உடலில் இத்தனை துடிதுடிப்பும், பதை பதைப்பும் பரதவிக்கையில், படிப்பையும் வெச்சிண்டு நான் என்ன செய்ய?"

உணர்ச்சி வேகம் அத்தனையும் முகத்தில் குழுமுகையில் அவள் நெற்றிப் பொட்டு நரம்பு 'பட்பட்'டென அடித்தது. சட்டென்று அவன் கையைப் பிடித்தாள். பேச்சு வேகத்தில் அவன் பக்கமாய் அவள் முகம் சாய்கையில், அவள் மூக்கின் அனல் அவன் முகத்தை எரித்தது.

"அம்பி—அம்பி—என்னை மணந்து கொள், வாழ்க் கையை விட்டதால் உன் மனைவி மானம் வெட்கத்தை விட்டு விட்டாள்; வாழ்க்கை வேணுமென்கிறதால் நானும் மானம் வெட்கத்தை விட்டுக் கேட்கிறேன். என்னை மணந்து கொள்ளேன்! இன்னும் நம் வாழ்க்கையை உருப்படச் செய்ய எனக்குச் சக்தியிருக்கு. உன்னை என் மார்மேல் சாத்தி, மடிமேல் போட்டுக் கொண்டு, உன் உடல் நோயை யும், மன நோயையும் என்னால் மாத்த முடியும். நீ என்னைக் கல்யாணம் தான் பண்ணிக்கணும்னு எனக்கு அவசியமில்லை; ஆனால் நாம் உலகத்தின் விரோதத்தைச் சம்பாதிச்சுக்காமே, பிரியாமலும் இருக்கிறதுக்கு அந்தச் சடங்கை நான் ஏற்கிறேன்..."

"ராஜம்...?" அவனையுமறியாமல் அவ்வொரு வார்த்தை பெரும் வினாவாய்க் கிளம்பியது.

"ராஜம்...? அவள் விதைத்த வினையை அவளேதான் அறுக்கணும்! தானும் வாழாமல் பிறத்தியாரையும் வாழ வொட்டாமல் செய்ய அவளுக்கு உரிமையில்லை. உன் வியர்த்தமான பாசத்துக்கு நீ ஆகுதியாகறத்துக்கு உனக்கும் உரிமையில்லை. நீ உன்னோடு போகவில்லை. உன்னை எனக்குத் தெரியும். நீ எல்லாருக்கும் உபயோகப்படுகிறவன்; எனக்கும் பயன் படேன். என்னால் நீயும் பயன் படுவாய். உன்னில் எனக்கும் கொஞ்சம் கொடேன். நான் அந்தப் பாவி போல் இல்லாமல் பத்திரமாய், நீ என்னிடம் கொடுக்கும் உன்னைக் காப்பாற்றிக் கொள்கிறேன். அதனால் உன்னையும் காப்பாற்றுவேன்; என்னையும் காப்பாற்றிக் கொள்வேன். அம்பி—அம்பி!"

அவனுக்குத் தலை சுற்றியது; கையில் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

நடந்ததிலிருந்து விடுபட முடியவில்லை; நடப்பது புரியவில்லை. இருந்தும் நடக்கப் போவதைப் பற்றித் தான் எப்பொழுதும் யோசனை! மன்னிப்பு, மறதி, புதுவாழ்வு!... என்ன ஓட்டை வார்த்தைகள்; நடந்தது எப்பவும் நடந்தது தான். மாற்ற முடியாது, அழிக்க முடியாது.

நடந்ததை மறக்க வேண்டுமானால் மனத்தின் உணர்ச்சிகளை மரத்துப் போக அடித்துக் கொண்டால்தான் முடியும். 'அதுவோ முடியுமா? நடந்த வரைக்கும், ஊனம் ஊனம்தான், அதுவரைக்கும் முதல் தூய்மை கெட்டது கெட்டதுதான். எத்தனை எண்ணங்கள்...

அவன் தலை சுழன்றது.

"சாவித்திரி...எனக்கும் உடம்பு சரியாயில்லை...'

"டாக்டரிடம் போவோம், வாருங்கள்..."

* * *

வெளித் தாழ்வாரத்தில், சாவித்திரி அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அவள் மனம் சொல்ல இயலாத ஒரு 'குஷி'யில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது, இன்னமும் ஒரு மாதம் கழித்து அவள் பேர் கொண்டதோர் நோன்பு வரப் போகிறதே, அதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்

தாள். மஞ்சள் சரட்டைக் கட்டிக் கொண்டு, 'உருக்காத வெண்ணெயும் ஓரடையும் தட்டி வைத்தேன். ஒருக்காலும் என் கணவர் என்னை விட்டுப் பிரியாமல் இருக்கணும்—' என்று விளக்கெதிரில் விழுந்து கும்பிடுவாள்.

ராஜமும் அதே மாதிரிச் சொல்லி, அந்த நோன்பை நோற்பாள் என்பதை நினைக்கையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது. அர்த்தம் பிரிந்து போன சடங்குகளின் விபரீதம் மிகவும் வேடிக்கையாய்த் தானிருந்தது.

'ஒருக்காலும் என் கணவர் என்னை விட்டுப் பிரியாமல் இருக்கணும்'—

டாக்டரின் அறைக் கதவைத் திறந்து கொண்டு அம்பி மெதுவாய் வந்தான். அவன் முகம் சவமாய் வெளுத்திருந்தது. வாயில் உயிரற்றதோர் புன்னகை உறைந்து போயிருந்தது. அவன் முகம் பார்க்கச் சகிக்கவில்லை.

''என்ன, ஒரு மாதிரியா...''

அவள் கேள்வி முடியு முன்னர், 'லொக்கு லொக்கு' என்று இருமல் அவனைப் பிடித்துக் கொண்டது. கீழே விழாதபடி அவனைப் பிடித்துக் கொண்டாள். ஒரு கொத்துக் கோழை கழன்று, அங்குத் துப்ப வைத்திருக்கும் பாத்திரத்துள் விழுந்தது.

கூட ஒரு நாலு சொட்டு ரத்தம்,

''ஐயோ இதென்ன?' என்று அலறினாள் சாவித்திரி, அடி வயிற்றை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு.

அவன் முகத்தில் அவ் வுயிரற்ற புன்னகை ஒரு நொடி உயிர் பெற்றது,

''டி.பி.''

சாவித்றிரி மேல் இருள் பொதிகள் மள மள வெனச் சரிந்தன.

அம்பி அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்தான். அசதியால் அவன் கண்கள் மூடின. பல வர்ணச் சக்கரங்கள், பொத்திய இமைத் திரையில் கர கர வென்று சுழன்றன. வாசலில், நெருப்பணைக்கும் வண்டி 'கணகண' வென்று மணியலறப் பறந்தது. அந்தக் கோஷத்திடையில், அன்று காலை அம்மாவைப் பார்க்க வந்த மாமி, 'தை பிறந்துடுத்து—வழி' பிறந்துடும்பாருங்கோ—எல்லாத்துக்கும் தான் சொல்றேன்—' என்று கூறிய வார்த்தைகள் ஒலித்தன.

# ஐயா

ஐயா என் பெரிய தாத்தா. என் பாட்டனாருக்குத் தமையனார்.

ஐயாத்துரை, அய்யாத்துரை, ஐயா—ஊருக்கே ஐயா—நாங்களும் உள்படத்தான்.

ஒரு தடவை அவரைப் பெரிய தாத்தா என்று முறை வைத்துக் கூப்பிட்டு நான், அவரிடம் வாங்கிய அறையை நினைக்கும் போதெல்லாம் செவி இன்னும் 'ரொய்ஞ்ஞ்...'

என் பாட்டனார் தமிழ்ப் பண்டிதர்.

குடும்பத்துக்கே சம்பாதிக்கும் பேர்வழி. அதாவது உத்தியோகம் பண்ணி—அவர் ஒருவர்தான்.

குடும்பம் பெரிது—வருவோர் போவோரும் அதிகம்.

எங்கள் வீடு ஒரு 'ஜங்ஷன்.'

பதினைந்து வயதில் என் பாட்டனார் ஒரு கனவு கண்டாராம்...

—நாங்களே கனவு காண்கிற கூட்டம்!

பிள்ளையார் அவர் வாயில் ஒரு கற்கண்டைப் போட்ட மாதிரி. மறுநாள் காலையிலிருந்தே அவர் பாட்டாய்ப் பொழிகிறார்.

இந்தப் பாடல்கள் அனேகமாய்க் குலதெய்வத்தின் பேரில் தோத்திரங்கள்.

முழுக்க முழுக்க தோத்திரங்களுமல்ல;

கெஞ்சல்கள்

கொஞ்சல்கள்

மிஞ்சல்கள்
மிதமிஞ்சல்கள்
அதட்டல்கள்
அலுப்புகள்
மீண்டும் துதிகள், உருகல்கள்.

குடும்பத்தின் அவ்வப்போதைய தேய்வு, ஓய்வு, ஓய்ச்சல், ஒடுங்கல், ஓங்கல் நிலைமைக்கேற்றபடி.

எல்லாவற்றிற்கும் காரணமும் அவள்தான்.

விமோசனமும் அவள்தானே!

எளிய சொற்களில் சிக்கலற்ற சிந்தனை. பட்டுக் கயிறின் உரம். முகத்தில் எப்போ வெடிக்குமோ எனும் ஒரு வெகுளி.

ஆனால் அருள்வாக்கு.

அவர் சாகும்வரை புனைந்த கவிதைகள் அனைத்தையும், மணிமணியான தன் பொடியெழுத்தில் கறுப்பு மசியில் ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தார்.

பின் சந்ததிகள் அந்தப் புத்தகத்தைப் பூஜையில் வைத்துக் காப்பாற்றி வந்தன; புத்தகமும் தலைமுறைகளை—அவைகளின் நம்பிக்கை, பக்தி, சிரத்தைக்கேற்ப காப்பாற்றி வந்தது.

ஆனால், போகப் போகத் தலைமுறைகளைத்தான் தெரியுமே!

ஆனால், முழுக்கவும் தலைமுறைகளைக் குற்றம் சொல்வதற்கில்லை.

மசி மங்கி, பக்கங்கள் பழுப்பேறி மஞ்சள் பூத்து, பாளம் பாளமாய் உடைந்து—தையல் கழன்று...

ஒரு நாள் கிணற்றடியில் பேராண்டி ஒரு சின்னக் காகிதத் துண்டில் பற்பொடியை டப்பியிலிருந்து தட்டிக் கொண்டிருந்தான்.

நான் குளித்துக் கொண்டிருந்தேன்.

கறுப்புமசியில் எழுத்துக்கள் முத்து வடிப்பது நான் நின்றவிடத்திலிருந்தே தெரிந்தது. பயல் கையிலிருந்து பிடுங்கினேன்.

'அவள் என்ன தாராமல் இருப்பாளோ...?
அவள் என்ன சத்தியம் மறந்தவளா?'
இரண்டு வரிகள் தாம்.
நெஞ்சு 'சுறீல்.'
எனக்கு அழுகை வந்துவிட்டது.
அத்தனை கஷ்டத்திலும் அவ்வளவு நம்பிக்கை.
நம்பிக்கை என்று சொன்னால்கூடப் போதாது.
'உனக்காச்சு...எனக்காச்சு...' என்ற உடும்புப்பிடி.

என் தகப்பனார் புழுங்குவார். பண்டங்கள் மலிவாய்ச் செறிந்த அந்த நாட்களிலும் ராவிலோ—பகலிலும் கூட மாதம் ஒன்றிரண்டு தினங்கள் வலுப்பட்டினிகள் தவறாதாம். 'அம்பாள் கண் திறக்கிறோளோ இல்லையோ; அன்றாடம் அரிசிக் கூடைக்காரி யோகம்பாள் படியளந்தால்தான் உண்டு. அவளை விட்டால் கதியில்லை. பாவம் பார்த்து, அவள்தான் சற்று முன்னே பின்னே வாங்கிக் கொள்வாள். உலைபாட்டுக்குக் காய்ந்து கொண்டிருக்கும். அவளை எதிர்பார்த்துக் கொண்டு மன்னி கூடத்துக்கும் வாசலுக்குமாய் அலைவாள். வந்தால் வயிற்றில் பாலை வார்த்தாள். வராவிடில், அந்த உலை எங்கள் வயிற்றுக்கு மாறிவிடும்! நாங்கள் குழந்தைகள், மூலைக்கொருவர் உண்டு, பசிக்களையில் உறங்கிவிடுவோம். பெரியவர்கள் திண்ணையில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு பழங்கணக்குப் பேசிக் கொண்டிருப்பார்கள், வயிற்றுக்கு வழியில்லை. என்ன சவுடால் வேண்டியிருக்கோ?'

என் பாட்டனார் அம்புபோல், உயரமாய், நெட்டையாய் நெருப்புச் சிவப்பாயிருப்பார்—எப்பவும் சுத்தமாய் 'டீக்'காய் உடுத்தி. தமிழ்ப் பண்டிதராயினும் அவருக்கு மாப்பிள்ளை வாத்தியார் என்று பெயர்! வாரத்தில் ஒன்றிரண்டு நாள் இரவு வீடு திரும்ப மாட்டார். மன்னி மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பாள். மன்னி நல்ல மனுஷி. நல்ல கறுப்பு.

ஆனால், அது வேறு கதை.
ஐயா சந்தனக் குழம்பு நிறம்.
(''அவாள் கூட்டமே வெள்ளைக்காரக் கூட்டம்னா...!

அகம்பாவம் பிடிச்ச கூட்டம்; கோவிலே அவாள் குடும்ப சொத்து மாதிரி. அம்மன் சன்னதி யென்ன அவாளுக்குத் தான் குத்தகையா...? கோவில் குருக்கள் முதற்கொண்டு அவாளுக்குத்தான் கும்மியடிக்கிறார். தீபாராதனைத் தட்டு முதல் மரியாதை அவாளுக்குத்தான். மண்டகப்படிகாரர் கூட இரண்டாம்படி. அகம்பாவம் பிடிச்ச கூட்டம்!")

முகத்தில் எப்பவும் மூணு மாதத்தாடி. சடைத்தலை. அழுக்கு.

அழ்-ழ்-முக்-கு- பொடிப் பழக்கம் வேறெ. ஐயாவுக்குக் குளியல் என்றாலே 'அலெர்ஜி.'

அவருக்கு இருபது வயதிலேயே, மனைவி தலைப் பிரசவத்தில் இறந்து விட்டாள். குழந்தையும் தக்கவில்லை. யார் யாரோ என்னென்னவோ சொல்லிப் பார்த்தும், அவர் மறு மணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் அதனால் கடைசி வரை அவர் பெயர் கறைபடவில்லை.

என் பாட்டிதான் எல்லாருக்கும் மன்னி.

மத்தியான வேளையில், சமையலறையில் பானைகள் குடையல் சத்தம். எலியில்லை. இது தனியாகத் தெரியும்.

"யாரது..."

—மன்னி வரும் காலடி கேட்டு-வெல்லப் பானையுள் விட்ட கையை எடுக்க நேரமிருக்காது. பானையோடு ஐயா விழுந்தடித்துக் கொண்டு கொல்லைப்புறமாய் ஓடுவார். நாங்களும் பின்னாலேயே ஓடுவோம். எங்கள் பாடு 'மோக்ளா.'

"ஐயா...! ஐயா...! வியாழக்கிழமை உங்கள் அம்மா திவசம்!"—மன்னி கத்துவாள்; "வேறு வெல்லம் இல்லை!"

"பரவாயில்லை. என் அம்மாவுக்குத் தித்திப்புப் பிடிக்காது!"—ஒரு கையில் பானை. மறுகையை ஆட்டிக்கொண்டே ஐயா எதிர்க்குரல் கொடுத்துக் கொண்டே ஓடுவார்.

மாலை திரும்பியதும் எங்களுக்குத் திட்டு உதை. மன்னி வயிற்றெரிச்சலில் கத்துவாள், அழுவாள்.

ஐயா பதிலே பேசமாட்டார். திருதிருவென்று விழித்துக் கொண்டு, கூடத்தில் குந்திட்டு உட்கார்ந்த வண்ணம் கட்டாந்தரையில் சுட்டு விரலால் என்னவோ எழுதிக் கொண்

டிருப்பார். எப்பவும் அவருடைய பச்சாத்தாபப் 'போஸ்' அதுதான்!

திவசத்துக்கு முதல் நாள், வயிற்றெரிச்சலில் திட்டிக் கொண்டே மன்னி வெல்லப்பானையைத் திறந்தாள்.

''ஐயோ, இதென்னடி மாயம்? இல்லி பில்லி சூன்யமா? ஐயா...! ஐயா...!''

முன்னைவிட வெல்லம் கூடுதலாகவே யிருக்கும். நல்ல வெள்ளை உருண்டை வெல்லம். ஐயா பதிலே பேசமாட்டார். கூடத்தில் குந்திட்டு உட்கார்ந்த வண்ணம் கட்டாந் தரையில் சுட்டு விரலால் எழுதிக் கொண்டிருப்பார். முகத்தில் ஒரு புன்னகையின் சோடைகூட இருக்காது. அதே திருட்டுமுழி.

ஊரான் வீட்டு மரத்திலேறி, இளநீரைப் பறித்துக் குடிப் பார். எங்களுக்கும் கொடுப்பார். தாடி நுனியில் இளநீர் சொட்டும். எப்பவும் ஓர் அவசரம். சொந்தக்காரன் பார்த்து ஆட்சேபித்தால், அவன் செவி கூசி-செவி பொத்திக் கொள் ளும் வகையில் வாயில் வந்தபடி வைவார்.

''என்ன தைரியம் உனக்கு? என்னவோ அடிக்கிறாப் போல் வரையே...எப்படிக் காலம் கெட்டுப் போச்சு பார்த் தியா? இந்தத் தென்னை மரத்துக்கு எப்படித் தண்ணீர் பாய்ச்சி, எருப்போட்டு நீ காப்பாத்தினேன்னு எனக்குத் தெரியாதா...? என்னடா நீங்கள் எல்லாம் அப்பன் சேர்த்து வெச்சுட்டுப் போனதை அழிக்கிறவங்க தானேடா? உன் அப்பன் இருந்தால் நான் மரமே ஏற வேண்டாம். இளநீரைச் சீவி பொக்க மட்டும் கத்தியைப் பக்கத்திலேயே வெச்சுட்டு, கைகட்டி எட்ட நிப்பான். டேய் இந்த வாழைப் பட்டைக் கத்தியைப் பார்த்தாயா? உன் அப்பன் கொடுத்ததுதான். அவன் நினைவா வெச்சிண்டிருக்கேன். இதோடு பிடி மூணு தடவை கயண்டாச்சு, ஒரு தடவையேனும் ஆணீ அடிச்சுக் கொடுக்க உனக்குத் துப்பு உண்டா...?''

''ஏஞ்சாமி! என் சொத்துக்கு உனக்குக் கணக்குச் சொல்லியாகணுமா...? என்னவோ கேட்டால் என்னென் னவோ பேசிகிட்டுப் போறியே? தமிழ் அய்யா வீடுன்னு

பார்க்கறேன், இல்லாட்டி...?''

''இல்லாட்டி என்னடா பண்ணுவே? போலீசுலே பிடிச்சுக் கொடுப்பையாக்கும்! அவனும் தைரியமாய் என்னை இழுத்துண்டு போவானாக்கும்...நீ உன் பெண்டு பிள்ளை யோட வாசல்லே நின்னு பார்த்து மகிழ்வாயாக்கும்! ஏய்'' நான் உன் மாதிரி ஏத்தப் பாட்டுப் பாடி வேணா இறைச் சிருக்க மாட்டேன். ஆனால், என்னிக்கேனும் பல் தேய்ச்சு இதே மரத்தடியில்—இது கன்னாய்ருந்தப்போ வாய் கொப் பளிச்சிருப்பேன். அதற்குமேல் ஜலமும் உன் இளநீரில் இல்லே, உப்புக் குரும்பை. இதுக்கு உனக்கு இவ்வளவு வாய் கிழியறது...!''

''ஐயா எருமை மாட்டுக்குப் பிரசவம் பார்ப்பார். கட்டி லுக்குக் கயிறு பின்னுவார். வெகு அழகாகக் கூடை முடை வார். குடிசைக்கு ஓலைக் கூறை வேய்வார். வாழைப்பட்டை யைச் சீவிச் சுரண்டி இலை தைப்பார். இடுப்பில் எப்பவும் வாழைப்பட்டைக் கத்தி செருகியிருக்கும். பளப்பள...''

கோலம் போட்டால் இன்று முழுக்கப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்! பொம்மனாட்டிகள் பார்த்துக்கொண் டிருப்பார்கள்.

எடுபிடி வேலைக்கு ஐயாவைக் கூப்பிடு! ஆனால், ஐயாவை நம்ப முடியாது. இஷ்டமில்லாவிட்டால். இடை யில் அப்படியே விட்டுப் போய் விடுவார்.

படிப்பு வாசனையும் அறவே கிடையாது.

உருப்படியாக உதவாத ஐயா, ஆனால், யாருக்கும் வேண்டியவர், ஐயா, பண்ணுலதெல்லாம அக்ரமம்; ஆனால் பொருட்டாய் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

அள்ளிச் செருகி அடிகனத்த வேட்டியின் தலைப்பைப் பிடித்த வண்ணம் அடிமேல் அடி வைத்து ஐயா உள்ளே நுழைவார்.

''அவன் இருக்கானா...?'' 'அவன்' என் தாத்தா.

வேட்டித் தலைப்பைக் கீழே விட்டதும் பச்சைப் பசே லென்று அப்போதுதான் பறித்த கத்திரிக்காய் கூடத்தில் நாலா பக்கமும் சிதறி உருண்டோடும்.

''என்ன ஐயா அது? இன்னிக் காலையில்தான் பொடிக்கு காசில்லேன்னு மூக்கால் அழுதேள்...?''

ஐயா கத்திரிக்காயை நறுக்க ஆரம்பிச்சாச்சு. எப்பவும் இடுப்பில் செருகிய வாழைப்பட்டைக் கத்தி. துண்டிக்காமல் அடிவரை நாலாய்ப் பிளந்து-குட்டி குட்டியா-குண்டுகுண்டா குழந்தை கத்திரிக்காய். மருந்துக்கு ஒரு விரை? ஊஹூம்... வெண்ணெய், வெண்ணெய்.

''மன்னி, குழம்பு உருளியை அடுப்பில் போடு! ஊம்-சுருக்க! மஞ்சள் பொடியைக் கொஞ்சம் கூடவே போடு. காய் வேக ஆரம்பிச்சு நிறம் மாறினதும் அதுக்கே அதன் அடையாளம் தெரியாது. அப்புறம் உனக்கென்ன? வாசல் கதவை மட்டும் சத்தே ஒருக்களி...''

அது உருளியல்ல. கிட்டத்தட்ட ஒரு சின்ன அண்டா. குடும்பமும் பெரிசு. கொஞ்சநேரத்தில் 'குழம்பு' காய்கை யிலேயே வாசனை கூடத்தைத் தூக்கும். பருப்பா, மண்ணாங் கட்டியா? எல்லாம் மன்னியின் கை 'வாஸம்' தான்! வேளை பொழுது இல்லாத எங்கள் ஓயாப் பசிதான். இழுத்துக் கட்டிப்பிடித்த இந்த வயிறுக்கு எப்போதேனும் விடுதலை வேண்டாமா? ஏதோ 'ஒரு நியாயம்' தானே தன்னை இந்த சமயம் செலுத்திக் கொள்வதாகவே எங்களுக்குத் தோன் றிற்று.

வயிற்றின் நியாயம்.

எல்லாரும் ஓர் 'இழு' இழுப்போம், ஆமாம்! மன்னியும், மற்ற பெண்டுகளும் சேர்ந்துதான். அதுவும் எங்கள் அத்தைப் பாட்டி ஒரு காலை நீட்டியபடி வெறும் குழம்பைத் தேனாட்டம் உள்ளங்கையில் சொட்டிக் கொண்டு—நாக்கை ஒவ்வொரு தடவையும் 'டொக்டொக்' கென்று கொட்டிக் கொண்டு, உள் தொண்டைவரை இழுப்பது இன்னும் நினை விருக்கிறது.

''தேவாமிருதம்! தேவாமிருதம்!!''

பண்ணின அரைமணியில் அண்டா—இல்லை உருளி—இல்லை அண்டா சரி—என்னவோ காலி. எங்கள் பாடு

திணறிப் போகும். உண்ட சிரமம் சாப்பிட்ட இடத்திலேயே சாய்வோம், கைகாயும், 'அடே கையலம்புங்கடா...கை காய ஆகாதுடா!''

''சரிதான் போ மன்னி!''

ஆனால், ஐயாவின் பாம்பு வயிற்றில் அவ்வளவு உணவும் எங்கே 'பாக்' ஆகுமோ...? வயிறு குழியும்.

நாங்கள் 'வாண்டுகள்' எங்களுக்கு நினைவு தெரிந்த நாள் முதல், ஐயாவின் வாழ்க்கைக்கதியே இப்படித்தான். சொன்னதையே நாங்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாலும் ஐயாவின் ப்ரபாவம் எங்களுக்கு அலுக் காது. எங்களுக்குச் சரியாக எங்களோடு பேசிச் சிரித்து விளையாட வேறு யார்...?

பிறகு—

இது ஒரு நீண்ட பிறகு,

பிறகு ஐயாவுக்கு மெய்க்காவல் வேலை கிடைத்தது. அதாவது கோவில் 'வாட்ச்மேன். வேலை ஒன்றும் காலியா யில்லே... ஐயாவுக்கென்றே வேலை போட்டுக் கொடுத்தார் கள்! இதற்குத் தனிப்பட்ட காரணங்களை எப்படிக் கணக் கெடுப்பது...?

உள்ளூர் என்பது ஒன்றாயிருக்கலாம்.

எங்கள் குடும்பத்துக்கே கோவில் மேல் இருந்த அலாதி பக்தி, அதனால் தர்மகர்த்தாக்களுக்கு இந்தக் குடும்பத்தின் மேல் உள்ள தனி மதிப்பு. அம்பாளைப் பள்ளியறையில் கொண்டு போய்விட்டு, அங்கு தன் பாட்டுக்களைத் தன் இனிய வெண்கலக் குரலில் பாடி வீட்டுக்கு வந்தபின்தான் தாத்தா சாப்பிடுவார்.

இந்த மனுஷன் ஐயாத்துரை உதவாக்கரையா இத்தனை நாள் கழிச்சாச்சு. இப்போதிருந்தேனும் தானும் ஏதோ வேலைக்குப் போனோம்னு ஒரு திருப்தி அவருக்குக் கிடைக் கட்டுமே என்றும் இருக்கலாம்!

தவிர முக்யம், மனுஷனுக்குத் தைரியம் ஜாஸ்தி, 'பயம்ன்னா வீசை என்ன விலை?' என்பார்.

ஒருமுறை பக்கத்தூரில் 'டெண்ட்' சினிமா பார்த்துவிட்டு

நள்ளிரவில், கழனிக் காட்டில் குறுக்கு வழியில் திரும்பி வருகையில் 'புஸ்...ஸ்...ஸ்...'

காலைச் சுற்றின பாம்பு கடிக்காமல் விடாது என்பார்கள்! ஆனால், காலைச் சுற்றினதைப் பிய்த்துத் தூர வீசியெறிந்த அந்தக் கண்ணிமைக்கும் நேரத்துக்கும் குறைந்த அந்த சுருக்கை, அந்தத் தீரத்தை...

நாங்கள் பெருமையடித்துக் கொள்ளவில்லை, எங்கள் ஐயா என்பதால் ஒண்ணுக்கு ஒன்பதாய்க் 'கப்ஸ்' அளிக்கிறோம் என்பீர்கள். நடந்ததுக்கெல்லாம் ஐயாவுடன் சினிமாவுக்குப் போனவர்கள் அத்தனை பேரும் சாட்சி. தானே சினிமா போக ஐயாவிடம் துட்டு ஏது...? மடியை உதறினால்; அதில் முடிச்சிருந்தால், அது ஞாபக முடிச்சாயிருக்கும்!

எங்களைப் பொறுத்தவரை. ஐயாவின் சம்பளம் எப்படியேனும் போகட்டும், வாஸ்தவத்தில் சம்பளத்துக்கும் ஐயாவுக்கும் சம்பந்தம் ரசீதில் கட்டை விரல் பதிவோடு சரி, தொகை ஆபீஸ் பையன் மூலம் நேரே மன்னியிடம் போய் விடும். ஐயாவின் இஷ்டமும் அதுதான். "நான் பணத்தை வெச்சுண்டு என்ன பண்ணப் போறேன்?"

மண்டகப்படி நைவேத்தியத்தை மடப் பள்ளியிலிருந்து சன்னிதானத்துக்குக் கொண்டுவந்து வைத்தால் ஐயாவுக்குச் சில்லறை உண்டு, "டேயப்பா, என் பொடிக்கு ஏராளம்!"

நைவேத்தியத்தில் வேறே வெட்டு.

தவிர இரண்டு வேளையும் வேளைக்கு இரண்டு பட்டை... இப்போ மாதிரி சூம்பி, உசிரே போய் இருக்காது. கடுகு, மிளகாய் தாளித்து, தயிரைத் தாராளமாய்த்தெளித்திருக்கும். இளக்கி, நாலுபேர் தாராளமாய்ச் சாப்பிடலாம். எங்கள்பாடு வேட்டைதான். வீடே இப்போ முன்னைவிடப் பச்சைதான்.

நாளடைவில் நாங்களே மூஞ்சியைத் தூக்கிக் கொள்ளுமளவுக்கு எங்களுக்கு மிதப்பாகி விட்டது.

"என்ன ஐயா, தினமும் சுண்டல் தானா? வடையும் வெடக்குவெடக்குன்னு பாயசத்தை ஆள் மூலம் கூஜாவில் அனுப்பிச்சுடுங்கோளேன்! நீங்கள் கொண்டுவரத்துக்குள் ஆறிப் போயிடறது— ஐயா ஏதேனும் மாறுதலாய்க்

கிடையாதா? பஞ்சாமிர்தம்—ஜிஞ்சாமிர்தம்—இல்லை? அதை நீங்கள் அங்கேயே பார்த்துடறேளா...?''

மாட்டார். எங்களுக்குத் தெரியாதா?

ஐயாவுக்கு 'ட்யூட்டி' மாலை ஆறு மணிக்குத் தொடங் கும்.

கிழங்குபோல் வெள்ளியில் பூணும் கொண்டையும் போட்டதடியை வேலைக்கு வந்ததும் வழங்கி விட்டு, இரவு பத்துக்குக் கோயில் கணக்காபீஸ் மூடும்போது பிடுங்கிக் கொண்டு விடுவார்கள். ஓரளவுக்கு ஒழுங்காய்க் குளித்து முகமும் மழித்து, முடியை வாரி, வெள்ளை ஆடை—ஈதெல் லாம் சேர்த்து முதன் முதலாய் நாங்கள் ஐயாவைப் பார்க்கை யில் எங்களுக்குத் திகைப்பாகி விட்டது. ஐயா 'துரை' தன் முழுப் பெயராகி விட்டார்!

சிப்பந்திகளும் போய், கோவில் காலியாகி விட்டபின், உள்பிராகாரக் கதவைப் பின் தாளிட்டுக் கொண்டு, வெறுங் கழியுடன் ஐயா உள்ளே ரோந்து சுற்றுவார்; அல்லது நடராஜா சன்னதியில் ஒரு தூணடியில் துண்டை விரித்துப் போட்டுத் தூங்குவார். அல்லது கொட்டு கொட்டென விழித்துக் கொண்டிருப்பார். உயர வெளவாலும் துரிஞ்சலும் வேட்டையாடும். சிலைகளின் மேல் பெருச்சாளி ஓடும். நடராஜா அடுத்த திருவாதிரை வரை, கட்டிய பஞ்சக்கச்சம் நலுங்காமல், முகத்தில் அவருடைய ரகஸ்யம் புன்னகை தவழ, ஆனந்தமாய் நொண்டிக்கொண்டிருப்பார். எங்கேயோ ஜலம் சொட்டுச் சொட்டு—மஹிமையாயிருக்கலாம். சரியாக மூடாத குழாயாயுமிருக்கலாம். எல்லாம் அவரவர் எண்ணத் துக்கு ஏற்றபடி அவரவர் பூத்ததுக்குத் தக்கபடி.

ஒரு நாள் ஐயா. ட்யூட்டி முடிந்து வழக்க நேரத்துக்கு வீடு திரும்பவில்லை.

முதல் நாள் வெள்ளிக்கிழமை. கோவில் சிப்பந்திகள் எல்லாருக்குமே அன்று வேலை 'கசர்' வாங்கும் அரை டஜன் அபிஷேகங்களுக்குக் குறையாது. தனித்தனி அலங்காரம், நைவேத்தியம், ஸஹஸ்ரநாமம் ஓயும்போது நிசி தாண்டி விடும். கடைசி அலங்காரத்தைக் கலைக்கத் தெம்பு இல்லா

மல், நகைகளை மட்டும் கழற்றித் தர்மகர்த்தாவிடம் கொடுத்துவிட்டு. பெரிய சாவிக் கொத்தை ஐயாவிடம் வீசி யெறிந்து விட்டு ('எல்லாம் நீ பூட்டிக்கோ') வைத்தி குருக்கள் (அவர்தான் 'ஹெட்') வீட்டுக்குப் போயிவிடுவார், தீபா ராதனை தட்டில் தனியா விழுந்த 'சில்லறையை(சில்லறையா? நூற்றுக்கணக்கில் தேறும்) எண்ணிப் பங்கீடு பண்ணக்கூட மனமும் உடலும் அசத்தும்.

"எல்லாம் நாளைக்கிப் பார்த்துக்கலாம், ஓடிப் போயிட மாட்டேன், தரித்ரபுத்திகள்! இதனால்தான் கையில் அள்ளற மாதிரி கண்டும் நாம் உருப்படறதில்லே" என்று மற்ற சிப்பந்திகளை ஆசிர்வாதம் பண்ணிவிட்டு, எல்லாவற்றையும் மடியில் கொட்டிக் கொண்டு போய்விடுவார்.

நேரம் ஆக ஆக அத்தைப் பாட்டிக்கு வயிற்றில் குதிரைக் குட்டி உதை தாங்க முடியவில்லை. உடன்பிறப்பு இல்லையா? என்றைக்குமில்லாமல் இன்றுமட்டும் எங்களுக்கே எங்கள் கவலை புரியவில்லை.

அசதி மறதியாக, அம்பாள் கழுத்தில் ஏதேனும் விட்டுப் போய், அது ஐயா கண்ணில் பட்டு—வேலைக்காரன் மயக்கப் பொடியைத் தூவிட்டான்னா?—கையும் பிடியுமா மாட்டின் டுட்டாரா? அப்படி ஏதேனும் நடந்திருந்தால் இத்தனை நாழி ஊரே 'கொல்'லாகி யிருக்குமே!

"நீங்களதான் கோவில் பக்கம் போய்ப் பாருங்களேன்!"

தாத்தா காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. அவர் பாட்டுக்கு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டிருந்தார்.

"...தாராமல் இருப்பாளோ அவள் என்ன சத்தியம் மறந்தவளோ?'

"ஐயா இதோ வராண்டி?" அத்தைப் பாட்டி அறை கூவினாள்.

குடிகாரன் போல் தள்ளாடித் தள்ளாடி ஓர் உருவம் உள்ளே வந்து, கூடத்தில் 'தொப்'பென்று விழுந்து உருண்டு கட்டையாகி விட்டது. எங்களுக்கு உடல் வெல வெலத்துவிட்டது.

ஐயாவுக்கு உடல் மழுவாய்க் காய்ந்தது. அத்தைப்

பாட்டி நாடியைப் பிடித்தாள். நாடியில் நிபுணியாம்! வைத்தியர் விசுவநாதன் செட்டியார் சொல்லுவார்; "நாங்கள் பரம்பரை வைத்யம்தான், நாடி பார்ப்பதில் எச்சுமி அம்மாவுக்கெதிர் நாங்கள் நிக்க முடியுமா? இத்தனைக்கும் என் 'அப்பாகிட்டே விளையாட்டா கத்துண்டதுதான். குருவை மிஞ்சின சிஷ்யை ஆயிட்டாங்க! அதெல்லாம் பிறவிக் கொடுப்பனை!"

அத்தை முகம் மாறிற்று "ராமா!" அத்தை குரல் கணீர். விலங்குக்கு விலங்கு கூவல்.

தாத்தா ஓடி வந்தார்.

"ஐயா கையில் தேவதாது பேசறதுடா"

அப்படியென்றால் என்ன? எங்களுக்குத் தெரியாது. ஆனால் அடிவயிற்றில் ஏதோ ஒரு 'சில்'—இது ஏதோ விலங்கு பாஷை. எல்லாம் தெரியறது. ஆனால் ஒண்ணும் புரியல்லே.

ஐயாவின் தலையைத் தாத்தா தோளில் தாங்கிக் கொண்டார். அத்தை பக்கத்தில் மொய்த்தாள்.

இப்பொக்கூட அந்தக் காட்சி கண் முன் தொண்டையில்தான் எழுகிறது. மூணும் ஒரே தொப்புள் கொடி. மூவரும் ஒரு கொத்து. நாங்கள் கூட பிறகு தான். அந்த மட்டுக்கும் வேறுதான்.

'வெறி' பிடித்த கூட்டம். என்ன வெறி?

"ஐயா, என்ன நடந்தது,"

ஐயா எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாரேயன்றி பார்வை எங்கள் மேல் இல்லை. பன்னிரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால். பதினெட்டாயிரம் வருடங்களுக்கு முன் எதன்மேலோ பதிந்திருந்தது. வார்த்தைகள் அங்கிருந்து வந்தன.

"—அசந்து தூங்கிப் போயிட்டேன். 'வெடுக்'குனு உதறிண்டு முழிப்பு வந்தது. ஒரேயிருட்டு. ஓர் அகலில் மட்டும் முத்துப் பொறி, எதிரே, யாரோ நிக்கறா, அலறிப் புடைச்சுண்டு எழுந்திருந்தேன், இல்லை வாயடைச்சுப் போச்சு." கைகால் விழுந்து போச்சு.

"முகம் மூஞ்சினு உருப்படியா தெரியவில்லை. தெரியாமலுமில்லே. ஏதோ கோட்டுக்குள் அடைச்ச இருட்டில்

மூக்குத்தி திருதிகு — அதைவிட கண்கள். எனக்கு கண் கூசுறது. நெற்றியில் குங்குமம் சுடர் விடறது. சிவப்புப் பாவாடை. நீலத் தாவணி...''

தாத்தாவின் கண்கள் விரிந்தன. பேச்சு, மூச்சாய் வந்தது. நேற்று கடைசி அலங்காரம்...மளிகைக் கடை சபாபதி நாடான் மண்டகப்படி...

''—தோளில் பச்சைக்கிளி. தலையை ஸொகுஸா திரும்பித் திரும்பிப் பார்த்துண்டு...''

எங்களுக்கு எலும்பெல்லாம் உருகி அங்கங்கே கட்டி தட்டிண்டு தொண்டையை ஒரே அமுக்காய் அமுக்கி

''—இரை தின்ன பாம்பு மாதிரி முழங்காலில் இடிக்கறது. பின்னல், என்னைப் பார்த்தது சிரிச்சுண்டு, ஒரு கையால் பின்னலைச் சுழட்டிண்டு நிக்கறா. சிரிப்பா? கண்ணா? எதன் ஒளி கூட? அப்பா எனக்குக் கண்ணைப் பறிக்கிறது. கண்ணை இறுக மூடிண்டு என்னை அழுத்தறபயத்தை ஒரு வழியா உதறிண்டு எழுந்திருந்தேன், 'ஹத்து தேவடியா முண்டை எட்ட ஓடு! எப்படி உள்ளே வந்தே?' உரக்க சிரிச்சுண்டே பின்னலைச் சுழட்டிண்டே கர்ப்க்ரஹத்துள் ஓடிப் போயிட்ட அந்த சிரிப்பு—''

—செவிகளைப் பொத்திய வண்ணம், மரண அடிபட்ட விலங்குபோல் ஐயா அலையாடினார்.

தாத்தாவுக்கு முகம் பிசைந்தது. ஐயாவின் முதுகிலும் முகத்திலும் பளார் பளார் என்று அறைந்தார்.

''ஐயா பாவி! ஜன்மேதி ஜன்மமாய்க் காத்திண்டிருக் கிறவாளுக்கும் கிடைக்காத பேறு நிமிஷத்தில் அடைஞ்சுட்டு நிமிஷமாய்க் குடி கெடுத்துட்டியே! உன்னைப் போல் பாக்ய வான் உண்டா? பாவியும் உண்டா? என் பாட்டையும் நோட்டையும் தூக்கி உடைப்பில் போடு...!''

—ஐயாவைக் கட்டிண்டு கதறினார். எங்களுக்குப் பயமா யிருந்தது.

ஐயா படுக்கையை விட்டு எழ வாரம் ஆயிற்று. அவர் யாரோடும் பேசவில்லை, கஞ்சியோ, ரஸமோ கொடுத்தால் உண்டு. இல்லையேல் இல்லை.

எட்டாம் நாள் காலை வாயில் பல்குச்சியை மாட்டிக் கொண்டு போனவர்தான்—தேடாத இடம் பாக்கியில்லை.

கிணறு, குளம், ஏரி, ஆறு-வடிகட்டிப் பார்த்தாச்சு. எங்கள் முட்டாள்தனம் எங்களுக்கே தெரியும். சீ,ன்னு சுறாமீனுக்கு அதன் மண்டையில் தட்டிக் காட்டுவான் மன்னன்—

திரும்பி வரவேயில்லை.

# காசி

அவனை எழுப்பவில்லை. அவன் தூங்கும் அலங்கோல கவர்ச்சியைக் கவனித்து நின்றாள்.

இப்போது அவன் கணவனாய்த் தோன்றவில்லை. ஏதோ விலங்கு, வழி தவறிப் போய், உள்ளே வந்து பாயில், அவள் பக்கத்தில் படுத்து விட்டது. எம்மா உண்டாலும் ஒட்டிய அந்த ஓநாய் வயிறும், மேல் தூக்கிய கைகளடியில் அக்குள் மயிர்ச் சுருளும், தலையணை மீது அவிழ்ந்த கட்டுக் குடுமியும் அந்த பாவனைக்கு உரமேற்றின. இத்தனை வருடங்களில் ஒரு தரமேனும் அவன் குறட்டை கேட்ட நினைவு அவளுக் கில்லை. மாலைக் காற்றில் ஜலத்தின் நலுங்கல் போல, அந்த மார்க் குழியில் அந்த மிதப்புத்தான் அவள் தைரியம்.

சுபாவத்திலேயே அவனுக்குத் தூக்கத்தில் அரைக் கண். அதனால், சமயத்தில் அவனுக்குத் தூக்கமா. விழிப்பா எனச் சட்டெனப் புரிவதில்லை.

அவள் பயத்திற்கேற்ப அவனுக்கு விழிப்பும் சட்டென வராது. அவன் தூக்கத்தைக் கண்டு அசூயை கொள்வாள். ஏனெனில் அத்தனைக்கத்தனை அவளுக்குக் கோழித் தூக்கம், கூரையிலிருந்து காரை யுதிர்ந்தாலே போதும், கண் கலைந்து போம். அப்புறம் விடியும் வரை இருட்டில் விட்டத்தை அண்ணாந்த வண்ணம் விடியக் காத்திருக்க வேண்டியதுதான்,

அதோ, கூடத்தில் வௌவாலின் இறக்கை வீச்சு,

சமயலறை ஜலதாரையுள் ''புஸ்—ஸ்—ஸ்''

(அது உன்னை என்ன பண்றது? இன்னிக்கா, நேத்தா,

மூணு தலை முறையா கேட்குது! இதுவரை யார் கண்ணுக்கும் பட்டதில்லை. இதுவரை யாரையும் கடிச்சு பழிக்கு ஆளான தில்லே. அது பாட்டுக்கு வரது. போறது. உன்னை என்ன பண்றது?'')

கொல்லையில் தென்னங்கன்றின் உச்சியில் அதென்ன ''டொக் டொக்?''

வைக்கோல் போர் மேல் யாரோ குதிச்ச மாதிரி 'பொத்' துனு சத்தம் கேட்டுதா?

அக்ரகாரம், பேர் தான் பெரிசு. ஒரே சாரி; எண்ணி நாலு வீடு. எதிர்ச்சாரியின் பெருமாள் கோவில் மதில் முதல்வீடு கிலம், வாசலும் உள்ளும் நுண படர்ந்து சிலந்தியும் ஒட்டடையும் தான் வாசம்.

அடுத்தது தன் வீடு.

மேலண்டை வீட்டைக் கழுகாய்க் காத்துக் கொண்டிருந்த தொண்டு கிழத்தை எடுத்துப் போய் ஆறு தாண்டி—ஆறாம் ஆறு அதென்ன ஆறோ, பேறு தான் ஆறு என் நினைப்பு தெரிஞ்சு நானும் ஆளாகு முன்னே எட்டு வயசிலே தாலியைக் கட்டினார். இங்கே வந்தாச்சு. இப்போ எனக்கு வயது நாற்பதா, நாற்பத்திரெண்டா, எண்ணிக்கை கூட மறந்து போச்சு—என் நினைப்பிலே தண்ணி ஓடினதா ஞாபகமில்லே—ஆறு தாண்டி புளிய மரத்திலே பொசுக்கி யாச்சு. சொல்லியனுப்பி, கொள்ளி வைக்க வந்த புள்ளி அடுத்தநாள் சாம்பலைக் கிளர நிக்கல்லே, செத்தவர் சொத்து, குருவிக்காரன் குடுகுடுப்பைக்குக்கூட எடுபடா துன்னு கண்டதும் கிழவியை வாய்க்கு வந்தபடி திட்டிட்டு ராவோடு ராவாக் கிளம்பிப் போயாச்சு. பாலில் குளிராத ஆவி இன்னும் அந்த வீட்டைச் சுத்திண்டுதான் இருக்கு, இல்லாட்டா திடீர் திடீர்னு ஏது அந்த முக்கல், முனகல், பெருமூச்சு, விசிப்பு பக்கத்து வீட்டுச் சுவர் பின்னாலிருந்து?

கோடி வீட்டில் அடிக்கடி குடிமாற்றம் ஒரு சமயம் பள்ளிக்கூடத்தின் புது வாத்தியார். இன்னொரு சமயம் தண்ணீர்ப் பந்தல். தயிர் சாதம். மசால் வடை, சுண்டல், வடைகறி (உன் துட்டு எங்கே போவது நாளைக்கு

வாங்கிக்கோ ஐயரே இன்னொரு வடையை) மூணு மாதத்தில் கடைபோண்டி, அடுத்தாற் போல் எண்ணெய்ப் பிண்ணாக்கு கிடங்கு. அப்புறம் இரண்டு மாதம் காலி, பிறகு "லொட்டு லொட்டு" ஒரு தட்டான் பட்டறை, அப்புறம் திண்ணையில் ஒரு சோடாக் கடை, மறுபடியும் காலி-இதுமாதிரி ஏதோ ஒண்ணு, ஆனால் எதுவுமே உருப்பட்டதில்லை.

ஆனால் அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். கொடுத்து வெச்ச ஆசாமி.

x x x x

ஆனால் வேறு என்னதான் வேலை?

இருப்பது பரம்பரையாய் ஒரு கோவில் பூஜை.

இரண்டு காலம்தான், அதற்கே ஒழுங்காய் நெல் அளக்க ஊருக்கு வக்கில்லை. அதற்கு கொசிர் மூலைப் பிள்ளையார் பூஜை. பாவ தோஷத்திற்கு அஞ்சி,இரக்கப்பட்டு வாரத்துக்கு ஒரு முறை இருமுறை பண்ணினால் உண்டு; இல்லையெனில் கேட்க வாயில்லை, எத்தனைசாமியானாலும் என்னா பொங்கினது ஒரு நைவேத்யம் தானே! சோற்றை மூடிய சிக்குத் துண்டை கொஞ்சம் தூக்கி மணியை இரண்டு ஆட்டு ஆட்டி உடனே மூடு!

எல்லாம் அப்பப்போ உடல் அசதிக்கும் மனத்தென்புக்கும் தக்கபடி.

சுவாமி சன்னதியில் தோளுயரம் கங்காளம். அம்மன் சன்னதி அண்டா மாருயரம். மனமிருந்தால் கிணற்று ஜலத்தை மொண்டு இரண்டு ஏனங்களையும் விளிம்புகட்டி அபிஷேகம் பண்றதுதான். இல்லையோசொம்பு ஜலத்திலேயே இரண்டையுமே நடத்தறதுதான். சுவாமி கன்னத்தில் அறைவதற்குப் பதிலாக, லிங்கத்தின் முகத்திலே வீசிவிட்டுக் கதவை மூடிக் கொண்டு வெளியேறுவதும் உண்டுதான்.

இஷ்டப்பட்டால் நாள், கிழமையில் தனக்குத் தெரிந்த அலங்காரத்தில் உத்ஸவரை முறுக்கிக் கட்டி தாத்தா காலத்துக் கிழிசல் பட்டைத்தான் கச்சம் வைத்துக் கட்டிக் கொண்டு, வருவோருக்கு விபூதி பிரசாதம் சிம்ட்டா பிடித்து வழங்கலாம். இல்லையோ, அது கெட்டதுபோ! கையை

நீட்டுவோருக்கு, மாடப்பிறையில் கொட்டியிருக்கும் திருநீறைச் சுட்டிக் காட்டி விட்டுப் போய்க் கொண்டே இருக்கலாம். இங்கே தோடா போடுவோருமில்லை. சாட்டை சொடுக்குவோருமில்லே.

எல்லாம் அப்பப்போ உடல் தென்புக்கும் மன அசதிக்கும் ஏற்றபடி.

ஆனால் வரவர இப்பவே தூக்கந்தான். சமையலாச்சு.

இடம் பெருக்கி இலை போடுவதற்குள் சாய்வுத் திண்ணையில் ஒரு சின்ன மருளாட்டம். தோளைத் தொட்டு எழுப்பலையோ அப்படியே காலும் நீட்டிக் கொள்ளும். அப்புறம் சாப்பாடு கூப்பாடுதான்.

சாப்பாடு ஆச்சா, பாக்கை ஊதி வாயில் போட்டு, வெற்றிலையை தொடையில் துடைத்து மூணாவதைத் தடவும் போதே தலை சாய்ந்துவிடும். அதென்ன தூக்கமோ? உள்ளங்காலில் "சுறீல்"னு ஒரு தணலை வெச்சால் என்ன? மூஞ்சியில் ஜலத்தைக் கொட்டட்டுமா?

எனக்கே தூங்கறவாளைக் கண்டால் ஆகல்லே. ஆனால் அத்தை முழிச்சுண்டுதானே யிருந்தார்; அதுவுந்தான் ஆச்சோ? அத்தை கண்மூடறவரை கண்கொட்டல்லே, போன அப்புறம்கூட இமையை யாரோ இழுத்து மூடி அந்த விறைச்ச பார்வையை மறைக்கும் படியாச்சு. யார் என்ன செய்யறா, ஏது சொல்றான்னு கவனிச்சு கவனிச்சு அத்தைக்கு கண்மூடவே மறந்து போச்சு. அதுவும் கடைசி காலந்திரத்தில் ஆளை வதைச்சே எடுத்துட்டார். எண்பதும் தாண்டி இருந்த வயசில் கடைசி பத்து வருஷம் படுத்த படுக்கையில் தொட்டதெல்லாம் குத்தம்தான். எதிரே நின்னாலே குத்தம்தான். "என்னடி பாக்கறே? மூச்சு போகலையேன்னா" சரின்னு கண் மறைவா வளைய வந்தாலோ:

போயிடுங்கோ; ரெண்டு பேரும் போயிடுங்கோ! எதிரே இருந்தால் தானே கடையற தொண்டையில் பாலூத்த வேண்டிவரும்! அதுசாக்கில் என் உசிர் தங்கிடுமோன்னு கவலை. இழுத்துண்டிருக்கிறது அடங்கறதுக்குள் ரெண்டு பேரும் மூங்கிலைத் தேடப் போயிட்டா. அவன்

வெட்டுவான். இதள் கட்டிண்டு வருவாள்.''

திட்றத்தில் பிள்ளைன்னும் பார்க்கல்லே. நான்தான் தம்பி பொண்ணுன்னும் பார்க்கலே! போகப் போக நெஞ்சில் ஓதமே வத்திப் போச்சு. இனி எழுந்திருக்கப் போவதில்லை. இத்தோடு சரின்னு தனக்கே தெரிஞ்சு போன பின் இருக்கிறவா மேல் போறவாளுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்? பொறாமையா, பயமா, எதனால் இந்தக் கொடூரம்? ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டைன்னு நம்மால் முடிஞ்ச புலிப்பாலைக் கறந்து வந்து கொடுத்தாலும் செம்போடு மூஞ்சியில் வீசியெறிவார்.

கடைகியில் தான் என்ன அவஸ்தை! உயிர் தயாரானாலும் உடல் ஆகல்லே. உடம்பில் பூச்சியே வெச்சுப் போச்சு. உயிரும் உடலும் வாசலுக்கு வாசல் மல்லிட்டு, அங்கம் அங்கமா அடங்கி கடைசியில் உயிர் போச்சுன்னு ஆனதும் ''ஐயோ''ன்னு அழுகைக்கு முன்னால் ''அப்பாடான்னு'' மூச்சுத்தான் தெரியறது.

ஆனால் எங்கே போனார்? கூடத்து அலமாரியில் பானையில், அஸ்தியாக இன்னும் புழுங்கிண்டுதான் இருக்கார்.

''ஒரு ஊரா, கோவிலா, குளமா, ஒரு விரதமா, ஜபமா, முழிப்பா—இந்த ஜென்மத்துக்கு ஒண்ணும் கிடையாது. ஒரு விமோசனமில்லாமல் இதோ இப்படியே போயிடப் போறேன். இந்த எலும்பையாவது எடுத்துப் போய் வருஷம் ஆவதற்குள் கங்கையில் கரை. கரைப்பையா இல்லை இந்த சமயத்துக்குத் தஞ்சாவூர் பொம்மை மாதிரி தலையை ஆட்டிப்பிட்டு அப்புறம்.

''ஹாய்யா, இருந்துடறையா?ன்னு வாயைத் திறந்து சொல்லு''ன்னு கையை அடிச்சு வாங்கிக்காத தோஷமா வாக்கை வாங்கிண்டு தானே ஆவி பிரிஞ்சுது.

பாவம் அத்தை! பூச்சியோ புழுவோ, நாத்தமோ, அழுகலோ, வார்த்தையோ கொடுமையோ, இருந்த வரைக்கும் அவராவது இருந்தார். குழந்தையில்லா வீட்டில் அவர் தான் குழந்தையாக சிசுருஷையில். ராமுழிச்சு, பகல் தூங்கி விழுந்து போகப் போகப் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம்

வெளிச்சம்னு ஒரு அடையாளம் தவிர மற்றதெல்லாம் மறந்து போய், பொழுது போனதே தெரியாமல் போச்சு. அவர் ஆட்சி போச்சு. கூடவே வீடும் வெறிச்சிட்டுப் போச்சு. பேச்சும் செத்துப் போச்சு. இருள் வழிக்குக் கொடு உறவும் உறுதுணை தானே?

போறவா போனப்புறம் தான் தெரியறது. இருக்கறவா வாழ்வும் போயிண்டேயிருக்கிறது தான் என்று--வாழ்வா இது?

x x x x

**சா**ய்வுத் திண்ணையில் அரைத் தூக்கத்தில் அயர்ந்திருக்கையில் வயிறு மீது ஏதோ "தொப்'!பென்று விழுந்து விழித்துக் கொண்டான்.

இரண்டு பல்லிகள்—ஆள் மேல் விழுந்தும் பிரியவில்லை. ஒன்றின் வயிற்றை ஒன்று கவ்விக் கொண்டு, இரண்டில் ஒன்றின் சாவுவரை சண்டை மூர்க்கத்தில் உருண்டு கொண்டே திண்ணையிலிருந்தும் விழுந்தன.

பலனுக்குப் பஞ்சாங்கம் பார்க்கத் தெவையில்லை. இதெல்லாம் மனப்பாடம். வந்து கேட்பாருக்குச் சொல்லியாக வேண்டுமே! கோவிலுக்குக் குருக்கள், ஊருக்குப் புரோகிதன், மாலையில் மாந்தரீகம்! காலையில் வேப்பிலையடிப்பு, இதெல்லாம் வயிற்றுப் பிழைப்பின் தந்திரத்தில் சேர்ந்த தாச்சே— "வயிறு புத்ரலாபம்" என்ற விடை மனதில் பளிச்சிட்டதும், முகம் புன்னகையில் இளகிற்று.

எப்பவோ, என்றோ, நேர்ந்தது கூட மறந்து போச்சு· சாந்தி முகூர்த்த சுருக்கில்—என்னத்தையோ ஒரு துணியில் சுற்றிக் கொண்டு நாலுபேர் வீட்டை விட்டுக் கிளம்பினதாய் நினைவில் ஒரு தோற்றம். தாது அடித்து மடிந்தது. அந்த சுமையைக் கூட அவன் தூக்கவில்லை. அவன் தகப்பனார் எடுத்துச் சென்ற ஞாபகம்.

அதற்குப் பின் லாபமுமில்லை. நஷ்டமுமில்லே. முதலில் நேர்ந்தால் தானே லாப நஷ்டத்திற்கு!

சுற்றம் விட்டுப் போகக் கூடாது என்று இந்தக் கூட்டத்திற்கே உள்ள பயத்தில் தனக்குள் தானே பின்னிக் குமைந்து

இறங்கி வரும் தலைமுறையில், எந்தக் கிளை, இலையிலேனும் தாய்க்கு மகன் தாலி கட்டி இருந்தாலும் அண்ணனுக்குத் தங்கை வாழ்க்கைப் பட்டிருந்தாலும் ஆச்சர்யமில்லை.

இப்படி வழி வழியாய்ச் செத்து வரும் ரத்தத்தில், மலடுக்குப் பொறுப்பு யார் மேல் தனியாய்க் கட்டுவது? ஆண் மேலா பெண் மேலா?

அட, அப்படித்தான் விருத்தியாகாமல் என்னோடு அற்றுப் போனால் தான் என்ன? வாரிசு இல்லாமல் என்ன சொத்து பாழாப் போறது?

பொருளே முன்னால் எங்கிருந்து சேரும்? இந்த ஜாதிக்கே ஜாதகம் எங்கே சரி? சிவ சொத்தில் புழங்கி உருப் படுவது எது? தெரிந்து எடுத்தால் திருட்டு, தெரியாமல் நேர்ந்தால் பிழை என்று விளக்கம் தந்து விடலாம். ஆனால் வினை ஒன்றுதானே?

அறியாமல் செய்தேன் என்பதே ஒரு புளுகு. தேனை வழித்தவன் புறங்கையை நக்காமல் இருப்பானா? இருந்தால் அவன்தான் முதல் மோசடி...அவன் மேல் தான் முதலில் கல்லை எறிய வேண்டும்—என்னையேதான் சொல்லிக்கறேன். அந்த நாளில், எப்போதேனும் பக்கத்தூரில் உற்றார் உறவினர் வீட்டில் நேரும் ஒரு கல்யாணம் கார்த்திக்கு, இவள் போட்டுக் கொள்ள, அம்பாள் கழுத்திலிருந்து அட்டிகையோ காசுமாலையோ கடன் வாங்கியிருக்க மாட்டேனா—தர்மகர்த்தாவை கைக்குள் போட்டுக் கொண்டோ அவன் கண்ணில் மண்ணைத் தூவி விட்டோ? அட்டிகையென்ன, ஒட்டியாணமேகூட.

எடுத்ததற்குப் பிராயச்சித்தம் வெள்ளிக்கிழமை ஸகஸ்ர நாமத்தைக் கொஞ்சம்கூட நிறுத்தி இன்னும் ராகமாய்ப் பாடி அர்ச்சனை, அவ்வளவு தானே!

ஆச்சு, என் அர்ச்சனைகளும் ஓஞ்சு போச்சு. எனக்கு ஐம்பதை எட்டிப் பிடிக்கிறது. இவனுக்கு மாத்திரம் வயசு நின்னுட்டுதா. வலது நெற்றிப் பொட்டில் நுரை அடையாய் ஓடறது. உடம்பில் கூட பழைய நிறம் உதிர்ந்து போச்சு.

ஆனால் அவள்...எனக்குத் தெரிந்து என் முப்பாட்ட

னுக்கும் மூணு தலைமுறைக்கு முன்னாலிருந்து நின்ற விடத்தில் அசையாமல் நின்று காத்திருக்காளே ஒருத்தி-அவள் தான்—அன்றுகண்ட மேனிக்கு அழிவில்லாமல் இருக்கிறாள். தினம் இரண்டு வேளையும் எண்ணெய்க் காப்பு மொழு மொழுப்புக்கு என்ன குறைச்சல்! முகம்தான்...லேசாய்...

ஆனால் தேயத் தேய அவளுக்கு மவுஸ் ஜாஸ்தி.

நமக்குத் தேய்ந்தால் நாம் கிழம், அப்புறம் நாமே குளோஸ்.

x x x

சுபாவமே பேச்சுக் குறைவு. காது மந்தம். வயதாக ஆக டமார செவிடு ஆனபின் எதற்கும் காதண்டை வந்து கத்திக் கத்தி அலுத்து அவளுக்கும் இப்போது வாய் ஓய்ஞ்சு போச்சு.

இப்பவோ அவனிடம் அவள் கை அபினயம்தான். மற்றும் உதட்டசைவிலிருந்து அவன் யூகமாய்க் கண்டு கொள்வதும் அவன் சொல்லி அவள் செய்ய நேராமல் போவதுமாவே, தினப்படி அலுவல்கள் ஒரு ஒழுங்கில் விழுந்தாயிற்று.

பேசவே என்ன இருக்கிறது? பேசின பேச்சையே திரும்பத் திரும்பப் பேசி, போட்ட சண்டையே திரும்பத் திரும்பப் போட்டு, துப்பிய எச்சிலைத் திரும்ப உட்கொள்வது போல், சமரசமே அதே முறையில் திரும்பத்திரும்ப ஆகி, இருவர் உறவிலும்—அது உடலோ, சொல்லோ, செயலோ-இதுவரை சொல்லாதது, செய்யாதது, இல்லாதது இனிமேல் வரப்போவது, எதிர்பாராதது எனும் செயலூக்கியே இற்றுப் போயிற்று.

ஒன்றுடன் ஒன்றுமோதி சமபலத்தில் சமகாயம் கண்டு பிரிந்த இரு விலங்குகள் அதனதன் காயங்களை அது அது நக்கிக் கொண்டு, ஒரே நீரோட்டத்தில் அதனதன் தண்ணீரைக் குடிப்பது போல், இப்போது இருவரும் முகர்வது மின்றி மோதுவதுமின்றி, அவரவர் எண்ணத்தில் அவரவர் ஒருவரைப் பற்றி ஒருவர் எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணங்களே சரியா என்று எண்ணக்கூட அலுப்பு இல்லை.

அலுப்பையும் மீறிய நிலை-அலுப்பு என்று ஒன்று படக்கூட வலுவும் சுரணையும் செத்துப் போய் நெஞ்சில் பூஞ்சைக் காளானின் 'பூப்பு' யந்திர வாழ்க்கையின் யந்திரத்தின் தேய்வு.

x x x

அரைத் தூக்கத்தின் மனசில் கொலுசில் மாட்டிக் கொண்டு நினைவின் அடிவாரத்திலிருந்து கொத்தும் குடலு மாய்க் கிளம்பும் இனம் தெரியா கொதிப்புகள், உருவக விகாரங்கள்...

லிங்கத்தின் நெற்றியில் காய்ந்த சந்தனத்தைக் கிள்ளிய இடத்தில் திடீரென முண்டிக் கொண்டு அசிங்கமாய் ஒரு ரத்தக் கட்டி.

கங்காளத்திலிருந்து மொண்டு லிங்கத்தின் மண்டைமீது ஊற்றியதும் குடத்திலிருந்து ஜலத்துக்குப் பதிலாக கொட கொடவென்று நுரை கக்கிக் கொண்டு இரத்தம். அம்பாள் சன்னதியில் விளக்குத் திரியை தூண்டப்போய் தீ விரலைச் சுட்டதும், அவன் உடலை சிவப்பு, நீலம், ஊதா, பச்சை, மஞ்சள் வர்ணங்கள் வெகு வேகமாய் அடுத்தடுத்து ஊடுருவி அந்தந்த நிறம், அவன் மாறி எரிந்து பஸ்பமாய்க் குமுங்கிக் குன்றி, பிசுபிசுவென்று உதிர்ந்து போவதாய் அம்மன் பின்னால் மாட்டி இருக்கும் நிலைக்கண்ணாடியில் பிம்பம்.

அம்மனுக்கு இப்போ புல்லாக்குன்னா மாட்டினேன், மூக்கில் ஏன் சளி தொங்கறது?

அண்டா ஜலத்தில் கைக்கு ஏதோ வழவழவென தட்டுப் பட்டதும், நூலிழை தடுமனாய் உணர்ந்து, கைக்கடியிலேயே உடனே வளர்ந்து, கனவேகத்தில் மழமழவென ஆலமரத் தின் அடி மரப் பருமனுக்கு வீங்கி, இன்னும் வீங்கிக் கொண்டே, அதன் பிளந்த வாயுள் ஸ்வாமி, அம்மன், கர்ப்பக் கிருஹம், கோபுரம் உள்பட, தான் உள்பட, விழுகையில் திடுக்கிட்டு விழித்துக் கொண்டதும் அந்த ராக்ஷஸ பாம்பு அவன் காலை உதைத்துக் கொண்டிருக்கும் தூணாய்ச் சமைந்தது.

திருட்டுத்தனமாய் வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு

ஆள் வருமுன் தின்கவுமுடியாமல் விழுங்கவுமுடியாமல் தவிக்கும் முறுக்கு சீடை போல் பரம்பரைப் பழக்க வாசனையில் அவனையுமறியாமல் வாயில் அவனறிந்த ரக்ஷாமந்திரங்களின் அக்ஷரங்கள் திடீரென நிறைகின்றன.

"அம்பா! தையநாயகி! வைதீஸ்வரா!!"

அம்மையும் அப்பனும், மௌன சாக்ஷியாய், சுட்டகல்லாய் அவரவர் இடத்தில் காலமாய் நிற்கிறார்கள்.

x x x

மற்றவர்க்கு அவரவர் இஷ்ட வரமருள் தெய்வம்; எனக்குக் கல்.

நட்ட பீஜத்தை குளிப்பாட்டி, அதன் தலையில் பூச் சுற்றி, தூபதீபம் காட்டுவதில் என் வயிற்றுப் பிழைப்பைப் போட்டிருக்கிறது. இந்தத் தெய்வங்களின் உடுவையை நாளுக்கிருமுறை களைந்து, உடுத்திப் பார்த்துப் பார்த்து என் ஆண்மையே அவிஞ்சு போச்சோ?

கல்லைப் பூஜித்து பூஜித்து நானே கல்லாய் மாறிக் கொண்டிருக்கிறேன். வரவர மாரில் ஏதோ கனம் அழுத்தறாப் போலிருக்கு. தேடினால், மார்புத்துடிப்பு சட்டென்று கைக்கடியில் கிடைக்கவில்லை போலக்கூட சில சமயங்கள் தோணறது.

எனக்கே வேளை வந்து விட்டதா?

அப்படியானால் அம்மாவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றியாக வேணுமே! ஏற்கனவே அம்மா என்னைத் தலையாட்டின்னு சொல்லிவிட்டாள். அப்படி இல்லை என்று நான் ஒரு தரமேனும் சொன்னதைச் செய்ய வேண்டாமா?

என்னையே எனக்கு நிரூபித்துக் கொள்வது எப்படி?

x x x

நாளைக்கு காசி—

நாளை போய் இன்று வருகிறது.

நேற்று போன நாளையை ஏமாற்றிய இன்று.

இன்று போய் மறுபடி நாளை.

இன்று வந்த இன்றை மன்னித்துவிட்ட நாளை.

நேற்று, இன்று, நாளையாகத் தன் வாலைத்தான் தேடிப்

பிடிக்கும். பூனைக்குட்டிபோல் அன்றன்றாய், நாள் ஒவ்வொன்று.

நாளைக்கு காசி.

அன்றொருத்தன் அப்படித்தான் நாளையைத் தேடினான்.

ஒவ்வொரு நாளும் நாளையாக மாறி, நெஞ்சில் நாளையின் கேலிக் கூத்து.

அவன் கனவுகளில் அம்மாவின் அஸ்திப் பானையில் இருந்து நடராஜன் தோன்றினான்.

ஊன்றிய பாதத்தினடியில் முயலகனுக்குப் பதில் அவன்.

விழிப்பு வந்ததும் வெகு நேரம் வரை ரண வலி போகவில்லை. பின்னே என்ன; ஆண்டவன் மிதித்தால் லேசா?

கனவுப் பலன்படி கனவில் தாண்டவம் கண்டால் யமன்.

காஞ்சியில் பிற,

காசியில் இற.

காசிக்குப் போவோரில் சிலர், அதற்காகத் தானே அங்கு சாகப் போது தேடி காத்துக் கிடக்கிறார்!

பிறக்கப் பத்து மாதம். சாகப் பத்து மாதம் அதென்ன சாஸ்திரமோ?

காரணமில்லாமல் சாஸ்திரமில்லை.

போனால் திரும்பக் கூடாது. மானத்தின் லட்சியம் அது தான்.

ஆனால் போனால் தானே சாகலாம்?

எப்படியும் போகப் போற உசிரை அம்மா சுலபமா பணயம் வெச்சு வாக்கை வாங்கிண்டுட்டாள்.

ஆனால் காசி என்ன லேசா? கொல்லைப்புறமா?

காசு?

வெச்சு வாங்க இங்கே என்ன இருக்கு?

என் மாரில் சிக்குப் பூணூல். அவள் கழுத்தில் மஞ்சள் கயிறு.

இருப்பு, செலவு, பாக்கி எல்லாமே இவ்வளவுதான்.

வீட்டை அடைமானம் வைக்கலாம்னா அதுவும் சொந்தம்னு நிச்சயமில்லை. பழைய ஏடு எதையாவது

ஏந்திண்டு எங்கிருந்தாவது ஒரு தாயாதி என் பங்குன்னு முளைச்சால்?

பங்குக்கு மாத்திரம் கிளை கிளையா களைக்குமே!

இன்னும் கொஞ்சம் ஆழமா தோண்டினால் இரண்டு பேருக்குமேயில்லை. வீடு கோவில் சொத்துன்னு தீர்வையா சாசனமே கிடைத்துவிடும்.

எல்லாம் என்னுடையது.

கடவுள் நியாயம், குரங்கு நியாயம், ரெண்டுக்கும் மிஞ்சின கோர்ட் அப்பீலே கிடையாது.

நாளைக்குக் காசி.

x x x

அப்போது தான் குளித்துவிட்டு-இன்னும் சரியாகத் துவட்டிக் கொள்ளக்கூட இல்லை, வாசற் கதவை அவசர மாய்த் தட்டும் சத்தம் கேட்டது. புடவையைச் சுற்றிக் கொண்டு வந்து கதவைத் திறந்தாள். ஒரு ஆளை—பாதிக்கு மேல் அவன் உடல் பாரத்தை தான் தாங்கிக் கொண்டு அவள் கணவன் வாசலில் நின்றான்.

கதவை இன்னும் அகலத்திறந்ததும், உள்ளே தாண்டி வந்து கனத்தை கடைத்திண்ணையில் கிடத்தி, முகத்தில் தோய்ந்த மயிரை ஒதுக்கியதும்—சொல்லத் தேவையில்லை. கண்டாலே தெரிந்தது அங்கு அடிக்கும் ஜுரவேகம்.

உள்ளே போய்த் தலையணையை எடுத்து வந்தாள். அவள் கணவன் தலையைத் தூக்கிக் கொள்ள, அவள் தலை யணையை அண்டக் கொடுத்ததும், அவன் தலையை அதன் மேல் இறக்கிவிட்டு இருவரும் ஒரு நிமிடம் அந்த முகத்தைக் கவனித்து நின்றனர். ஸ்மரணை யிருப்பதாகத் தெரியவில்லை.

அவள் கணவன் சென்ற பின்னரும் 'அவள் நகரவில்லை. அந்த முகத்தில் தாடி முட்கள் கருகருவென நின்றன. தலை யில் காடு மாதிரி எவ்வளவு மயிர்! இப்போதைக்கு முகத்தை மூக்கும் முழியும்தான் அடைத்துக் கொண்டிருந்தன.

ஜுரவேகமாயு மிருக்கலாம்.

கொல்லைப்புறத்திலிருந்து அவள் கணவன் வந்தான். பறித்து வந்த மூலிகைகளைத் தோள் துண்டிலிருந்து திண்ணை யில் கொட்டி, ஆய்வதற்கு உட்கார்ந்தான்.

''—த்வஜஸ்தம்பத் தடியில் குப்புறக் கிடந்தான். ரெண்டு சன்னதி பூஜையையும் முடிச்சிட்டு வந்தப்புறம்கூட ஆள் அப்படியே படுத்துட்டுக் கிடக்கான். நமஸ்காரம்னாகூட, இவ்வளவு நேரமா என்ன? கூப்பிட்டால் பேச்சு மூச்சு இல்லை. எனக்குப் பயமாப் போச்சு. புரட்டிப் பார்த்தால் உடம்பு உலையாய்க் காயுது. என்ன செய்யறது? அப்படியே விட்டுட்டு வர மனமில்லை.''

அவன் சமாதானமாய்ச் சொல்லவில்லை. சமாச்சார மாய்த்தான் சொல்லிக் கொண்டிருந்தான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவளுக்குப் பதில் பேசியே பழக்கமில்லை. ''யார், ஏது, ஏன்?'' இந்த வீட்டில் கால் வைத்த நாள் முதல் அவள் எதற்கும் கேட்டதேயில்லை. அவளுக்குக் கேட்கவும் தெரியாது. அப்படிக் கேட்கும்படி நேர்ந்ததுமில்லை. அந்த ஆளைக் கவனித்தபடி நின்றாள்.

அவள் தோளில் ஜலமுத்துக்கள் இன்னும் துளித்து நின்றன. குளிப்பில் மயிர்ப்பிரிகள் ஒன்றிரண்டு நனைந்து கன்னத்தில் ஒட்டிக் கொண்டு நின்றன. நெற்றியில் பற்றிய மஞ்சள் பளீரிட்டது,

x x x

நினைவு திரும்ப மூன்று நாட்கள் ஆயின.—உடம்பு புரட்டினது புரட்டினபடி, மலஜலம் எடுத்து, உடைமாற்றி, வாயைத் திறந்து, கிட்டின பல்லை நெகிழ்த்தி, ஒளடதம் ஊற்றி, கண் விழித்து...இவன் யாரோ நான் யாரோ, ஜாதி என்னவோ? இத்தனை பாடும் இவன் மேல் இரக்கம் காரணமா, அல்ல, இவன் நம்மடியில் வாயைப் பிளந்து வச்சால் என்ன ஆகறது. என்கிற பயமா?

நட்டாற்றில் கரடியைக் கட்டிக் கொண்ட பிராம்மணன் போல் இவன் விதியுடன் எங்கள் விதியும் எப்படி விழைந்தது? ஏன் விழையணும்?—

என ஆச்சர்யமுற, தோன்றக் கூட இப்போது நேர மில்லை.

—நீர்த்துப் போன மூட்டத்தின் கீழ் மாட்டிக் கொண்ட ஒற்றைப் பொறியைச் சுடராக்க, மாற்றி மாற்றி ஊதும்

போட்டியில் திணறுவது எங்கள் மூச்சா? இல்லை இவன் மூச்சா? யார் அவஸ்தை அதிகம்?

என்று சிந்திக்க அந்த அவஸ்தையை நினைவு பூர்வமாய்ப் படுவதற்குப் போது இல்லை.

x x x

மசியூற்றிலிருந்து பொங்கிவரும் இருள் பிந்துக்கள்மேல் கவிந்து கடலாய்ப் பெருகி அதில் மூழ்கிப் போனது தான் கடைசி நினைப்பு. அதன்மேல் இருள் அலைகள் உடைந்து வீழ்ந்து அதைக் கடலின் நடுவயிற்றுள் இழுத்துக் கொண்டனவா, அல்ல ஏந்திச் சென்று கரையோரம் ஒதுக்கினவா?

அறிய நினைப்பில்லை.

எது கரை? கடலுக்கும் கரைக்கும், மலைக்கும் மடுவுக்கும் அடையாளம் அறிய நினைப்பில்லை.

அறிய நினைப்பில்லை என்று அறியத் தோன்றுவதே மீளும் நினைப்பின் முதல் ஊன்றுகோல்.

அறியத் தோன்றிய சர்வ அமைதியினின்று காதோடு காது வைத்த ரகஸ்யமாய், சீடனுக்குக் குருவின் உபதேச மந்தரமாய், மந்திரத்தின் உருப்புரியாது. ஆனால் உரு அதனுள் அடங்கியதாய்

ரீங்காரம்
ஒன்று
குதித் தெழுகின்றது.

அந்த உயிரோசையில் நினைப்பு இல்லையென்ற நினைப்பு கவ்விக் கொண்டதும், எங்கும் சூழ்ந்த இருளில் விரிசல் ஓடி, இல்லை, இருக்கிறது எனும் தோன்றல்களின் இடைவிளிம்புகள் ஆங்காங்கே படர்ந்து, தோன்றி மறைந்து மீண்டும் தெரிவதே ஒளியின் உதயதரிசனம், அகத்தின் மாட்சி, நினைவின் மீட்சி.

அது நேரும் சமயம் அவள் அடுக்குளில் வேலையாய் இருந்தாள். அவன் கோவிலுக்குப் போயிருந்தான்.

முனகல் சத்தம் கேட்டு ஓடி வந்தாள்.

கரையில் தூக்கிப் போட்ட மீன் போல நோயாளியின் வாய் திறந்து மூடித் திறந்து ஏதோ சைகையில் தவித்தது.

நாக்கு வரட்சி.

உலையில் இன்னும் அரிசி கொட்டவில்லை. வெந்நீரைப் பரக்கப் பரக்க கொட்டி யாற்றி தம்ளரில் ஊற்றிக் கொண்டு வந்து உதட்டில் வைத்தாள்.

ஒரு முழுங்குதான்—அது கூட இல்லை. இருமல் வந்து புரைக்கேறி விட்டது. இமை நேரத்தில் கருப்பு விழி இமைக் கூரைக்கு ஏறி விழி வெள்ளைக்குப்பின் மறைந்தது, மூச்சு நெஞ்சில் கடைய ஆரம்பித்து விட்டது.

''ஐயோ! ஐயோ!! ஐயோ!!!''

தான் அலறினது—தெரியவில்லை. என்ன செய்தாள் என்றோ தெரியாது. தலைக்கடியில் கையைக் கொடுத்துத் தூக்கி அவனைத் தன் மேல் சாற்றிக் கொண்டாள். மார்பைத் தடவிக் கொடுத்தாள்.

வரலாமா, வேண்டாமா என்று பார்த்துக் கொண்டு மெதுவாய்க் கருப்பு விழி கீழே இறங்கிற்று. மூச்சு மறுபடியும் முறையாகக் கோர்த்து வாங்கி நிலைப்படத் தலைப்பட்டது. விழிக்குழைகளிலிருந்து தணற் பிழம்புகள் அவள் மேல் ஊன்றுகையில் அவளுக்கு அடிவயிற்றில் ''சுறீல்''

வாசற்படியில் நிழல் தட்டி நிமிர்ந்தால், அவள் கணவன் முழங்கையில் நைவேத்ய மூட்டையை மாற்றிக் கொண்டு நின்றான்.

அப்போதுதான் அவளுக்கே அவள் நிலை தெரிந்தது. தன் முழங்கை வளைவில் நோயாளியின் தலைதாங்கியிருப்பது உடல் வெலவெலத்து விட்டது. அவனைக் கீழே இறக்கி விட்டு எழுந்து அவ்விடம் விட்டு விடுவிடுவென்று போய் விட்டாள்.

x x x

அவளைத் தேடிச் சென்ற போது கொல்லைப்புறத்தில் புன்னை மரத்தடியில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கக் கண்டான்;

''இங்கே வந்து குந்தியிருந்தால் என்ன அர்த்தம்?''

ஊம்—ஊம் எழுந்திரு. கஞ்சியைப் போடு. கஷாயச்

சட்டியை அடுப்பில் காய வை. இன்னிக்கு கஷாயத்தை மாத்தியாகணும். அந்தமட்டுக்கும் பரவாயில்லை. தப்பிச்சுட்டான்''. அவள் எழவில்லை. முகம் குங்குமமாய்க்கொதித்தது; விழிகள் தளும்பின.

''இப்போ என்ன ஆயிடுத்து? உனக்கு ஒரு தம்பியிருந்தால் செய்யமாட்டையா? ஆபத்துக்குத் தோஷமில்லை. முதலில் நான் சொன்னதைக் கவனி''.

அவன் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் அப்படிச் சொன்னதும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. விக்கி விக்கி அழுகை. அழ அழ இன்னும் அழுகை.

அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இதுமாதிரி அவள் அழுததேயில்லை. அழுகையே மறந்து போன பின் இது ஒரு புது அனுபவமாய் இருந்தது. அழுதால் இன்பமாய்க்கூட இருக்குமா என்ன? இது அழுகையில்லை. கண்ணீரில் குளிப்பு. எங்கெங்கோ ஏதேதோ அழுக்குகள், கறைகள், கனங்கள் கரைந்தோடி, உடலே லேசுபட்டு, குளிர்ந்து...

* * *

''உன் பேர் என்ன?''

நோயாளிக்குப் பேசச் சக்தியில்லை. தரையில் எழுதிக் காண்பித்தான்.

''காசி''

* * *

சருகு துளிர்ப்பது போல், நாள் ஆக ஆக, விலாச்சதை பிய்ந்து விடும் போல் பிதுங்கிய எலும்புகள் மூடி, கன்னத்துக் குழிகள் மூடி—

ஒரு நாள் வெந்நீரின் பதச் சூட்டில் குளிப்பாட்டி, அவள் கணவனே அவனுக்கு உடம்பு தேய்த்து விட்டான். சுட்ட அரிசி அப்பளாமும் ஆவி பறக்க மிளகு ரஸமும்—

ஒரு நாள் காலை சொல்லிக் கொள்ளாமலேயே வெளியே போய் மயிர் வெட்டிக் கொண்டு, க்ஷவரம் பண்ணிக் கொண்டு வந்து விட்டான். சட்டென முகம் அடையாளம்

கண்டுபிடிக்க முடியவில்லை. அன்று முழுக்கத் திட்டிய வசவுகளுக்கெல்லாம் ஒரே பதில் ஒரு அசட்டுச் சிரிப்பு.

ஆனால் அந்தச் சிரிப்பில் உண்மையில் அசடும் இல்லை. ஆனால் காசி ஒற்றை நாடிதான், குருவிபோல் சோற்றைக் கொறித்தான் என்றாலும், எவ்வளவு ஊட்டம் கொடுத்தாலும் சதை பற்றாது. அந்த உடம்பு வாகு அப்படி.

இரவில் குத்து விளக்குச் சுடர் காட்டும் நிழலாட்டத்தில் அந்த முகத்தில் சதை மறைந்து வெளிப்படும் வெறும் முகக் கோட்டினுள் விழிகள் மட்டும் பற்றி எரிகையில் அவளுக்குச் சில சமயங்களில் பயமாவேயிருந்தது. தான் பார்ப்பது உட்கார்ந்த நிலையில், உயிர் பிரிந்த சவமா? அல்ல தான் புகுவதற்குத் தக்க சடலம் தேடிக் காத்திருக்கும் ஆவியா?

"காசி, உன் முழுப் பேர் என்ன?"

"எனக்கே தெரியாது."

"உன் பேரே உனக்குத் தெரியாதா, நீ என்ன ஆளப்பா!"

"வாஸ்தவமா, அப்படித்தான் என்னை வளர்த்தவர்கள் என்னை காசியில் அவர்கள் தங்கிய மடத்தில் பத்து நாள் குழந்தையாக ஒரு கந்தைத் துணியில் சுற்றின மூட்டையில் கண்டெடுத்தார்களாம். அதே சாக்கில் என்னைக் காசியென்று அழைப்பார்கள். அதுதான் எனக்குத் தெரியும்.

"காசிக்குப்போயும் அவர்களுக்கு கர்மம் தொலையலையாக்கும்?" என்றாள் அவள்.

காசி புன்னகை புரிந்தான்.

"கர்மத்தை அவர்களல்லவா தேடிக் கொண்டார்கள்! என்னைக் கண்டதால் அவர்கள் கொண்டு வரணுமா? அவர்கள் அப்படி ஆரம்பித்து வைத்த தர்ம சங்கிலியின் கோர்வையாகத் தானே உங்கள் கணவர் என்னைக் கோவிலில் மறுபடியும் கண்டெடுத்து வந்தார்! இல்லாவிட்டால், காசியிலேயே நான் வேறு யாரேனும் எடுப்பார் கைப்பிள்ளையாக வளர்ந்து கங்கா நதியில் யாத்ரிகள் வீசியெறியும் காசை மூழ்கி எடுத்துக் கொண்டிருப்பேனோ, அல்லது என்னைச் சுற்றியிருந்த கந்தைத் துணியிலேயே விரைத்துப் போய்,

பிறந்த சுருக்கில் பிணமாய்க் கிடந்திருப்பேனோ, யார் கண்டது?

எனக்கு என்னவோ மாதிரி சங்கடமாயிருந்தது. அவன் தோள் மேல் கைவைத்தேன்.

"காசி உனக்குச் சாவே கிடையாது" என்றேன்.

"அது எனக்கு நன்றாய்த் தெரிகிறது."

அப்படி அவன் சொன்னபோது அவனை நான் தொட்டுக் கொண்டிருப்பதாகவே எனக்கு இல்லை. என் தொடலுக்கு அவன் அகப்படவில்லையென்றே பட்டது. ஒவ்வொருவராய் இப்படி ஆசி கூறிக் கூறி அழிவேயில்லாமல் அடித்துவிடும் ஆசி உண்மையில் சாபம் தானோ?

x x x

எனக்குத் திடீரென வியப்பு உண்டாயிற்று. காசி பேசினது எனக்கு எப்படிக் காது கேட்டது? நானோ செவிடு. நான் அவனைத் தனியாய்க் கேட்கவில்லை. என் ஆச்சரியம் என் வாய்விட்டுத் தானே வந்து விட்டது.

காசியின் புன்னகையில் ஏதோ புதிர் என் நெஞ்சுக்கு மட்டும் தட்டுகிறது. நானே இதைக் கவனித்தேன். பல கேள்விகளுக்குப் பதிலாய் அந்தப் புன்னகை வைத்திருக் கிறான். அது புன்னகையுமில்லை. நாக்கு நுனிவரை வந்து விட்ட பேச்சை அங்கேயே தடுத்து விட்டாற்போல் உதட்டின் உறைவு.

"குருக்களே, இரைச்சலைக் கேட்டு கேட்டு உங்களுக்குச் செவியடைச்சுப் போச்சு. ஆனால் நாம் எல்லோருமே ஓசைகள். ஓசைகளின் உருவங்களாகத்தான் மூச்சும் சதையு மாய் இயங்குகிறோம். இதை உயிர் உணர ஆரம்பித்ததுமே வாசல்கள் திறந்து கொள்கின்றன. அவ்வளவுதான்?"

"நீ என்ன சொல்கிறாய்? புரியல்லையே!"

"குருக்களே, நான் இல்லாததை உண்டாக்க முடியாது. என்னால் முடிந்தவரை ஏற்கனவே இருப்பதை உங்களை உங்களுக்கு நினைப்பு மூட்டுகிறேன். அவ்வளவுதான்."

காசி சொல்வது சுவையாய் இருக்கிறது. புரியவில்லை,

புரியாமலும் இல்லை. தலை கிர்ர்......

இவனை எனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போச்சு.

இவன் வந்த பிறகே வீட்டுக்கு கலர் மாறி விட்டது. இது திடீர்னு நேர்ந்தது என்று சொல்ல மாட்டேன். ஆனால் திடீர்னு பார்த்தேனோ என்னவோ?

இந்த மாறுதலைக் கலராய்ப் பார்க்கறப்போ தான் அதுவே புரியறாப் போலத் தோணறது. பார்க்கவும் அப்படித் தான் பிடிக்கிறது. ஐப்பசி மாதம் எட்டு நாள் விடாமழைக்குப் பின், வக்களிப்பு போல், அங்கங்கே — எங்கெங்கோ — ஏதேதோ மப்புகள் கலையறாப்போல் என்னென்னவோ புதிசு புதிசா அசைவு கொடுக்கிறது.

x x x

காசி பசுமாட்டைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறான். இதன் தாய் வயிற்றில் இது பிறந்து, கன்றாகி, பசுவாகி இதுவும் தாயான நாள் முதல் இதுவும் நாங்களும் ஒருவரை ஒருவர் அறிவோம். ஆனால் அவன் பக்கத்தில் வந்தாலே அதற்கு ரோமாஞ்சலி ஏற்படுகிறது. அவன் அந்த உடம்பைத் தேய்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் முகத்தை நக்கிக் கொடுக்க தலையைத் திருப்பித் திருப்பித் தவிக்கிறது.

அட, காசிக்கு மாடு கறக்கவும் தெரியுமா?

நிமிஷமாய்க் குவளையில் நுரை பொங்கி வழிகிறது.

"என்ன காசி, உன் கைபட்டதுமே பசுவுக்கு உடம்பெல்லாம் பாலாய் மாறிப் போச்சு? என்ன சொக்குப் பொடி வெச்சிருக்கே."

"எல்லாம் குருக்கள் ஆசீர்வாதம் தான்!"

வந்தனம் தெரிவிக்கிறானா? ஏளனம் பண்ணுகிறானா? இன்று காலை மடி ஜலம் "கிளுக், கிளுக்" என்று தளும்ப குடத்தை இடுப்பில் ஏந்தி ஈரப் புடவையை உடம்பில் சுற்றியபடி, கிணற்றடியிலிருந்து இவள் வருகையில்— "இது இவள்தானா?" நிஜமாவே கண்ணைக் கசக்கிக் கொண்டேன்.

ஏதோ நினைப்பில் மோவாய்க் குழியில் புன்னகை உதயத்தில் முகத்தில் ஒரு தனி வெளிச்சம் உள்ளிருந்து பரவும் அவ்வொளியில் புருவத்தின் கவானும் மேல் உதட்

டின் வில் வளைவும் தனி முருகு கொண்டன.

நான் அவளைக் கவனிப்பதைப் பார்த்து விட்டாள். முகம் செவேலாகி விட்டது. இந்த வயசில் நாணமா? ஆனால் எந்த வயதிலும் சுயமான நாணம் நன்றாய்த் தானிருக்கிறது.

இவள் இடுப்பு வளைவில் பிசிர் உதிர்ந்திருப்பதாக என் மனசுக்குத்தான் தோற்றமா? இவள் சந்தோஷமாயிருப்பதைப் பார்த்தாலே எனக்கு சந்தோஷமாயிருக்கிறது. இருக்கட்டும், எங்கள் சந்தோஷத்துக்குத் தானே காசி வந்திருக்கிறான்!

x x x

அப்போதுதான் கோவிலிலிருந்து திரும்பி வந்தேன். கிணற்றடியில் அவனும் அவளும் அண்டாவுள் குனிந்து என்ன அவ்வளவு சுவாரஸ்யமாகக் கவனிக்கிறார்கள்? நானும் அங்கு போனேன்.

அண்டாவில் ஜலம் கண்ணாடித் தகடுபோல் அசைவற்று நின்றது. வான பிம்பம், இவ்வளவு துலக்கமாய், அதுவும் இரவில் ஒரு நாளும் தெரிந்ததில்லை. கலக்கம் எங்கள் கண்ணிலா, வானத்துக்கேவா?

தனித்தனியாய், சரம்சரமாய், பாளை வெடித்துச் சொரியும் முத்துக்களாய் ஆன்றால் அத்தனையும் அதனதன் முழு உருவில், ரஸ குண்டுபோல் தொங்கிக் கொண்டு இன்று எத்தனை நக்ஷத்திரங்கள்! என் எண்ணத்தின் எதிரொலி போல் காசியின் குரல் வந்தது.

"இந்த பூமி மீது உலாவும் உயிர்களுக்கு அதிகமாய் நக்ஷத்திரங்கள் வாரி இறைந்து கிடக்கின்றன. சூரியனைக் காட்டிலும் மாபெரும் நக்ஷத்திரங்கள். ஆனால் இத்தனையிலும் பேர் கொண்டது இருபத்தி ஏழுதான், இது வேடிக்கையாயில்லை?

இந்த இருபத்து ஏழின் கதிகளுடன் இந்த உலகத்தின் ஜீவ ராசிகள் அனைத்தின் விதிகளையும் முடிச்சுப் போட்டு வைத்திருப்பது அதைவிட வேடிக்கையாயில்லை? விபரீதமாயில்லை? நான் நம்பமாட்டேன். பேரில்லாததால் இந்த நக்ஷத்திரங்கள், சூரியர்கள், சூரியனைக் காட்டிலும் பெரிய கிரஹகங்கள் இல்லாமல் போய்விட்டனவா? இருபத்தி ஏழின்

கொடுங்கோலாட்சிக்குள் மாட்டிக் கொண்டதாய் நாம் அதைரியப்பட வேண்டியதில்லை. நம்மை இவை ஆள்வதற்குப் பதில், நாம் இவைகளை ஆளக் கூடாது என்று எழுதியிருக்கிறதா? எழுதியிருந்தால் தான் என்ன? நம் விதியை மாற்றிக் கொள்ள நமக்குச் சக்தி உண்டு. என்ன முழிக்கறேள் ரெண்டு பேரும்?—இதோ பாருங்கள்! பூ!

அவன் ஜலத்தின் மேல் ஊதினதும் அண்டாவுள் மாட்டிக் கொண்ட வான் மண்டலம் கவிழ்ந்தது. நக்ஷத்திரங்கள் நிலை குலைந்து ஒன்றன் மேல் ஒன்று கதி கலங்கிச் சரிந்தன.

"பார்த்தீர்களா?—மனமுண்டானால் இடமுண்டு-இன்று நிழலை ஆண்டால் நாளை நிஜத்தை ஆட்சி புரிவோம். நம் விதி நம் கையில் தான் இருக்கிறது. எண்ணத்தில் தீவிரம் இருந்தால், இந்த பூமியின் கோளத்தையே, விழுங்கப் போகும் லேகிய உருண்டையாய் ஒரு நாள் உள்ளங்கையில் ஏந்தி விடலாம். குருக்களே, என்ன சொல்கிறீர்கள்? என்ன சொல்கிறீர்கள்?—"

பாம்பின் சீறல் போல் அவனின்று சிரிப்பு வெடித்தது.

அவனின்று வெளிப்பட்ட விஷயத்தின் 'மஹத்'தைக் காட்டிலும், குரலில் தொனித்த வெறி, பேச்சில் ஏறிவிட்ட அதட்டல், முகத்தில் குழம்பிய ருத்ரம்—அவனைப்பார்க்கவே அச்சமாயிருந்தது. அவள் முகத்தைக் கைகளுள் புதைத்துக் கொண்டாள். அவன் தன் வசத்தில் இல்லை, மகுடி வசப்பட்ட பாம்பு போல, அவனை ஆட்கொண்டு விட்ட ஆவேசத்தில் அவன் உடல் லோாய் மிதப்பலாடிற்று,

அவள் பின்னிடைந்தாள். அவள் அறியாமலே அவள் கை என் கையை நாடிற்று.

அன்று முழுவதும் அவன் பிறகு பேசவில்லை. சாப்பிட்வுமில்லை. நாங்களும் அவன் வழிக்குப் போகவில்லை. நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டு நெடுநேரம் படுக்கையில் உட்கார்ந்திருந்தான்.

x x x

இன்று காலை நாங்கள் கொல்லைப் புறத்தில் இருந்தோம்.

அவள் கிணற்றடியில் குடந்தைத் தேய்த்துக் கொண்டிருந் தாள். நான் அந்தரத்தில் தவித்துக் கொண்டிருந்த ஒரு அவரைக் கொடியை மாட்டுக் கொட்டகையின் ஓலைக்கூரை மீது ஏற்றி விட வாகான இடம் தேடிக் கொண்டிருந்தேன்.

முதுகில் பின்னால் கையைக் கட்டிக் கொண்டு காசி தரையில் என்னவோ தேடிக் கொண்டிருந்தான்,

மேலெழுந்த வாரியாய் மனம் இந்தக் காட்சியைத்தான் வாங்கிக் கொண்டிருந்தது. இதெல்லாமே பின்னால்தான் நினைவுக்கு வருகிறது.

காசி எதையோ குனிந்தெடுத்து சட்டென்று அண்ணாந்து ஆகாயத்தில் வீசி யெறிந்தான். பிறகு அரைக்கணம் அல்ல. ஒருகணம் ஓடியிருக்குமோ என்னவோ தெரியாது. அடுத்து நேர்ந்த அதிர்ச்சிதான் எங்களுக்குத் தெரியும்.

பொத்தென்று மேலிருந்து ஏதோ பூமியில் விழுந்தது. வானுடன் ஒவ்விய நீல நிறத்தில், உரிக்காத மட்டை தேங் காயளவுக்கு ஒரு பக்ஷி, அதன் உடலில் பொன்னும் வெள்ளியுமாய் வைத்த புள்ளிகளும் சிரக்கொண்டைக் கதிர்களும் பொன் வெயிலில் மின்னின.

கண்ணெதிரில் அதன் கண் கண்ணாடி ஆகிவிட்டது.

அதைச் சுட்டிக் காட்டியபடி காசி நாணறுந்த வில்போல் குதித்தான்.

“பார்த்தேளா, குருக்களே, பார்த்தேளா? உலகத் துக்கே பொதுவான உண்மை! பொருளுக்கும் நிழலுக்கும் உள்ள தொடர்பை! உலகத்தில் நிழலில்லாத பொருளே இல்லை. பொருளில்லாமல் நிழலும் இல்லை. எவ்வளவு உயரம் பறந்தாலும் அது அது அதனதன் நிழலுக்குள் விழுந் தாகணும்!”

எனக்கு உடம்பு வெலவெலத்து விட்டது.

அவளைப் பார்க்க சஹிக்கவில்லை. இரத்தமும்,மஞ்சளும் சுண்ணாம்பும் முகத்தில் மாறி மாறிப் பாய்ந்து வாங்கி மறுபடியும் பாய்ந்தன, அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு, குப்பைகொட்டும் எருக்குழியண்டை ஓடினாள். குமட்டிக் குமட்டி வாந்தி.

என் கால் கல்லாலடித்துப் போட்டாற்போல் ஆகி விட்டது. அவனும் நகரவில்லை, நாங்கள் மௌனமாய், அவளையே கவனித்துக் கொண்டிருந்தோம்.

ஒருவாறு குமட்டல் அடங்கி எழுந்து திரும்பி எங்களை நோக்கி வருகையிலேயே, அவள் முகத்தில் தெரிந்த வேதனை, திகைப்பு, பயம், ஆச்சரியம் இவை யாவற்றின் பின்னணியில் விசிறி விரித்தாற் போல் ஒரு கோபம் உதய மாவது கண்டேன். அவள் நெற்றியில் அது ஆரம்பித்து, வியாபித்து, முகம்பூரா, கழுத்துவரை குங்குமம் குழம்பிற்று. அவள் உடல் கிடுகிடென ஆடிற்று. அவள் கைகள் முஷ்டித்தன.

காளி.

எனக்கு உடல் வெலவெலத்து விட்டது.

"போ! போயிடு!! உடனே போயிடு!!!"

குரல் அடங்கித்தான் ஒலித்தது. ஆனால் அந்த அமுக்கிய எஃகுச் சுருள் விசிறிவிட்டால் மொக்குமோ றை காலி.

காசி அவளை வியப்புடன் நோக்கினான். அவளைப் பார்க்கவில்லை. அவளில், அவளைக் கவ்விக் கொண்டிருக்கும் சீற்றத்தில், ஏதோ இதுகாறும் நினைவடியில் புதைந்து போன, அல்லது இதுகாறும் அவன் தேடிக் கொண்டிருந்த ஏதோ உருவத்தை அடையாளம் கண்டு கொண்டாற் போல் அவ்விழிகளில் ஒரு ஆச்சரியம் உள்நினைவின் திடும் பூரிப்பு.

உடனே அலரிப்பு.

அவன் உள்கட்டடத்தின் கட்டவிழ்தலைக் கண்கூடாகக் காண முடிந்தது.

காசி பேசவேயில்லே. காசிக்கு என்ன நேர்ந்து விட்டது? தலைகீழாய்த் தூக்கிப் பிடித்த பாம்பு போல் காசி திடீரெனப் பொலிவிழந்து போனான். நீர்த்தே போனான்.

பறவையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டான். அவன் அதன் சடலத்தைத் தாங்குவது போல் இல்லை. ஏதோ சகுனத்தைத் தூக்கிக் கொண்டவன் போலிருந்தது. அவன் பிறப்பித்த சகுனத்தை அவனே சுமந்து கொண்டு

இதோ போய் விடுவான், காசிக்கு இனி இங்கு வேலை யில்லை. அது எனக்கே தெரிந்தது.

"எங்கே போகப் போறே?"

கேட்டது நான். அவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந் தது. இத்தனை 'சட்'டில் இவ்வளவு நீச்சமா? அதுவும் காசிக்கா?

"காசிக்கு"

ஏதோ பாடம் ஒப்பிப்பதுபோல். வாழ்வின் கனம் அமுக்கும் அசதி.

"நில்"—அவள் குரல் கணீரென்றது.

நின்றான். அவன் மேல் இப்போது ஊதினால், உதிர்ந்து போயிருப்பான்.

அவள் விடுவிடென உள்ளே சென்று ஒரு பானையை எடுத்து வந்து அவன் கைகளுள் திணித்தாள்.

"இதைக் கங்கையில் கரைச்சுடு"—

வசியங்கண்ட பாம்பு போல் அவனுக்கு அவள் மேல் பதிந்த விழி மாறவில்லை. வேறு யாருக்கும் அவன் கண் இல்லை.

வாசற்புறம் சுட்டிக் காட்டினாள்.

"போ!"

போனான்.

ஒழுங்கைத் தாண்டி, உள்முற்றம் தாண்டி, தாழ்வாரம் தாண்டி, வாசல்தாண்டி...

ஆள் மறைந்ததும், திரையாடினாற்போல், காற்று மூச்செறிந்தது.

அவள் போய் வாசற் கதவைத் தாளிட்டு வந்தாள். வந்து என்னெதிரே முகம் குனிந்து நின்றாள். முகம் ஏதோ ரகஸ்யத்தில் புன்னகை பூத்திருந்தது. அவள் மேல் படாதிருந்த அந்த வெட்கத்தையும் ஆட்கொண்ட ஒரு வெற்றியில் அவள் தகதகத்தாள்.

இத்தனை பொலிவு இவளுக்கு எங்கிருந்து வந்தது?

○

# ஆசிரியரின் நூல்கள்

1. ஜனனி
2. இதழ்கள்
3. பச்சைக் கனவு
4. கங்கா
5. அஞ்சலி
6. அலைகள்
7. தயா
8. புத்ர
9. அபிதா
10. த்வனி
11. உத்தராயணம்
12. லா. ச. ரா.வின் சிறப்புச் சிறுகதைகள் Vol. I
13. பாற்கடல்
14. சிந்தாநதி
15. கல் சிரிக்கிறது
16. கேரளத்தில் எங்கோ
17. லா. ச. ரா.வின் சிறப்புச் சிறுகதைகள் Vol. II
18. மீனோட்டம்
19. புற்று
20. பிராயச்சித்தம்
21. கழுகு

MK Colour Process, Madras-14
Phone 841478
Designed by P. N. Anandan